1554

பிரிட்டன் வரலாறு

1066—1485

1554

REGISTRAR OF BOOKS
1 8 DEC 1939

ராபர்ட் எம். ரேனர்

3610
350
3599

லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்

பிரிட்டன் வரலாறு

பிரிட்டன் வரலாறு

(1066—1485)

OFFICE OF THE REGISTRAR OF ... S
18 DEC 1939
MADRAS

ராபர்ட் எம். ரேனர்

942

தமிழில் மொழிபெயர்த்தவர்
சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தலைமையாசிரியர்
ம. சண்முகசுந்தரம், எம். ஏ., எல். டி.

லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனி லிமிடெட்
36A மௌண்ட் ரோட், மதராஸ்
1939

All Rights Reserved

PRINTED IN INDIA AT THE JUPITER PRESS, MADRAS.

EXTRACT FROM THE PREFACE TO THE ENGLISH EDITION

* * *

The most distinctive feature of the book is the Notes which have been appended to each "Period." They are based on those used by the author in his own classes for many years, with pupils of varying attainments. Every practical teacher knows that some topics are best dealt with by reading matter, others by oral teaching based on such notes. They are not for the most part mere summaries of the narrative, but are complementary to it.

No history text-book can cover all the ground that a teacher would like to cover; but a boy or girl who has mastered the facts and ideas which are here presented in a comparatively small compass should be able to tackle any History paper with confidence. The mechanical part of the task having been thus focused, the teacher will have the more time to develop his own views and methods.

Typical questions have been added to each "Period."

* * *

மொழிபெயர்ப்புக் குறிப்பு

முதனூலாசிரியரது நடையின் திட்ப நுட்பங்களும் தனியழகுகளுங் கூடியவரையில் மொழிபெயர்ப்பிலும் துலங்கும் வண்ணம் முயன்றுள்ளேன். அம்முயற்சி எவ்வளவில் நல்ல பலனை யளித்துள்ளதென்பதை இதைப் படிப்பவர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டும். எனினும், முதனூலின் சிறப்பியல்புகளாகிய பிரிவுகளும் அவற்றின் பாகுபாடுகளும் குறிப்புக்களும்மட்டும் இம்மொழிபெயர்ப்பில் எவ்வகையிலுஞ் சிதைவுறாமல் அமைந்திருக்கின்றன.

இதில் வழங்கப்பெற்றுள்ள சரித்திர பரிபாஷை, பெரும்பான்மையும் தம்மைத்தாமே விளக்கிநிற்குந் தன்மையவாய எளிய தொடர்மொழிகளில் அமைந்திருப்பதால், சரித்திர பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ள சரித்திராசிரியர்களின் அங்கீகாரத்தையும் ஆசியையும் பெறுமென்று நம்புகிறேன்.

பச்சையப்பன் கலாசாலை,
சென்னை.

ம. சண்முகசுந்தரம்

பொருளடக்கம்

முதற் பகுதி: 1066 - 1272

நாட்டுமக்கள் ஒன்றுபடல்

அத்தியாயம் பக்கம்

5. நார்மானியர் வெற்றி (1066-1087) ... 3

§ 19. வெற்றியின் முடிவு. § 20. நார்மன் படைமானிய திட்டம். § 21. வெற்றி மன்னர் வில்லியமும் மதஸ்தாபனமும். § 22. வெற்றி மன்னர் வில்லியத்தின் குணம்.

6. பிற்பட்ட நார்மன் மன்னர்கள் (1087-1154) 15

§ 23. செந்தலை மன்னரின் ஆட்சி. § 24. முதல் சிலுவைப்போர். § 25. ஒரு துரைத்தனமுறை வகுக்கப்பட்டது. § 26. ஆன்செல்மோடு மீண்டும் சச்சரவு. § 27. யூரோப்பிய படைமானிய முறையின் சீர்கேடுகள் இங்லண்டிலும் தோன்றலாயின.

7. நீதியும் அமைதியும் (1154-1189) ... 29

§ 28. ஆஞ்சு நாட்டு ஹென்றி. § 29. நீதி முறையில் சீர்திருத்தம். § 30. மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் உரிமை. § 31. புனிதாத்துமா டாமஸின் கொலை. § 32. அயர்லண்டும் ஸ்காட்லண்டும்.

8. இரண்டாம் ஹென்றியின் பிள்ளைகள் (1189-1216) 44

§ 33. சிலுவை வீரரான மன்னர். § 34. ஆஞ்சு பேரரசின் முடிவு. § 35. போப்புடன் சச்சரவு. § 36. பேருருமைப் பத்திரம்.

அத்தியாயம் பக்கம்

9. மன்னரும் மானியதாரும் (1216-1272) ... 56

§ 37. ஒழுங்கற்ற ஆட்சி. § 38. ஆக்ஸ்பார்ட் ஏற்பாடுகள். § 39. பிரபுக்கள் போர். § 40. சைமன் டி மான்ட்பார்ட்டின் பார்லமென்ட். § 41. 'ப்ரையர்ஸ்' எனப்பட்ட திரியும் துறவிகள்.

10. இடைக்காலத்துச் சமூக வாழ்க்கை ... 67

§ 42. இடைக்காலத்தினர் மனப்போக்கும் கொள்கைகளும். § 43. பண்ணை வாழ்க்கை. § 44. சங்கங்கள். § 45. மடங்கள். § 46. பல் கலைக் கழகங்கள்.

குறிப்புக்கள் :—கு. 8. முதல் வில்லியம் இங் லண்டை வென்றதற்கு அனுகூலமாயிருந்த காரணங்கள், ப. 79. கு. 9. இங்லண்டை நார்மானியர் கைப்பற்றியதால் அங்குப் படை மானிய திட்டம் அந்தப்பட்ட விதம், ப. 80. கு. 10. லான்ப்ரான்க், ப. 80. கு. 11. ப்ளாம் பார்ட், ப. 81. கு. 12. புனிதாத்துமா ஆன் செல்ம், ப. 82. கு. 13. நார்மன் மன்னர் காலத்தில் இங்லண்டுக்கும் ஸ்காட்லண் டுக்கும் இருந்த சம்பந்தம், ப. 82. கு. 14. முதல் வில்லியம், இரண்டாம் வில்லியம், முதல் ஹென்றி இவர்களை இயல்பிலும் நோக்கங்களிலும் ஒப்பிடல், ப. 83. கு. 15. படைமானிய திட்டத்துப் பரிபாஷை விளக்கம், ப. 84. கு. 16. இரண் டாம் ஹென்றி ஆண்ட நாடுகள், ப. 85. கு. 17. பிரபுக்களின் வன்மையை இரண் டாம் ஹென்றி அடக்கிய விதம், ப. 86. கு. 18. இரண்டாம் ஹென்றி பிரபுக்கள்மீது வெற்றியடைந்ததற்கும் மதஸ்தாபனத்தி னிடம் தோல்வியுற்றதற்கும் காரணம், ப. 87. கு. 19. மெய் விளம்பிகள் திட்டத் ... 78

அத்தியாயம் பக்கம்

தின் வளர்ச்சி, ப. 87. கு. 20. க்ளாரெண்டன் திட்டம், ப. 88. கு. 21. க்ளாரெண்டன் சட்டம், ப. 89. கு. 22. இரண்டாம் ஹென்றியும் அவர் பிள்ளைகளும், ப. 90. கு. 23. சிலவைப் படையெழுச்சிகளால் இங்லண்ட் பாதிக்கப்பட்ட விதம், ப. 91. கு. 24. பேருரிமைப் பத்திரம், ப. 92. கு. 25. ப்ரான்ஸ் மன்னர் பிலிப் ஆகஸ்டஸுக்கும் இங்லண்டுக்கும் நேர்ந்த தொடர்பு, ப. 95. கு. 26. ஜான் காலத்திலும் மூன்றும் ஹென்றி காலத்திலும் நிகழ்ந்த பிரபுக்கள் எதிர்ப்புக்களை ஒப்பிடல், ப. 96. கு. 27. ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள், ப. 96.

பரிக்ஷை வினக்கள் 97

இரண்டாம் பகுதி : 1272 - 1485

ஒரு தனி நாட்டாராக ஒன்றுபட்ட மக்கள் முன்னுக்கு வரல்

11. இங்லண்டின் முதல் இங்லிஷ் மன்னர் (1272-1307) 103

§ 47. சட்டம் வகுத்த எட்வர்ட். § 48. வேல்ஸும் ஸ்காட்லண்டும். §49. யூதர்களைத் துரத்தல். §50. மாதிரி பார்லமெண்ட். § 51. வாலஸும் ப்ரூஸும்.

12. மீண்டும் மன்னருக்கும் மானியதாருக்கும் போர் (1307-1327) 115

§ 52. பியர்ஸ் காவெஸ்டன். § 53. பானக்பர்ன். §54. அரசரின் வெற்றி. §55. அரசரின் வீழ்ச்சி.

13. மூன்றும் எட்வர்ட் : போர் (1327-1360) ... 121

§ 56. நூறுண்டுப் போரின் துவக்கம். § 57.

அத்தியாயம் பக்கம்

ஒரு புதுவகையான பட்டாளம். § 58. க்ரெஸி. § 59. ப்வாடீயே.

14. மூன்றும் எட்வர்ட் : அமைதி (1348-1377) 133

§ 60. 'கருஞ்சாவு'. §61. ஆட்டு மயிர் வியாபாரம். § 62. போப்பின் அதிகாரத்தைக் குறைத்தல். § 63. மதஸ்தாபனச் சீர்திருத்தக் கிளர்ச்சியின் உதயம். § 64. பெருமையற்ற முடிவு.

15. உழவர் கலகம் (1377-1399) ... 144

§ 65. பண்ணை முறையின் சிதைவு. § 66. ஆள்வரி. § 67. கலகம். § 68. மீண்டும் மன்னர்க்கும் பிரபுக்களுக்கும் போர். § 69. இங்லிஷ் மக்களின் தாய்மொழி.

16. லான்காஸ்டர் குடும்பத்தினர் அரசபதவியைக் கைப்பற்றல் (1399-1422) ... 159

§ 70. 'முடியணிந்தோர் மூளைக்கு அமைதியில்லை.' § 71. கலகங்கள். § 72. மறுபடியும் ப்ரான்ஸோடு போர். § 73. ஆழங்கூர்.

17. சரித்திரத்தில் ஒரு பழைய பாடம் (1422-1453) 170

§ 74. 'குழந்தை அரசரைப் பெறும் நாடு சீரழிந்து போகும்'. § 75. கன்னிப் பெண் ஜொவான். § 76. தனியுடையும் பக்க ஆதரவும் § 77. நாட்டின் சீரையழித்த இரு குடும்பக் கட்சிகள்.

18. ரோஜாக் கட்சியினர் சண்டைகள் (1453-1485) 179

§ 78. சண்டையின் தொடக்கம். § 79. ஆரம்ப நிலை. § 80. யார்க் கட்சியினர் புரட்சி. § 81. அரசரை ஆக்கியவரின் முடிவு. § 82. கொடிய சிற்றப்பன்.

குறிப்புக்கள் :—கு. 28. மார்ட்மேன் சட்டம், ப. 196. கு. 29. முதல் எட்வர்டின் சட்டங்கள், ப. 196. கு. 30. ஸ்காட்லண்டை வெல்ல முடியாமை, ப. 197. கு. 31. விட்டன் சபையிலிருந்து பார்லமெண்ட் வளர்ந்தவிதம், ப. 199. கு. 32. முதல் எட்வர்டை ஒரு சிறந்த அரசர் என்று ஏன் கருதவேண்டும்? ப. 202. கு. 33. நூருண்டுப் போர் மூண்டதன் காரணங்கள், ப. 202. கு. 34. நாட்டின் சமூக வாழ்க்கையிலும் பொருளாதார நிலைமையிலும் 'கருஞ்சாவு' நோயால் உண்டான விளைவுகள், ப. 203. கு. 35. பதினுன்காம் நூற்ருண்டில் இங்லண்டில் நாட்டுப்பற்று தோன்றிய விதம், ப. 204. கு. 36. மதஸ்தாபனம் மக்கள் மதிப்பை இழந்ததன் காரணங்கள், ப. 206. கு. 37. மூன்ரும் எட்வர்ட் ஆட்சிக் காலத்தின் இறுதியில் ப்ரான்ஸில் ஏற்பட்ட தோல்வியின் காரணங்கள், ப. 206. கு. 38. லான்காஸ்டர் ட்யூக் ஜான் அப் கான்ட், ப. 207. கு. 39. இரண்டாம் ரிச்சர்டின் குணமும் வாழ்க்கையும், ப. 209. கு. 40. இரண்டாம் எட்வர்டுக்கும் இரண்டாம் ரிச்சர்டுக்கும் ஒப்புமை, ப. 209. கு. 41. நான்காம் ஹென்றியின் தொந்தரவுகளும் அவற்றை அவர் சம்மாளித்த விதமும், ப. 211. கு. 42. இடைக் காலங்களின் பிற்பகுதியில் பார்லமெண்டின் வளர்ச்சி, ப. 212. கு. 43. நூருண்டுப் போரின் இருபகுதிகளை ஒப்பிடல், ப. 213. கு. 44. பெட்பர்ட் ட்யூக் ஜானின் வாழ்க்கை, ப. 215. கு. 45. ஆரும் ஹென்றி காலத்தில் ப்ரான்ஸில் இங்லிஷார் தோற்றதின் காரணம், ப. 215. கு. 46. ஜாக் கேட் கலகம், ப. 216. கு. 47. ரோஜாக் கட்சியினர் சண்டைகளின் காரணங்கள், ப. 218. கு. 48. ரோஜாக்கட்சியினர் சண்டைகள் முதலில் பொதுநலமிகள் கிளர்ச்சியாக ஆரம்பித்து

பக்கம்

முடிவில் சுயநலமிகள் ஆக்கிரமிப்பாக முற்றிய விதம், ப. 219. கு. 49. ‘அரசரை ஆக்கிய’ வாரிக்கின் வாழ்க்கை, ப. 221. கு. 50. இடைக்காலத்து நாகரிகம் சிதைவுற்று வந்ததன் சின்னங்கள், ப. 223.

பரிசைக்ஷ விஞக்கள் 224

முதல் பகுதி

நாட்டுமக்கள் ஒன்றுபடல்

1066—1272

முதல் பகுதி

நாட்டுமக்கள் ஒன்றுபடல்

(1066—1272)

நார்மானியர் வெற்றியிலிருந்து[1] இரண்டு நூற்றாண்டுகள் இங்லண்டில் நார்மன்[2] ஆஞ்சவின்[3] என்னும் அந்நிய அரசகுலங்கள் ஆண்டன. அக்குலங்களின் அரசர்களுள் மூவர் மிக்க திறமை வாய்ந்தவர்கள். அவர்கள், அரசன் என்ற பட்டம்மட்டும் வகிப்பதோடு நில்லாமல், உண்மையிலும் நன்றாக ஆளவேண்டுமென்று தீர்மானித்து, ஒரு ஒழுங்கான துரைத்தன முறையை வகுத்ததனால், யூரோப்பில் மற்றநாடுகளில் நிலைத்திருந்த படைமானிய திட்டத்தினால்[4] தோன்றிய ஒழுங்கீனங்களினின்றும் இங்லண்ட் தப்பியது. அவர்களது வன்மைமிக்க ஆட்சியின்கீழ் ஆங்லோசாக்சன்[5] மக்களும் நார்மன் மக்களும் நாளடைவில் ஒன்றுபட்டனர்.

இப்பகுதியின் கடைசி எழுபது வருஷங்களில் நாடு வன்மை குறைந்த மன்னர்களின்கீழ் இருக்க நேர்ந்தது. அப்போது சிறிது காலம் துரைத்தனம் மன்னர்கள் பிடியிலிருந்து விலகிப் பிரபுக்கள் வசமானது. இவ்வெற்றியை அடையப் பிரபுக்கள் அனைவரும் ஒன்றுகூடி உழைக்கவேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் பிற்காலத்தில் ஏற்பட்ட பார்லமெண்ட் துரைத்தனத்துக்குத்[6] தங்களையுமறியாமல் வழிசெய்து வைத்தவர்க ளானார்கள்.

இவ்விரு நூற்றாண்டுகளில் இடைக்காலத்து[7] நாகரிகம் உச்ச நிலை யடைந்தது.

---

1. The Norman Conquest. 2. Norman. 3. Angevin. 4. Feudalism. 5. Anglo-Saxon. 6. Parliamentary Government. 7. Medieval.

ஐந்தாம் அத்தியாயம்

நார்மானியர் வெற்றி

(1066—1087)

§ 19. வெற்றியின் முடிவு:—ஹேஸ்டிங்ஸில்[1] வெற்றி பெற்றும் வில்லியம்[2] உடனே இங்லண்டின் அதிபதி ஆகிவிட முடியவில்லை. இங்லிஷ் மக்களுள் முக்கியஸ்தர்களான மதத் தலைவர்கள் சிலரும் பிரபுக்கள் சிலரும் சேர்ந்து லண்டனில் ஹரால்டு[3]க்குப்பின் அரச பதவியை வகிக்க எட்மண்ட் அயர்ன்சைடின்[4] பெயரப்பிள்ளையான எட்கார் அதெலிங்கைத்[5] தேர்ந்தெடுத்தனர். ஆயினும், அவர்கள் படையெடுத்து வந்த எதிரிகளைப் பலமாக எதிர்த்து விரட்ட வன்மையற்றிருந்தார்கள். ஏனெனில், நாட்டுமக்களைத் திரட்டி அவர்களுக்கு உற்சாகமூட்டிப் போராடச் செய்யவல்ல போர் வீரர்கள் அனைவரும் ஹேஸ்டிங்ஸ் படுகளத்தில் மாண்டுவிட்டார்கள்.

வில்லியம் உடனே லண்டனை[6] நேராகத் தாக்கவில்லை. நாட்டுமக்கள் அவரைப் படையெடுத்துவந்த ஒரு அங்கிய வெற்றிவீரராக நினைக்காமல், அரசபட்டத்துக்குத் தமக்கு நியாயப்படியுள்ள உரிமையை நாடிவந்தவரெனவே மதிக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆகவே, அவர் வாலிங்பர்ட்[7] என்னுமிடத்தில் டெம்ஸ்[8] ஆற்றைக் கடந்து லண்டனை வடக்கிலிருந்து அடையச் சுற்றிவளைத்துச் சென்றார். அவர்

---

1. Hastings. 2. William. 3. Harold. 4. Edmund Ironside. 5. Edgar the Atheling. 6. London. 7. Wallingford. 8. The Thames.

பர்க்ஹாம்ஸ்டெட்[1] என்னுமிடத்தை அடைவதற்குள் இங்லிஷ் தலைவர்களின் உறுதி தளர்ந்துவிட்டது. அவர்கள் அவரை நாடிச்சென்று பணிந்தனர் (§ 18).

தண்டனைகள் விதிக்கவோ சன்மானங்கள் வழங்கவோ ஏற்ற காலம் வந்தது. ஹரால்டை அரசராக ஏற்றுக்கொண்டவர்களும் அவருக்குத் துணைநின்றவர்களும் தங்கள் பூசொத்துக்களை இழந்தார்கள். இவ்விதம் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் வில்லியத்தின் வெற்றிக்குக் காரணமாயிருந்த நார்மன் வீரர்களுக்கும் ப்ரெஞ்சு வீரர்களுக்கும் வழங்கப்பட்டன. இறந்த மன்னரின் குடும்பத்தினர் தலைமையில் ஏக்செடரில்[2] தோன்றிய கலகங்களும், மெர்சியா[3] நார்தம்பர்லண்ட்[4] ஏர்ல்களான[5] எட்வின்[6] மார்க்கார்[7] என்பவர்களின் தலைமையில் வடக்கிலுள்ள நடுநிலங்களில்[8] தோன்றிய கலகங்களும், மேலும் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வில்லியத்துக்குச் சாக்களித்தன. இரண்டொரு ஆண்டுகள் கழிந்ததும் ஸ்காட்லண்ட் மன்னரின் துணைகொண்டு யார்க்ஷைரில்[9] மற்றொரு நார்ஸ்மக்கள்[10] கூட்டத்தினர் இறங்கினர். வில்லியம் அவர்களை எதிர்க்க வந்ததும், அவர்கள் தங்கள் படகுகளில் ஏறிக்கொண்டு போய்விட்டனர். ஆயினும், இவ்வித ஆபத்துக்கள் மீண்டும் நேராதவண்ணம் ஹம்பர்[11] ஆற்றுக்கும் டீஸ்[12] ஆற்றுக்கும் இடையிலுள்ள நாடுமுழுவதையும் வில்லியம் பாழாக்கி அழித்தார் (நாட்டின் வட பாகங்களை அழித்தல்,[13] 1069). புதிய ஆட்சியை எதிர்த்து, பென்லண்ட்[14] சதுப்பு நிலங்களிடையேயுள்ள ஈலி[15] தீவில் ஹேரிவர்ட் வேக்[16] என்பவர் ஒரு கிளர்ச்சி செய்தார். முக்கியமாக, நார்மன் குரு ஒரு

1. Berkhamstead. 2. Exeter. 3. Mercia. 4. Northumberland. 5. Earls. 6. Edwin. 7. Morcar. 8. Northern Midlands. 9. Yorkshire. 10. Norsemen. 11. The Humber. 12. The Tees. 13. 'The Harrying of the North'. 14. Fenland. 15. Ely. 16. Hereward the Wake.

வரைப் பீடர்பரோ மடாதிபதியாக[1] நியமித்ததே அக்கிளர்ச்சியைத் தூண்டியது. ஆயினும், சதுப்பு நிலங்களைக் கடக்க வழி கண்டுபிடித்துக்கொண்டு நார்மன் படைகள் வந்ததும், அக்கிளர்ச்சி அடங்கியது.

§ 20. நார்மன் படைமானிய திட்டம்[2]:—வெற்றி வீரரான வில்லியமே 'ப்யூடலிசம்' எனப்படும் படைமானிய திட்டத்தை இங்லண்டில் புகுத்தினர் என்று முன்னர் நம்பப்பட்டது. ஆயினும், இது ஓரளவில்மட்டுமே உண்மை. படைமானிய திட்டம் இங்லண்டிலும் முன்னிருந்தே ஒருவகையான ஒழுங்கற்ற முறையில் வளர்ந்துகொண்டுவந்தது (§ 16). ஆங்லோசாக்சன் மக்களைவிட நார்மன் மக்கள் தெளிவும் புத்திகூர்மையும் மிக்கவர்கள். படைமானிய திட்டத்தின் அடிப்படையான கொள்கையினை அவர்கள்(நார்மானியர்) நன்ருக உணர்ந்திருந்தார்கள். அதனை நடைமுறையில் கையாண்டுபார்க்க, இங்லண்டைப்பிடித்ததும், வில்லியத்துக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. தமக்கு அநுகூலமான நிபந்தனைகளை விதித்து அவர் மானியங்களை அளிக்கலானர். எல்லா நிலங்களுக்கும்—மதஸ்தாபனத்தின்[3] அநுபோகத்திலுள்ள நிலங்களுக்குங்கூட—படைப்பணி[4] செய்தாகவேண்டுமென்று அவர் வற்புறுத்தினர்.

நார்மண்டி ட்யூக்காக[5] அவருக்கு ஏற்பட்ட அநுபவம் இங்லண்டில் அவருக்குப் பெரிதும் பயன்பட்டது. படைமானிய முறையினல் யூரோப்பிய நாடுகளில் தோன்றிய தொல்லைகளும் ஆபத்துக்களும் இங்லண்டில் தோன்ருதபடி அவர் திட்டஞ்செய்தார். தம் அதிபதியான[6] ப்ரான்ஸ் அரசரது[7] அதிகாரத்தினின்றும் தாம் விலகிச் சுயேச்சைபெற்றது

1. Abbot of Peterborough. 2. Norman Feudalism. 3. The Church. 4. Military service. 5. Duke of Normandy. 6. Overlord. 7. King of France.

அரசர்
பெரிய ஆலோசனை சபை
ஏர்ல்கள் பாரன்கள் (பிரதம மானியதாருள் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள்)
மடாதிபதிகள் பிஷப்புகள் (பிரதம மானியதாருள் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள்)
பிரதமமானியதாருள் அந்தஸ்தில் தாழ்ந்தவர்கள் (நைட்டுகள்) அரசரிடமிருந்து பெற்ற மானியப்பண்ணைகள்
காடுகள்
இடைப் பட்ட மானிய தார்கள்
சில பட்ட ணங் கள்
இடைப் பட்ட மானிய தார்கள்
சில பட்ட ணங் கள்
பெரும் பான்மை யான பட்ட ணங்கள்
அரசர்க்காக பெய்லிப்புகள் கவனித்து வரும் பண்ணைகள்
(மானியப்) பண்ணைகள்
(மானியப்) பண்ணைகள்
(மானியப்) பண்ணைகள்

போல், தமக்குக் கீழுள்ள பிரபுக்கள் தம்மை மீறிச் சுயேச் சாதிகாரம்[1] பெறக்கூடாதென்று அவர் உறுதிகொண்டார். நார்மண்டியில் பிரபுக்களை அடக்கிவைப்பது அவருக்குப் பெரும் பிரயாசமாயிருந்தது ; இங்லண்டிலோ வெற்றிவீரர் என்னும் நிலை அவருக்கு மிகுந்த ஆதிக்கத்தைத் தந்தது. யூரோப்பில் பெரிய மானியங்களைப்[2] பெற்ற பிரபுக்கள் தங்கள் தங்கள் கீழ்மானியதார்களையும்[3] பண்ணைக்குடிகளையும்[4] பல கொடுமைகளுக்கு உட்படுத்தினார்கள் ; தங்களுக்குள் ஓயாமல் சில்லரைப் போர்களை நிகழ்த்திக்கொண்டிருந்து நாட்டைப் பாழாக்கினார்கள். இதுவே யூரோப்பிய படைமானிய முறையின்[5] குறைகளுள் மிகக் கேவலமானது. ஆகவே, தம்மை மீறி நடவாதபடி, பிரபுக்களைக் கட்டியாளவேண்டுமென்று வில்லியம் தீர்மானித்தது இங்லிஷ் மக்களுக்கு மிகவும் நன்மையாக முடிந்தது.

வில்லியம் தம் அதிகாரத்தை மேலோங்கவைக்கச் செய்த சூழ்ச்சிகள் பின்வருவன :—

(1) செல்வமே ஒரு மன்னனுக்கு வன்மையளிக்கவல்லது என்பதை உணர்ந்து, அவர் தம் வருமானத்தைப் பெருக்கிக்கொண்டார். தமக்கென்றே அவர் ஆயிரம் செழுமை மிக்க 'மானர்'[6] என்னும் பெரும் பண்ணைகளை வைத்துக் கொண்டு, அவைகளை 'பெய்லிப்'[7] என்னும் காரியக்காரர்கள் மூலம் கண்காணித்து வந்தார். தமது பிரதம மானியதார்கள்[8] செலுத்த வேண்டிய மானிய இறைகளைக்[9] கண்டிதமாக வசூலித்ததோடு, 'டேனியர் பொன்'[10] என்னும் வரியையும் விடாது தண்டிக்கொண்டுவந்தார். 'டேனியர் பொன்' என்னும் வரி அவருக்கு நல்ல வருமானத்தை அளித்தது. படை

---

1. Independence. 2. Fiefs. 3. Sub-tenants. 4. Villeins. 5. Continental Feudalism. 6. Manor. 7. Bailiff. 8. Tenants-in-chief 9. Feudal dues. 10. Danegeld.

மானிய திட்டத்தில் இறைவர் அல்லது அதிபதி நிலையி லிருந்த வேறு எந்த மன்னர்க்கும்[1] இதைப்போன்ற நிலையான நேர்வருமானம் இருந்ததில்லை. மானியதார்களிடமிருந்து தமக்குச் சேரவேண்டியதைச் சரியாக நிர்ணயிக்கவேண்டி, அவர் நாட்டிலுள்ள ஒவ்வொரு பண்ணையின் பெறுமானத் தையும் நேரில் பார்த்து மதிப்பிட உத்தியோகஸ்தர்களை அனுப்பிவைத்தார். அவர்கள் கொண்டுவந்த விவரங்கள் அனைத்தும் வின்செஸ்டரில்[2] டூம்ஸ்டே புக் ('கடைநாட் சுவடி'[3] அல்லது 'தீர்மானச்சுவடி') எனப்பட்ட ஒரு நிலை யான கணக்குப்புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டன (1086). இதுவே 'டூம்ஸ்டே நிலக்கணக்கு'[4] எனப்பட்டது.

(2) அவருக்கு ஆதரவு அளித்த முக்கியஸ்தர்களுக்குப் பல பெரும்பண்ணைகளை மானியமாக அளிக்க நேர்ந்த போதும், அவை ஒரே இடத்தில் சேர்ந்து அமையாது நாட் டின் பல பாகங்களில் விரவி இருக்குமாறு வில்லியம் பார்த் துக் கொண்டார். அதனால் அவர்கள் அரசரது அதிகாரத் துக்கு எதிராகத் தங்கள் படைகளைத் திரட்ட முயலுதல் மிக வும் கடினமாகிவிட்டது. உதாரணமாக, மார்ட்டேன் என்னு மிடத்து ராபர்ட்[5] என்ற தம் உறவினர்க்கு அவர் 790 பண்ணைகளை அளித்தார்; ஆயினும், அவை இருபது கௌன்டிகளில்[6] (ஜில்லாவைப்போன்ற ஒரு பிரிவு) சிதறிக் கிடந்தன.* அடிக்கடி அந்நியர் படையெழுச்சிக்கு உட்படக் கூடிய பாகங்கள் மட்டும் (கென்ட்,[7] டராம்[8], வேல்ஸ்[9] எல்லைப்

---

* இச் சூழ்ச்சியைக் கையாள முடிந்தது அவர் நாட்டைத் துண்டு துண்டாகக் கைப்பற்றியதாலேயே எனலாம்.

1. Feudal king. 2. Winchester. 3. Domesday Book. 4. Domesday Survey. 5. Robert of Mortain. 6. County. 7. Kent. 8. Durham. 9. Wales.

புறம்) இதற்கு விலக்காயின[1]. அப்பாகங்களில் ஏர்ல்களை[2] அமர்த்தி அவர்களுக்குப் பரந்த மானியங்களும் நிறைந்த அதிகாரமும் கொடுத்துவைத்திருந்தார். அந்நியர் படையெடுத்துவரின் அவர்களை நாட்டினுள் புகாவண்ணம் தடுக்கக் கூடிய படைப்பலத்தினை அவர்கள் பெற்றிருந்தனர். ஆயினும், அத்தகைய ஏர்ல்களாக நியமிக்கப்பட்டவர்கள் அநேகமாக அவரது நெருங்கிய உறவினர்களாகவே இருந்தனர்.

(3) வில்லியம் நாட்டின் பலபாகங்களில் 'காசில்'[3] என்ற அரண்களைக் கட்டி அவற்றில் தமக்கு நேராகக் கட்டுப்பட்ட படைத்தலைவர்களின்கீழ்த் தம் சொந்த போர்வீரர்களைக் காவற்படைகளாக[4] வைத்திருந்தார். ஆயினும், அத்தகைய அரண்களைக்† கட்டிக்கொள்ள அவர் தம் பிரபுக்களுக்குச் சாதாரணமாக அநுமதி கொடுக்கவில்லை. அநுமதித்திருப்பாராயின், அவர்கள் அரண்களின் பாதுகாப்பை நாடி அரசர் அதிகாரத்துக்கு அடங்காது, அவரை எதிர்த்து நிற்கவும் தைரியங்கொள்ளுவார்கள்.

(4) ஷெரிப்[5] என்ற உத்தியோகஸ்தர்களை வில்லியம் பெரிதும் பயன்படுத்திக்கொண்டார்(§ 9). 'ப்யூடலிசம்'[6] எனப்பட்ட படைமானிய ஏற்பாடு ஒரு துரைத்தன முறையாவதுடன் நியாயபரிபாலன முறையுமாகும். ஆகவே, நார்மண்டியில் போலவே இங்லண்டிலும் மானியதார்கள்[7] பண்ணை நீதிமன்றங்கள்[8] வைத்து நடத்த வில்லியம் அநுமதியளித்திருந்தார். ஆயினும், ஷெரிப்புகள் மூலமாக அவர்களை அத்துக்குள் வைத்திருந்தார். வில்லியம் நார்மண்டியில் சில பிரபுக்களுக்கு

† அவற்றுள் லண்டன் அரண்[9] மிகவும் பேர்போனது.

1. Exception. 2. Earls. 3. Castle. 4. Garrisons. 5. Sheriffs. 6. Feudalism. 7. Tenants. 8. Manor Courts. 9. The Tower of London.

வைஸ்கோம்ஸ்[1] (கௌன்டின் பிரதிநிதி) என்னும் பட்டங்கொடுத்து, அவர்களை மற்ற பிரபுக்கள் தங்கள் அதிபதிக்கு இயற்றவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யும் வண்ணம் கவனித்துக்கொள்ளுமாறு அடிக்கடி அனுப்பிக் கொண்டிருந்தார். இங்லண்டிலோ அவர் பழைய இங்லிஷ் அதிகாரியான ஷெரிப்பைக்கொண்டே நார்மன் அதிகாரியான வைஸ்கோம்ஸின் வேலையையும் நடத்திக்கொண்டார். அரசர்க்குச் சேரவேண்டிய இறைகளைத்[2] தண்டுதல், அவரது பிரதிநிதியாக ஷைர் நீதிமன்றங்களில்[3] தலைமைவகித்தல், அரசர்க்குப் படைப்பணி[4] புரியவேண்டியவர்கள் அரசர் அழைக்கும்போது அதைப் புரியத் தயாராயிருக்கும்படி பார்த்துக்கொள்ளுதல் முதலானவை ஷெரிப்புகளின் பொறுப்புக்கள்.

(5) பிரதமமானியதார் [இவர் பொதுவில் 'பாரன்'[5] எனப்படுவார்] ஒவ்வொருவருக்குங்கீழ்க் கீழ்மானியதார்கள்[6] பலர் இருந்தனர். இக் கீழ்மானியதார்கள் தாங்கள் பெற்றுள்ள பண்ணைகளுக்காகத் தத்தம் மேல்மானியதாருக்குப் படைப்பணி செய்யவேண்டும். யூரோப்பில் 'இடைப்பட்ட மானியதார்கள்'[7] எனப்படும் இக்கீழ்மானியதார்கள் தங்களுக்கு நேர்மேலாக உள்ள மேல்மானியதார்களுக்கு[8] அரசரை எதிர்க்கவும் சில சமயங்களில் துணைசெய்து வந்தார்கள். இந்த ஒழுங்கீனத்தைத் தடுக்க வில்லியம் தம் நாட்டிலிருந்த ஒவ்வொரு பண்ணைக்காரரையும் (பெரும்பண்ணைக்காரர்களையும் சிறுபண்ணைக்காரர்களையும்) தம்மைச் சால்ஸ்பெரி[9] என்னுமிடத்தில் நேரில் கண்டு பணிந்து, தம் பகைவர்கள் அனைவரையும் (உள்நாட்டுப்பகை

1. Vicecomes. 2. Royal dues. 3. Shire courts. 4. Military service. 5. Baron. 6. Sub-tenants. 7. Mesne tenants. 8. Immediate overlords. 9. Salisbury.

வர்களையும் வெளிநாட்டுப்பகைவர்களையும்) எதிர்த்துத் தமக்கு உண்மைச் சேவகம் புரிவதாக ஆணையிட்டு வாக்களிக்கும் வண்ணம் ஆஞ்ஞாபித்தார். இதையே சால்ஸ் பேரி வாக்குறுதி[1] என்பர் (1086).

§21. வெற்றி மன்னர் வில்லியமும்[2] மதஸ்தாபனமும்[3]:— இங்லண்டின்மீது படையெடுத்து வந்தபோது வில்லியம் போப்பின்[4] ஆதரவையும் ஆசியையும் நாடினர். அதற்குப் போப் ஒரு புனிதக்கொடியை அனுப்பிவைத்தார். வில்லியம், சத்தியம் தவறின ஒருவனைத் தண்டிக்கும் புனிதக் கடமையை மேற்கொண்டதாலும், இங்லண்டிலுள்ள கிரிஸ்து மதஸ்தாபனம்[5] முழுவதையும் சீர்திருத்தியமைக்கக் கோரியதாலும் போப்பின் ஆசீர்வாதத்தைப் பெற விரும்பினர். உண்மையில் அவர் மதப்பற்று நிறைந்தவர். ஆகவே, அவர் நாட்டைக் கைப்பற்றியதும் தம் கோரிக்கையை நிறைவேற்ற முயன்றார். அதிபத்தரான எட்வர்ட்[6], மதச்சீர்திருத்தம் செய்யத் தொடங்கினரேனும், உறுதியற்றவராயிருந்ததால் எதையும் பூர்த்தியாகச் செய்யவில்லை (§ 16). வில்லியம் அஞ்சா நெஞ்சுடனும் உறுதியான தீர்மானத்துடனும் இச் சீர்திருத்தத் துறையி லிறங்கினர். நார்மண்டியில் காங்[7] மடத் தலைவரா[8]யிருந்த லான்ப்ரான்க்[9] (1005—1089) என்பவரை இங்லண்டுக்கு வரவழைத்துக் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பாக ஆக்கினர்[10] (கு. 10). லான்ப்ரான்க் இடலி நாட்டினர். அவர் சிறந்த படிப்பாளியென்றும், நல்ல ஆசிரியரென்றும், திறமை மிக்க சீர்திருத்தக்காரரென்றும் நார்மண்டியிலேயே பெயரெடுத்தவர். இங்லண்டில் அவருக்குக் கொடுக்கப்பட்ட பெரிய

1. Oath of Salisbury. 2. William the Conqueror. 3. The Church. 4. The Pope. 5. The English Church. 6. Edward the Confessor. 7. Caen. 8. Abbot. 9. Lanfranc. 10. The Archbishop of Canterbury.

பொறுப்பினை அவர் மிக்க திறமையோடும் ஓயா உழைப்போடும் தாங்கினர். சாமர்த்தியம் நிறைந்த அரசியல் நிபுணராகவும் அவர் விளங்கினர். அப்போது போப்பின் அதிகாரம் மதவிஷயங்களில் மிக்க வன்மையுற்றிருந்தது. அதற்குக் காரணகர்த்தராயிருந்தவர் 1073 முதல் 1085 வரையில் ஏழாவது க்ரிகோரி[1] என்னும் பட்டத்துடன் போப் நிலையில் இருந்த ஹில்டிபிராண்ட்[2] என்பவர். அவர், போப் இம்மண்ணுலகில் கடவுளின் மானிட உருவாக இருத்தலால் நிலமன்னர்க்கெல்லாம் மேலதிகாரியாயிருக்க வேண்டுமென்றும், கிரிஸ்துமதஸ்தாபனத்துக்கு[3] இருக்கவேண்டிய கண்ணியத்தினை நிலைநாட்ட அதன் அங்கங்களாகிய குருமார்களும் சிப்பந்திகளும் ஒழுங்கான கட்டுப்பாடுகளுக்கு இணங்கி வாழ்தல் வேண்டும் (முக்கியமாக, அவர்கள் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது) என்றும் வற்புறுத்திக் கூறினர். ஹில்டிபிராண்ட் வகுத்த ஒழுங்குகளையும் கட்டுப்பாடுகளையும் இங்லண்டில் புகுத்தியதே லான்ப்ரான்க்கின் பெரிய வேலை. அவர், சோம்பலேறித் திறமை குன்றியிருந்த ஆங்லோசாக்சன் மடத்தலைவர்களையும் பிஷப்புகளையும் விலக்கி, அவர்கள் இடங்களில், சாமர்த்திய மிக்க நார்மன் குருமார்களை நியமித்தார். மடாலயங்களை[4] ஒழுங்குபடுத்தினர்; பிஷப்புகளின் அதிகார எல்லைகளைப் புதிதாக வரையறுத்தார்; பள்ளிக்கூடங்கள் நிறுவினர். கிரிஸ்துவ குருமார்கள் அனைவரும் ஆயுள் முழுமையும் பிரமசாரிகளாயிருந்து தூயவொழுக்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கட்டுப்படுத்தினர். அவர் காலத்தில் நாடு முழுமையும் மனத்தைக் கவரும் கம்பீரமிக்க தேவாலயங்களும் மடாலயங்களும் எழுந்தன. அவரது யோசனையின்மேல்

---

1. Pope Gregory. 2. Hildebrand. 3. The Church. 4. Monasteries.

வில்லியம் மரணசாசனங்கள் (உயில்கள்)[1], கலியாணங்கள், குருமார்கள் செய்த குற்றங்கள் முதலிய மதசம்பந்தமான விஷயங்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கத் தனி மதஸ்தாபன நீதிமன்றங்களை[2] நிறுவினார்.

ஆயினும், தம் ஆதரவைப்பெற்று வென்ற அரசுக்குத் தம்மையே அதிபதியாக ஏற்றுக்கொண்டு இறைவணக்கம்[3] செய்யவேண்டுமென்றும், இங்லண்டுக்கு வேண்டிய பிஷப்புகளை நியமிக்கத் தமக்கே உரிமை உண்டென்றும் போப் கூறிய போது, வில்லியம் மரியாதையாகவே அவற்றிற்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். தமக்கும் தம் குடிமக்களுக்கும் இடையில் நுழைந்து தம் ஆணைக்கு மேலான ஆணை செலுத்த யாருக்கும்—போப்புக்குங்கூட—இடந்தரக்கூடா தென்பது அவரது உறுதியான கொள்கை. வில்லியத்தின் மனோவன்மையை உணர்ந்த போப் தமது அபிப்பிராயத்தை வற்புறுத்தாமல் விட்டுவிட்டார்.

§22. வெற்றி மன்னர் வில்லியத்தின் குணம்:— ஆங்லோசாக்சன் நிகழ்ச்சிக் குறிப்பு[4] என்னும் பழைய சுவடியில், வில்லியத்தோடு பழகி அவர் ஆஸ்தானத்திலிருந்த இங்லிஷ் துறவி[5] ஒருவர், அவர் குணத்தைக் கீழ் வருமாறு சித்திரித்துள்ளார்: "அவர் அறிவுமிக்க பெரிய மனிதர்; அவருக்குமுன் ஆண்டவர்களைவிட வன்மையும் மதிப்பும் மிக்கவர்.........ஆயினும், அவர் விருப்பத்துக்கு எதிர் நின்றவர்களிடம் அவர் அளவுக்கு மீறிய கொடூரத்தைக் காட்டினார். கடவுள் அருளால் அவர் இங்லண்டை எங்கு வென்றாரோ அவ்விடத்தில் ஒரு கம்பீரமான மடாலயத்தை நிறுவி, அதை மிகச் செழுமையாக்கினார். கான்டர்பெரியிலுள்ள பெரிய

---

1. Wills. 2. Church Courts. 3. Homage. 4. The Anglo-Saxon Chronicle. 5. Monk.

மடாலயமும், இங்லண்ட் நெடுக வேறு பல மடாலயங்களும் அவர் காலத்தில் கட்டப்பட்டவைகளே. அவர் இங்லண்டி லிருந்தபோது ஈஸ்டரில்[1] வின்செஸ்டரிலும்,[2] பென்டி காஸ்டில்[3] வெஸ்ட்மின்ஸ்டரிலும்,[4] க்ரிஸ்மஸில்[5] கிளாஸ் டரிலும்[6] வருஷத்தில் மூன்றுதரம் முடிசூடிக்கொண்டார். அச்சமயங்களில் ஆர்ச்பிஷப்புகள், பிஷப்புகள், மடத்தலை வர்கள், ஏர்ல்கள், 'தேன்'[7] எனப்படும் கனவான்கள், 'நைட்'[8] எனப்படும் வீரர்கள் முதலிய இங்லண்டின் முக் கியஸ்தர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்திருப்பார்கள். அவர் கண்டிதமும் சீற்றமும் மிகுந்தவராக இருந்ததால், அவரது ஆணையை மீறி நடக்க எவரும் துணிவதில்லை. அப்படித் துணிந்து அரசராணையை மீறிய ஏர்ல்கள் சிறைக்காவல் பெற்றனர்; பிஷப்புகளும் மடாதிபதிகளும் தங்கள் பதவிகளை இழந்தனர். தம் உடன்பிறந்தவராகிய ஓடோவையும்[9] அவர் மன்னிக்கவில்லை. அவரிழைத்த மற்ற நன்மைகளோடு அவர் நாட்டில் நிலைக்கச்செய்த அமைதி மறத்தற்பாலதன்று. அவர் ஆண்ட காலத்தில் ஒருவன் பை நிறையப் பொன் எடுத்துக் கொண்டு யாதொரு பயமுமின்றி நாடு நெடுகப் பயணம் செய்யலாம். கொலைசெய்ய மக்களுக்குப் பயம். தமது வரு மானத்தைப்பற்றியும் உரிமைகளைப்பற்றியும் அவர் மிக்க கருத்துள்ளவராக இருந்ததால், நாடு முழுமையிலும் உள்ள நிலங்களையெல்லாம், ஒரு சிறு பண்ணையையும் விடாமல், அளந்து மதிப்பிட்டுப் பதிவுசெய்து வைத்துக்கொண்டார். இதனால் சிறு பண்ணைக்காரர்களுடைய பெயர்களும் அவருக் குத் தெரியும். மான்கள் பெருக அவர் தனிப்பட்ட பெரிய காடுகளை வளர்த்தார். அவைகளைக் கொல்பவர்களின் கண்

1. Easter. 2. Winchester. 3. Pentecost. 4. Westminster.
5. Chirstmas. 6. Gloucester. 7. Thegn. 8. Knight. 9. Odo.

களைப் பிடுங்கிவிட வேண்டுமென்றும் சட்டமியற்றினர். மான்களோடு அவர் ஆண் பன்றிகளையும் கொல்லக்கூடாதென்றார். உயரமான கலைமான்களை அவற்றின் தந்தைபோலும் அவர் நேசித்துப் பாதுகாத்தார்."

ஆறும் அத்தியாயம்

பிற்பட்ட நார்மன் மன்னர்கள்

(1087—1154)

§23. செந்தலை மன்னரின்[1] ஆட்சி:—வெற்றி மன்னர் வில்லியத்துக்குப்[2] பிள்ளைகள் மூவர். மூத்தவரான ராபர்ட்டுக்கு[3] அவர் நார்மண்டியை அளித்தார்; இளையவரான வில்லியமே[4] தமக்குப்பின் இங்லண்டுக்கு மன்னராக வேண்டுமென்றார்; கடைசி மகன் ஹென்றிக்கு[5] 5000 பவுன் பணங் கொடுத்தார்.

இரண்டாம் வில்லியம் செந்தலையர். அதனல் அவர் 'செந்தலை வில்லியம்'[6] என வழங்கப்பட்டார். தந்தையின் திறமையில் கொஞ்சம் மகனுக்கும் இருந்தது; தமது ஆணைக்கோ விருப்பத்துக்கோ மீறிநடப்பவர்மீது மகனும் கடுங்கோபம் கொள்பவரே. ஆயினும், தந்தையின் மதப்பற்றில் தனயனுக்குச் சிறிதளவும் இல்லை. ஒழுக்க வரம்பை மீறிக் கட்டுக்கடங்காத கொடிய வாழ்க்கையை வாழ்ந்ததனல் அவருக்கு எப்போதும் பணம் தேவையாயிருந்தது. அதை அடைய அவர் கையாண்ட முறைகளோ பெரிதும் நெறி தவறியவை. அவரது முக்கிய மந்திரி ரால்ப் ப்ளாம்பார்ட்[7]

---

1. Rufus. 2. William the Conqueror. 3. Robert. 4. William. 5. Henry. 6. William Rufus. 7. Ralf Flambard

என்ற ஒரு அயோக்கியப் பாதிரி (கு. 11). அவர் அரசருக்குப் பல நியாய விரோதமான சூழ்ச்சிகளைக் கற்றுக்கொடுத்தார். 'டேனியர் பொன்' என்னும் வரியை ஒரு பென்னி பாக்கியும் இல்லாமல் வசூலித்தார். அரசரின் மானியதாரர்களிடமிருந்து[1] மானிய இறைகள்[2] வசூலிக்கப் பல சந்தர்ப்பங்கள் கற்பித்தார். மேலும், பிஷப்புகள் மடாதிபதிகள் பதவிகளில் காலி ஏற்பட்டபோது, அவற்றிற்குப் புது ஆட்களை நியமிக்காமல், அந்த ஆதீனங்களின் செழுமையான வருமானங்களை அரசரே வசூலித்துக் கொள்ளுமாறு ஒரு சூழ்ச்சி செய்தார். அதனால் அரசருக்கு நல்ல லாபங் கிடைத்தது. 1089-ல் லான்ப்ரான்க்[3] இறந்த பிறகு, கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்ஸ்தானமே நான்கு ஆண்டுகள் காலியாக வைக்கப்பட்டிருந்தது. அப்போது செந்தலையர் நோயில் வீழ்ந்தார். செத்து விடுவோம் என்னும் பயத்தால் அவர் இனி நெறியுடன் வாழ்வதாக உறுதிகூறிக்கொண்டார். அதன்படியே நோயிலிருந்து எழுந்ததும் ஆன்செல்ம்[4] (1033-1109) என்ற ஒரு தூயமனத் துறவியைக் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பாக நியமனஞ் செய்தார். அந்தப் பதவியைத் தமக்கு முன் வகித்தவரைப் போலவே ஆன்செல்மும் இடலியில் பிறந்து நார்மண்டியில் பெக் மடாலயத் தலைவராக[5] இருந்தவர். ஆயினும், ஆன்செல்முக்கும் லான்ப்ரான்க்குக்கும் எவ்வளவோ வேற்றுமை யிருந்தது. லான்ப்ரான்க் உலகானுபவ முற்றிய அரசியல் நிபுணர். கிரிஸ்துமதஸ்தாபனத்தின்[6] ஒழுங்கையும் கண்ணியத்தையும் பெருமைபடுத்த அவருக்கு எவ்வளவு ஆர்வமிருந்ததோ அதற்கு ஒத்த ஆர்வம் தமக்கு இறைவரான மன்னரின் கண்ணியத்தையும் பலத்தையும் பெருக்கு

---

1. Royal tenants. 2. Feudal dues. 3. Lanfranc. 4. Anselm. 5. Abbot of Bec. 6. The Church.

வதிலும் அவருக்கு உண்டு; வெற்றி மன்னர் வில்லியத்துக்கு அவர் மிக்க மரியாதை செய்தார். ஆன்செல்மோ இராஜதந்திரம் பயிலாத வெள்ளைமனத் துறவி. கிரிஸ்து மதஸ்தாபனத்தின்[1] உரிமைகளும் பெருமைகளுமே அவருக்கு எல்லாம். அக்காலத்திய படிப்பாளிகளுள் அவர் தலைசிறந்து விளங்கினார்; சாந்த குண சீலர். ஆர்ச்பிஷப் பதவியை ஏற்க அவருக்குச் சிறிதளவும் விருப்பமில்லை. கொடுங்கோல் அரக்கனான செந்தலை வில்லியத்தின்கீழ்க் காரியங்களைக் கவனித்தல் தம்மால் இயலாது என்பதை அவர் உணர்ந்து, அவ்வரசனை ஒரு மதம் பிடித்த காளை எருதுக்கும், தம்மை அதோடு இணைக்கப்படும் ஒரு கிழ ஆட்டுக்கும் ஒப்பிட்டுக் கூறினார். ஆயினும், அப்பதவியை அவர் ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு, அவரது கலப்பற்ற மதப்பற்று, கிரிஸ்துமதஸ்தாபனத்தின் தெய்விக உரிமைகளென்று அவர் கருதியவைகளைச் சலிப்பின்றிச் சாதித்து நிலைநாட்ட அவருக்குப் போதிய உறுதியை அளித்தது. அவர் செந்தலை மன்னர் கான்டெர்பெரி ஆதீனத்தின் வருமானத்திலிருந்து துராக்கிருதமாக எடுத்துக் கொண்ட பணம் மொத்தத்தையும் ஒரு பைசாகூட விடாமல் திருப்பித்தரவேண்டும் என்றார். தமது புதிய பதவியின் சின்னமாகப் போப்பிடமிருந்துவந்த அங்கியை[2] வில்லியம் கையிலிருந்து வாங்க மறுத்துவிட்டார். மன்னர் கடுங்கோபங் கொண்டும் ஆன்செல்ம் உறுதி தளரவில்லை. அவர்களிடையே தீராப்பகை மூண்டது. முடிவில் ஆன்செல்ம் இங்லண்டை விட்டுப் போய்விட்டார். மீண்டும் செந்தலை மன்னர் கான்டெர்பெரி ஆதீன சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டார் (கு. 12).

---

1. The Church. 2. The Pallium.

§ 24. முதல் சிலுவைப் போர்[1]:—இடைப்பட்ட காலங்கள்[2] எனப்படும் அக்காலத்தில் கிரிஸ்துமதஸ்தாபனமானது[3] கிரிஸ்துவ மக்களிடையே எவ்வளவு செல்வாக்கு பெற்றிருந்தது என்பதை இக்காலத்தில் நாம் ஊகித்துணர்வது கடினம். மேற்கு யூரோப் முழுமையும் மதவிஷயங்களில் போப்பின் ஆணைக்கு உட்பட்டிருந்தது. குருமார்கள் எங்கும் ஒரே சடங்கினை ஒரே மொழியில் நடத்தினர். எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்கள் அவர்களேயானதால், எழுத்தும் படிப்பும் இன்றியமையாத மற்ற தொழில்களையும் அவர்களே செய்ய வேண்டியவர்களாயினர். ஆகவே, குருமார்களே மந்திரிகளாகவும் இராஜதந்திரிகளாவும் நியாயவாதிகளாகவும் துரைத்தன உத்தியோகஸ்தர்களாகவும் வேலைபார்த்து வந்தனர். மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் போதனைகளில் மக்கள் முழு நம்பிக்கை வைத்தார்கள்; சுவர்க்கத்தின் சிறப்புக்களும் நரகத்தின் சித்திரவதைகளும் அவர்களுக்கு மிகவும் உண்மையாகவும் நெருக்கத்தில் அநுபவிக்கக் கூடியவைகளாகவும் தோன்றின.

கீழ்க் குறிப்பிட்டுள்ள விஷயங்களிலிருந்து அக்காலத்தில் கிரிஸ்துமதஸ்தாபனத்துக்கிருந்த செல்வாக்கை ஒருவாறு உணரலாம்:—(1) அடைக்கல உரிமை[4] என்பது, கோவிலுக்குள் அடைக்கலம் புகுந்தவனுக்கு, அவன் சட்டவிரோதமான குற்றங்களைச் செய்திருந்தபோதிலும், பாதுகாப்பு அளித்தது. (2) ஓர் இளம் போர்வீரனுக்கு 'நைட்'[5] என்னும் வீர பட்டத்தை அளிப்பதன்முன் செய்யப்பட்ட சடங்கு, அவனைத் தருமத்தின் சேவையில் தயையோடும் நியாய உணர்வோடும் ஆண்மையோடும் உழைக்க வாக்குறுதி

---

1. The First Crusade. 2. The Middle Ages. 3. The Church.
4 The Right of Sanctuary. 5. Knight.

கொடுத்துள்ள ஒரு வீர பக்த கோஷ்டியின் அங்கத்தினனுக்கியது. (3) கடவுளின் சமாதானம்[1] என்பது குருமார்களுக்கும் பெண்களுக்கும் தீங்கு நேராதபடி பார்த்துக்கொண்டதோடு, வியாழம் முதல் ஞாயிறு ஈறாக உள்ள நாட்களில் எத்தகைய பலாத்கார செயலும் செய்யலாகாதெனக் கட்டுப்படுத்தியது. இந்தத் திட்டங்கள் சில சமயங்களில் மீறப்பட்டும் இருக்கலாம். ஆயினும், அவைகளை நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்ததே கிரிஸ்துமதஸ்தாபனமானது கிரிஸ்துவ மக்களின் எண்ணங்களையும் செயல்களையும் அந்தப் படுத்திவைக்கப் பாராட்டிய உரிமையின் வன்மையைக் காட்டுகிறது.

எனினும், சிலுவைப் போர்களே[2] கிரிஸ்துமத ஆட்சியின் வன்மையை எடுத்துக்காட்டச் சிறந்த உதாரணமாம். பக்தர்கள் 'புண்ணிய பூமி' அல்லது 'புனித நாடு'[3] எனப்பட்ட ஜெருசெலெத்தைச்[4] சூழ்ந்த நாட்டுக்கு யாத்திரை போய்வருவது நெடுநாளைய வழக்கம். ஆயினும், 1050ஆம் நெருக்கத்தில் அந் நாட்டினை முகம்மதிய மதத்தைத் தழுவிய துருக்கர்கள்[5] பிடித்துக்கொண்டு கிரிஸ்துவ யாத்ரிகர்களுக்குக்[6] கொடுமைசெய்து வந்தனர். ஆகவே, 1095ஆம் கிரிஸ்துவர்களுக்கு இன்னல் விளைத்த புறமதத்தினர்[7] மீது மதப்போர்[8] தொடங்கக் கிரிஸ்துவ போர்வீரர்கள் திரண்டுசெல்லவேண்டுமென்று போப் ஆஞ்ஞாபித்தார். உடனே மேற்கு யூரோப் முழுமையும் மிகுந்த பரபரப்பும் கிளர்ச்சியும் தோன்றின. அப்போது கிளர்ச்சியுற்றபடி, அதற்கு முன்னும் பின்னும் பெரிய மக்கட்கூட்டங்கள்

---

1. The Truce of God. 2. The Crusades. 3. The Holy Land. 4. Jerusalem. 5. Mohammedan Turks. 6. Pilgrims. 7. Unbelievers. 8. Holy War.

மதப்பற்றினால் அவ்வளவு அதிகமாக எப்போதும் தூண்டப்பட்டதில்லை. நைட்டுகளும் பாரன்களும் மன்னர்களும் சாதாரண மக்களும் தத்தம் நித்திய அலுவல்களையும் ஒதுக்கிவைத்துவிட்டுத் தங்கள் தோள்களின் மேல் செஞ்சிலுவைக் குறியைப்[1] பெருமையோடு அணிந்து சிலுவைப் படையில் சேர்ந்து, 'புனிதக் கல்லறையை[2] மீட்பது, அல்லது அம்முயற்சியில் இறப்பது' என்று சபதங்கூறிக் கொண்டு திரள் திரளாகப் புறப்பட்டனர். அவர்களுள் பலர் துணிச்சலோடு புது அநுபவங்களை நாடியும், கிழக்கில் புது நாடுகளை வெல்ல நினைத்தும் புறப்பட்டிருக்கலாம். ஆயினும், அப்படையில் சேரப் பெரும்பான்மையோரைத் தூண்டியது தூய மதப்பற்றும் அதனால் பொங்கி எழுந்த உற்சாகமுமே என்பதில் ஐயமில்லை.

முதல் சிலுவைப்படை[3] (1097—1099) பல கஷ்டங்களுக்கு உட்பட்டு அதன் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றியது. சிலுவைப்படைஞர்[4] ஜெரூசெலெத்தைக் கைப்பற்றி அதைப் படைமானிய முறையில் நடைபெற்ற ஒரு கிரிஸ்துவ இராச்சியத்தின்[5] தலைநகர மாக்கினர். இங்லண்ட் அதில் நேரில் கலந்துகொள்ளவில்லையாயினும், அதனால் தானும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டது. நார்மண்டி ட்யூக்கான ராபர்ட் தாம் திரட்டிச்செல்ல விரும்பிய சிலுவைப்படைக்குவேண்டிய பணத்தைத் தம் நாட்டைச் செந்தலை வில்லியமிடம் அடகு வைத்து வாங்கிக்கொண்டு போனார். அதனால் இங்லண்டும் நார்மண்டியும் மீண்டும் ஒரே அரசர் ஆட்சியின்கீழ் வந்தன.

§ 25. ஒரு துரைத்தன முறை வகுக்கப்பட்டது:—புதுக்காட்டில்[6] வேட்டையாடிக்கொண்டிருந்தபோது செந்தலை

---

1 The Red Cross. 2. The Holy Sepulchre. 3. The First Crusade. 4. The Crusaders. 5. A Feudal State. 6. The New Forest.

மன்னர் யாரோ ஒருவர் விட்ட அம்பு பட்டு இறந்தார். அவருக்குப் பிள்ளையில்லாததாலும், ராபர்ட் சிலுவைப் போருக்குப் போயிருந்ததாலும், அவர் தம்பி ஹென்றி அரசரானர்.

முதல் ஹென்றி 'போக்ளார்க்'[1] (நல்ல எழுத்தாளர்) என்று அழைக்கப்பட்டார். மதஸ்தாபனத்தின் சிப்பந்திகளல்லாத மக்களுள் அவர் அருமையாக அந்தக் காலத்தில் சிறிது கல்வி கற்றவர்; அவருக்கு எழுதப்படிக்கத் தெரியும். செங்தலை மன்னரைப்போல் கொடிய முரடரல்லராயினும், ஹென்றிக்கும் சுயநலமும் பேராவலும் அதிகமே. ஆயினும், அவர் சுறுசுறுப்பும் ஆற்றலும் மிக்க அரசர். நாட்டில் ஒரு நல்ல துரைத்தனமுறையை அவர் நிறுவினர். முதலாவது, அவர் ஷெரிப்புகளின்[2] அதிகாரத்தை அதிகப்படுத்தினர். முக்கியமான வழக்குகளெல்லாம் பாரன்களின்[3] சொந்தப் பண்ணை மன்றங்களில் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக, ஷைர் நீதிமன்றங்களில்[4] விசாரிக்கப்படவேண்டுமென்று ஹென்றி கட்டாயப்படுத்தினர். இரண்டாவது, அவர் க்யூரியா ரீஜிஸ்[5] எனப்பட்ட 'மன்னர்நீதிமன்ற'த்தை உருவாக்கினர். பழைய ஆங்லோசாக்சன் 'விட்டன்'[6] சபை 'க்ரேட் கௌன்சில்' (பெரிய ஆலோசனை சபை)[7] ஆக மாறியது. அது, அப்போதைக்கப்போது மன்னர் எங்கு கொலுவீற்றிருந்தாரோ, அதற்கு அருகில் வசித்திருந்த பிரபுக்களையும் மதத்தலைவர்களையும் கொண்டதாயிருந்தது. துரைத்தன விவகாரங்கள் நாளுக்கு நாள் சிக்கலும் பொறுப்பும் மிகுந்தவைகளாகப் பெருகிக் கொண்டு வந்ததால், இடத்துக்கு இடம் மாறிக்கொண்டுவரும் அத்தகைய பெரியோர்கள் சபையால் எதையும் தீர்மானமாகக் கவனிக்கமுடியாமற் போய்விட்டது. அவர்களுடைய

---

1. 'Beauclerc'. 2. Sheriffs. 3. Barons. 4. Shire Court. 5. Curia Regis, or King's Court. 6. Witan. 7. The Great Council.

கவனமெல்லாம் தங்கள் தங்கள் சொந்த விஷயங்களிலிருந்தது. ஆகவே, ஹென்றி ஒவ்வொரு துரைத்தன இலாகாவிலும் பழகித் தேர்ச்சிபெற்றிருந்த திறமைசாலிகளைத் திரட்டி ஒரு சிறு குழுவாக்கி, அவர்களைத் தாம் செல்லும் இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றார். அவர்களே அவரது ஆட்சி முறைகளை ஒழுங்காகவும் தீர்மையாகவும் நிலைக்கப்பண்ணியவர்கள். அவர்களுள் 'சான்ஸெலர்'[1] (தலைமை நீதிபதி), ஜஸ்டீஷியர்'[2] (தலைமை அமைச்சர்), 'ட்ரெஷரர்'[3] (தலைமைக் கருவூலக் கணக்கர்) என்னும் மூவர் முக்கியமானவர்கள். அவர்கள் அனைவரும் குருமார்களாகப் பயிற்சி பெற்றவர்களாகையால், அவர்கள் துரைத்தனத்துக்குச் செய்த தொண்டுகளுக்குச் சன்மானமாக மதஸ்தாபனத்தில்[4] பதவிகள் பெற்றனர். இந்த நிலையான மந்திரிகளின் சிறு குழுவே 'க்யூரியா ரீஜிஸ்' எனப்பட்ட மன்னர்நீதிமன்றமானது. அது பிரதம மானியதார்களிடையே[5] தோன்றும் சச்சரவுகளைத் தீர்த்தது. ஷெரிப்புகள் தண்டிய அரசிறைகளை வாங்க அது ஆண்டில் இருமுறை வின்செஸ்டரில்[6] அவர்களைச் சந்தித்தது. இவ்விதமே அது நீதிமன்றங்களுக்கும்[7] 'எக்ச்செகர்' எனப்படும் கருவூல மன்றத்துக்கும்[8] வித்தானது. அதன் மூலம் அரசர் பிரபுக்களை அடக்கி ஆண்டார். பிரபுக்களுக்கு அது பிடிக்கவில்லை. ஆயினும், இவ்விதம் ஹென்றியின் கைக்கு ஏறிய பலம் வருஷத்துக்கு வருஷம் பெருகியது. அவரை எதிர்க்க அவர்கள் செய்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை.

§ 26. ஆன்செல்மோடு மீண்டும் சச்சரவு:— ட்யூக் ராபர்ட் 'புனிதநாட்'டிலிருந்து[9] திரும்பியதும் அண்ணன் தம்பிகளுக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. பிரபுக்களில்

---

1. The Chancellor. 2. The Justiciar. 3. The Treasurer. 4. The Church. 5. Tenants-in-chief. 6. Winchester. 7. Courts of Justice. 8. Court of Exchequer. 9. The Holy Land.

பெரும்பான்மையோர் 'வெற்றி மன்னர்'[1] வில்லியத்தோடு வந்தவர்களின் பிள்ளைகளோ பெயரர்களோ ஆகையால், அவர்களுக்கு இங்லிஷ் சானலுக்கு இரு கரையிலும் மானிய நிலங்களிருந்தன. இராச்சிய காரியங்களில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளாமல், இளகலான மனத்துடன் மதப்போர்கள் நடத்த அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போகும் ராபர்ட்டைப் போன்ற அரசரால்தான் தங்களுக்குத் தொந்தரவு இராது என்று அவர்கள் நினைத்தார்கள். ஆகவே, அவர்களுள் பலர் திறமையும் வன்மையும் மிக்க ஹென்றியை ஆதரிக்காது அவரது அண்ணனையே ஆதரித்தார்கள். ஆயினும், ஹென்றிக்கு இங்லிஷ் குடிமக்களின் ஆதரவு இருந்தது. முக்கியமாக, எளிய இங்லிஷ்மக்கள் அவர் நிலைக்கவைத்த நீதிமுறைகளுக்கும் அமைதிக்கும் மிகுந்த நன்றியறிதலுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களே அவரது காலாட்படைஞர்.[2] 1106 ஆம் நார்மண்டியில் டின்ஷிப்ரே போரில்[3] ராபர்ட் தோல்வியுற்றுக் கைதியானார். அவ்வெற்றியால் ஹென்றியின் காலாட்படைஞராகிய இங்லிஷ்மக்கள் நாற்பதாண்டுகளுக்குமுன் தங்கள் நாட்டினர் ஹேஸ்டிங்ஸில்[4] அடைந்த தோல்விக்குப் பரிகாரந் தேடியதாக நினைத்து மகிழ்ந்தார்கள்.

முன் அரசர் காலத்திலிருந்து ஹென்றிக்குத் தொத்தி வந்த பெரிய தொல்லைகளுள் ஆன்செல்ம் சச்சரவு ஒன்று. அது இப்போது ஒரு பெரிய யூரோப்பிய சிக்கலின் அமிசமாய் விட்டது. போப்புகளுக்கும் யூரோப்பிய பேரரசர்களுக்கும் அதே விஷயமாகச் சச்சரவுகள் தோன்றின. ஹில்டிபிராண்டும் அவருக்குப் பின்வந்த போப்புகளும் (§ 21) தங்களுக்கே உரியவை என்று கூறிய உரிமைகள் மன்னர்களின்

---

1. The Conqueror. 2. Fyrdmen. 3. Battle of Tinchebrai.
4. Hastings.

அந்தஸ்தைத் தாக்கவல்லவைகளாக இருந்தமையால், போப்புகளுக்கும் மன்னர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டது இயற்கையே. அப்போது முக்கியமாகத் தீர்மானமாகவேண்டி யிருந்த விஷயங்கள், படைமானிய ஏற்பாட்டின் நிபந்தனைகள் கிரிஸ்துமதஸ்தாபனத்தின் பூசொத்துக்களுக்கு எவ்வளவில் பொருந்தும்? பிஷப்புகளையும் மடாதிபதிகளையும் நியமிக்க வேண்டியவர் போப்பா, அல்லது அந்தந்த நாட்டின் மன்னரா? என்பனவே. அவ்வுரிமையைப் போப் அடைந்தால் மன்னர் தம் நாட்டின் பெரும்பாகத்தை அடக்கியாள முடியாமல் அங்கு வசூலாகவேண்டிய வருமானத்தையும் இழந்தவராவார்; அவ் வுரிமை மன்னர் கையிலிருந்தாலோ மதஸ்தாபனத்தின் வேலைக்குப் பங்கமேற்படலாம். மேலும், மன்னர்கள் பெருந் தொகைகளை வாங்கிக்கொண்டு அப்பதவிகளுக்கு யோக்கி யதையற்றவர்களை நியமிக்கக்கூடும். இந்தச் சச்சரவு பதவிச் சின்னமளித்தல் வாதம்[1] எனப்பட்டது. ஏனெனில், மதத் தலைவர்களின் பதவிக்குரிய சின்னங்களாகிய[2] மோதிரத்தை யும் சிலுவைக்கோலையும்[3] யார் அவர்களுக்கு அளிப்பது? போப்பா? மன்னரா? என்பதே அவ்வாதத்தின் முக்கிய கேள்வியா யிருந்தது.

ஹென்றி பட்டம் வகித்ததும் ஆன்செல்ம் இங்லண்டுக் குத் திரும்பிவந்தார். ஆயினும், புது அரசரோடு அவர் பழைய வாதத்தைத் தொடர்ந்தார். ஆர்ச்பிஷப் ஆதீனத் தைச் சேர்ந்த நிலங்களுக்காக ஹென்றிக்கு இறைவணக்கம்[4] செய்யவும், அவர் கையிலிருந்து தம் பதவிச்சின்னங்களை வாங்கிக்கொள்ளவும் ஆன்செல்ம் மறுத்துவிட்டார்.*

1. The Investiture Contest. 2. The Symbols of Office. 3. The Ring and the Crosier. 4. Homage.

*இக்காலத்தில் விட, 'மிடில் ஏஜஸ்' (The Middle Ages) எனப்படும் இடைக்காலத்தில், இத்தகைய சின்னங்களிலும் சடங்கு

போப்பின் ஆணைப்படி நடக்கவேண்டியது தம் கடமை என நினைத்தே ஆன்செல்ம் அவ்வாறு மறுத்தார்; அது அகம்பாவத்தால் அன்று. இந்த வாதம் ஆறு ஆண்டுகள் வரையில் நீண்டது. ஆன்செல்ம் போப்பின் யோசனையைக் கேட்க மீண்டும் யூரோப்புக்குப் போனார். முடிவில் ஒருவகையான சமாதானம் ஏற்பட்டது. அதன்படி மதத்தலைவர்களின் பதவிச்சின்னங்களை வழங்க அரசர் உரியவரல்லர் என்றும், தங்கள் ஆதீனங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு அவர்கள் அரசர்க்கு இறைவணக்கம் செய்யவேண்டுமென்றும் இருதரத்தாரும் ஒப்புக்கொண்டனர்.

§27. யூரோப்பிய படைமானிய முறையின்[1] சீர்கேடுகள் இங்லண்டிலும் தோன்றலாயின :—1135-ல் முதலாம் ஹென்றி இறந்ததும், அவரும் அவர் தந்தையும் கண்டிதமாக நடத்திவந்த வன்மைமிக்க ஆட்சியால் நாடு எவ்வளவு நன்மையடைந்திருந்தது என்பதை உணரச் சந்தர்ப்பம் வாய்த்தது. அப்போது, பட்டத்துக்குரியவர் யார் என்பதைத் தீர்மானிக்கவேண்டிவந்ததால், தொல்லை ஏற்பட்டது. முதல் ஹென்றிக்குப் பிறந்த ஒரே ஆண்மகன் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு சமயம் இங்லிஷ் சானலைக் கடக்க நேர்ந்தபோது அதில் மூழ்கி இறந்தான். ஆகவே, ஹென்றி தமக்குப்பின் தம் மகள் மடில்டாவை[2] அரசியாக அங்கீகரிக்க வேண்டுமென்று பிரபுக்களுக்குச் சொன்னார். மடில்டா, பேரரசரான ஐந்தாம் ஹென்றிக்கு[3]

களிலும் கிரிஸ்தவ மக்களுக்குப் பிரம்மை அதிகம். ஒரு பிஷப் தம் பதவிச் சின்னங்களை அரசரிடமிருந்து வாங்கிக்கொள்வாரானால் அப்பதவியை அவருக்கு அவ்வரசரே கொடுத்தமாதிரியாகும்.

1. Continental Feudalism. 2. Matilda. 3. Emperor Henry V.

வாழ்க்கைப்பட்டிருந்ததால், அவளைப் 'பேரரசி'[1] என்றே எல்லோரும் வழங்கிவந்தனர். ஆயினும், ஐந்தாம் ஹென்றி இறந்த பிறகு அவள் ஆஞ்சூ கௌன்டாக இருந்த ஜ்யோப்ரே ப்ளான்டாஜெனெட்[2] என்பவரை மணந்தாள். ஹென்றி இறந்ததும் ஒரு பெண்ணுக்கு இறைவணக்கம் செய்தல் தங்கள் பெருமைக்கு இழுக்காகும் என்று நினைத்துப் பிரபுக்கள் வெற்றிமன்னரான முதல் வில்லியத்தின் மகள் அடெலாவின் மகனாகிய ப்ளவா கௌன்ட் ஸ்டீபேன்[3] என்பவரை அழைத்துவந்து அரசராக்கினார்கள். அப்போது அவருக்கு ஐம்பது வயது. அவர் நாணயமும் ஆண்மையும் மிக்க போர் வீரர் என்று பெயரெடுத்தவர். ஆயினும், பிரபுக்களின் ஆதரவால் அவர் பட்டம் வகிக்க நேர்ந்ததால், முதல் மூன்று நார்மன் மன்னர்களைப்போல அவர் பிரபுக்களின் சுயேச்சையைக் கட்டுப்படுத்தத் துணியவில்லை.

ஸ்டீபெனின் வன்மைக் குறைவு தொல்லைகளுக்கு இடம் தந்தது. ஆஞ்சூ கௌன்ட் ஜ்யோப்ரே அடிக்கடி நார்மண்டியைத் தாக்கி அதைத் துண்டு துண்டாகக் கைப்பற்றிக்கொண்டார். ஸ்காட்லண்ட் மன்னரான டேவிட்[4] நார்தம்பர்லண்ட்[5] தமக்குச் சேரவேண்டுமென்று சொல்லி அதைக் கைப்பற்ற இங்லண்டுக்குள் படையெடுத்து வந்தார். நார்தாலர்ட்டன்[6] என்னுமிடத்துக்கருகில் 1138 ஆம் நடந்த கொடிப் போர்[7] என்னும் சண்டையில் ஸ்காட்லண்டார் தோல்வியுற்றபோதிலும், பிறகு நடந்த சமரசப்பேச்சின் பயனாக ஸ்டீபென் டேவிட் கோரியவைகளைப் பெரும்பாலும் விட்டுக்கொடுத்து விட்டார்.

---

1. 'The Empress'. 2. Geoffrey Plantagenet, Count of Anjou. 3. Stephen, Count of Blois. 4. David. 5. Northumberland. 6. Northallerton. 7. The Battle of the Standard

நார்மன் மன்னர்கள்

முதல் வில்லியம்
(வெற்றி மன்னர்)
1066—1087

- ராபர்ட் *
  (நார்மண்டி ட்யூக்)
- இரண்டாம் வில்லியம்*
  ('செந்தலை மன்னர்')
  1087—1100
- முதல் ஹென்றி
  ('நல்ல எழுத்தாளர்')
  1100—1135
  - வில்லியம்
    (1120-ல் கடலில் மூழ்கி இறந்தார்)
  - மடில்டா
    மணந்தவர் : (1) ஐந்தாம் ஹென்றி பேரரசர்
    (2) ஆஞ்சு கௌண்ட் ஜ்யோப்ரே
    - இரண்டாம் ஹென்றி
      (ஆஞ்சு நாட்டினர்)
      1154—1189
- அடேலா
  (ப்ளவா கௌண்ட் ஸ்டீபெனை மணந்தார்)
  - ஸ்டீபென்
    1135—1154

(* இவர்களுக்குப் பிள்ளைப்பேறில்லை)

1139-ல் 'பேரரசி' மடில்டா இங்லண்டுக்கு வந்து தனக்கே அரசபட்டம் உரியதென்று சொல்லிப் போர் தொடங்கினாள். அது ஒரு பயங்கரமான உள்நாட்டுப் போராக மூண்டது. அதன் ஆரம்பத்திலேயே அவள் ஸ்டீபென் கையில் சிக்கினாளேனும், ஒரு பெண்பிள்ளையின் இன்னலைத் தமக்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்பாத தயாவீரரான ஸ்டீபென், இங்லண்டின் மேற்குப் பாகங்களிலுள்ள அவளுடைய கட்சிக்காரர்களிடம் அவளைப் போக விட்டுவிட்டார். அரசபட்டத்துக்கு உரிமை பாராட்டிய இருவரும் பிரபுக்களின் ஆதரவை அடையவேண்டி, அவர்களுக்குத் தாராளமாக மானியங்களை வழங்கி, அவற்றை ஏறக்குறைய முழு சுயேச்சாதிகாரம் பெற்ற சிற்றரசர்களைப் போல் ஆளும்படி விட்டுவிட்டனர். முதல் மூன்று நார்மன் அரசர்களும் இதைத் தடுக்கவே பாடுபட்டனர். அவர்கள் உழைப்பெல்லாம் ஸ்டீபென் காலத்தில் வியர்த்தமாயிற்று. அரசாது பலம் தளர்ந்திருப்பதை உணர்ந்த பிரபுக்கள் எளிய மக்களை வாட்டிக் கட்டாய வேலை வாங்கிச் சொந்த அரண்கள் கட்டிக்கொண்டார்கள்; சித்திரவதைகள் செய்து பணமுள்ளவர்களிடமிருந்து பணம் பறித்தார்கள்; ஸ்டீபெனுக்காகவோ மடில்டாவுக்காகவோ துணைசெய்வதாகச் சொல்லிக்கொண்டு நாடு முழுமையும் படைகளை நடத்திச் சென்று ஊர்களையும் பயிர்களையும் அழித்தார்கள். அப்போது சில பாகங்களில் ஏழைக் குடிகள் நிலங்களை உழுது பயிர் செய்வதையும் நிறுத்தி விட்டுப் பட்டினி கிடந்தார்கள்.

1148-க்குப் பிறகு சிறிது காலம் இச்சச்சரவுகள் ஓய்ந்து இருந்தன. 1147முதல் 1149வரை நடந்த இரண்டாம் சிலுவைப் போருக்குச் சில பிரபுக்களும் நைட்வீரர்களும் போனார்கள். இதற்குள்ளாக மடில்டாவின் கணவர் நார்மண்டி

யைக் கைப்பற்றிக் கொண்டதால், அவள் அவருடனும் அவர்கள் மகன் ஹென்றியுடனும் வாழ அங்குப் போய்விட்டாள். சில ஆண்டுகள் கழித்து ஹென்றி இங்லண்டுக்கு வந்து போரைத் தொடர்ந்தார். ஸ்டீபெனுக்கு வயதாய்விட்டதாலும், அவருக்கிருந்த ஒரே மகனும் அப்போது இறந்துவிட்டதாலும், அவருக்குப் போர்மேல் மனம் செல்லவில்லை. ஆகவே, அவர் 1153 ஆம் வாலிங்பர்டில் ஒரு சமாதான உடன்படிக்கை[1] செய்துகொண்டார். அதன்படி ஆயுள்முடிய அவரே அரசராக இருக்கவேண்டுமென்றும், அவருக்குப்பின் ஆஞ்சூநாட்டு ஹென்றி அரசராகவேண்டுமென்றும் முடிவானது. மறு வருஷம் ஸ்டீபென் இறந்தார்.

ஏழாம் அத்தியாயம்

நீதியும் அமைதியும்

(1154—1189)

§ 28. ஆஞ்சு நாட்டு ஹென்றி:—அங்கிலேயில் இரண்டாம் ஹென்றியே அரச பதவிக்கு மிகவும் தகுந்தவர். ஸ்டீபென் காலத்துத் தீமைகளை விலக்கவல்ல ஆற்றலும் திடமும் அவர் பெற்றிருந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்தொன்றே. ஆகவே, வாலிப மிடுக்குடன் தீவிர மனோவன்மையும் அவரிடம் காணப்பட்டன. சட்ட நிருமாணம் அரசாங்க பரிபாலனம் முதலிய விஷயங்களில் அவருக்கு ஊக்க மதிகம். துரைத்தன விவகாரங்களையும் அரசரின் கடமைகளையும் பொறுப்புக்களையும் தம் யூரோப்பிய மாகாணங்களை ஆண்டு பெற்ற அநுபவ வாயிலாக அவர் நன்கு உணர்ந்திருந்தார். அம்

---

1. Treaty of Wallingford.

மாகாணங்களுள், நார்மண்டியும் ஆஞ்சூவும் மேனும்[1] அவரது தந்தையின் நாடுகள்; ஆக்விடேன்[2] தம் மனைவி மூலம் கிடைத்தது (கு. 16). அவர் அரசராக விரும்பியது அப் பதவியின் வெளி ஆடம்பரங்களுக்காகவல்ல; அது அளிக்கும் அதிகாரத்துக்காகவே. அவர் அரண்மனையின் செல்வச் சுகங்களையும் படாடோபச் சடங்குகளையும் வெறுத்துத் திரிச்சல் வாழ்க்கையை விரும்பியவர். சாதாரணமாக அவர் தாராளமாகவும் தெம்பாகவும் இருக்கக் கூடியவராயினும், அவருக்கு முன்கோபம் அதிகம். அவர் எப்போதும் அதிகார தோரணையிலேயே பேசுவார்.

அவர் இராச்சியம் பல மாகாணங்கள் கொண்டதா யிருந்ததால், யூரோப் மன்னர்களுள் அவர் வன்மைமிக்கவரா யிருந்தார். ஆயினும், அவரது ப்ரெஞ்சு மாகாணங்களை இங்லிஷ் இராச்சியத்தின் மாகாணங்கள் என்று கருதுவது தவறு. ஹென்றி இங்லிஷ்காரரல்லர்; பிறப்பிலும் வளர்ப்பிலும் பேசசிலும் அவர் ப்ரெஞ்சுக்காரரே. அவர் இங்லண்ட் மன்னராக இருந்த முப்பத்தைந்து ஆண்டுகளுள், மொத்தத்தில் இங்லண்டில் மூவாண்டுகளுக்குமேல் இருந்திரார். ஆயினும், இங்லண்டையே அவர் தம் இராச்சியத்தின் முக்கிய பாகமாகக் கருதினர். ஏனென்றல், அதுவே அதன் பல பிரிவுகளுள் தனியாட்சி நாடாக[3] இருந்தது. அவரது ப்ரெஞ்சு மாகாணங்கள், ப்ரான்ஸ் இராச்சியத்தைச் சேர்ந்த மானிய நிலங்களாக இருந்தமையால், அவற்றிற்காக அவர் ப்ரெஞ்சு மன்னர்க்கு இறைவணக்கஞ் செய்தாகவேண்டும். தாம் ப்ரெஞ்சு அதிபதியின் அதிகாரத்தினின்றும் விடுபட்டுக் கூடுமானவரையில் முழு சுயேச்சை அடையவேண்டு

1. Maine. 2. Aquitaine. 3. An independent kingdom.

ஆஞ்சவின் பேரரசு
(சுமார் 1185)
ட்வீட் ஆறு
ஸ்காட்லண்ட்
டராம்
டீஸ் ஆறு
நார்தாலர்ட்டன்
யார்க்
டப்ளின்
காஷெல்
வெக்ஸ்பர்ட்
வாடர்பர்ட்
செஸ்டர்
ஷ்ரூஸ்பெரி
நாரிச்
ஈலி
ஈவ்ஸ்ஹாம்
ஹெரிபர்ட்
க்ளாஸ்டர்
ஆக்ஸ்பர்ட்
லண்டன்
பெம்ரோக்
வாலிங்பர்ட்
கான்டெர்பெரி
சாண்ட்விச்
ரொசெஸ்டர்
சால்ஸ்பெரி
வின்செஸ்டர்
க்ளாரெண்டன்
சௌதாம்டன்
ஏக்செடர்
போர்ட்ஸ்மத்
ப்ளாண்டர்ஸ்
பூவைன்ஸ்
ர்வாங்
பெக்
நார்மண்டி
அவ்ராவ்ஷ்
பலேஸ்
டின்ஷிப்ரே
பாரிஸ்
ப்ரீட்டனி
மேன்
ஆஞ்சு
பர்கண்டி
ப்வாடு
டேல்பூர்க்
போர்டோ
காஸ்கொனி
அளவு விகிதம்
0 50 100 200 மைல்கள்
இரண்டாம் ஹென்றி நேரில் ஆண்ட நாடுகள்
இரண்டாம் ஹென்றி மற்றவர் மூலம் ஆண்ட நாடுகள்
பிலிப் ஆகஸ்டஸ் நேரில் ஆண்ட நாடுகள்
பிலிப் ஆகஸ்டஸ் மற்றவர் மூலம் ஆண்ட நாடுகள்
இந்நாடுகளுக்காக இரண்டாம் ஹென்றி பிலிப் ஆகஸ்டஸுக்கு இறைவணக்கம் செய்ய வேண்டும்

மென்பதே அவர் வாழ்நாளின் முக்கிய நோக்கம். அதற்காகப் போராடவேண்டிய காரணத்தினலேயே, அவர் ஆட்சியின் முதல் இரண்டொரு வருஷங்களுக்குப் பின்பு, இங்லண்டுக்கு வந்து பல நாட்கள் இருந்துபோக அவருக்குப் போதிய ஓய்வு கிடைக்கவில்லை.

அப்படியும், அவர் இங்லண்டில் தங்கியிருந்த குறுகிய காலங்களில், அதன் மக்களின் வாழ்க்கையையும் குணத்தையும் அந்தப்படுத்தி உருவாக்கவல்ல சிறந்த சீர்திருத்தங்களை நிறைவேற்றிவைத்தார்.

§ 29. நீதிமுறையில் சீர்திருத்தம்:—முன் ஆட்சியின் அலங்கோலங்களைக் களைந்து காலசக்கரத்தை 1135-ல் இருந்த நிலையில் திருப்பிவைக்கவேண்டுமென்பதே அவரது முதல் கவலை. ஸ்டீபெனிடமிருந்தும் மடில்டாவிட மிருந்தும் பெற்ற மானியங்களைத் திருப்பிக்கொடுத்துவிட்டு, அவர்கள் காலத்தில் கட்டிய அரண்களையும் இடித்துத்தள்ளவேண்டுமென்று அவர் பிரபுக்களுக்குக் கட்டளையிட்டார். முதலில் பாரன்கள் அடங்காது அவரை எதிர்த்துப் பார்த்தார்கள். ஆயினும், அவர் திடசித்தத்துடன் எடுத்த காரியத்தைச் சாதிக்கவல்ல ஆற்றலும் படைப்பலமும் கொண்டிருந்தார் என்பதை உணர்ந்ததும், அவர்கள் வணங்கிவந்தார்கள். விரைவில் நாட்டில் ஒழுங்கும் அமைதியும் ஏற்பட்டன. மன்னரது ஆணை நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் எதிர்ப்பு மறுப்பின்றிச் சென்றது.

ஹென்றி பெரும்பான்மையும் ப்ரான்ஸில் இருக்கவேண்டியவராக இருந்ததால், இங்லண்டில் அவர் அரசியல் நோக்கங்களையும் திட்டங்களையும் ஒழுங்காக நடத்தி நிறைவேற்றிவைக்கத் திறமைமிக்க ஒருவர் தலைமை நீதிபதியாக (சான்ஸெலர்) இருக்கவேண்டி யிருந்தது. அதற்கு மிகவும் தகுதி

யானவர் ஒருவர் கிடைத்தார். அவர் பெயர் டாமஸ் பெக்கெட்[1] (1118—1170). பெக்கெட் நடுத்தரமான அந்தஸ்துள்ள ஒரு நார்மன் குடும்பத்தில் லண்டனில் பிறந்தவர். அவர் தம் அரசரைப் போலவே தீவிர அறிவாற்றலும் உடல்வன்மையும் மனோதிடமும் அரசியல் விவகாரங்களுக்கென அமைந்த இயற்கைத்திறனும் பெற்றவர். மன்னனும் மந்திரியும் நெருங்கிய நண்பர்களாயினர். ஹென்றி பெக்கெட்டுடன் தமது திட்டங்கள் எல்லாவற்றையும் கலந்து ஆலோசித்தார். அவர்கள் ஒன்றாக வேட்டைக்குப் போவார்கள்; போட்டியிட்டுக் கொண்டு குதிரைகள்மீதேறி ஈட்டிப்போர் நிகழ்த்துவார்கள்; ஒருவரையொருவர் பரிகசித்துக் கொள்ளுவார்கள். பெக்கெட் கிரிஸ்துமதஸ்தாபனத்தின் கீழ்ச்சிப்பந்திகளுள் ஒருவராக இருந்தபோதிலும்[2], அவர் உலக இன்பங்களிலும் விவகாரங்களிலும் தாராளமாகக் கலந்துகொண்டார்; விரைவில், செல்வத்திலும் செல்வாக்கிலும் நாட்டில் முதல்நிலை பெற்றவரானார்.

நீதி பரிபாலனத்தில் இரண்டாம் ஹென்றி இரண்டு முக்கியமான திட்டங்களைப் புகுத்தினார்: (1) 'ஜூரி' எனப்படும் மெய்விளம்பிகளால் விசாரணை[3]; (2) சுற்றிவரும் நீதிபதிகள்[4]. இவை அவரது பாட்டனாரான முதல் ஹென்றியின் இரண்டு சீர்திருத்தங்களை அடிப்படைகளாகக் கொண்டவை. அவை, ஷெரிப்புகளின் அதிகாரத்தைப் பெருக்கியதும், 'க்யூரியா ரீஜிஸ்' எனப்படும் மன்னர் நீதிமன்றத்தை நிறுவியதுமாம்(§25).

(1). அதுவரை குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கடவுள் தீர்ப்பினை நாடிய கடுஞ்சோதனைக்கு[5] உட்படுத்தப்பட்டார்

1. Thomas Becket. 2. A cleric in 'minor orders'. 3. Trial by Jury. 4. Itinerant Judges. 5. The Ordeal.

கள் (§9); பண்ணைக்காரர்களிடையே தோன்றும் வழக்குகளை வழக்காளர்கள் ஒருவரோடொருவர் போரிட்டுத்[1] தீர்த்துக்கொண்டனர். அப்போர்களில், அவைகளுக்கென்று குருமார்கள் புனிதமாக்கிக் கோவில்களில் வைத்திருந்த பழைய எலும்பாயுதங்களாலும் மர ஆயுதங்களாலும் வழக்காளர்கள் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டனர். அத்தகைய கடுஞ்சோதனைகளும் ஆயுத வீச்சுக்களும் யார் பக்கம் நியாயமும் உண்மையு மிருந்தன வென்பதைக் காட்டக் கடவுளுக்குச் செய்யும் விண்ணப்பங்களாகக் கருதப்பட்டன. ஆயினும் அம்முறைகளில் மக்கள் நாளுக்குநாள் அதிருப்தி யடைந்துகொண்டு வந்தனர். முற்காலங்களில் ஆண்ட மன்னர்கள் ஏதாவது ஒன்றின் உண்மையை உணர விரும்பினுல் சிலரை ஆணையிட்டு அதைப்பற்றித் தெரிந்தவற்றைச் சொல்லும்படி வற்புறுத்திக்கொண்டு வந்தனர். முதல் வில்லியம் காலத்தில் எடுக்கப்பட்ட 'டூம்ஸ்டே நிலக்கணக்கு'[2] இதற்கோர் சிறந்த உதாரணம்(§20). அதே முறையை இரண்டாம் ஹென்றி நியாய விசாரணையில் கையாண்டார். குற்றங்கள் சம்பந்தமான விசாரணைகளிலும் உரிமைகள் சம்பந்தமான வழக்குகளிலும் இருதரத்தாரும் 'க்ராண்ட் அசைஸ்'[3] எனப்படும் மெய்விளம்பிகள் கூட்டத்தால்[4] விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம் என அவர் கூறினுர். அப்போது ஷெரிப்[5] அக்கம்பக்கத்திலுள்ளவர்களுள் பன்னிரண்டு பேரை வரவழைத்து அவர்களைத் தங்களுக்கு அவ்வழக்கைப்பற்றித் தெரிந்த உண்மைகளைக் கூறக் கேட்பார்.

(2). முதல் ஹென்றி தமது மன்னர் நீதிமன்றத்தின்[6] அங்கத்தினர்களை ஷைர் நீதிமன்றங்களில்[7] நீதிவழங்கச் சில

1. By Combat. 2. Domesday Survey. 3. The Grand Assize. 4. A Jury. 5. Sheriff. 6. Curia Regis. 7. Shire Courts.

சமயங்களில் அனுப்பினர். ஆயினும், அந்நீதிபதிகளின் வருகை ஒரு ஒழுங்காகத் திட்டப்படுத்தப்படவில்லை. மேலும், பிரபுக்கள் அவர்களின் அதிகாரத்தை அடிக்கடி அங்கீகரிக்க மறுத்தார்கள். இரண்டாம் ஹென்றி அவ்வேற்பாட்டைத் திட்டமாக ஒழுங்குபடுத்தி நிலைக்கச்செய்தார். மன்னர் நீதி மன்றத்தில் நிதிநுட்பங்களை யுணர்ந்த நிபுணர்களையும் சட்ட அறிவு முற்றிய வித்தகர்களையும் அவர் சேர்த்தார். சட்ட வித்தகர்களை இருவர் இருவராகச் சேர்த்துவிட்டு, ஒவ்வொரு ஷைர்மன்றத்துக்கும் முறைபோட்டுக்கொண்டு ஒரு வருஷத்தில் இரண்டு மூன்றுதரம் போய்வரும்படி ஏற்பாடு செய்தார். க்ளாரேண்டன் அசைஸ்[1] (1164) என்னும் சட்டத்தில் அந்தச் 'சுற்றும் நீதிபதிகள்'[2] உயரிய அந்தஸ்துள்ள மேல் மானியதார்கள் மன்றங்களிலும் தலைமை வகித்து வழக்குகளைத் தீர்க்கலாம் என்றும், முக்கியமான வழக்குகளையெல்லாம் அவர்கள்முன் கொண்டுவரவேண்டியது ஷெரிப்புகளின் கடமை என்றும் விதித்தார் (கு. 21). மேலும், குற்றஞ்செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டவர்களை மன்னரின் நீதிபதிகளுக்குத் தெரிவிக்க 'நைட்' அந்தஸ்துள்ள மெய்விளம்பிகள் கூட்டத்தினரைச் சேகரித்துவைக்கவேண்டியவர்களும் ஷெரிப்புகளே. குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தங்களைக் கடுஞ் சோதனைகளுக்கு[3] உட்படுத்தும்படிக் கேட்டாலொழியக் குற்றஞ் செய்தவர்களாகவே கருதப்பட்டனர்.

§ 30. மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் உரிமை[4] :—தனி நீதிமன்றங்களை அமைத்துக்கொண்டு, மரணசாசனங்கள் (உயில்கள்),[5] கலியாணங்கள், மதஸ்தாபனத்தின் சொத்துக்கள், மதஸ்தாபன சிப்பந்திகளைப் பற்றிய வழக்குகள்

---

1. The Assize of Clarendon. 2. Justices in Eyre. 3. Ordeal. 4. Benefit of Clergy. 5. Wills.

ஆகியவற்றைக் குறித்து விசாரணைகளை நடத்தித் தீர்ப் பளித்துக்கொள்ளும் தனி உரிமையினை முதல் வில்லியம் மதஸ்தாபனத்துக்குக் கொடுத்தார் என்பதை நாம் முன்னமே கண்டோம்(§ 21). மதஸ்தாபனத்தின் இத் தனி உரிமை நாடு மொத்தத்துக்கும் ஒரே ஒழுங்கான நீதிபரிபாலன முறையை வகுக்கவேண்டுமென்று கருதிய ஹென்றியின் எண்ணங் களுக்கு இடைஞ்சலாயிற்று. மதஸ்தாபன நீதிமன்றங்கள் அவர் அதிகாரத்துக்குப் புறம்பே தனி அந்தஸ்து பெற்றிருந் தன. அவ்வுரிமையால் பாதுகாப்பு பெற்றிருந்தவர்கள் குரு மார்கள் மட்டுமல்லர்; மடங்களின் பணிவிடைக்காரர்களும், மன்னர் நீதிமன்றத்தின் எழுத்தாளர்களும் கணக்கர்களும் போன்ற மதஸ்தாபனத்தின் கீழ்ச்சிப்பந்திகளுள் ஆயிரக் கணக்கானவர்களுக்கு அவர்கள் குற்றஞ்செய்ய நேர்ந்தால் அது பாதுகாப்பளித்தது. இதுவே ஹென்றிக்கு அதிருப்தி தந்தது. கட்டாரியும் கையுமாகப் பிடிபட்ட கொலையாளியும், லாடின் மொழிகள் சில சொல்லக்கூடியவனாக இருப்பானானால், அவன் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவனென்றும், மதஸ் தாபனத்தின் தனிக் 'கிரிஸ்துவ நீதிமன்ற'[1] மொன்றில்தான் அவனை விசாரிக்கவேண்டுமென்றும் கொண்டார்கள். மேலும், அந்நீதிமன்றங்களோ அபராதம், பட்டினி, தூக்கமின்மை, கோணியாடை, சாம்பல் பூச்சு முதலிய எளிய தண்டனை களையே விதித்தன. குருமார்கள் கூட்டத்திலிருந்து தள்ளி விடுதலே[2] அவை விதித்துவந்த பெரிய தண்டனை.

இத்தகைய உரிமைகளைக் குறைக்க ஏதாவது வழிதேட வேண்டுமென்று ஹென்றி தீர்மானித்தார். பெக்கெட்டும் அவற்றுள் சிலவற்றை விட்டுவிடும்படி பிஷப்புகளைக் கேட்டுக் கொண்டார். ஆயினும், 'மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள்

---

1. Court Christian. 2. Degradation from Holy Orders.

உரிமை'[1] என்பதனால் அதற்கு வாய்த்திருந்த செல்வாக்கை இழக்க அதன் தலைவர்கள் எளிதில் இணங்குவார்கள் என்று தோன்றவில்லை. அரசர்க்கும் மதஸ்தாபனத்துக்கும் இது சம்பந்தமாக ஒரு பெரிய போராட்டம் தொடங்கும்போலிருந்தது. ஆகவே, 1161-ல் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் இறந்ததும், அப்பதவிக்குப் பெக்கெட்டை நியமித்துவிட்டால், இங்லிஷ் குருமார்களின் தலைவரே நிச்சயம் அரசர் பக்கம் இருப்பவராவார் என்று ஹென்றி நினைத்தார்.

§ 31. புனிதாத்துமா டாமஸின் கொலை:—ஆயினும், இதில் ஹென்றி ஏமாற்றமடையுமாறு பெக்கெட் உடனே ஒரு புதுமனிதராய்விட்டார். தமது பழைய இன்பவாழ்க்கைக்குப் பிரார்த்தனையாலும் பட்டினியாலும் கழுவாய்[2] தேடிக் கொண்டு, அரசரது அதிகாரத்தை நிலைநாட்ட முன்னர் எவ்வளவு ஊக்கத்தோடு பாடுபட்டாரோ, அவ்வளவு ஊக்கத்துடன் மதஸ்தாபனத்தின் உரிமைகளை நிலைநாட்ட இப்போது பாடுபடலானார். ஹென்றி அடைந்த வியப்பும் ஏமாற்றமும் கொஞ்சமல்ல. ஆயினும், அவர் தனிமையாகத் தம் எண்ணங்களையும் திட்டங்களையும் நடைமுறையில் கொண்டுவரும் முயற்சியில் தளரவில்லை.

1164-ல் ஹென்றி பிஷப்புகளையும் மடத்தலைவர்களையும் க்ளாரெண்டன் என்னுமிடத்தில் கூட்டி மதஸ்தாபனத்தின் உரிமைகளைக் குறைப்பதற்காகத் தாம் வகுக்க நினைத்திருந்த திட்டங்களை[3] (கு. 20) அவர்களுக்கு அறிவித்தார். அவற்றின்படி, மதஸ்தாபனத்தைச் சேர்ந்த எவரேனும் அதன் நீதிமன்றம் ஒன்றினால் குற்றம் செய்தவராகத் தீர்மானிக்கப்பட்டால், அவரைக் குருமார்கள் கூட்டத்திலிருந்து விலக்கி

---

1. "Benefit of Clergy." 2. Atonement. 3. Constitutions of Clarendon.

விட்டு மற்ற சாதாரண மக்களைப்போல் விசாரணைக்குட்பட்டுத் தண்டனைபெற அரசரின் ஷெரிப்பிடம் ஒப்புவிக்க வேண்டும். மதஸ்தாபனத்தின் சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகளைச் சாதாரண நீதிமன்றங்களே தீர்க்கவேண்டும்; அந் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மாற்ற எவரும் போப்பிடம் முறையிடக்கூடாது. சிறிது தயங்கி, பெக்கெட் அத்திட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஹென்றிக்குக் கடுங்கோபம் வந்தது. பெக்கெட் உடனே ப்ரான்ஸிலிருந்த ஒரு மடத்தின் பாதுகாப்பை நாடி, அங்கிருந்து போப்பிடம் முறையிட்டார். ஒரு நீண்ட மதவாதம் மீண்டும் தொடங்கியது. ஆயினும், அதில் போப் ஆர்ச்பிஷப்பை ஊக்கத்துடன் ஆதரிக்கவில்லை. அவருக்கும் ஜெர்மென் பேரரசருக்கும்[1] அவரவர்கள் அதிகார வரம்பினைக் குறித்துத் தொடங்கிய போராட்டம் இன்னும் முடியவில்லை. அந்நிலையில் ஹென்றியோடும் ஒரு சச்சரவைக் கிளப்பி வைத்துக்கொள்ள அவருக்கு விருப்பமில்லை.

பெக்கெட் இங்லண்டில் இல்லாதிருந்தது ஹென்றியை ஒரு இக்கட்டில் கொண்டுவந்துவிட்டது. தமக்குப்பின் தம் மூத்த பிள்ளை அரச பட்டம் வகிக்க யாதொரு தடையுமேற்படாதவாறு, தமது வாழ்நாளிலேயே அவரும் தம்முடன் ஒத்தபடியிலமர்ந்து ஆளும் உரிமை பெறும்படி ஹென்றி அவருக்கு முடிசூட்டிவைக்க நினைத்தார். அவ்விதம் செய்தல் அக்காலத்திய வழக்கம். அதுவரை முடிசூட்டுச் சடங்கை எப்போதும் செய்துவந்தவர் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப்பே. ஹென்றியும் தமக்கும் பெக்கெட்டுக்கும் ஏற்பட்ட சச்சரவு விரைவிலேயே தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் அச்சடங்கினைத் தள்ளிவைத்துக்கொண்டே வந்தார்.

1. The Emperor.

பிறகு அது தீராதிருந்ததைக் கருதி, யார்க் ஆர்ச்பிஷப்பைக் கொண்டு தம் மகனுக்கு முடிசூட்டினார். பெக்கெட் தமது பதவிக்கே அவமதிப்பினை உண்டாக்கிய அச்சடங்கினைப் பலமாகக் கண்டித்தார். போப்பும் பெக்கெட் கட்சியை ஆதரித்து, அம்முடிசூட்டல் சடங்கினை அங்கீகரிக்காமல் அரச பட்டம் வகிக்கத் தம் மகனது உரிமைக்குப் பங்கம் விளைவிக்கலாம் என அஞ்சி, ஹென்றி, பெக்கெட்டை நேரில் போய்க் கண்டு, அவருடன் ஒருவாறு சமாதானஞ் செய்துகொண்டார். இனியேனும் தம் பழைய நண்பர், பழைய வாதங்களையும் குறைகளையும் மனத்தாங்கல்களையும் மறந்து, தம்மோடு ஒத்துழைப்பாரென்று எதிர்பார்த்திருந்த அரசர் மீண்டும் ஏமாற்றமடைந்தார். ஆர்ச்பிஷப் பழையபடி தம் உரிமைகளை நிலைநாட்ட உறுதியான தீர்மானங்கொண்டு, இங்லண்டில் கால் வைத்ததும், அரசரைத் தமக்கு விரோதமாக ஆதரித்த பிஷப்புகளையெல்லாம் தண்டித்தார்.

பயூ[1] என்னுமிடத்தில் க்ரிஸ்மஸ் பண்டிகை கொண்டாடிக்கொண்டிருந்தபோது இச்செய்தி ஹென்றிக்கு எட்டியது. உடனே அவர் கோபாவேசங் கொண்டார்; "என் குடிகள் சோம்பேறிகள்; வீரமும் ரோஷமும் அற்றவர்கள். அன்றேல், கீழ்க்குடியில் பிறந்த ஒரு பாதிரி என்னைக் கணடார் சிரிக்க வைப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள்" என்று கத்தினார். அம்மொழிகளைக் கேட்டவர்களுள் பெக்கெட்டை வெறுத்த நைட்டுகள் நால்வர் இருந்தனர். அவர்கள், அரசர் கோபத்தில் சொன்னவற்றை அவரது ஆஞ்ஞையாக எடுத்துக்கொண்டு, உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, இங்லிஷ் சானலைக் கடந்து, தாண்டுகால் பாய்ச்சலாகக் கான்டெர்பெரிக்குச் சென்று, அங்

1. Bayeux.

குள்ள பெரியகோவிலில் பெக்கெட்டைக் கொன்றுவிட்டார்கள்.

அப்படுகொலையைக் கேட்டுக் கிரிஸ்துவ உலகமுழுமையும் திடுக்கிட்டது. அக்காலத்தில், தெய்விகத்தன்மை பொருந்தியவராக மதிக்கப்பட்டவர்மீது கை வைத்தலையும், தெய்விகம் நிறைந்த ஆலயங்களின் தூய்மையைக் குலைத்தலையும்[1] கொலையைவிடப் பெருங் குற்றங்களாக மக்கள் கருதினர். இது இவையனைத்தும் கலந்த மாபெருங் குற்றமாயிருந்தது. ஹென்றியே, தாம் யோசனையின்றிப் பிதற்றிய கோப மொழிகளின் விளைச்சலைக் கண்டு பெரிதும் திகிலடைந்தார். இந்நிகழ்ச்சியால் மக்களிடையே தோன்றிய பரபரப்பையும் மனக்கொதிப்பையும் கண்டு அவர் க்ளாரெண்டன் திட்டங்களை[2] நடைமுறைக்குக் கொண்டுவரப் போவதில்லை என்று கூறிவிட்டார். ஆகவே, மேலும் பல நூற்றுண்டுகளுக்கு மத ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களது உரிமையால், பலர் சாதாரண சட்டங்களின் தண்டனைகளைப் பெறுது பாதுகாப்படைந்து வந்தனர். இடைக்காலம்[3] முழுமையும் மக்கள் பெக்கெட்டை ஒரு புனித ஆத்துமாவாகக்[4] கருதிக் கான்டெர்பெரியிலுள்ள அவர் கல்லறையை ஒரு திவ்யஸ்தலமாக மதித்து அதற்கு யாத்திரை போய் வந்தனர்.

§ 32. **அயர்லண்டும் ஸ்காட்லண்டும்:**—பிரிட்டிஷ் தீவுகள் முழுமையும் தம் ஆட்சியின்கீழ் அமையவேண்டுமென்று நினைத்த முதல் மன்னர் இரண்டாம் ஹென்றியேயாவர். ஆங்லோசாக்சன்[5] படையெழுச்சிகளால் இங்லண்ட் நாகரிகமற்றுச் சீர்குலைந்திருந்த நூற்றுண்டுகளில் அயர்லண்டில் கெல்ட்[6] நாகரிகம் தழைத்திருந்தது. ஆயினும், பன்னிரண்டாம்

---

1. Sacrilege. 2. The Constitutions of Clarendon. 3. The Middle Ages. 4. Saint. 5. Anglo - Saxon. 6. Celtic.

நூற்ருண்டுக்குள் இங்கிலே நேர் மாருய்விட்டது. நார்மன் வெற்றியால், இங்லண்ட், பெருமைமிக்க இடைக்கால நாகரிகத்தில் மேன்மையுற்றிருந்த யூரோப்பின் பாகமானது; அயர்லண்டோ தங்களுக்குள் போராடிக் குழப்பஞ் செய்துகொண்டிருந்த குலக்கூட்டங்களின் இருப்பிடமாயிருந்தது. இரண்டாம் ஹென்றி பெம்ரோக் ஏர்லான ரிச்சர்ட் க்ளேர்[1] என்பவருக்கு [இவர் 'வலுத்த வில்லாளர்'[2] என்றழைக்கப்பட்டவர்] அயர்லண்டைக் கைப்பற்றச் சொந்த படைகளை நடத்திச்செல்ல அநுமதி தந்தார். அயர்லண்டின்மீது ஒரு சிறிய நார்மன் படையெடுப்பில் பெம்ரோக் தம் நண்பர்களையும் கூட்டிக்கொண்டு சென்ருர். சங்கிலிச்சட்டைகள் அணிந்த குதிரை வீரர்களான நைட்டுகளோடு[3] அயர்லண்ட் மக்கள் அதுவரை போராடியதில்லே. ஆகவே, பெம்ரோக் சில மாதங்களுள் அத்தீவின் கிழக்குப் பாதியைக் கைப்பற்றிக்கொண்டார். பெம்ரோக் அவ்வளவு எளிதில் அவ்வளவு பெரிய வெற்றியைப் பெறுவார் என்று ஹென்றி எதிர்பார்க்கவில்லே. ஆயினும், தம்முடைய பிரபுக்களில் எவரையும் தனி அரசு நிறுவவிடக்கூடாதென்று தீர்மானித்து, தாமும் அயரிஷ் கடலேக் கடந்து அயர்லண்டுக்குச் சென்று, வெற்றியடைந்த பிரபுக்களிடமிருந்து அவர்கள் பிடித்த புதுநாடுகளுக்காக இறைவணக்கம்[4] பெற்ருர். பிறகு அயரிஷ் குருமார்களுக்கும் காதொலிக் மதஸ்தாபனத்துக்கும்[5] தொடர்புண்டாக்க அவர்களைக் காஷெல் என்னுமிடத்தில் கூட்டினுர் (காஷெல் சபை[6]). ஆயினும், அவர் திரும்பிவிட்டபிறகு அயர்லண்டில் நிலேத்த பிட்ஸ்ஜெரால்ட்[7], பட்லர்[8], டெஸ்மாண்ட்[9] என்னும் ஆங்லோநார்மன்[10]

---

1. Richard Clare, Earl of Pembroke. 2. Strongbow. 3. Mail-clad knights. 4. Homage. 5. The Catholic Church. 6. The Council of Cashel. 7. Fitzgeralds. 8. Butlers. 9. Desmonds. 10. Anglo-Norman.

கூட்டங்கள் அயரிஷ் மக்களோடு கலந்துவிட்டன; ஆகவே, மறுபடியும் அயர்லண்ட் யூரோப்பிய நாகரிகத்துக்குப் புறம்பாய் விட்டது.

சிறிது காலத்துக்குப் பிறகு அதிர்ஷ்ட வசமாக ஒரு எதிர்பாராச் சம்பவத்தால் ஹென்றிக்கு ஸ்காட்லண்டின் ஆதிபத்தியமும் கிடைத்தது. அவர் ஆட்சியின் பிற்காலத்தில் பல தொல்லைகள் தோன்றின. பெக்கெட்டின் கொலையால் அவருக்கு ஏற்பட்ட தாழ்வினைப் பயன்படுத்திக்கொண்டு, அவர் அதிபதியான ப்ரெஞ்சு மன்னரும், அவருக்கு அடங்கியவரான ஸ்காட்லண்ட் மன்னரும், தம் சொந்த மக்களும் மனைவி ஆக்விடேன் எலியனேரும்[1] (கு. 22) உட்பட, இங்லண்ட் நார் மண்டி ஆஞ்சு பிரபுக்களுள் பலரும் அவருக்கு விரோதமாகச் சேர்ந்தனர். 1174ல், அவர் கான்டெர்பெரியிலுள்ள புனிதாத் துமா பெக்கெட்டின் கல்லறைக்கோவிலில் வணக்கஞ் செலுத்தச் சென்று, தம் முன்கோபத்துக்குத் தண்டனையாகத் தம்மைச் சாட்டையால் விளாசும்படி மடத்துறவிகளைக் கேட்டுக் கொண்டார். மறுநாள் காலை இங்லண்டின் வட பாகங்களின் மீது படையெடுத்துவந்த 'ஸ்காட்லண்ட் சிங்கம்'[2] என்ற வில்லியம் அரசர் பிடிபட்டார் என்னும் நற்செய்தி கிடைத்தது. ஹென்றியின் மனம் ஆறுதலுற்றது. தாம் மன்னிக்கப் பட்டதற்கு இதை ஒரு தெய்வ அடையாளமாகக் கொண்டார். பிடிபட்ட வில்லியம் தம்மை அதிபதியாக[3] ஏற்றுக்கொண்ட பிறகே ஹென்றி அவரை ஸ்காட்லண்டுக்குத் திரும்பவிட்டார். மற்ற விரோதிகளையும் தமது ஆட்சி முடியும்வரை ஒருவாறு தூரத்திலேயே இருக்கும்படி அவர் அடக்கிவைத்திருந்தார்.

வேறு இரண்டு முக்கியமான சட்ட சீர்திருத்தங்களையும் ஹென்றி தமது ஆட்சியின் பிற்பகுதியில் செய்துவைத்தார்.

---

1. Eleanor of Aquitaine. 2. The Lion of Scotland. 3. Suzerain.

அவற்றின் முக்கிய நோக்கம் அடங்காத பிரபுக்களை அடக்கி வைத்தலே. முதல் சட்டத்தால் கேடயப்பணம்[1] கொடுத்தல் என்னும் திட்டத்தை ஏற்படுத்தினர். அதன்படி மன்னரின் மானியதார்கள் தங்கள் மானியங்களுக்காகப் படைப் பணி புரிவதற்குப் பதில் பணங்கொடுத்துவிடலாம். மானியதாராகிய ஒரு பிரபு மன்னருக்குப் பன்னிரண்டு நைட்டுகளின்[2] சேவையை அளிக்கவேண்டியிருந்தால், அவர் தம் பண்ணைகளுள் சிலவற்றை அவர்களுக்குக் கீழ்மானியங்களாக விட்டு, அவர்களை மன்னருக்குத் துணைசெய்வதற்குப் பதிலாக விரோதமாகப் போராடவும் ஏவலாம். அச் சேவைக்குப் பதில் அவர் மன்னருக்குப் பணம் கொடுத்துவிடுவாரானால், அதைக் கொண்டு மன்னர் தமக்கு அடங்கி உண்மையாக இருக்கக்கூடிய படைவீரர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளலாம். இதனால் படைப்பணி முறை திடுமென மறையவில்லையேனும், அதன் தீமைகள் மெதுவாக மறையலாயின.

இரண்டாவது, ஆயுதச்சட்டம் (1181)[3]. 'பிர்ட்'[4] எனப்பட்ட பழைய ஆங்லோசாக்சன் காலாட்படை இன்னும் மறையவில்லை. சுயேச்சை பெற்றிருந்த (அதாவது, அடிமைகளல்லாத) சிறுசொத்துக்காரர்களையெல்லாம் ஏதாவது அவசர சந்தர்ப்பத்தில் திரண்டு வந்து தமக்காகப் போரிடுமாறு அரசர் கூப்பிடலாம். பிரபுக்களால் சச்சரவு ஏற்பட்ட சமயங்களில் பலதரம் இப்படையே அரசர்க்குப் பெரும் பலமாக இருந்தது. ஆயினும், இப்படை நாளடைவில் சீர்குலைந்து மறைந்து விடும்போலிருந்ததால், ஹென்றி தம் ஷெரிப்புகளுக்கு, அவரவர்கள் ஷைர்களை(ஜில்லாக்களை)ச்சுற்றிச் சில குறிப்பிட்ட சமயங்களில் சென்று ஆங்காங்குள்ள காலாட்படைஞரைக்

---

1. Scutage. 2. Knights. 3. Assize of Arms. 4. Fyrd.

கூட்டி ஒவ்வொருவரும் தத்தம் அந்தஸ்துக்கு ஏற்ப ஆயுதங்களை அணிந்திருந்தனரா என்று பார்த்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டார். சுமாராக உண்டான குடியானவர்களும் வணிகர்களும் இரும்பாலான தலை மூடி[1], சங்கிலிச் சட்டை[2], வாள், ஈட்டி முதலியவைகளை அணிந்துவர வேண்டும்; ஏழைக் குடியானவர்கள் பஞ்சடைத்த தோற்சட்டைகளும் குந்தங்களும்[3] அணிந்துவரவேண்டும்.

எட்டாம் அத்தியாயம்

இரண்டாம் ஹென்றியின் பிள்ளைகள்

1189—1216

§ 33. **சிலுவை வீரரான மன்னர்** :—இரண்டாம் ஹென்றி இறந்தபோது அவரது மூத்த மகன் ரிச்சர்ட்[4] மூன்றும் சிலுவைப் படையில் (1188—1192) சேரத் தயாராயிருந்தார். கிரிஸ்துவ இராச்சியமாயிருந்த ஜெருசெலெம்[5] (§ 24) சாரசென்ஸ்[6] எனப்பட்ட முகம்மதிய அரபியரால் கைப்பற்றப்பட்டதால், கிரிஸ்துவ திவ்யஸ்தலங்கள்[7] அவர்கள் கையில் சிக்கின. ஆகவே, கிரிஸ்துவ உலக முழுமையும் அவற்றை மீட்க ஒன்றுகூடிப் போராட வேண்டுமென்று ஆஞ்ஞை பிறந்தது. போராடலையே தம் இயற்கையாகக் கொண்டிருந்த ரிச்சர்டுக்கு இவ்வாஞ்ஞை உற்சாக மளித்தது. சிங்கநெஞ்சினர் என்னும் பட்டத்தைப் பெறச்செய்த அவர் தைரியமும், நண்பனென்றும் பகைவனென்றும் பாராத பொங்கிய அவர் தயாளமும், பாட்டிலும் இசையி

---

1. Helmet. 2. Coat of ringed mail. 3. Padded jerkins and pikes.
4. Richard. 5. Jerusalem. 6. Saracens. 7. Holy Places.

லும் அவர் கொண்ட விருப்பமும், படைத் தலைவராகவும் மக்கள் தலைவராகவும் அவருக்கிருந்த அரிய ஆற்றல்களும், அக்காலத்தவரும் பிற்காலத்தவரும் அவரை ஒரு சிறந்த வீர மணியாக மதிக்கச் செய்தன. ஆயினும், அக் குணங்கள் படைத்ததனுல்மட்டும் அவர் ஒரு நல்ல அரசராக இருந் திருப்பார் என்று சொல்லுவதற்கில்லை. ரிச்சர்ட் தம் குடி களின் நன்மைக்காக யாதொரு பொறுப்பும் கவலையும் ஏற்றுக் கொள்ளவில்லை. துரைத்தனப் பதவிகளையும் பிஷப்புகள் பட்டங்களையும் அரச மானியங்களையும்[1] அவசரம் அவசர மாக விற்றுத் தம் சிலுவைப் படையினைத் திரட்டுதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரிப்பதிலேயே அவர் ஊக்கங் காட்டினர். ஸ்காட்லண்ட் மன்னரான 'சிங்க' வில்லியம்[2] பெருந் தொகை வழங்கியதால் அந் நாட்டின்மீது ஆதிபத் யம் வகிக்கும் உரிமையினை ரிச்சர்ட் விட்டுவிட்டார். பிறகு வில்லியம் லாங்க்ஷாம்ப்[3] என்னும் பெயர் கொண்ட தம் 'ஜஸ்டீஷியர்' ஆகிய அமைச்சரிடம்[4] நாட்டுத் துரைத் தனத்தை ஒப்புவித்துவிட்டு, அவர் பாலஸ்டின்[5] நாட்டை நோக்கிப் பயணப்பட்டார்.

ரிச்சர்டோடு பேரரசரான ப்ரெடெரிக் பார்பரோசாவும்[6] ப்ரான்ஸ் மன்னரான பிலிப் ஆகஸ்டஸும்[7] மூன்றும் சிலு வைப் படையின் முக்கிய தலைவர்களாயிருந்தனர். படை சிறியஆசியா[8] மூலம் சென்றபோது பார்பரோசா இறந்து விட்டார். ரிச்சர்டும் பிலிப்பும் கடல்வழியாகச் சென்று ஆகர்[9] பட்டினத்தை முற்றுகையிட்டார்கள். கடற்கரையில் ஓரி டம் அவர்கள் வசத்திலிருந்தால், அங்கிருந்து ஜெருசெலெத் தைத் தாக்குவது சுலபமாகுமென்பது அவர்கள் கருத்து.

1. Crown lands. 2. William the Lion. 3. William Longchamp. 4. Justiciar. 5. Palestine. 6. Emperor Frederick Barbarossa. 7. King Philip Augustus of France. 8. Asia Minor. 9. Acre.

அதற்குள் சிலுவை வீரர்களின் படைவீட்டில்[1] மனஸ்தாபங் களும் கொடிய நோய்களும் தோன்றலாயின. ஆகரைப் பிடிப்பதற்கு முன்னரே பிலிப் ப்ரான்ஸுக்குத் திரும்பிவிட் டார். ரிச்சர்டும் நோயால் உடல்மெலிந்து நடப்பதற்கும் வலிவற்றுப் பல்லக்கிலேயே இங்குமங்கும் போய்க்கொண் டிருந்தார். ஆகர் பிடிபட்டவுடன் சிலுவைப் படையினர் ரிச்சர் டின் தனித் தலைமையின்கீழ் ஜெரூசெலெத்தை நோக்கிப் புறப் பட்டனர். ஆயினும், அவர்கள் அதை அடையவில்லை. வழி யில் கொடிய வெப்பத்தாலும் தாகத்தாலும் அவர்கள் படாத பாடுபட்டார்கள். இலேசான ஆயுதங்களை ஏந்தி வந்து விரை வாகத் தாக்கிச் சென்ற எதிரிகளோடு போரிட அவர்களு டைய கனத்த போர்க் கவசங்கள் இடைஞ்சலாயிருந்தன. மேலும், சாரசென் மக்களின் தலைவரான சுல்தான் சலாதீன்[2] போர்த் திறனிலும் வீர உணர்ச்சிகளிலும் ரிச்சர்டுக்கு இணையானவர். சிலுவைப் படையினர் ஜெரூசெலெத்துக்கு அருகில் செல்லுவதற்குள் அதைக் கைப்பற்றினாலும் அது அவர்கள் வசம் நெடுங்காலம் இராது என்பது புலனாய்விட் டது. ஆகவே, ரிச்சர்ட் மிக்க மனவருத்தத்துடன் சலாதீனோடு சமாதானஞ் செய்துகொண்டார். அதன்படி கிரிஸ்துவர்கள் வசத்தில் கடற்கரைப் பட்டினங்கள் சிலவற்றை விடவேண் டும் என்றும், கிரிஸ்துவ யாத்ரிகர்கள்[3] தங்கள் திவ்யஸ்தலங் களைத் தரிசிக்க வரும்போது அவர்களுக்கு யாதொரு இடை யூறும் செய்யலாகாதென்றும் முடிவானது. அடுத்த இரண்டு நூற்றாண்டுகளிலும் பலதரம் பல சிலுவைப்படைகள் திரண்டு சென்றன. ஆயினும், அவர்களது முக்கிய நோக்கம் நிறை வேறவில்லை. 1918 வரை ஜெரூசெலெம் முகம்மதியர் ஆட்சி யிலேயே இருந்தது (கு 23)

---

1. The Camp of the Crusaders. 2. Sultan Saladin. 3. Pilgrims.

நிலவழியாகத் திரும்பிய ரிச்சர்டை அவருடைய வைரியான ஆஸ்ட்ரியா ட்யூக்[1] சிறைப்படுத்தி, அவர் விடுதலைக்குப் பெருந்தொகை வேண்டுமென்றார். அத்தொகையினைச் சேகரிக்க ஆஞ்சூ நாட்டில் தனி வரிகள் விதித்தார்கள்; இங்லண்டின் நில வருமானத்தில் கால்பங்கும் சரக்குகளில் கால்பங்கும் விதித்தார்கள். முதலில் சேர்ந்த பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆஸ்ட்ரியா ட்யூக் ரிச்சர்டை விடுதலை செய்துவிட்டார். பாக்கியைச் செலுத்துவதற்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க ரிச்சர்ட் இங்லண்டுக்குச் சில மாதங்கள் வந்திருந்தார். அதற்கப்பால் அவர் இங்லண்ட் பக்கம் திரும்பவில்லை. தமது ப்ரெஞ்சு மாகாணங்களைப் பற்றிய சச்சரவுகளில் அவரது மீதி ஆயுள் காலம் முழுமையும் கழிந்தது. முடிவில் தம்மை எதிர்த்து நின்ற நார்மன் மானியதார் ஒருவரின் அரணை[2] முற்றுகையிட்டபோது அவர் கொலையுண்டு மாண்டார் (1199).

§ 34. ஆஞ்சூ பேரரசின்[3] முடிவு :– ரிச்சர்டுக்குப் பிள்ளையில்லை. அவருக்கு நேர் இளைய தம்பி ஜ்யோப்ரேயும்[4] இறந்துவிட்டார். அவருக்கு வாரிசாக[5] ஆர்தர்[6] என்றொரு சிறுபிள்ளை இருந்தான். இங்கிலையில் ரிச்சர்டின் கடைசி தம்பியான ஜான்[7] என்பவர் அரசினைக் கைப்பற்றிக் கொண்டார்.

இங்லிஷ் மன்னர்களுள் ஜானே மிகவும் கேவலமானவராகக் கருதப்படுகிறார். அவர் நல்ல போர்வீரரே; இராஜதந்திரமும் தெரிந்தவர். ஆயினும், இவ்வருந்திறல்களால் அவருக்குக் கிடைக்கக்கூடிய நற்பெயர், கட்டுக்கடங்காத அவரது காமக்குரோதாதி விகாரங்களாலும் நெறி தவறிய செயல்களாலும் மங்கிவிட்டது. அவரது ஆட்சிகாலம் முழு

---

1. The Duke of Austria. 2. Castle. 3, The Angevin Empire. 4. Geoffrey. 5. Heir. 6. Arthur. 7. John.

தும் அவர் ப்ரான்ஸ் மன்னரோடும் போப்போடும் இங்லிஷ் பிரபுக்களோடும் சச்சரவிட்டுக் கழித்தார். ஒன்றிலேனும் அவர் வெற்றி பெற்றவரல்லர். இவற்றுள் முதல் சச்சரவைத் தொடங்கியவர்கள் நார்மண்டி ஆஞ்சூ பிரபுக்கள். அவர்கள் ஆர்தர் இளவரசரே பட்டத்துக்கு உரியவர் என்று சொல்லி ஜானை எதிர்த்தார்கள். (படைமானிய திட்டத்தில் பிரபுக்களாக இருந்தவர்கள், எப்போதும் ஒரு குழந்தை தங்களுக்கு அதிபதியாக இருக்குமானால் மிகவும் திருப்தியடைவார்கள். ஏனென்றால், அப்போதுதான் அவர்கள் உண்மையில் சுயேச்சையாக இருக்கலாம்.) அவர்கள் கட்சியை ப்ரான்ஸ் மன்னர் பிலிப் ஆகஸ்டஸ் ஆதரித்தார். ஆஞ்சூ மாகாணங்களைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று நெடுநாளாக நினைத்துக்கொண்டிருந்த அவருக்கு, ஒரு சிறு பிள்ளை அவற்றின் மானியதாராக உரிமைபெற்று வருவானானால் தம் எண்ணம் எளிதில் நிறைவேறுமென்று தோன்றிற்று. முதலில் அப்போரில் ஜானுக்கே வெற்றி கிடைக்கும்போலிருந்தது. அந்த அநுகூலத்தை அவர் தம் கொடூர குணத்தால் இழந்துவிட்டார். சிறுவன் ஆர்தர் ஒரு சமயம் ஜான் கையில் சிக்கிக்கொண்டான். உடனே ஜான் அவனைச் சேன்[1] ஆற்றங்கரையிலிருந்த ஒரு அரணுக்கு அனுப்பி அங்குக் கொலைசெய்வித்தார். சிறுவன் ஆர்தர் ஒழிந்தால் தம் நிலை பலப்படுமென்று நினைத்த ஜான் ஏமாற்றமடைந்தார். நார்மண்டி ஆஞ்சூ நாடுகளின் மக்களனைவரும், அப்படுகொலையின் விவரங்களைக் கேட்டு ஆத்திரங்கொண்டு, அவ்வளவு கடுநெஞ்சினராகிய ஒருவரைத் தம் மன்னராக ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று முன்னினும் மிகுந்த வன்மையுடன் தீர்மானித்துக்கொண்டனர். ஆகவே, ஜானுக்கு விரோதமான கிளர்ச்சி வாரத்

1. The Seine.

துக்கு வாரம் வலுத்துக்கொண்டே வந்தது. முடிவில் அவர் தோல்வியுற்று ப்ரான்ஸிலிருந்தே ஓடிவிடவேண்டியதாயிற்று (1204).

அவ்விதம் ஜான் ப்ரான்ஸிலிருந்து ஓடிவந்தது நாளடைவில் இங்லண்ட் மக்கள் ஒன்றுபட்ட தனிநாட்டாராக[1] வன்மையுற்று விளங்குவதற்குத் துணையாயிற்று. வெற்றி மன்னர் வில்லியத்தோடு வந்த பிரபுக்களின் சந்ததியான குடும்பங்களுக்கு இங்லிஷ் சானலின் இருகரைகளிலும் மானியங்கள் இருந்தவரையில், அவர்கள் தங்கள் ப்ரெஞ்சு மொழியைப்பற்றியும் ப்ரெஞ்சு பழக்கங்களைப் பற்றியும் பெருமைபாராட்டிக்கொண்டிருந்தார்கள். நார்மண்டியிலிருந்து இங்லண்ட் பிரிந்த பிறகு அக்குடும்பங்களும் ஒருவாருகப் பிரிந்து போயின. அநேகமாக ஒரு கால்வழியினர் இங்லண்ட் மானியங்களிலும் மற்ருெரு கால்வழியினர் நார்மண்டி மானியங்களிலும் நிலைத்தனர். அதன் பிறகு இங்லண்டின் குடிகள் கடலால் ஒரு தீவில் தனியாகச் சேர்த்துவைக்கப் பட்டவர்களைப்போலானுர்கள். அவர்களிடையே தாங்களெல்லாம் ஒருநாட்டு மக்களே என்னும் ஒருவகையான ஒற்றுமையுணர்ச்சி தழைத்து வளரலாயிற்று. ஒரு நூற்ருண்டில், மேல் வகுப்பினரில் பலர், தங்கள் பண்ணைகளில் வாழ்ந்த குடியானவர்களைப் போல் தாங்களும் இங்லிஷ் மக்களே என்று நினைக்கலாயினர்.

§ 35. போப்புடன் சச்சரவு:—விரைவில் ஜான் மதஸ்தாபனத்தோடும் சச்சரவு தேடிக்கொண்டார். 1208-ல் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் பதவி காலியானதும் ஜான் அதற்குத் தமக்கு வேண்டியவரான டி க்ரே[2] என்பவரை நியமித்தார். அத்தகைய நியமனங்கள் போப்பின் அங்கீகாரத்தைப்

1. Nation. 2. De Grey.

பெறவேண்டும். அப்போது போப்பாக இருந்த மூன்றும் இன்னெசென்ட்[1] பெரும் புகழ் வாய்ந்தவர் ; இடைக் காலத்துப் பெருமக்களுள் முதலிடம் பெற்றவர்களுள் ஒருவர்; போப் பதவியின் கண்ணியத்தையும் அதிகாரத்தையும் எவ்வகையிலும் விட்டுக்கொடுக்கலாகாதென்ற உறுதிகொண்டவர். ஆர்ச்பிஷப் பதவிக்குத் தக்கவரை நியமிக்கும் பொறுப்பும் உரிமையும் அரசருக்கு இல்லை என்று கூறிப் போப் இன்னெசென்ட், ஜான் நியமித்தவரை ஒதுக்கிவிட்டு, அப்பதவிக்கு ஸ்டீபேன் லாங்ட்டன்[2] என்பவரை நியமித்தார். லாங்ட்டன் அப்பதவிக்கு மிகுந்த பொருத்தமுள்ளவரே. அவர் நெடுங்காலம் வெளிநாடுகளில் உறைந்தாரேனும், பிறப்பில் இங்லிஷ்காரர் ; பெயர்பெற்ற படிப்பாளி ; திறமைமிக்க அரசியில் அறிஞர் ; ஒழுக்கத்தில் தலைசிறந்து நின்ற குணசீலர் ; கிறிஸ்துவ மத ஸ்தாபனத்தில் போப் பட்டத்துக்கு நேர் அடுத்தபடியில் வைத்து மதிக்கப்படும் 'கார்டினல்'[3] பட்டம் வகித்தவர். ஆயினும், ஆர்ச்பிஷப் பதவிக்கு ஆளை நியமிக்கும் உரிமை—அதுவரை யாதொரு எதிர்ப்பும் மறுப்புமின்றி இங்லிஷ் அரசர்கள் தாங்களே ஏற்று வகித்து வந்த பெருமையும் பொறுப்புமிக்க உரிமை—ஜானுக்கு இல்லையென்று போப் சொன்னது ஜானின் சீற்றத்தைக் கிளப்பியது. அவர் லாங்ட்டன் இங்லண்டில் கால்வைக்கக்கூடாதென்று கட்டளையிட்டார். அதனல் போப்புக்குக் கோபம்வர, அவர் ஜான் ஆண்டநாட்டை ஒரு தடை ஆணைக்கு[4] உட்படுத்தினர்(1208). அதாவது, இங்லண்டில் மதஸ்தாபனத்தின் வேலை நிறுத்தப்பட்டது. கோவில்கள் மூடப்பட்டன. ஆகவே, ஞானமுழுக்கு, பெயரிடல், கலியாணம், அடக்கம் முதலியவைகளுக்குரிய மதச் சடங்குகள் நடைபெறுவதற்கில்லை. மதச்சடங்குகள் உய்யும்

1. Innocent. 2. Stephen Langton. 3. Cardinal. 4. Interdict.

வழிக்கு இன்றியமையாதன என்னும் நம்பிக்கை எவர் மனத்திலும் ஆழ்ந்து பதிந்திருந்த அக்காலத்தில் இத் 'தடையாணை' ஒரு பெரிய தண்டனையாகவே கருதப்பட்டது. அதனால் கடவுள் அருளினின்றும் அவர்கள் ஒதுக்கிவைக்கப் பட்டதாகவே மக்கள் நம்பித் திகிலடைந்தார்கள். இந்நிலையிலும் ஜான் போப்புக்குத் தம் உரிமைகளை விட்டுக்கொடுக்க இணங்கவில்லை. பிறகு போப் ஜானைக் கிரிஸ்துவர் கூட்டத்தினின்றும் தள்ளிவைத்திருப்பதாக ஒரு அறிக்கையிட்டார்[1]. அதன்படி கிரிஸ்துவர் சமூகத்தின் ஆதரவினையும் அளவளாவலையும் ஜான் இழந்தவரானார். அவரது கிரிஸ்துவக் குடிகள் அவர் ஆஞ்ஞைக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. இதற்கும் அஞ்சாது, ஜான், மதஸ்தாபனத்தின் வருமானங்களைப் பறிமுதல் செய்து, அவற்றைக்கொண்டு கூலிக்குப் போர் செய்யத் தயாராயிருக்கும் படைவீரர்களைத் திரட்டித் தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளலானார்.

இவ்விதமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் ஐந்தாண்டுகள் கழிந்தன. பிறகு போப் ப்ரான்ஸ்மன்னரான பிலிப் ஆகஸ்டஸை இங்லண்டின்மீது ஒரு தனிச் சிலுவைப் போர்[2] தொடங்க ஆஞ்ஞாபித்தார். இனி எதிர்த்துப் பயனில்லை என்று ஜான் உணர்ந்தார். அவர் கையிலிருந்த பணமெல்லாம் செலவாய்விட்டது. போப்புக்கு எதிராக அரசருக்குப் படைப்பணி செய்யக் குடிகள் முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எப்போது கோவில்களைத் திறக்கப்போகிறார்கள், எப்போது மறுபடியும் கோவில் மணிகளின் ஓசையைக் கேட்கலாம் என்று அவர்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தார்கள். உடனே ஜான் எதிர்பாராத வகையில் வணங்கிவந்தார். லாங்ட்டனை ஆர்ச்பிஷப்பாக ஏற்றுக்

1. Excommunication. 2. A special crusade.

கொள்ள ஒப்புக்கொண்டதோடு, போப்பை இங்லண்டின் படைமானிய அமைப்பின் இறைவராக[1] இருக்கவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார். இச் சமயோசித வணக்கத் தால் இங்லண்ட் அந்நியர் படையெடுப்பினின்றும் தப்பியது. அதற்கு மதஸ்தாபனத்தின் வன்மைமிக்க பக்கபலம் கிடைத்தது. எந்த ஸ்தாபனத்தின் பெருஞ் செல்வாக்கினுல் அதற்கு இடையூறு நேர இருந்ததோ அதே ஸ்தாபனத்தின் ஆதரவு அதற்கு இப்போது அமைந்தது. இங்லண்ட்மீது தொடுக்கும்படி தாம் ஆஞ்ஞாபித்த தனிச் சிலுவைப் போரைத் தொடங்க வேண்டியதில்லை என்று போப் உத்தரவு பிறப்பித்தார். அதை மதிக்காது பிலிப் மன்னர் இங்லண்ட் படையெடுப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு போனதால், அவர் பிலிப்மீது அதிருப்தி கொண் டார்.

ஜான் சில யூரோப்பிய சிற்றரசர்களுடன் கூட்டுறவு ஒப் பந்தம் செய்துகொண்டு ப்ரான்ஸைத் தாக்க முயன்ருர். ஆயி னும், பூவைன்ஸ்[2] என்னுமிடத்தில் பிலிப் இங்கட்பரசர் களைச் சிதற முறியடித்தார் (1214).

§ 36. பேருரிமைப் பத்திரம் (மாக்ன கார்ட்டா[3]) :— ஜான், ஏமாற்றத்தோடும் கோபத்தோடும் இங்லண்டுக்குத் திரும்பிவந்து, ப்ரான்ஸுக்குவந்து தமக்காகப் போராடாத தம் பிரதம மானியதார்களுக்கெல்லாம் பெருந்தொகையான அப ராதமொன்றை விதித்தார். இம்மாதிரியான விஷயங்களைக் குறித்து அவர்களுக்கும் அவருக்கும் அடிக்கடி சச்சரவுகள் தோன்றுவதுண்டு. கண்டத்தில் அவருக்கிருந்த நாடுகளெல் லாம்[4] கைநழுவிப்போனதிலிருந்து அவர் வருமானத்தில்

1, Feudal Overlord of England. 2. Bouvines. 3. Magna Carta.
4. Continental Dominions.

பெரும் பகுதி குறைந்துவிட்டதால், அவர் இங்லண்டிலுள்ள தம் மானியதாரிடமிருந்து அளவுக்கு மீறிய இறைப்பணங்களை எவ்வகையிலேனும் தண்ட முயன்றார். அடிக்கடி கேடயப்பணம்[1] கேட்கலானார். சிறிய குற்றங்களுக்கும் பெருந்தொகையான அபராதங்களை அவருடைய உத்தியோக அதிகாரிகள் விதித்துவரலாயினர். மானியங்களின் வாரிசுகளிடமிருந்து பெருந்தொகையான வாரிசு இறைகளைத்[2] தண்டினார். அவற்றைக் கொடுக்க வாரிசுகள் தங்கள் மானியங்களை யூத சௌகார்களிடம்[3] அடகுவைத்துப் பணம் திரட்ட வேண்டியவர்களானார்கள். அவருக்குள்ள பாதுகாப்புரிமையின்படி[4], வயதுவராத இளம் வாரிசுகளின் பண்ணைகள் அவர் அநுபோகத்தில் சில வருஷங்கள் இருக்க நேர்ந்தபோது, ஜான், அங்கு வளர்ந்திருந்த மரங்களை வெட்டி விற்றும், அவற்றைச் சேர்ந்த அடிமைகளுக்குச் சுதந்திரத்தை விற்றும் தம்மளவில் லாபந் தேடிக்கொண்டு அச்சொத்துக்களைப் பாழாக்கினார். அத்தகைய சொத்துக்களின் வாரிசு கலியாணமாகாத ஒரு பெண்ணாயிருந்தால், அவளைத் தமக்கு எவன் அதிக பணம் கொடுக்க ஒப்புக்கொள்ளுகிறானோ அவனுக்குக் கலியாணஞ்செய்துவைப்பார். அவர் குறிப்பிட்ட கணவனுக்கு அவள் வாழ்க்கைப்பட மறுத்தால், தன் சொத்தின் பெருமானத்தில் பாதிக்கு மேற்பட்ட தொகையை அவள் அபராதமாகக் கொடுக்கவேண்டும். இத்தகைய கொடுங்கோன்மையின்கீழ் மனக்கொதிப்படைந்திருந்த பிரபுக்கள், பூவைன்ஸில் தோற்று அவர் திரும்பியதும், அவரை எதிர்க்க ஒன்றுசேர்ந்தனர். ஆர்ச்பிஷப் லாங்ட்டன் அவர்களுக்குத் தலைமை வகித்தார். அதிருப்தி யடைந்திருந்த பிரபுக்களைத் தங்கள் படைவீரர்களோடு பெரி செண்ட் எட்

1. Scutage. 2. Reliefs. 3. Jewish Money-lenders. 4. Wardship.

மண்ட்ஸ்[1] என்னும் இடத்தில் வந்து சேரும்படி அவர் ஆஞ்ஞாபித்தார். அங்கிருந்து அவர்கள் லண்டனை நோக்கிப் படையெடுத்துச் சென்றார்கள். லண்டன் நகரவாசிகளும் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். ஜான் தமது பிடிவாதமிக்க அசட்டுத்தனத்தால் குடிகளுள் பல வகுப்பினரையும் பகைத்துக்கொண்டார். அவருக்கு முன்னே ஆண்ட அரசர்கள், பிரபுக்கள் தமக்கு எதிராகக் கிளம்பியபோதெல்லாம், நகரவாசிகள் உழவர்கள் முதலியவர்கள் துணையை நம்பியிருந்தார்கள். பிரபுக்களை அடக்கி அத்துக்குள் வைத்திருப்பதால் ஏற்படும் நன்மைகளை அவர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். ஆயினும், ஜானின் கொடுங்கோன்மையால் எல்லோரும் அல்லற்பட நேர்ந்ததால் யாரும் அவருக்குத் துணை செய்ய முன்வரவில்லை. ஆகவே, அவர் முன்னர் போப்புக்கு எவ்விதம் கீழ்ப்படிந்து வந்தாரோ, அவ்விதமே பிரபுக்களுக்கும் உடனே எல்லா நிபந்தனைகளிலும் இணங்கிவந்தார். தமது ஆட்சியின் முறைகேட்டை மாற்றிக்கொள்வதாக உறுதி கூறி, அவர்களுக்கு ஒரு உரிமைப் பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டதற்கு, அவர் உடனே ஒப்புக்கொண்டார். விண்சருக்கு[2] அருகில் டெம்ஸ் ஆற்றிலுள்ள ரன்னிமீட்[3] என்னும் தீவில் 1215ஆ ஜூன்மீ 15வ அப்பேருரிமைப் பத்திரத்தில்[4] அவர் தம் முத்திரையைப் பொறித்தார்.

இவ்வுரிமைப் பத்திரத்தில் படைமானிய முறையைக் குறித்த விஷயங்களே[5] கூறப்பட்டிருந்தன. மேற்சொன்ன அக்கிரமங்களை இனித் தாம் செய்வதில்லையென்று மன்னர் உறுதி கூறினர். பிற்காலத்தவர்கள், இங்லிஷ் மக்களுள்

1. Bury St. Edmunds. 2. Windsor. 3. Runnymede in the Thames.
4. The Great Charter. 5. Purely feudal matters.

எவர்மீதும் அவர் அநுமதியின்றி வரி விதிக்கக்கூடாது என்றும், எவரையும் 'ஜூரிகள்' எனப்படும் மெய்விளம்பிகள் குழுவினரால் விசாரணை செய்யாமல் தண்டிக்கக்கூடாது என்றும் அதில் பாதுகாப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக நம்பினுர்கள். ஆயினும், அந்நம்பிக்கை சில லாடின் மொழிகளைத் தப்பாக அர்த்தம் பண்ணதால் ஏற்பட்டதே(கு. 24). இந்த உரிமைகள் மன்னரின் பிரதம மானியதார்களுக்கே அப்பத்திரத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்லண்ட் மக்களில் பெரும்பான்மையோர் பண்ணையாட்களாக இருந்ததால் இவ்வுரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டவை என நினைப்பதற்கில்லை.

இப்பத்திரம் இங்லண்ட் சரித்திரத்தில் அதி முக்கியமான நிகழ்ச்சிகளுள் ஒன்ருகும். ஏனென்ருல், சட்டமென்பது மன்னரின் மனப்போக்குமட்டுமல்லாது, குடிமக்களோடு அவரும் சேர்ந்து அநுசரிக்கவேண்டிய சில திட்டங்களும் பழக்கவழக்கங்களு மாகும் என்னும் சீரிய கொள்கையை அது வற்புறுத்தி நிலைநாட்டியது. தமக்குச் சிறிது அவகாசம் தேடிக்கொள்ளவே ஜான் அப்பத்திரத்தில் கையொப்பமிட ஒத்துக்கொண்டார். மதஸ்தாபனத்துக்குட்பட்ட பெரிய மானியதாரான ஜானை, அவரது கீழ் மானியதார்களாகிய பிரபுக்கள், அவ்வளவு கண்ணியக் குறைவான முறையில் கட்டாயப்படுத்தி, அப் பத்திரத்தில் கையொப்பமிடச் செய்தது போப்புக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர் அது செல்லாது என்ருர். அரசர் அதன் நிபந்தனைகளின்படி நடக்க வேண்டுமென்று பிரபுக்கள் வற்புறுத்தியபோது, போப் மற்றெரு தனிச் சிலுவைப்போரை இங்லண்டின்மீது ஏவினுர். இந்தமுறை அது ஜானுக்கு அநுகூலமாக ஏவப்பட்டது. ப்ரான்ஸின் பட்டாளமொன்று இங்லண்டில் வந்து இறங்கியது. அதன் துணையைக்கொண்டு ஜான் தம் பிரபுக்களைத்

தூரத்திலேயே வைத்திருந்தார். ஆயினும், 1216ஆ அக்டோபரில் அவர் திடுமென நோய்கண்டு இறந்தார்.

ஒன்பதாம் அத்தியாயம்

மன்னரும் மானியதாரும்*

(1216—1272)

§ 37. ஒழுங்கற்ற ஆட்சி:—ஜான் நடுவயதில் இறந்ததால், அவருக்குப்பின் சிம்மாசனமேற உரிமைபெற்றிருந்த அவர் மகன் ஹென்றிக்கு அப்போது ஒன்பது வயதுதான் ஆயிருந்தது. ஆகவே, சில பெரிய பிரபுக்கள் அவருக்குப் பாதுகாப்பாளர்களாக[1] அமர்ந்து, பதினைந்து ஆண்டுகள் வரையில் இராச்சியபாரத்தைத் தாங்கிக்கொண்டு வந்தார்கள். அவர்களுள் மிக்க பெயர்பெற்றவர், 1215 முதல் 1232 வரை ஜஸ்டீஷியர் எனப்பட்ட தலைமை அமைச்சராக இருந்த ஹ்யுபர்ட்-டி-பர்க்[2] என்பவர். அவர் ஏந்தி நின்ற பொறுப்பு தொல்லை நிறைந்தது. அக்காலம் அரசர்க்கு வந்த வருமானம் துரைத்தன செலவுகளுக்குப் போதியதாக இல்லை. அதை அதிகமாக்க, ஜான் செய்ததைப்போல், மானியதார்களிடமிருந்து அதிகமான இறைப்பணம் வசூலிப்பதைவிட வேறு வழியில்லை. ஆகவே, பிரதம மானியதார்களெல்லாம் அதை எதிர்த்துக் குழப்பம் விளைவிக்கத் தயாராயிருந்தார்கள். மேலும், அரசருக்கு வயது ஏற ஏற அயல் நாட்டு நண்பர்கள் கூட்டுறவு அதிகமாயிற்று. அவர்களுள் முக்கியமானவர்கள், ப்வாடு[3]விலிருந்துவந்து வின்செஸ்டர்[4] பிஷப்பாக

---

* பிரபுக்களும் (பாரன்களும்)

1. Regents. 2. Hubert de Burgh. 3. Poitou. 4. Winchester.

விருந்த அவர் பாதுகாப்பாளரான பீடர் டெஸ் ரோஷஸ்[1] என்பவரும், ப்ரோவாங்ஸ்[2] நாட்டைச்சேர்ந்த எலியனேர்[3] என்னும் தம் இராணியின் உறவினர்களுமே. அவர்கள், டி பர்கின்[4]மீது அடிக்கடி கோள்சொல்லிக்கொண்டு வந்து, முடிவில் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடச் சூழ்ச்சி செய்தனர். 1232-ல், அரசர் தாமே இனித் துரைத்தன காரியங்களைக் கவனித்துக்கொள்ளப் போவதாகக் கூறினர்.

அவர் அவ்விதம் செய்யத் துணிந்தது மிகவும் தவருன காரியம். தம்மளவில் அவர் நல்ல எண்ணமுடைய வாலிபரே. பக்தி மிக்கவர்; பக்தசீலரான எட்வர்டைத்[5] தம் எடுத்துக் காட்டாகவும் ஆதரவுத் தெய்வமாகவும் வைத்துப் பாராட்டினர்; வெஸ்ட்மின்ஸ்டர் மடாலயத்தைப்[6] புதுப்பித்துக் கட்டுவதைத் தம் வாழ்நாளின் அரிய நோக்கமாகக் கொண்டார். ஆயினும், அவருக்குத் திடசித்தமில்லை ; அவர் வீண் பெருமைகளால் மயங்கிய ஊதாரியாக இருந்தார். மேலும், இங்லண்டில் அப்போது மக்களிடையே தோன்றிக்கொண்டிருந்த தாய்நாட்டு உணர்ச்சி[7] அவருக்கில்லாதிருந்தது. இராணி எலியனேரின் உறவினர்களுக்கும் டெஸ் ரோஷஸ் பிஷப்பின் நண்பர்களுக்கும் பட்டங்களும் மானியங்களும் வழங்கி இங்லிஷ் பிரபுக்களின் அவநம்பிக்கையையும் வெறுப்பையும் தேடிக்கொண்டதோடு, அவர் போப் விதித்த இறைப்பணங்களுக்கு யாதொரு எதிர்ப்பும் சொல்லாமல் அவைகளை வசூலித்து அனுப்பி இங்லிஷ் மதஸ்தாபனத்தின் குருமார்களது அதிருப்தியையும் தேடிக்கொண்டார். ஜெர்மென் பேரரசருக்கும் போப்புக்கும் அவரவர்களது அதிகார வரம்பினைக் குறித்து நடந்த போராட்டம் அப்போது மிக மும்முரமாக

1. Peter des Roches. 2. Provence. 3. Eleanor. 4. de Burgh. 5. Edward the Confessor. 6. Westminster Abbey. 7. National feeling.

இருந்ததால் (§ 26), போப்புக்குத் தமக்குக் கிடைக்கக் கூடிய பணம் மொத்தமும் வேண்டியிருந்தது. போப் தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்ளக் கையாண்ட முறைகளுள் ஒன்று இங்லிஷ் குருமார்களுக்கு மிக்க சஞ்சலத்தைத் தந்தது. இடலி குருமார்களுள் தம் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அவர் இங்லிஷ் மதஸ்தாபனத்தின் பதவிகளை வழங்கலானார். அப்பதவிகளுக்குள்ள கடமைகளை நிறைவேற்ற அந்த இடலி குருமார்கள், இங்லண்டுக்கு வராமலேயே, சில ஏழை இங்லிஷ் குருமார்களைச் சொற்ப ஊதியம் வாங்கிக்கொண்டு தங்களுக்காக அவைகளைச் செய்யுமாறு நியமித்து வைத்திருந்தனர். இதற்குப் 'பதிலாள் ஏற்படுத்தல்'[1] என்பது பெயர். அத்தகைய தீய வழக்கங்களை அதற்குமுன் இங்லண்டில் ஆண்ட மன்னர்கள் கண்டித்துக் கொண்டு வந்தார்கள். ஆயினும், மூன்றும் ஹென்றி, போப்பின் ஆதரவைப்பெறப் பெரிதும் அவாவியதால், அவருக்கு இடைஞ்சலான எதையும் செய்யத் துணியாதிருந்தார்.

மற்றொரு விஷயத்தாலும் ஹென்றி மக்கள் மதிப்பை இழக்கலானார். தம் தந்தை இழந்த ஆஞ்சு மாகாணங்களை மீட்கவேண்டுமென்னும் ஆவல் அவருக்கு அதிகமாயிருந்ததே தவிர, அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றலோ போர்த்திறனோ அவருக்குச் சிறிதளவுமில்லை. ப்வாடுவை[2] மீட்க ப்ரான்ஸ் மன்னர்மீது அவர் மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு தொடுத்த போரில், பெருந்தொகை செலவிட்டு அவர் திரட்டி அனுப்பிய படை டேல்பூர்க்[3] என்னுமிடத்தில் மிக்க நஷ்டத்தோடு முறியுண்டது (1242).

ஹென்றியின் அசட்டு ஊதாரித்தனம் உச்ச நிலையை அடைந்தது அவரது இரண்டாம் மகன் எட்மண்டுக்குப்

1. "Making provisions." 2. Poitou. 3. Taillebourg.

போப் சிசிலி[1] இராச்சியத்தைக் கொடுப்பதாகச் சொன்ன போதே யாகும். ஜெர்மென் பேரரசரிடமிருந்து அத்தீவினை வெல்லுவதற்கு ஆகக்கூடிய செலவு முழுவதையும் ஹென்றியே தாங்கவேண்டுமென்பது போப்பின் நிபந்தனை. ஹென்றியின் கருவூலம் (கஜானு) அப்போது காலியாயிருந்தது. வியாபாரிகளிடமிருந்து அவர் முன்னமே பெருந் தொகைகளைக் கடன் வாங்கியிருந்தார்: நீதிபதிகளுக்கும் மற்ற உத்தியோக அதிகாரிகளுக்கும் சம்பளம் கொடுக்கவும் அவரிடம் பணமில்லை. அங்கிலையில் அவர் போப்புக்கு இருபது லக்ஷம் பவுன் கொடுப்பதாக வாக்களித்தார். 'க்ரேட் கௌன்சில்' (பெரிய ஆலோசனை சபை[2]) அவ்வளவு பெருந் தொகையை வரி விதித்து வசூலிக்க ஒப்புக்கொள்ளாததால், ஹென்றி மிக்க ஏமாற்றத்துடன் தம் ஊதாரி எண்ணங்களை விட்டுவிட வேண்டியவரானர்.

§ 38. ஆக்ஸ்பார்ட் ஏற்பாடுகள்[3] :—இத்தகைய ஒழுங்கீனமான ஆட்சியால் ஜனங்களின் மனத்தில் சில வருஷங்களாகக் கொந்தளித்துக்கொண்டிருந்த அதிருப்தி 1258-ல் திடுமெனப் பொங்கி எழுந்தது. வேல்ஸ்நாட்டு மக்கள்[4] படையெடுத்துவந்ததால், அப்படையெழுச்சியைத் தடுக்க ஆதரவு நாடி, 'க்ரேட் கௌன்சில்' என்னும் பெரிய ஆலோசனை சபையை அரசர் கூட்டவேண்டியதாயிற்று. அப்போது பிரபுக்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, மன்னரிடமிருந்து துரைத்தனப் பொறுப்பைப் பிடுங்கிக்கொள்வதற்கு அச்சந்தர்ப்பத்தை நெகிழவிடாமல் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார்கள். அவ்விதம் தீர்மானித்த பிரபுக்களின் தலைவராயிருந்தவர் லெஸ்டர் ஏர்லான சைமன் டி மாண்ட்பார்ட்[5] என்

---

1. Sicily. 2. The Great Council. 3. The Provisions of Oxford. 4. The Welsh. 5. Simon de Montfort, Earl of Leicester.

பவர். அவர் ஹென்றியின் அந்நியநாட்டு நண்பர்களுள் ஒருவராக இங்லண்டுக்கு வந்த ஒரு ப்ரெஞ்சுக்காரர். வந்தவர், மன்னரின் ஆதரவுக்குப் பாத்திரராகி, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்து, இங்லண்டில் ஏர்ல் பதவியையும் அதற்குரிய பரந்த மானியங்களையும் பெற்றார். ஆயினும், பிறகு ஹென்றியோடு மனஸ்தாபப்பட்டு அவர் ஒரு சிலுவைப் போரில் கலந்துகொள்ளப் பாலஸ்டினுக்குப்[1] போய், அங்கே பெரும் புகழ்பெற்று, அப்போதுதான் இங்லண்டுக்குத் திரும்பிவந்தார். ஹென்றியை எதிர்க்க ஒன்று கூடிய பிரபுக்களோடு சைமனும் சேர்ந்துகொண்டு, தமது திறமையாலும் குணமேம்பாட்டாலும் விரைவில் அவர்களது தலைவரானார்.

ஹென்றி, பிரபுக்களின் மனநிலையைக் கண்டு திகிலடைந்தவராய், 'பெரிய ஆலோசனை சபை'யின் கூட்டத்தைத் தள்ளிவைத்தார். அச்சபை ஆக்ஸ்பர்டில் மறுபடியும் கூடியபோது, பிரபுக்கள் முன்னினும் மிகுந்த சீற்றத்துடனும் திடசித்தத்துடனும் தோன்றினார்கள். பிரபுக்களின் விருப்பங்களையும் உரிமைகளையும் அரசர் இனியும் புறக்கணிப்பாராயின் அவர்கள் அவரை எதிர்த்துப் போரிடவும் துணிந்திருந்ததற்கு அறிகுறியாக, அவர்கள் போர்க்கவசங்களை அணிந்துகொண்டே கூட்டத்துக்கு வந்தார்கள். படைமானிய ஏற்பாட்டின்படி அதிபதியாக இருந்த எந்த மன்னரையேனும்[2] அவரது பிரதம மானியதார்களே ஒன்றுகூடி எதிர்க்க நேர்ந்தால், அவர் ஆதரவற்ற அசக்தரே யாவார். ஆகவே, ஹென்றி பிரபுக்கள் சொன்ன ஏற்பாட்டுக்கு இணங்கினார். ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள்[3] (1258) என்னும் திட்டத்தின்படி, நாட்டுத் துரைத்தனம் பிரபுக்கள்

---

1. Palestine. 2. Feudal Sovereign. 3. The Provisions of Oxford.

சபை யொன்றின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது (கு. 27).

ஆயினும், பிரபுக்களுள் ஒற்றுமை நெடுநாள் நீடித்தில்லை. சைமன் டி மான்ட்பர்ட் துரைத்தன அமைப்பை முற்றிலும் சீர்திருத்திவைக்க ஒரு திட்டம் வகுத்தார். அதன்படி, நன்றாக விருத்தியடைந்துகொண்டுவரும் பட்டணங்களில் வாழும் வணிகர்களுக்கும், அரசரிடமிருந்து நேராக இரண்டொரு பண்ணைகளைமட்டும் பெற்றிருந்த சில்லரைப் பிரதம மானியதார்களுக்கும் பொறுப்பும் செல்வாக்கும் பெருகக்கூடும். இத்தகைய திட்டங்களில் ஊக்கங்காட்டிய பிரபுக்கள் வெகு சிலரே. அவர்களுள் பெரும்பான்மையோர் சுயநலம் படைத்தவர்கள். தங்கள் தங்கள் உரிமைகளையும் லாபங்களையும் பெருக்கிக்கொள்வதே அவர்கள் நோக்கமாயிருந்தது. மேலும், தங்களிடையிலேயே சைமனுக்கு ஏற்பட்டிருந்த அதிகாரமும் செல்வாக்கும் அவர்கள் பொறாமையைக் கிண்டின. ஆகவே, அரசர், தம் எதிரிகளிடையே வளர்ந்துவந்த ஒற்றுமைக் குறைவைக் காரணமாகக்கொண்டு, ஆக்ஸ்பர்ட் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, இராச்சியபாரத்தைத் தாமே வகிக்கலானார்.

§ 39. பிரபுக்கள் போர்[1] :—அச்சமயம் ஓர் உள்நாட்டுப்போர் தொடங்கும் போலிருந்தது. அதைத் தடுக்க இரு தரத்தாரும் ப்ரான்ஸ் மன்னர் ஒன்பதாம் லூயியின்[2] மத்தியஸ்த தீர்ப்புக்கு ஒப்புக்கொள்ள இணங்கினார்கள். அரசர் அரசர்பக்கமே இருப்பாரென்று பலர் எதிர்பார்த்ததற்கேற்ப, லூயி ஹென்றிபக்கமே தீர்ப்பு சொன்னார். ஆமீயாங் மீஸ் (முடிபு)[3] என்ற தம் தீர்ப்பால் அவர் ஆக்ஸ்பர்ட் ஏற்பாட்டை முற்றிலும் தள்ளிவிட்டார். ப்ரான்ஸ் மன்னரின்

---

1. The Barons' War. 2. Louis IX. 3. The Mise of Ameins.

மத்தியஸ்த தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதாக ஆணையிட்டு உறுதி கூறியிருந்த சைமன், அப்படிச்செய்வது தம் கட்சிக்குப் பாதகமாக இருந்ததைக் கருதி, அரசர்மீது போர் தொடங்கத் தாம் செய்திருந்த ஏற்பாடுகளைத் தொடர்ந்து செய்யலானார். பிரபுக்களில் இளவயதினரானவர்கள் சிலரும், ஒற்றைப் பண்ணைக்காரரில்[1] பெரும்பான்மையோரும், மதஸ்தாபனத்தின் கீழ்ப்பதவிகளிலிருந்த குருமார்களும், லண்டன் முதலிய பல பெரிய பட்டணங்களின் மக்களும் சைமனை ஆதரித்தார்கள். ஆயினும், முதலில், மன்னரின் திறமைமிக்க மகனான எட்வர்ட் இளவரசர் தலைமையில் சைமனை அடக்கவந்த அரசர் படைகளே வெற்றி பெற்றன. அவை, சைமன் ஏர்லுக்கு நடு நாட்டிலிருந்த[2] மானியங்களைப் பாழாக்கிவிட்டு, யூரோப்பிலிருந்து கூலிக்குச் சேகரிக்கப்பட்டு அரசருக்காகப் போரிட வந்த பட்டாளமொன்று தடையின்றி இங்லண்டின் கடற்கரையில் இறங்குவதற்கு உதவிசெய்யத் தெற்குநோக்கிச் சென்றன. லூயிஸ்[3] என்னுமிடத்தில் அவை சைமன் படைகளைச் சந்தித்தபோது (1264), வெற்றிபெறுதல் இலேசான காரியமென்று இறுமாப்புடன் அசட்டையாக இருந்தன. எட்வர்ட் இளவரசரும் அவர் தலைமையிலிருந்த வீரமிக்க குதிரை வீரர்களும், சைமன் ஏர்லை ஆதரிக்கவந்த லண்டன் நகரவாசிகளைச் சிதறவடித்துப் புறங்காட்டியோடச்செய்து, அவர்களை நெடுந்தூரம் டௌன்ஸ் சரிவுகள்[4] நெடுகத் துரத்திச்சென்றார்கள். அவர்கள் திரும்புவதற்குள் சைமன் போரை வென்று அரசரைச் சிறைபிடித்துக்கொண்டார். ஆகவே, லூயிஸ் மீஸ் (முடிவு)[5] என்னும் ஏற்பாட்டுக்கு ஹென்றி ஒப்புக்கொள்ள வேண்டியவரானார். அதன்படி, 'ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள்'

1 One-manor men. 2. The Midlands. 3. Lewes. 4. The Downs.
5. The Mise of Lewes.

மறுபடியும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டன. எட்வர்ட் இளவரசர் சைமன்வசம் பிணையாக[1] ஒப்புவிக்கப் பட்டார்.

§ 40. சைமன் டி மான்ட்பார்ட்டின் பார்லமெண்ட்:— நாட்டின் துரைத்தனம் சைமன் பொறுப்பில் வந்ததேனும், அவரால் தம் மனத்திலிருந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியவில்லை. எதிரிகளை அடக்கிவைத்திருக்கவேண்டிய முயற்சிகளிலேயே அவர் காலத்தில் பெரும்பாகம் கழிந்தது. அவர்களுக்கு எதிராகத் தமக்குப் பலம் தேடிக்கொள்வதற்காகப் 'பார்லமெண்ட்' (பேசல்) என்னும் ஒருகூட்டத்தை அவர் கூட்டினார். அதற்கு வந்த பிரபுக்கள் வெகு சிலரே: ஆயினும், அவர் கட்டளைப்படி, அக்கூட்டத்துக்கு, ஒவ்வொரு ஷைர் மன்றத்திலிருந்தும் இவ்விரண்டு நைட்டுகளும், தமக்கு ஆதரவளித்த ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் பொறுப்புள்ள இவ்விரண்டு நகரவாசிகளும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தம் கட்சியைச்சேர்ந்த வகுப்புக்களின் பிரதிநிதிகளை ஒன்றுகூட்டி அவர்களுக்குத் தம் எண்ணங்களைக் கூறவேண்டுமென்பதே அவரது முக்கிய நோக்கம். ஆயினும், அவர் கூட்டிய கூட்டமானது அவர் அறியாமலேயே பிற்காலத்தில் புகழுடன் விளங்கிய பார்லமெண்ட் சபையின் அமைப்புக்கு ஒரு முக்கிய அடிப்படையானது. தேர்ந்தெடுக்கப்பட்ட நைட்டுகள் 'க்ரேட் கௌன்சில்' என்ற பெரிய ஆலோசனை சபையின் கூட்டங்களுக்கு இதற்குமுன் வந்திருந்ததுண்டு; தேர்ந்தெடுக்கப்பட்ட நகரவாசிகளும் தங்கள் தங்கள் நகரங்களின் மக்கள் சார்பாக அரசாங்க அதிகாரிகளோடு முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேசவந்ததுண்டு. ஆயினும், இருவகுப்புக்களின் பிரதிநிதிகளையும் ஒன்றுசேர்த்துக் கூட்டியது இக்

1. Hostage.

கூட்டத்திலேயேயாம். இவ்வகுப்புக்களின் பிரதிநிதிகளே பிற்காலத்திய 'காமன்ஸ் சபை'யில்[1] கூடினார்கள்.

சைமன் அதிகாரம் ஓராண்டிற்குமேல் நீடித்தில்லை. எட்வர்ட் இளவரசர் அவர் காவலிலிருந்து தப்பி அரசரது கட்சிக்குப் புது ஊக்க மூட்டினார். மேற்குக் கௌன்டிகளில் எட்வர்டை ஆதரிக்க ஒரு பெரிய சேனை திரண்டது. சைமன் தம்மால் திரட்டக்கூடிய படைகளைத் திரட்டிக்கொண்டு எட்வர்டை எதிர்க்கப் போனார். ஆயினும், ஈவ்ஸ்ஹாம்[2] என்னுமிடத்தில் அவர் எக்கச்சக்கமாய் அகப்பட்டுக்கொண்டு தோல்வியுற்று மாண்டார் (1265).

சைமன் எவ்வளவில் சீரிய கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகினார் என்பதையேனும், எவ்வளவில் அதிகார வேட்கையால் தூண்டப்பட்டார் என்பதையேனும் இப்போது நாம் தீர்மானித்துச் சொல்லமுடியாது. தம் வகுப்பினரின் விரோதத்தை அவர் தேடிக்கொண்டார் என்பது உண்மை. ஆயினும், அவரிடம் பலரும் பாராட்டக்கூடிய சில அரிய குணமேம்பாடுகள் அமைந்திருத்தல் வேண்டும். லின்கன்[3] பிஷப்பாயிருந்த ராபர்ட் க்ராஸ்டெஸ்ட்[4] போன்ற அக்காலத்துப் பெரியமனிதர்களுள் பலர் அவரது நண்பர்களா யிருந்திருக்கிறார்கள். எட்வர்ட் இளவரசரும் பாலியத்தில் அவரது தோழராயிருந்தவரே. எனினும், சாதாரண மக்களும், சிறப்பாக மதஸ்தாபனத்தில் தாழ்ந்த பதவிகளில் இருந்தவர்களும், அவரிடம் கொண்டிருந்த அன்பும் மதிப்புமே அவரது பெருமைக்குத் தக்க சான்றுகளாம். தங்கள் நன்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாத்து நிலைநாட்டியவர் அவரே என்று அவர்கள் பாராட்டினார்கள். பல நூற்றாண்டுகளாக ஏழைக்குடில்களில் குளிர்காயச்

---

1. House of Commons. 2. Evesham. 3. Lincoln. 4. Robert Grossteste.

சேரும் மக்கள் அந்த 'நல்ல சைமன் ஏர்'லேப்பற்றிய[1] கதைகள் பலவற்றைச் சொல்லிப் பொழுதுபோக்குவது வழக்கம். அவரது கல்லறையுள்ள இடத்தில் அற்புதங்கள் பல நடந்ததாகவும் மக்கள் நினைத்தார்கள். இவ்வளவு நன்மதிப்பையும் புகழையும் பெறுவதற்கு ஓரளவிலேனும் பாத்திரராகாது அவர் இருந்திருக்கமுடியாது.

மூன்றும் ஹென்றியின் நீண்ட ஆட்சி மேலும் ஏழாண்டுகள் நீடித்திருந்தது. அவ்வாண்டுகள் அமைதியாகவே கழிந்தன. அப்போது இராச்சிய விவகாரங்களில் திறமைமிக்க எட்வர்ட் இளவரசரின் செல்வாக்கு நாளுக்குநாள் பெருகிவரலாயது.

§ 41. 'ப்ரையர்ஸ்'[2] எனப்பட்ட திரியும் துறவிகள்:— பதின்மூன்றும் நூற்றாண்டில் 'ப்ரையர்ஸ்' எனப்பட்ட திரியுந் துறவிகள் கூட்டத்தால் மதஸ்தாபனத்துக்கு மிகுந்த வன்மை ஏற்பட்டது. இடலியில் ஆசிசி என்னுமிடத்தைச் சேர்ந்த புனிதாத்துமா ப்ரான்சிஸ்[3] என்பார் ஏழைமக்களிடையே மத உணர்ச்சியைப் பரப்பும் தொண்டிற்கென்று 1209-ல் ஒரு பக்தர் கூட்டத்தை[4] நிறுவினர். மடாலயங்களிலுள்ள 'மங்க்ஸ்'[5] எனப்பட்ட துறவிகள் தத்தம் ஆன்ம நன்மையையும் மடச்சமூகத்தின் நன்மையுமே கவனித்துக்கொண்டார்கள். கிராமங்களிலுள்ள குருமார்களில் பெரும்பான்மையோர் குறைந்த படிப்பினராக இருந்ததால், மதப்பிரசாரத்துக்கு அவர்கள் உதவுவதில்லை. மதஸ்தாபனத்தின் மேல்பதவிகளிலிருந்தவர்களோ, தங்கள் மதப்பொறுப்புக்களை ஒதுக்கிவைத்துவிட்டு உலக விவகாரங்களிலும் இராஜீய சிக்கல்களிலும் அதிகமாகத் தங்கள் கவனத்தைச் செலுத்தலாயினர். 'ப்ரையர்ஸ்' எனப்

1. 'Good Earl Simon.' 2. Friars. 3. St. Francis of Assisi. 4. An order of pious men 5. Monks.

பட்ட துறவிகளோ, ஏழைமக்களிடையே சென்று, அவர்கள் தாய்மொழியிலேயே அவர்களுக்கு மதப்போதனை செய்து, பிணியுற்றூர்க்குச் சிகிச்சை பண்ணியும், துன்புற்றூர்க்கு ஆறுதல் கூறியும், தன்னலமற்ற தொண்டாற்றினூர்கள். அந்த இயக்கத்தின் தொடக்கத்தில் அதைச் சேர்ந்த துறவிகளுக்குத் தனிப்பட்டோ மொத்தத்திலோ யாதொரு சொத்துமில்லை. ஆண்டு முழுமையும் மழை குளிர் எதையும் பாராமல் எக்காலத்திலும் அவர்கள் வெறுங்காலினராய்த் திரிவார்கள்; முரட்டு ஆடைகளையே அணிவார்கள்; மெத்தையின்றி வெறுந்தரையில் படுத்துறங்குவார்கள்; அன்றூடம் உணவுகிடைக்கு மிடத்தில் உண்பார்கள். ஆயினும், அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பக்தியும் பெருகலாயின. ப்ரான்சிஸ்கன் துறவிகள்[1] இங்லண்டுக்கு முதல் முதல் 1224-ல் வந்தார்கள்; பிறகு அவர்கள் கூட்டம் விரைவிற் பெருகியது. மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் ஆடம்பரத்தினின்றும் பணத்திமிரினின்றும் இத்துறவிகள் கூட்டத்தின் எளிமையும் பணிவும் வேறுபட்டுத் துலங்கியதை மக்கள் கவனித்து, அவர்களைப் பெரிதும் ஆதரிக்கலாயினர்.

அதே சமயத்தில் புனிதாத்துமா டாமினிக்[2] என்ற ஸ்பெயின் நாட்டார் மற்றொரு துறவிக்கூட்டத்தைத் திரட்டினூர். போப் இந்த டாமினிகன் துறவிகளுக்கு நாஸ்திகர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கும் 'இன்க்விசிஷன்'[3] என்னும் மத நீதிமன்றத்தை நடத்தும் பொறுப்பை அளித்தார். ஆயினும், கண்டிதமான இந்தக் கறுப்பங்கித் துறவிகள்,[4] சாம்பல்நிற அங்கிகளை அணிந்து சாந்தஸ்வரூபிகளாயிருந்த ப்ரான்சிஸ்கன் துறவிகளைப்போல்,[5] இங்லண்டில் அவ்வளவு செல்வாக்கு பெறவில்லை.

1. Franciscans. 2 St. Dominic. 3. The Inquisition. 4. Black Friars.
5. Grey-robed Franciscans

பத்தாம் அத்தியாயம்

இடைக்காலத்துச் சமூகவாழ்க்கை[1]

§ 42. இடைக்காலத்தினர் மனப்போக்கும் கொள்கைகளும்[2]:—இடைக்காலத்து நாகரிகம் என்பது இதற்குள்ளாக முற்றிலும் உருவாய்விட்டது. அது இக்காலத்து நாகரிகத்தினின்றும் எவ்வகையில் வேறுபட்டிருந்தது என்பதை இப்போது சற்றுக் கவனிப்போம்.

முதலாவதாக, யூரோப்பானது, இப்போதிருப்பதுபோல், சுதந்திரத்துடன் தனிப்பட்டு விளங்கும் அரசாங்கங்களோடு, போர்வன்மையிலும் வாணிபச் செழுமையிலும் ஒருவருக்கு மேல் ஒருவர் முன்னணியில் நிற்கவேண்டுமென்று முயன்று கொண்டிருக்கும் தனி நாகரிகம் பெற்ற நாட்டினர் வாழும் பல நாடுகளாக அக்காலத்தில் பிரிந்ததில்லை. ரோம்[3] நகரத்தின் செழுமை மிக்க நாட்களில் இருந்தபடி, அப்போது, கிரிஸ்துவ உலக[4] முழுமையும் ஒரே கூட்டத்தினர் நாடே என்பதும், அதற்கு அரசியல் விவகாரங்களில் பேரரசரும்[5] மதவிஷயங்களில் போப்புமே[6] தலைவர்களென்பதும் இடைக்காலத்தவர்களது கொள்கைகளாயிருந்தன (§10). பேரரசர் 'தெய்விகமான ரோமன் பேரரசர்'[7] என்று அழைக்கப்பட்டதும், போப் ரோம் நகரத்து பிஷப்பாக இருந்ததும், அந்நகரம் நாகரிக உலகத்தின் நடுநாயகமாக விளங்கியிருந்த பெருமிதமான நாட்களின் ஞாபகச் சின்னங்களேயாம். உண்மையில், இடைக்காலத்துப் பேரரசர்களின் அதிகாரம் அவ்வளவு மிகுதியாகச் செல்லவில்லை. யூரோப் மன்னர்களுள் அவர்கள் முதன்மையான இடத்தை வகித்தார்களேனும், ஜெர்மெனிக்

1. Community Life in the Middle Ages. 2. The Medieval Point of View. 3. Rome. 4. Christendom. 5. The Emperor. 6. The Pope. 7. The Holy Roman Emperor.

கும் இடலிக்கும் வெளியே அவர்களுக்கு யாதொரு உண்மை அதிகாரமும் இருந்ததில்லை. ஆயினும், போப்புகள்மட்டும் கொள்கையிலும் செய்கை முறையிலும் மேற்கு யூரோப் முழுமையும் மக்களின் மதத்தலைவர்களாக இருந்தனர்.

இரண்டாவதாக, பணத்துக்கு இப்போதுள்ள மதிப்பைப்போல் இடைக்காலத்து மக்கள் வாழ்க்கையில் இருந்ததில்லை. அக்காலத்தவர் பிழைத்தது கூலிவாங்கியோ அல்லது வாரம் வாங்கியோ அன்று. வாளைக்கொண்டோ அல்லது மண்வெட்டியாலோ செய்த பணிக்கு ஈடாக அப்போது மானியங்கள் வழங்கப்பட்டன (§ 17). இப்போது அரசர் ஒன்றுபட்ட நாட்டாரின் தனிப்பிரதிநிதியாக மதிக்கப்படுகிறார். அவர் மந்திரிகள் துரைத்தனத்தை நடத்துவதற்கு நாம் வரிகள் கொடுக்கிறோம். அப்போதோ, அரசரே நாட்டிலுள்ள நிலங்களுக்கெல்லாம் மேலதிகாரியற்ற இறைவராயிருந்தார்; அவரிடமிருந்தே எல்லா மானியதார்களும் தங்கள் தங்கள் நிலங்களைப் பெற்றார்கள். வயல்களில் வேலைசெய்யும் சாதாரணமான பண்ணையாட்களுக்கு இராஜபக்தி என்பது அநேகமாகத் தெரியாது. தங்கள் பண்ணையாண்டைகளிடமே[1] அவர்கள் உண்மையான பக்தி[2] கொண்டிருந்தார்கள். யூரோப்பிலுள்ள மற்ற நாடுகளைவிட இங்லண்ட் ஒரு 'தனிநாட்டார் இராச்சியம்'[3] என்னும் நிலையையடையப் பெரிதும் பக்குவப்பட்டிருந்ததென்பது உண்மையே. இங்லிஷ் மன்னரின் அதிகாரம் அவரது சுற்றிவரும் நீதிபதிகள்மூலம் ஷைர் நீதிமன்றங்களிலும் சென்றது. ஆயினும், படைமானியதிட்ட முறைகளே, மற்ற யூரோப்பிய நாடுகளில்போல், இங்லண்டிலும் மக்கள் வாழ்க்கையில் பத்தில் ஒன்பது கூறுகளை உருவாக்கி வைத்திருந்தன.

---

1. The Lord of the Manor. 2. Loyalty. 3. A Nation-state.

§ 43. **பண்ணைவாழ்க்கை[1]:**—இப்போது மக்கள் சுயேச்சையுடன் தங்கள் தங்கள் வாழ்க்கைகளைத் தம்மளவில் தம்முயற்சியோடு நடத்துவதுபோல், இடைக்காலத்தில் நடத்தியதில்லை. அநேகமாக ஒவ்வொருவரும் அப்போது பண்ணை[2], கில்ட்[3] (சங்கம்), மடம்[4] எனப்பட்ட ஏதாவது ஒரு தனிக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

இப்போது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவோ, தமக்குப் பிடித்த தொழிலைத் தேடிக்கொள்ளவோ, எவருக்கும் யாதொரு கட்டுப்பாடுமில்லை. அவரவர்கள் பிழைப்பை அவரவர்களே தேடிக்கொள்ளவேண்டும். தொழிலுக்குக் கூலியும் சொத்துக்கு வாடகையும் வாரமும் அப்போதைக்கப்போது தோன்றும் போட்டியால் தீர்மானிக்கப்பட்டு வருகின்றன. இடைக்காலத்தவர் நிலை முற்றிலும் மாறுபட்டது. இங்லிஷ் மக்களுள் பெரும்பாலர் ஏதாவது ஒரு பண்ணையில் பண்ணைக்குடிகளாகப்[5] பிறந்தவர்களே. அவர்களால் அந்நிலையை மாற்றிக்கொள்ள—வேறு பண்ணைக்குச் சென்று பிழைப்புத்தேடவுங்கூட—அநேகமாக இயலாது. பண்ணைக் குடிகள் பண்ணையைச் சேர்ந்தவர்கள். பண்ணையின் சொந்தக்காரர் அநுமதியின்றி அவர்கள் அதைவிட்டுச் செல்லலாகாது. பண்ணைக்காரர்களும் அநேகமாக அத்தகைய அநுமதிதர இசைவதில்லை. பயிரிட ஆளில்லாவிட்டால் பண்ணைக்கு மதிப்பேது?

பண்ணைக் குடிகளின் வாழ்க்கை தலைமுறை தலைமுறையாக நடைமுறையிலிருந்துவரும் பழக்கவழக்கங்களால் கட்டுப்பட்டதாயிருந்தது. பண்ணை நிலங்களில் வழக்கமாக ஒரே வகைப் பயிரையே ஆண்டுதோறும் விதைக்க வேண்டும். உழுங் கலப்பையும் எருதுகளும் எல்லோருக்கும் பொதுவான

1. Manorial life. 2. Manor. 3. Gild. 4. Monastery. 5. Villeins.

சொத்துக்கள். விதைப்பாடும் அறுவடையும் எல்லோரும் ஒன்று சேர்ந்தே செய்யவேண்டியவை. இவையெல்லாம் 'பண்ணை வழக்க'த்தின்படி[1] நடந்தன. பல பண்ணைகளில் பண்ணைக்குடிகள் தங்கள் தானியங்களைப் பண்ணைக்காரர்களுடைய இயந்திரங்களிலேயே[2] அறைத்துக்கொள்ளவேண்டும்; தங்கள் ரொட்டிகளையும் பண்ணைக்காரர் கிடங்குகளிலேயே சுட்டுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பண்ணைக் குடியும் தன் பண்ணை ஆண்டைக்கு[3] ஈஸ்டர் பண்டிகையின்போது சில முட்டைகளையும், கிரிஸ்மஸ் பண்டிகையின்போது (முடிந்தால்) ஒரு பன்றியையும் கொடுக்கவேண்டும்; அதோடு, ஆண்டு முழுமையும் வாரத்தில் சில நாட்களிலும் சில பருவங்களிலும் ஆண்டையின் நிலத்தில் வேலைசெய்யவேண்டும். பண்ணைக்குடி ஒருவன் இறந்தால், அவனுக்கு விடப்பட்டிருந்த வயல்களையும், கிராமத்தில் அவனுக்கிருந்த நிலையையும் பெறும் அவன் மகனோ தம்பியோ (எவனாயினும்) பண்ணை ஆண்டைக்கு ஒரு எருதையோ பசுவையோ வாரிசு காணிக்கையாகக்[4] கொடுக்கவேண்டும். பண்ணை வழக்கம் பண்ணைக் குடிகளை எவ்விதம் கட்டுப்படுத்தியதோ, அவ்விதமாகவே பண்ணையின் சொந்தக்காரர்களையும் கட்டுப்படுத்தியது. பண்ணை ஆண்டைகள் பண்ணைக்குடிகளைக் கொடூரமாக நடத்த முடியாது. ஏனென்றால், அரைமனத்துடன் வேலை செய்யும் பண்ணைக்குடி உண்மையாக உழைக்கமாட்டான். அவனைப் பண்ணையைவிட்டு ஓட்டிவிடுவதும் எளிதன்று. இந்நிலையைக் கருதும்போது இடைக்காலத்துப் பண்ணைக்குடியின் நிலை இக்காலத்துப் பண்ணைக்கூலியின் நிலையைவிட எவ்வளவோ மேம்பட்டதென்றே சொல்லவேண்டும். அவனைத் தன்

---

1. The Custom of the Manor. 2. Mills. 3. The Lord of the Manor.
4. Heriot.

குடிலைவிட்டுத் துரத்தவோ தொழிலிலிருந்து நீக்கவோ முடியாது. தான் பிறந்த பண்ணையில் தலைமுறைகள் கணக்கில் சில துண்டு நிலங்களைப் பயிரிட்டுப் பண்ணை வழக்கத்தின்படி வாழ அவனுக்கு உரிமை உண்டு. அவ்வுரிமையை எல்லோரும் ஒப்புக்கொண்டிருந்தார்கள்.

§ 44. சங்கங்கள்[1]:—அக்காலத்துப் பட்டணங்களிலும் ஒருமாதிரியான கூட்டவாழ்க்கையைக் காணலாம். மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் நாட்டுப்புறங்களில்தான் வாழ்ந்தார்கள். நார்மன் படையெடுப்பின்போது இங்லண்டில் இருந்தவை ஐந்தாறு பட்டணங்களே. அவற்றிலும், ஒரு நூற்றுக்கும் குறைந்த தொகையினரே நிலையாக வாழ்ந்தனர். ஆயினும், நாளடைவில் முதலாவது இரண்டாவது ஹென்றிகளின் வன்மைமிக்க ஆட்சியின் பலனாக ஏற்பட்ட சட்ட ஒழுங்கும் அமைதியும் நாகரிக வளர்ச்சியைத் தூண்டின. ஆகவே, அக்கம்பக்கத்தாருடன் பண்டமாற்றல் செய்துகொண்டதோடு நில்லாமல், பொருள்களைப் பெருக்கிப் பணத்துக்கு விற்கவும் மேலும் மேலும் மக்கள் முன்வந்தனர். அவ்விதமாகவே சந்தைப்பட்டணங்கள்[2] தோன்றலாயின. அவை அநேகமாக மன்னரின் சொந்த நிலங்களிலேயே தோன்றினமையால், அவருக்குப் படைமானிய திட்டத்தின்படி செலுத்த வேண்டிய இறைப்பணங்களுடன்[3] சந்தைவரிகளையும்[4] செலுத்திவந்தன.

ஆயினும், மன்னரின் ஷெரிப் வருஷத்தில் மூன்று நான்குமுறை வந்து நகரவாசிகளுள் ஒவ்வொருவரின் அலுவல்களையும் விசாரித்து வரி தண்டிக்கொண்டுபோகும் பழக்கம் பலருக்கும் தொந்தரவளித்தது. ஆகவே, அவர்கள் தங்

1. The Gilds. 2. Market Towns. 3. Feudal dues. 4. Market tolls.

களுக்கு ஒரு உரிமைப்பத்திரத்தினை[1] வழங்கும்படி முறை யிட்டுக்கொள்ளலாயினர். எல்லா நகரவாசிகளுக்காகவும் மொத்தத்தில் ஒரு நிலையான தொகையை நகரத்தின்பேரால் செலுத்திவிடலாமென்றே அப்பத்திரங்களில் பெரும்பான் மையன கூறின. அத்தொகையைச் சேகரிக்கவும், அதற்காக ஒவ்வொரு நகரவாசியிடமிருந்தும் எவ்வளவு வசூலிப்பதென் பதைத் தீர்மானிக்கவும், அவர்கள் தங்களுள் 'மேயர்' என்னும் நகரத்தலைவரையும் ஒரு ஆட்சிசபையையும் தேர்ந்தெடுத் துக்கொண்டனர். அப்படியே பட்டணங்களில் கூட்டாட்சி நிலை[2] ஏற்படலாயது.

மேலும், அநேக பட்டணங்களில் 'வணிகர் சங்கம்'[3] ஒன்று இருந்தது. அதில் அப்பட்டணவாசிகளுள் முக்கியஸ் தர்கள் அங்கத்தினர்களா யிருந்தனர். அச்சங்கம், வியாபார முறையில் விற்கும் பொருள்களும் வாங்கும் பொருள்களும் நல்ல தரமானவைகளாக இருக்கும்வண்ணம் பார்த்துக் கொள்ள உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தது ; அங்கத் தினர்களுக்கும் அங்கத்தினர்களிடமிருந்தும் சேரவேண்டிய கடன்களைத் தண்டியது ; விலைகளையும் கூலிகளையும் திட்டஞ் செய்தது. ஒரு பொருளுக்கோ ஒரு வேலைக்கோ எவ்வளவு வாங்க முடியுமோ அவ்வளவையும் கேட்க ஒவ்வொருவனுக் கும் உரிமை உண்டு என்னும் இக்காலத்துக் கொள்கை அக் காலத்தவர்களுக்கு நியாயமாகப்படவில்லை. எவனுடைய வேலைக்கும் பொருளுக்கும் ஒரு நியாயமான விலையுண்டு என் பது அவர்கள் கொள்கை. பஞ்சகாலத்தையோ, பொருள் அதிக மாகக் கிடைக்காத நிமித்தத்தையோ பயன்படுத்திக்கொண்டு அதிக விலை கேட்பது கிரிஸ்துவ தர்மத்துக்கு ஏற்றதல்ல வென அவர்கள் நினைத்தார்கள்.

1. Charter. 2. Corporate existence. 3. Merchant Gild.

வணிகர் சங்கங்களோடு தொழிற் சங்கங்களும்[1] அக்காலம் தோன்றலாயின. ஒரே தொழிலில் ஈடுபட்டிருந்த நகரவாசிகள் அனைவரும் (மீன் விலைஞர், தையற்காரர், தட்டார் முதலியோர்) அத்தொழிலில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் ஊதியங்களையும் பாதுகாத்துக்கொள்ள ஒரு சங்கமாகச் சேர்ந்தார்கள். ஒரு தொழில்வல்லோனிடத்தில் முதலில் தொழில்மாணவனாகவும்[2] அப்பால் நாட்கூலியாளனாகவும்[3] சில வருஷங்களிருந்த பிறகே எவனும் அத் தொழிலின் சங்கத்தில் சேர்க்கப்பட்டு அத் தொழிலைச் செய்யத் தொடங்கலாம். தேவைக்கு அதிகமாகப் பொருள்களைச் செய்து விடாதபடி திட்டப்படுத்த, சங்க அங்கத்தினர் எவரும் இத்தனை தொழில்மாணவர்க்குமேல் எடுத்துக்கொள்ளக்கூடாதென்ற ஒரு வரையறை இருந்தது. அம்மாணவர்களை எவ்விதம் நடத்தவேண்டுமென்றும் சங்கம் திட்டப்படுத்தியது. மேலும், ஒவ்வொரு சங்கமும் சமநிலையிலுள்ளவர்களின் கூட்டமாயிருந்தபடியால், அதன் அங்கத்தினர் அந்நியோந்நியமாகப் பழகி, விருந்து முதலியவைகளில் கூடியும், இடருற்றபோது ஒருவருக்கொருவர் துணைநின்றும், தங்களிடையே கூட்டுறவினைப் பெருக்கிக்கொண்டனர். அவர்கள் ‘சான்ட்ரி’[4] என்னும் சிறு கோவில்களைக் கட்டி, அவற்றில் தங்கள் தங்கள் தொழிலின் பாதுகாப்புக்கான புனிதாத்துமாக்களின்[5] பேரால் துதி முதலியன செய்துகொண்டும் வந்தனர்.

§ 45. மடங்கள்[6]:—துறவிகள் கூட்டங்கள் கூட்டவாழ்க்கைக்கு மற்றோர் உதாரணமாகின்றன. புனிதாத்துமா பெனிடிக்ட்[7] பழக்கிவிட்ட ‘மங்க்ஸ்’[8] என்னும் துறவிகள் கூட்டத்தைப்போல் பிற்காலத்தில் பல தோன்றின. அவை கூட்

1. Craft Gilds. 2. Apprentice. 3. Journeyman or Wage-worker. 4. Chantry. 5. The Patron Saints of their Crafts. 6. Monasteries. 7. St. Benedict (§ 7). 8. Monks.

டத்துக்குக் கூட்டம் சில்லரை விஷயங்களில் மாறுபட்டுத் தனித்தனி விதிகளையும் திட்டங்களையும் வகுத்துவைத்துக் கொண்டிருந்த போதிலும், கூட்ட வாழ்க்கை நடத்துவதில் எங்கும் ஒரேமாதிரியா யிருந்தன.

வாழ்க்கையில் உயர்ந்த நிலையிலுள்ளவர்கள் தாங்கள் செய்யும் பாபங்களுக்குக் கடவுள் மன்னிப்பைப் பெறுவதற் காகத் தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியை மதஸ்தாபனத் துக்குக் கொடுப்பது வழக்கம். அதில் பெரும்பாகத்தை மடங்களே பெற்றன. ஸ்டீபென் காலத்துக் கலவரத்தின் போதுகூட, யார்க்ஷைரிலுள்ள பௌன்டன்ஸ்,[1] வை[2] யாற்றங்கரையிலுள்ள டின்டெர்ன்[3] முதலிய கம்பீரமிக்க மடாலயங்கள் கட்டப்பட்டன. அநேகமாக மடத்துக்கட்டடங் கள் நாற்கோணமாக ஒரு முற்றத்தைச் சுற்றியே அமைந் திருந்தன. அதன் ஒரு பக்கத்தில் மடத்துத் துறவிகள் தினம் ஆறு அல்லது எட்டுதரம் கடவுள் வணக்கத்துக்குக் கூடும் பெரிய கோவில் இருந்தது. அதற்கு நேர் எதிர்ப்பக்கம் மடப்பள்ளிகளும் சாப்பாட்டுக் கூடங்களும்[4], அவற்றின்மேல் உறங்கும் கூடங்களும்[5] இருந்தன. கிழக்குப் பக்கத்தில் மடத்தின் விவகாரங்களைப் பேசி முடிவுகட்டும் 'சாப்டர் ஹௌஸ்'[6] எனப்படும் கூட்டமண்டபம் இருந்தது. மேற் குப் பக்கத்தில், இன்னும் துறவிகள் நிலைக்குப் பக்குவமடை யாமல் கீழ்வேலைகளைச் செய்துகொண்டிருந்தவர்களின்[7] இருப்பிடங்கள் இருந்தன. ஆயினும், முற்றத்தைச் சுற்றி லும் அமைந்திருந்த 'க்ளாய்ஸ்டர்'[8] எனப்படும் தாழ்வாரத் தில்தான் மடத்தைச் சேர்ந்தவர்கள் பகலின் பெரும்பாகத் தைக் கழித்தனர். அங்கேதான் துறவிகள் படித்தனர்;

1. Fountains. 2. The Wye. 3. Tintern. 4. Refectory. 5. Dormitory.
6. Chapter House. 7. The Lay Brethren. 8. Cloisters.

சுவடிகளின் பிரதிகளை எழுதினர்; நிகழ்ச்சிக் குறிப்புக்கள்[1] வரைந்தனர்; துறவிகளாகும் நோக்கத்துடன் மடத்தைச் சூழ்ந்த கிராமங்களில் வசித்து வந்த பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தனர். மடத்து வருவாயில் பெரும்பாகம் ஏழைகளுக்கு ஆதரவு அளிப்பதிலும் வழிப்போக்கர்களுக்கு உணவளிப்பதிலும் செலவாயின. சில மடாலயங்களில் துறவிகள் ஒவ்வொரு நாளும் கட்டடங் கட்டுதல், பயிரிடுதல், தோட்ட வேலை செய்தல் முதலியவற்றில் சிறிது காலம் போக்கினர்கள். மடத்துத் துறவிகளே தங்கள் தலைவரைத்[2] தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவரை அரசராவது போப்பாவது அங்கீகரிக்கவேண்டும். ஒரு பெரிய மடத்தின் தலைவர் நாட்டில் மிகப் பெரிய மனிதர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். அவர் ஏராளமானசொத்துக்களை நிருவகிக்கவேண்டும். 'பாரன்'[3] என்னும் பிரதம மானியதாரைப்போல் மடாதிபதியும் 'க்ரேட் கௌன்சில்'[4] எனப்படும் பெரிய ஆலோசனை சபைக்கு வரவேண்டும். 'பிரையர்'[5] எனப்பட்ட துணைத்தலைவரும், 'ஸாக்ரிஸ்டன்'[6] எனப்பட்ட ஆலய மணியக்காரரும், 'ப்ரிசென்டர்'[7] எனப்பட்ட பாட்டு கோஷ்டியின் முதல்வரும், 'ஸெல்லரர்'[8] எனப்பட்ட உக்கிராண பொறுப்பாளியும் மடாதிபதிக்குக் கீழ்ப்பட்ட பொறுப்பாளிகள்.

§ 46. பல்கலைக் கழகங்கள்[9]:—இடைக்காலத்தில் மற்றொரு வகையான கூட்ட வாழ்வும் தோன்றியது. பல நூற்றுண்டுகளாகக் கல்வியைப்பற்றி எல்லோரும் அசட்டையாயிருந்தனர். ரோமன் பேரரசின்[10] கீழிருந்த மக்களனைவருக்கும் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தும், அது சிதைந்த பிறகு தோன்றிய இருண்ட காலத்தில்[11] அநேகமாக எவருக்கும்

1. Chronicles. 2. Abbot. 3. Baron. 4. The Great Council. 5. Prior. 6. Sacristan. 7. Precentor. 8. Cellarer. 9. Universities. 10. The Roman Empire. 11. The Dark Ages.

படிக்கத் தெரியாதிருந்தது. மடாலயங்களிலிருந்த பள்ளிக் கூடங்களிலும், குருக்கள் வேலைக்குத் தயாராகும் ஆட்களைக் கோவில் சடங்குகளைச் செய்வதற்குமட்டும் பழக்கப் படுத்தினரே ஒழிய, அதற்குமேல் யாதொரு அதிக படிப்பும் சொல்லிக்கொடுத்ததில்லை. சிலுவைப் படையெழுச்சிகளின் போதும் ஸ்பெயினிலும்(§10) முகம்மதியரைச் சந்தித்த போதே கிரிஸ்துவர்கள் தங்கள் மௌடிகத்தை உணரலானார் கள். அரபியர் தத்துவம், கணிதம், வைத்தியம், வான சாஸ்திரம் முதலியன பயின்றிருந்த காலத்தில், கிரிஸ்துவ உலகத்தாருக்கு[1] அவைகளின் பெயர்களே தெரியா. பன் னிரண்டாம் நூற்றாண்டில் யூரோப்பிலும் அவைகளைக் கற்க லாயினர். அக்காலம் அவைகளைக் கற்கக்கூடிய எழுத்து வாசனை உடையவர்கள் குருமார்களாகவே இருந்ததால் அக் கலைகள் மதஸ்தாபனத்தினராலேயே பயிலப்பட்டு விருத்தி யடைந்தன.

படிப்பில் மீண்டும் கிளைத்த இவ்வார்வத்தின் பயனாகப் **பல்கலைக் கழகங்கள்**[2] தோன்றலாயின. இவை அக்காலத் துக்குப் பழைய உலகத்திலில்லாத ஒரு புதுமையே. இப் போதுபோல் அப்போதும் பல்கலைக் கழகங்கள் கற்பிப் போரும் கற்போரும் சேர்ந்து கூட்ட வாழ்வு நிகழ்த்தும் சமூகங்களாகவே[3] இருந்தன. இடைக்காலத்தில் கற்றவர் களெல்லாம் லாடின்[4]மொழி பேசியதால், கற்க விரும்பிய மாணவர்கள் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து மற்றொரு பல் கலைக் கழகத்துக்குப் போக முடிந்தது. முதல் முதல் போலோன்யா[5]விலும் பாரிஸிலும்[6] அவை நிறுவப்பட்டன. இரண்டாம் ஹென்றி காலத்தில் பாரிஸிலிருந்த சில இங்லிஷ்

---

1. Christendom. 2. Universities. 3. Corporate Bodies. 4. Latin. 5. Bologna. 6. Paris.

மாணுக்கர்கள் இங்லண்டுக்கு வந்து ஆக்ஸ்பார்டில்[1] ஒரு பல்கலைக் கழகத்தைத் தொடங்கினார்கள். பிறகு அவர்களுள் சிலர் கேம்பிரிட்ஜுக்குப்[2] போய் அங்கு ஒரு போட்டிக் கழகத்தை நிறுவினார்கள். அக்காலத்து மாணுக்கர்கள் இக்காலம் கல்விப்பட்டங்களுக்குப் படிக்கும் மாணுக்கர்களைவிட[3] இளையவர்களே. அவர்கள் வழக்கமாகச் சுமார் பதினான்கு வயதில் சேர்ந்து, ஏழாண்டுகள் படித்துப் பட்டம் பெற்றார்கள். படித்தல் பெரிய மனிதர்கள்[4] கண்ணியத்துக்கு இழுக்காகும் என்னும் கொள்கை அக்காலம் அதிகமாகப் பரவியிருந்ததால், அம்மாணுக்கர்கள் பெரும்பான்மையும் வணிகர் மக்களாகவும் உண்டான குடியானவர்களின்[5] மக்களாகவுமே இருந்தனர். அம்மாணுக்கர்களெல்லாம் மதஸ்தாபனத்தின்கீழ்ப்படிகளில் இருப்பவர்களாகக் கருதப்பட்டதால்,[6] அவர்கள் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் உரிமைகளைப்[7] பெற்றிருந்தார்கள் (§ 30). ஆயினும், முதலில் பல்கலைக் கழகங்களுக்கெனத் தனிக் கட்டடங்கள் இல்லாததால், அவர்கள் வழிப்போக்கர்களுக்கு வைத்திருந்த பொது உண்டிச்சாலைகளில்[8] வசித்தார்கள்.

---

1. Oxford. 2. Cambridge. 3. Undergraduates. 4. 'Gentlemen.' 5. Well-to-do 'freemen.' 6. In Minor Orders. 7. Benefit of Clergy. 8. Taverns.

முதற் பகுதிக்கான சில குறிப்புகள்

(1066-1272)

இங்லண்ட் மன்னர்கள்

நார்மன் மன்னர்கள்

முதல் வில்லியம் (‘வெற்றி மன்னர்’) :
1066-1087
இரண்டாம் வில்லியம் (‘செந்தலையர்’) :
1087-1100
முதல் ஹென்றி (‘நல்ல எழுத்தாளர்’) :
1100-1135
ஸ்டீபென் (‘ப்ளவா கௌன்ட்’) :
1135-1154

ஆஞ்சவின் மன்னர்கள்

இரண்டாம் ஹென்றி (‘ஆஞ்சு கௌன்ட்’) :
1154-1189
முதல் ரிச்சர்ட் (‘சிங்க நெஞ்சினர்’) :
1189-1199
ஜான் (‘நாடற்றவர்’) : 1199-1216
மூன்றாம் ஹென்றி : 1216-1272

யூரோப்பிய அதிபதிகளுள் முக்கியமானவர்கள்

போப்புகள்

ஏழாம் க்ரீகோரி (‘ஹில்டிபிராண்ட்’) : 1073-1085 (§ 21)
மூன்றாம் இன்னொசென்ட் : 1198-1216 (§§ 35-36)

இந்தப் போப்புகள் போப்புப் பதவிக்குள்ள அதிகாரத்தையும் செல்வாக்கையும் மிகுதியாகப் பெருக்கிக்கொண்டு நில மன்னர்களும் போப்புக்குக் கீழ்ப்பட்டவர்களே என்றார்கள்.

பேரரசர்கள்

நான்காம் ஹென்றி : 1056-1106
ஐந்தாம் ஹென்றி: 1106-1125 (மடில்டாவின் கணவர், §27)

முதல் ப்ரெடெரிக் ('பார்பரோசா') ; 1152-1190 (சிலுவைப் போரில் இறந்தார், § 33).

இரண்டாம் ப்ரெடெரிக் ('உலக ஆச்சரியம்'[1]) : 1215-1250.

இப்பேரரசர்களுக்கும் போப்புகளுக்கும் தங்கள் தங்கள் பதவிகளே உயர்ந்தவை என்ற பெரும் போராட்டம்.

ப்ரான்ஸ்

இரண்டாம் பிலிப் ('கண்ணியமிக்கவர்'[2]) 1180-1223 (§§ 33-36, கு. 25)

ஒன்பதாம் லூயி ('புனிதாத்துமா லூயி'): 1226-1270 (§ 39.)

ப்ரான்ஸ் அரசின் வன்மையைப் பெருக்க இம்மன்னர்கள் மிகுதியும் பாடுபட்டார்கள்.

குறிப்பு 8 : முதல் வில்லியம் இங்லண்டை வென்றதற்கு அநுகூலமாயிருந்த காரணங்கள்

(1) எதிர்க்காற்றுகளால் வில்லியமுக்குக் கடலேக் கடக்கத் தடை யேற்பட்டதால், ஹரால்ட் தம் பிரபுக்களேயும் காலாட்களேயும் அறுவடைக்காக அவரவர்கள் ஊர்களுக்கு அனுப்பிவிட்டார்.

(2) இங்லண்டின் அதிமுக்கிய பாகமாகிய வெசெக்ஸ் பிரிவின் சிறந்த போர்வீரர்கள் அனைவரும் அரசரின் மெய்க்காவற் படையினர்[3] அனைவரும் ஹேஸ்டிங்ஸ் போரில் மாண்டனர்.

(3) எதிரிகளைத் தாக்குவதில் இங்லிஷ் மக்கள் ஒத்துழைக்கவில்லை.

கான்யூட் காலம் தொடங்கி இங்லண்ட் ஒருவிதமான தனி அந்தஸ்து பெற்ற ஏர்ல் நாடுகளாகப் பிரிந்திருந்தது. மெர்சியா ஏர்ல் ஆகிய எட்வினும் நார்தம்பிரியா ஏர்ல் ஆகிய மார்க்காரும் பொறுமையால் ஹரால்டை ஆதரிக்கவில்லை. எல்லாம் முழுகிப்போனபிறகு அவர்கள் வில்லியத்தை எதிர்த்து நிற்க முயன்று தோற்றனர்.

(4) இங்லிஷ்மக்கள் காலாட்களாகப் போரிட்டதால் அவர்களால் நார்மன் குதிரைவீரர்களைத் தாக்கிவீழ்த்த முடியவில்லை. அவர்கள் வில்வித்தையும் பழக்கக்குறைவால் க்ஷீணித்திருந்தது.

1. Stupor Mundi. 2. Augustus. 3. Huscarls.

கு. 9 : இங்லண்டை நார்மானியர் கைப்பற்றியதால் அங்குப் படைமானிய திட்டம் அந்தப்பட்ட விதம்

இங்லண்டில் படைமானிய ஏற்பாடு ஏதோ ஒழுங்கற்ற வகையில் தோன்றியிருந்தது. நார்மானியர் அதைச் சில பழக்க வழக்கங்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்ட ஒரு ஒழுங்கான முறையில் வகுத்து வைத்திருந்தனர். அவ்வொழுங்கான முறையினை அவர்கள் இங்லண்டில் புகுத்தினர்.

மேலும், வில்லியம் புது ஒழுங்கை அமைக்கவேண்டியநிலையிலிருந்ததால், யூரோப்பில் படைமானிய திட்டத்தினால் ஏற்பட்ட தீமைகள் (ஒருவிதமான தனி அந்தஸ்து பெற்ற பிரபுக்கள் அரசர் அதிகாரத்தைப் புறக்கணித்து ஒருவரோடொருவர் போராடிக் கொண்டிருத்தல்) இங்லண்டில் நேராதவாறு பார்த்துக்கொள்ள அவரால் முடிந்தது.

அதுமுதல் படைப்பணிக்காகவே நிலங்கள் மானியங்களாக விடப்பட்டன ; பணிகளும் இறைப்பணங்களும்[1] இந்த இந்த வகையில் எவ்வெப்போது செலுத்தப்படவேண்டும் என்று திட்டப்படுத்தப்பட்டன. பிஷப்புகளும் மடத்தலைவர்களுங்கூட மதஸ்தாபனத்துக்கு விடப்பட்டிருந்த மானியங்களுக்காக படைப் பணிக்கு ஏற்பாடுசெய்ய வேண்டும்.

இனி, ஒருபுறம் பிரபுக்களும் அவர்கள் போர்வீரர்களும், மற்றொருபுறம் பயிர் செய்யும் உழவர்களும் ஆக நாட்டு மக்கள் பிரிந்து வாழலாயினர். இதனால் சுயேச்சை பெற்றிருந்த இங்லிஷ் குடியானவர்கள் பலர், தங்கள் கிராம நிலங்களெல்லாம் மானியப் பண்ணைகளில் அடங்கிவிட்டதால், 'பண்ணைக்குடிக'ளாக[2] மாறினர். பண்ணைக்குடிகளாக அவர்களுக்குச் சில தனி உரிமைகள் ஏற்பட்டதைக் குறித்து நார்மன் மானியதார்கள் கவலைப்படவில்லை. மேலும், ஆள்வோர் நிலையிலுள்ள போர்வீரர் வகுப்பினரும் ஆளப்படுவோர் நிலையிலுள்ள பயிரிடுவோர் வகுப்பினரும் பேசும் மொழிகளிலும் வேறுபட்டிருந்தனர்.

கு. 10 : லான்ப்ரான்க்[3] (1005—1089)

இவர் இடலியில் பிறந்து நார்மண்டியிலுள்ள காங்[4] மடத் தலைவராகப் பெயரெடுத்தவர்.

1. Services and Dues. 2. Villeins. 3. Lanfranc. 4. Caen.

முதல் வில்லியம் (போப்பிடம் அதிக பணிவுள்ளவர்) இங்லண்டைக் கைப்பற்றினுல் இங்லிஷ் மதஸ்தாபனத்தைச் சீர்திருத்தியமைப்பதாக உறுதிகூறியிருந்தார். ஆகவே, அவர் ஒழுங்கற்ற முறையில் ஆர்ச்பிஷப்பாக நியமனமாயிருந்த ஸ்டிகண்டை[1] நீக்கிவிட்டு அப் பதவிக்கு லான்ப்ரான்க்கை நியமனஞ் செய்தார்.

லான்ப்ரான்க் இங்லிஷ் மதஸ்தாபனத்தில் 'ஹில்டிபிராண்ட் சீர்திருத்தங்க'ளைப் புகுத்தினுர்(§ 21): திறமைமிக்க நார்மன் பிஷப்புகளையும் மடத்தலைவர்களையும் நியமித்தார்; மடாலயங்களையும் தேவாலயங்களையும் கட்டும்படி தூண்டினுர்.

அவருக்கு வில்லியத்திடம் அதிக செல்வாக்குண்டு. ('அவர் தம் நண்பராக மதித்து நடத்தியது இவர் ஒருவரையே'). வில்லியம் யூரோப்புக்குப் போயிருந்தபோது லான்ப்ரான்க்கே இங்லண்டில் இராச்சியப் பாதுகாப்பாளராக[2] இருந்தார்.

லான்ப்ரான்க்கை உயரிய கொள்கைகளையுடைய புனிதாத்துமாவாக மதிப்பதற்கில்லையாயினும், அவர் அநுபவமுதிர்ந்த அரசியல் நிபுணர் என்பது வெளிப்படை. பிஷப்புகளை நியமிக்கத் தமக்குத்தான் உரிமையுண்டென்று போப் கூறியதை அரசர் மறுத்தபோது, லான்ப்ரான்க் அரசரையே ஆதரித்தார்.

கு. 11: ப்ளாம்பார்ட்[3] (இ. 1128)

இரண்டாம் வில்லியத்தின் தலைமை அமைச்சர் (ஜஸ்டிஷியார்) டாரம் பிஷப்பாக நியமிக்கப்பட்டார். அரசரின் ஊதாரி வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைத் திரட்டித்தருவதே அவரது முக்கிய நோக்கம். படைமானிய திட்டத்தின்கீழ் வரவேண்டிய இறைப்பணங்களைத் தந்திரமாகப் பெருக்கி வசூலித்தார்.

பிரபுக்களிடையே வயதடையாத ஆண்வாரிசுகளின் சொத்துக்களிலிருந்தும், கலியாணமாகாத பெண்வாரிசுகளின் சொத்துக்களிலிருந்தும் வரும் வருமானத்தை விடாமல் அவர் அரசருக்கு வசூலித்துக் கொடுத்தார்.

மதஸ்தாபனத்தில் காலியாயிருந்த ஆதீனங்களின்[4] வருமானத்தை அரசரே அடையும் வண்ணம் அவ்வாதீனங்களை நெடுங்காலம் காலியாகவே வைத்திருந்தார்.

இக்காரணங்களால் அவரைப் பலரும் வெறுத்தனர். முதல் ஹென்றி சிம்மாசனமேறியதும் ப்ளாம்பார்டைச் சிறையில்

1. Stigand. 2. Regent. 3. Flambard. 4. sees.

வைத்தார். அதிலிருந்து தப்பி அவர் யூரோப்புக்கு ஓடிவிட்டார். பிறகு ஹென்றி அவரை டராம் பிஷப் ஆதீனத்துக்கு மறுபடியும் அனுப்பிவைத்தார்.

கு. 12 : புனிதாத்துமா ஆன்செல்ம் (1033-1109)

லான்பிரான்க்கைப்போல் இவரும் இடலியில் பிறந்து நார்மண்டியில் ஒரு மடத்தின் தலைவராக இருந்து, கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் ஆனவர். ஆயினும், லான்பிரான்க்கைப்போல் இவர் அரசியல் நிபுணரல்லர்; கலைவல்லாராகவும் தூயமனத்தின ராகவும் இவர் புகழ் பெற்றார்.

இறந்துவிடுவோம் என்ற பயத்தினால் 'செந்தலை' மன்னர் இவரை ஆர்ச்பிஷப் ஆக்கினார். மடாலயத்தின் அமைதியான வாழ்க்கையை விரும்பிய ஆன்செல்ம் இப்பதவியை ஏற்கத் தயங்கினார். ஆயினும், மதவிஷயங்களில் அவருக்கிருந்த மட்டற்ற ஆர்வம், சாந்த குணத்தோடு ஒதுங்கியிருக்கும் இயல்பினையுடைய அவருக்கும், மதஸ்தாபனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க ஒருவகையான இரும்புறுதியையும் எதிர்பாராத் துணிச்சலையும் அளித்தது.

இரண்டாம் வில்லியம் கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் பதவி காலியாயிருந்தபோது அதன் ஆதீனத்திலிருந்து பெற்ற பொருள்களைத் திருப்பிக்கொடுக்க மறுத்ததால், ஆன்செல்ம் அவரோடு சச்சரவிட்டு யூரோப்புக்கு ஓடிவிட்டார்.

பிஷப் பதவிக்குரிய சின்னங்களை அளிக்கத் தமக்கே உரிமை உண்டென்று முதல் ஹென்றி கூறியபோது, ஆன்செல்ம் அவரை எதிர்த்து வாதாடி மீண்டும் யூரோப்புக்கு ஓடிப்போனார்(§26). 'பெக் சமாதானத்'தால்[1](1107) இவ்வாதம் முடிவுற்றது. அதன்படி, அரசர் பிஷப்புகளுக்குப் பதவிச்சின்னங்களை[2] அளிக்க அருகரல்லர் என்றும்; ஆயினும், பிஷப்புகள் தங்கள் ஆதீனத்தைச் சேர்ந்த நிலங்களுக்காக அரசருக்கு இறைவணக்கஞ்[3] செய்யவேண்டும் என்றும் தீர்மானமாயிற்று.

கு. 13 : நார்மன் மன்னர்கள் காலத்தில் இங்லண்டுக்கும் ஸ்காட்லண்டுக்கும் இருந்த சம்பந்தம்

மால்கோம் கான்மோர்[4] (1057-1093) எட்கார் அதெலிங்கின் தங்கையான மார்கரெட்டை மணந்தார். நார்மானியர் ஆட்சியை எதிர்த்து அவர் பன்முறை படையெடுத்து வந்தார்.

---

1. Compromise of Bec. 2. insignia of office. 3. homage.
4. Malcolm Canmore.

அப்படையெழுச்சிகளுள் ஒன்றின்போது அவர் டேனியரோடு சேர்ந்தார். அப்போதுதான் வில்லியம் வடநாடுகளை அழித்தார்[1].

இப்பகைமையை நீக்கவும் இங்லிஷ் மக்களைத் திருப்திசெய்யவும் முதல் ஹென்றி மால்கோம் கான்மோரின் மகளான எடித்தை[2] மணந்தார்.

முதல் டேவிட் (1124-1153) ஸ்டீபென் காலத்தில் தமது மைத்துனியாகிய 'பேரரசி'யின்[3] சார்பாக (§27) இங்லண்டின்மீது படையெடுத்து வந்தவர் நார்தாலர்ட்டனுக்கு[4] அருகில் நடந்த **கொடிப்போரில்**[5] (1138) யார்க் ஆர்ச்பிஷப்பால் திரட்டப்பட்டு டராம் பிஷப்பால் நடத்திச் செல்லப்பட்ட சேனைகளால் தோல்வியடைந்தார். ஆயினும், அதற்கப்பால் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி, ஸ்டீபெனிடமிருந்து டேவிட் நார்தம்பர்லண்டைப் பெற்றார்.

டேவிடுக்குப்பின் ஆண்ட நான்காம் மால்கோம் நார்தம்பர்லண்டை இரண்டாம் ஹென்றிக்குத் திருப்பிக்கொடுத்துவிட்டார்.

கு. 14 : முதல் வில்லியம், இரண்டாம் வில்லியம், முதல் ஹென்றி இவர்களை இயல்பிலும் நோக்கங்களிலும் ஒப்பிடல்

மூவரும் திட நெஞ்சினராய்ப் பிரபுக்களை அடக்கியாள உறுதிகொண்டிருந்தனர்.

வாழ்க்கையளவில், **முதல் வில்லியம்** நேர்மையும் மதப்பற்றும் கண்டிதமும் நிறைந்தவர்; **இரண்டாம் வில்லியம்** நேர்மையற்ற தூர்த்தர்: இறந்து விடுவோம் என்னும் பயமில்லாதபோது தெய்வத்தைத் தூற்றும் நாஸ்திகர்; **முதல் ஹென்றி** தந்திரமும் அயோக்யதையும் நிறைந்தவரேனும், தம் அண்ணனைப் போன்றில்லாது, வெளிவரைக்குமேனும் ஒழுங்காக நடந்துகொண்டார்.

அரசியலில், **முதல் வில்லியம்** தாம் வென்ற நாட்டின்மீது தம் பிடியைப் பலப்படுத்தவே பெரிதும் பாடுபட்டார்; **இரண்டாம் வில்லியம்** இன்பமாகக் காலங்கழிப்பதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக்கொள்ளவே அரசியல் விஷயங்களில் தலையிட்டார்; துரைத்தனத்தில் ஒழுங்கேற்படுத்துதலே **முதல் ஹென்றியின்** மனத்துக்குகந்த பொழுதுபோக்காயிருந்தது (§25).

---

1. 'The Harrying of the North.' 2. Edith. 3. 'The Empress'.
4. Northallerton. 5. 'The Battle of the Standard.'

அவர்கள் அனைவரும் சட்ட அறிவு நிறைந்தவர்கள். உயர்குலங்களைச் சேர்ந்த நார்மானியருக்கே சட்ட உணர்ச்சி அதிகம். 'செந்தலை' மன்னர்கூடப் படைமானிய ஏற்பாட்டின் சட்டதிட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்தொழுகியதாகப் பெருமை பாராட்டிக்கொண்டார் : அதாவது, அவற்றைக்கொண்டு எவ்வளவு லாப மடையலாமோ அவ்வளவையும் அடையவே அவர் முயன்றார்.

கு.15 : படைமானிய திட்டத்துப் பரிபாஷை விளக்கம்

உதவிப்பணங்கள்[1]: அதிபதியின் மூத்த பிள்ளையை நைட் ஆக்கும்போதும், அவர் மூத்த மகளின் கலியாணத்தின் போதும், அவர் சிறைபடும்போது அவரை விடுவிக்கவும் அவரது மானியதார்கள் செலுத்தும் தொகைகள்.

பண்வணக் காரியக்கார்[2]: ஒவ்வொரு பண்ணையிலும் பண்ணைக்குடிகள் அவரவர் பணிகளைச் செய்து செலுத்தவேண்டியவைகளைச் செலுத்துமாறு பார்த்துக்கொள்ளும் கண்காணிப்பு உத்தியோகஸ்தர்.

இலவச வேலை[3]: அறுவடை முதலிய காலங்களில் ஆண்டை நிலத்தில் பண்ணைக்குடிகள் செய்யவேண்டிய இலவச வேலை.

ஆண்டை நிலம்[4]: ஒவ்வொரு பண்ணையிலும் ஆண்டைக்காகப் பயிரிடப்படும் நிலம்.

குரு மானியம்[5]: ஒரு பண்ணையில் குருவுக்காக விடப்பட்ட நிலம்.

வாரிசு காணிக்கை[6]: பண்ணைக்குடிகளின் வாரிசுகள் சொத்துரிமை பெறும்போது பண்ணையாண்டைக்குக் காணிக்கையாகச் செலுத்தும் எருது முதலியன.

இறைவணக்கம்[7]; ஆண்டைக்கு ஆணையிட்டு உறுதி பகரும் சடங்கு.

நைட் மானியம்[8]: படைப்பணிக்கு ஒரு குதிரைவீரரை அனுப்புவதற்கான சொத்து; பெரும்பான்மை இது ஒரு பண்ணையா யிருக்கும்.

பண்வண[9]; தன்னளவில் வேண்டிய வசதிகளைப் பெற்றுள்ள நிலச்சொத்து; பெரும்பான்மையும் பரந்த நிலங்களையும் அவற்றைப் பயிரிடும் பண்ணைக்குடிகளையும் கொண்டுள்ள ஒரு கிராமம்.

கீழ் (அல்லது, 'இடைப்பட்ட') மானியதார்[10]: நேராக மன்னரிடமல்லாது ஒரு பிரதம (அல்லது 'மேல்') மானியதாரிடமிருந்து நிலங்களைப் பெற்றவர்.

ஊராண்மைக்காரர்[11]: கிராம விவகாரங்களைக் கண்காணிப்பதற்காகக் கிராமத்தார் தேர்ந்தெடுக்கும் அதிகாரி.

---

1. Aids. 2. Bailiff. 3. Boon-work. 4. Demesne. 5. Glebe. 6. Heriot. 7. Homage. 8. Knight's Fee. 9. Manor. 10. Mesne Tenant. 11. Reeve.

வாரிசு இறை[1]: மானியதாரின் வாரிசுகள் சொத்துக்களைப் பெறும்போது கொடுக்கவேண்டிய தொகை.

சேடயப்பணம்[2]: சுமார் 1150-க்குப் பிறகு கீழ்க்குடி படைமானிய திட்டப்படி ஆண்டைக்குச் செய்யவேண்டிய படைப்பணிக்குப் பதிலாகக் கொடுக்கவேண்டிய பணம்.

உடைமைச் சின்னம்[3]: கீழ்க்குடி ஆண்டையிடமிருந்து பெறும் நிலங்களுக்கு இறைவணக்கஞ் செய்யும்போது ஆண்டை யளிக்கும் உடைமைச் சின்னம்[4]; கொடி அல்லது அந்நிலத்து மண்ணில் ஒரு பிடி.

அதிபதி[5]: இறை, ஆண்டை.

பிரதம மானியதார்[6]: நேராக மன்னரிடமிருந்த மானியங்களைப் பெற்றுள்ள மேல்குடி அல்லது முதற்குடி.

படைமானியக்குடி[7]: ஒரு ஆண்டைக்கு இறைவணக்கஞ் செய்து அவருக்குப் படைப்பணி இயற்றக் கடமைப்பட்டவர்.

பண்வணக்குடி[8]: ஊர் நிலங்களில் சில தனைகளைப் பயிரிட்டுக்கொள்ளும் உரிமைக்காகப் பண்ணை ஆண்டைக்கு ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டுள்ளவன்.

பண்வணக்குடி மானியம்[9]: பண்ணைக்குடியொருவனுக்குச் சாதாரணமாக விடப்படும் நிலம் சுமார் முப்பது ஏகரா பரப்புள்ளதாயிருக்கும்.

பாதுகாப்புரிமை[10]: ஒரு மானியதாரின் சொத்துக்குரிய வாரிசு தக்க வயதடையுமட்டும் அதன் வருமானங்களை அநுபவிக்க அவர் ஆண்டைக்குள்ள உரிமை.

கு.16: இரண்டாம் ஹென்றி ஆண்ட நாடுகள்

ஹென்றியின் தகப்பனுன ஆஞ்சு கௌன்ட் ஜ்யோப்ரே ப்ளான்டாஜெனெட்[11] ஸ்டீபெனிடமிருந்து நார்மண்டியை வென்று பிள்ளைக்குக் கொடுத்தார். ஒரு வருஷத்துக்கு அப்பால் ஜ்யோப்ரே ப்ளான்டாஜெனெட் இறக்க, ப்ளான்டாஜெனெட் குடும்பத்து நாடுகளான ஆஞ்சு, மேன், டூரேன்[12] என்பன ஹென்றிக்குச் சொந்தமாயின.

முதல் ஹென்றியின் மகளான தம் தாய் மடில்டா மூலம் அவர் இங்லண்டைப் பெற்ருர் (§ 27).

---

1. Relief. 2. Scutage. 3. Seisin. 4. token of possession. 5. Suzerain. 6. Tenant-in-chief. 7. Vassal. 8. Villein. 9. Virgate. 11. Wardship. 11. Geoffrey Plantagenet, 12. Anjou, Maine, Touraine.

ஆக்விடேன்[1] தலைவி எலியனோர் ஹென்றியை மணந்ததால் ஹென்றி **ஆக்விடேன்** ட்யூக்காகவும், **ப்வாடு**[2] கௌன்டாகவும், ரோன் ஆற்றுக்கு மேற்கிலுள்ள நிலங்களுக்கெல்லாம் அதிபதியாகவும் ஆனார்.

'வலுத்த வில்லாளர்'[3] என்பவர் அயர்லண்டின்மீது படையெடுத்துச் சென்ற பிறகு(§ 32), ஹென்றி அயர்லண்ட் முழுமைக்கும் தாமே அதிபதியென்று சொல்லிக்கொண்டபோதிலும், உண்மையில் **தென்கிழக்கு** அயர்லண்டுக்கு அதிபதியானார். மேலும், **பாலேஸ்**[4] **உடன்படிக்கையின்**படி ஸ்காட்லண்ட் மன்னர் 'சிங்க' வில்லியம் தமக்கு இறைவணக்கஞ் செய்ததால், ஹென்றி **ஸ்காட்லண்டுக்கும்** அதிபதியானார்.

கு.17 : பிரபுக்களின் வன்மையை இரண்டாம் ஹென்றி அடக்கிய விதம்

ஸ்டீபென் காலத்துச் சீரழிவு காரணமாகத் தோன்றிய தீமைகளை ஹென்றி விலக்கத் தொடங்கினார்: (1) பிரபுக்கள் புதிதாகக் கட்டிக்கொண்ட அரண்களை இடித்துவிடவேண்டுமென்றும், (2) ஸ்டீபெனிடமிருந்தும் மடில்டாவிடமிருந்தும் பெற்ற மானியங்களைத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்றும், (3) தங்கள் தங்கள் மானியங்களில் தனியரசு நடத்தும் முயற்சிகளைக் கைவிடவேண்டுமென்றும் அவர் கட்டாயப்படுத்தினார்.

க்ளாரெண்டன் சட்டத்தால்[5] (கு.20) பிரபுக்கள் நீதிமன்றங்களிலும் மன்னரின் நீதிபதிகள் தலைமைவகிக்கும் உரிமை பெற்றனர்.

'கேடயப்பணம்'[6] (§ 32) வாங்கும் முறையால் போர்ப் பணிக்குப் பதிலாகப் பணங்கொடுத்துவிடும்படி ஹென்றி பிரபுக்களைத் தூண்டினார். அதனால் படைகளைத் திரட்டி வைத்துக்கொண்டு அரசருக்கு ஊறுசெய்ய அவர்களுக்கு வழியில்லாமல் போய்விட்டது.

பிர்ட்[7] என்னும் காலாட் படையானது 'ஆயுதத்திட்டம்'[8] (§32) என்னும் சட்டத்தால் புத்துயிர் பெற்றது. அதனால் பண்ணையாட்களல்லாத சுய உரிமைபெற்ற மக்கள்[9] அனைவரும்

---

1. Aquitaine. 2. Poitou. 3. 'Strongbow'. 4. Falaise. 5. The Assize of Clarendon. 6. Scutage. 7. Fyrd. 8. Assize of Arms. 9. freemen.

அரசர் அழைக்கும்போது அவருக்காகப் போரிடத் தயாரா யிருக்க வேண்டுமென்னும் கருத்து மக்கள் மனத்தில் பதிய லாயது.

கு. 18: இரண்டாம் ஹென்றி பிரபுக்கள்மீது வெற்றி யடைந்த தற்கும் மதஸ்தாபனத்திடம் தோல்வியுற்றதற்குங் காரணம்

பிரபுக்களை எதிர்த்ததில்: (1) கிரிஸ்துவ உலகத்தில் மிக்க செல்வம்படைத்த மன்னர் ஹென்றியே; (2) ஸ்டீபென் காலத் தில் தலைவிரித்தாடிய பிரபுக்களின் கொடுமைகளால் இடருற்ற பட்டணத்து மக்களும் நாட்டுப்புறத்து மக்களுமாகிய எல்லா வகுப் பினரும் ஹென்றியை ஆதரித்தனர்; (3) திறமையோடு ஆக்க வன்மை[1] மிக்க பெக்கெட்டின் துணை அவருக்கு இருந்தது; (4) மன்னருக்கு எதிராகக் கிளம்பும் பிரபுக்களையெல்லாம் ஒன்று கூட்டி, அவர்கள் வன்மைமுழுமையும் சிதறிப்போகாதபடி பார்த் துக்கொள்ள அவர்களிடையே தகுந்த தலைவர் தோன்றவில்லை.

ஆனல், **மதஸ்தாபனத்தை எதிர்த்ததில்:** (1) ஹென்றிக்கு எதிராக நின்றவர் யூரோப் முழுவதையும் தம் அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் கட்டுப்படுத்தி வைத்திருந்த போப் ஆண்டவர் (அக்காலத்திலேதான் போப்பின் பெருமை மக்களது மனத்தில் உச்ச நிலை பெற்றிருந்தது; (2) பெக்கெட்டின் வன்மையும் பெருமையும் ஹென்றிக்குத் துணையாக அமையாமல் எதிராக நின்றன; (3) ஸ்டீபென் காலத்தில் மதஸ்தாபனத்துக்கு இங்லண்டில் அதிக கண்ணிய மேற்பட்டது (அவர் காலத்துச் சீர்குலைவுகளுக்கிடையே நாட்டில் சீரழியாது விளங்கிய ஸ்தாபனம் அதுவே); (4) சிக்கல் நிறைந்த சமயத்தில் அவர் பொறுமையிழந்து முன்கோபத்துடன் கூறிய சொற்கள் அவர் எண்ணங்களுக்குப் பெருந் தீம்பாய் முடிந் தன (இச்சம்பவத்தின் விளைவுகள் மிகப் பெரியவை).

கு. 19: மெய்விளம்பிகள்[2] திட்டத்தின் வளர்ச்சி

நெடுங்காலமாக அரசருக்கான விஷயங்களில் ஆணையிட்டு விவ ரங்களைக்கூறும் மெய்விளம்பிகளைக்[3] கொண்டு உண்மையை விசாரித்து வந்தனர்: உ-ம்., டூம்ஸ்டே நிலக்கணக்கு (§ 20).

1. constructive ability. 2. The Jury. 3. Juries of sworn witnesses.

இரண்டாம் ஹென்றி முற்காலங்களில் போரிட்டுத்[1] தீர்மானிக்கப்பட்ட நில சம்பந்தமான வழக்குகளிலும் இம்முறையைக் கையாள உரிமை தந்தார். அதன்படி வழக்கிடும் இருதரத்தாரும் **கிராண்ட் அசைஸ்**[2] எனப்படும் மெய்விளம்பிகளுக்குத் தாங்கள் முறையிட்டுக்கொள்வதாகக் கூறலாம். அப்போது ஷெரிப் அக்கம்பக்கத்திலுள்ள 'நைட்' பட்டம் பெற்ற பெரிய மனிதர்கள் பன்னிருவரை மன்னரது நீதிபதிகள்முன் வந்து அவ்வழக்கைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறும்படி அரசாணையிட்டு அழைப்பார்.

க்ளாரெண்டன் சட்டத்தில்[3] (1166), 'ஹண்ட்ரெட்'[4] என்னும் ஒவ்வொரு வட்டத்திலும், நியாயத்துக்குக் கட்டுப்பட்ட மக்கள், மன்னரது நீதிபதிகள் அங்கு வரும்போது, அவர்கள் முன்னிலையில், தங்கள் தங்கள் வட்டத்தில் குற்றஞ் செய்தவர்களாகச் சந்தேகிக்கப்படுபவர்களைக் குற்றஞ்சாட்டி நிறுத்தும்படி ஏற்பாடு செய்ய ஷெரிப்புகளுக்கு ஹென்றி கட்டளையிட்டார் (கு. 21). அவ்விதம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கடுஞ்சோதனைக்கு[5] உட்படவேண்டும். அவற்ருலும் அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்படாவிட்டாலும், நாடுகடத்தப்பட்டனர். இதனுல், நீதிபதிகள்முன் **குற்றஞ்சாட்டப்பட்டதே**[6] அவர்கள் குற்றஞ்செய்தவர்களென்று கருதப்படுவதற்குப் போதியதாயிருந்ததென்பது பெறப்படுகிறது.

இதுவே 'க்ராண்ட் ஜூரி'[7] எனப்பட்ட 'பெரிய மெய்விளம்பிகள் குழு'வின் ஆரம்பம். இதை 1933-ல் எடுத்துவிட்டனர். 1216-ல் மதஸ்தாபனத்தார் கடுஞ்சோதனைகளைக் கையாளுதலை நிறுத்திவிட்டனர். ஆகவே, சாட்டப்பட்ட குற்றங்களின் உண்மை விவரங்களை விசாரித்தறிய மற்ருெரு மெய்விளம்பிகள் குழு திரட்டப்படவேண்டியதாயிற்று. இதுவே 'பெட்டி ஜூரி'[8] எனப்படும் 'சிறிய மெய்விளம்பிகள் குழு'வின் ஆரம்பம். இக்குழுவினை இப்போதும் காண்கிருேம்.

கு. 20: க்ளாரெண்டன் திட்டம்[3] (1164)

முக்கியமான விதிகளின் சுருக்கம் (லாடின் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது):—

---

1. By Combat. 2. The Grand Assize. 3. The Assize of Clarendon. 4. Hundred. 5. Ordeal. 6. 'presentment'. 7. Grand Jury. 8. Petty Jury. 3. The Constitutions of Clarendon.

(1) குருமார்களுக்கு அளிக்கப்படும் பதவிமானியங்கள்[1] சம்பந்தமாக மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சேராதவர்களுக்கும் இடையேயோ, சேர்ந்தவர்களுக்குள்ளேயோ, தகராறுகள் ஏற்பட்டால், அவை மன்னர் நீதிமன்றத்தில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டுத் தீர்மானமாகவேண்டும்.

(3) மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது ஒரு விஷயமாகக் குற்றமியற்ற, அது சம்பந்தமான விசாரணை மன்னர் நீதிமன்றத்தில்தான் நடைபெறவேண்டுமென்பது அம்மன்றத்து நீதிபதிகளின் கருத்தானால், மன்னரது ஜஸ்டீஷியார் அரசாணையிட்டு அழைக்கும்போது அதன் முன்னர் அவர்கள் குற்ற விசாரணைக்கு வந்து நிற்கவேண்டும்.

(4) ஆர்ச்பிஷப்புகளும் பிஷப்புகளும் பதவிமானியங்கள் பெற்றுள்ள குருமார்களும் இறைவரான மன்னர் அநுமதியின்றி இராச்சியத்தை விட்டுப் போகலாகாது.

(8) மேல் தீர்ப்பை நாடும் வழக்குகள்[2], ஆர்ச்டீகனிடமிருந்து பிஷப்புக்கும், பிஷப்பிடமிருந்து ஆர்ச்பிஷப் வரைக்கும் செல்லலாம். ஆர்ச்பிஷப்பும் நியாயம் வழங்கத் தவறினால், முடிவில் மன்னர் தீர்ப்புக்கு வரவேண்டும். மன்னர் அநுமதியின்றி அதற்குமேல் செல்லலாகாது.

கு. 21 : க்ளாரெண்டன் சட்டம்[3] (1166)

முக்கிய விதிகளின் சுருக்கம் (லாடின் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது):—

(1) ஒவ்வொரு கௌன்டியிலுமுள்ள ஹண்ட்ரெட் என்னும் வட்டங்கள் தோறும், தங்கள் தங்கள் வட்டத்திலும் ஊரிலும் கொலை களவுகள் செய்ததாகக் கருதப்படும் எவனேனும் உளனு என்று ஆணையிட்டுக்கூறும் அந்த அந்த வட்டத்தைச் சேர்ந்து நியாயத்துக்குக் கட்டுப்பட்ட பன்னிருவர் மூலம்[4] விசாரிக்கவேண்டும்.

(2) மேற் குறிப்பிட்டவர்களின் ஆணைச்சொற்படி குற்றஞ் செய்ததாகக் கருதப்படுபவர்கள் கடுஞ்சோதனைக்கு[5] உட்படவேண்டும்.

(3) மேற்குறிப்பிட்டவர்களின் ஆணைச்சொல்லின்மேல் ஒரு கள்வனோ கொலையாளியோ பிடிபடும்போது, மன்னர் நீதிபதிகள் அந்தக் கௌன்டிக்கு[6] வருவதற்கு நாளாகும்போலிருந்தால், கௌன்டி ஷெரிப் அருகாமையிலுள்ள நீதிபதிகளுக்கு அவ்விஷயத்தைத் தெரியப்படுத்தவேண்டும். அதன்மேல், அந்நீதிபதிகள், குற்றவாளியை

1. Livings. 2. Appeals. 3. The Assize of Clarendon. 4. twelve lawful men. 5. The Ordeal. 6. county.

எவ்விடத்தில் தங்கள் முன்னிலையில் விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஷெரிப்புக்குச் சொல்லியனுப்பவேண்டும்.

(5) மேற்குறிப்பிட்டவர்களின் ஆணைச்சொல்லின்படி பிடிபட்டவர்களை விசாரிக்க மன்னர் நீதிபதிகளுக்குத் தவிர வேறு எவருக்கும் அதிகாரமில்லை.

(11) கள்வர்கள் அல்லது கொலையாளிகள் என்று கருதப்படுபவர்களைப் பிடிக்க ஷெரிப் வரும்போது எவரும் அவரைத் தங்கள் இடங்களில் வரக்கூடாது என்று தடுக்கலாகாது.

(14) *சட்டப்படி விசாரிக்கப் பட்டுக் குற்றவாளிகளல்லரென்று விடுவிக்கப்பட்டவர்கள், நியாயத்துக்குக் கட்டுப்பட்ட மக்களது அபிப்பிராயத்தில், தீய நடவடிக்கை யுள்ளவர்களாகக் கருதப்படுவார்களானால், அவர்கள் மன்னரது இராச்சியத்தைவிட்டு எட்டு நாட்களுள் கடல்தாண்டிப் போய்விடவேண்டும் என்பதும் இறைவரான அரசரது விருப்பம்.

* இங்கு 'சட்ட'மெனப்படுவன 'கடுஞ்சோதனைகள் சம்பந்தமான உள்ளூர் வழக்கம்' முதலியன.

கு. 22 : இரண்டாம் ஹென்றியும் அவர் பிள்ளைகளும்

இரண்டாம் ஹென்றி தம் மூத்தமகன் ஹென்றியைத் தம்மோடு இங்லண்டின் கூட்டுமன்னராகவும் (§ 32), இரண்டாம் மகன் ரிச்சர்டை ஆக்விடேன் ட்யூக்காகவும், மூன்றும் மகன் ஜ்யோப்ரேவை ப்ரீட்டனி கௌன்டாகவும் ஆக்கினார். ஆயினும், அவர் அவர்களுக்குத் தனி அதிகாரம் வழங்கவில்லை. தாயின் தூண்டுதலால் அவர்கள் அடிக்கடி தகப்பனை எதிர்த்து நின்றார்கள்.

1174-ல் அவர்கள் ப்ரான்ஸ் மன்னரோடும், ஸ்காட்லண்ட் மன்னரோடும், நார்மண்டி ஆக்விடேன் இங்லண்ட் ஆகிய நாடுகளிலுள்ள பெரிய பிரபுக்களோடும் சேர்ந்து பெருங்குழப்பம் விளைத்தார்கள்: (1) ப்ரான்ஸ் மன்னர்க்குத் தம் மானியதார்களுள் மிக்க வன்மைபெற்றிருந்த ஹென்றியை அடக்கிவைக்கவேண்டுமென்பது நெடுநாளைய எண்ணம்; (2) ஸ்காட்லண்ட் மன்னர்க்குத் தாம் இழந்த தனி ஆட்சி உரிமையை மீண்டும் பெற ஆவல்; (3) பெரிய பிரபுக்களுக்கு ஹென்றி தங்களை அடக்கிவைத்திருந்தது பிடிக்கவில்லை. ஆயினும், ஹென்றிக்குச் செல்வமும் ஆதரவும் மிகுந்திருந்தன. பிரதம மானியதார்களுள் சிறிய பண்ணைக்காரர்கள் அனைவரும், ஸ்டீபென்காலத்துச் சீர்கேடுகள் நாட்டில் மீண்டும் நிகழலாகாதெனக் கோரியவர்களும், அவரை ஆதரித்

தார்கள். ஹென்றி தம் எதிரிகள் அனைவரையும் தனித்தனியே தாக்கி வென்றார்.

எப்படியும், அவர் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் தம் குடும்பத்தினரால் ஏற்பட்ட தொல்லைகள் பெருகின. இறக்கும் தருவாயிலும் தம் பிள்ளைகளோடு அவர் மற்றொரு போரில் ஈடுபட்டிருந்தார். அவர்கள்மீது அவருக்கிருந்த ஆசை அவர்களிடம் அவரைக் கண்டிப்பாக இருக்கவிடவில்லை. முடிவில் தம் ஆசை மகன் ஜான் விளைத்த கலகத்தால் அவர் மனமுடைந்தார்.

கு.23: சிலுவைப் படையெழுச்சிகளால் இங்லண்ட் பாதிக்கப்பட்ட விதம்

மற்ற மேற்கு யூரோப்பிய நாடுகள் பாதிக்கப்பட்ட அளவு இங்லண்ட் பாதிக்கப்படவில்லை. சிலுவைப் படைகளோடு சென்ற இங்லிஷ் பிரபுக்கள் சிலரே.

முதல் சிலுவைப் படையெழுச்சியின்போது (1095—1099) ராபர்ட் ட்யூக் தம் படையின் முஸ்திப்புக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்கச் செந்தலையரிடம் நார்மண்டியை அடகுவைத்தார். அதனால் நார்மண்டி மறுபடியும் இங்லண்டோடு இணைக்கப்பெற்றது.

இரண்டாம் சிலுவைப் படையெழுச்சி (1147—1149) ஸ்டீபென்காலத்துக் கலவரத்தினிடையே சிறிது அமைதியைப் புகுத்தியது. அடங்காப்பிடாரிகளான சில பிரபுக்கள் சிலுவைப்போரில் கலந்துகொள்ள அப்போது இங்லண்டை விட்டுச்சென்றனர்.

மூன்றம் சிலுவைப் படையெழுச்சி (1189—1192) முதல் ரிச்சர்டைப் பட்டணங்களுக்கு உரிமைப் பத்திரங்களை விற்றும், ஸ்காட்லண்டுக்குச் சுதந்திரத்தைத் திருப்பி யளித்தும் தமக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்கத் தூண்டியது.

> மேலும், மன்னருக்கும் பிரபுக்களுக்கும் நிகழ்ந்துகொண்டிருந்த நீண்ட போராட்டத்தில், இச்சிலுவைப் படையெழுச்சிகளால் அப்போதைக்கப்போது சிறிது அமைதி ஏற்பட்டுக்கொண்டு வந்தது. சிலுவைப்போரில் கலந்துகொள்ளப் போயிருந்தவர்களுக்கு அவர்கள் இல்லாத சமயத்தில் தொந்தரவு கொடுப்பது கிரிஸ்துவ தருமத்துக்கு அடாதது என்று அக்காலத்தவர்கள் கருதினார்கள்.

பொதுவில், யூரோப்புக்கும் இங்லண்டுக்கும் முன்னிருந்ததைவிடச் சிறிது அதிக நெருக்கம் ஏற்பட்டது; வெளிநாடுகளில்

பிரயாணஞ்செய்ய நேர்ந்ததால் மக்கள் அறிவு விசாலமுற்றது; புதிய வாணிப வழிகள் பெருகலாயின; சாரசென் மக்களோடு தொடர்பேற்பட்டதால் புதிய கலைகளைக் கற்க நேர்ந்ததோடு, கல்வியில் ஊக்கம் பிறந்தது. அது காரணமாகவே சர்வகலாசாலைகள் தோன்றலாயின.

கு.24: பேருரிமைப் பத்திரம்[1]

பேருரிமைப் பத்திரத்தைப்பற்றி நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் அதில் சொல்லியுள்ளவையல்ல; பிற்காலத்து இங்லிஷ் மக்கள் அதில் சொல்லியுள்ளதாக நினைத்தவையேயாம், முதல் சார்ல்ஸ் மன்னருக்கும் பார்லமெண்டுக்கும் ஏற்பட்ட போராட்டத்தின்போது, இங்லிஷ் மக்களிடம் பார்லமெண்டின் அநுமதியின்றி வரிவசூலிக்கக்கூடாதென்றும், இங்லிஷ் மக்கள் அனைவருக்கும் மெய்விளம்பிகள் கூட்டத்தினரால் நியாய விசாரணை பெறும் உரிமை உண்டென்றும் வாதிக்கப்பட்டது. ஆயினும், 1215-ல் வாழ்ந்த மக்கள் இப்பத்திரத்தின் லாடின் மொழிகளுக்கு என்ன பொருள் கொண்டார்கள் என்பது இப்போது நமக்குத் தெரிகிறது.

உதாரணமாக, முதல் விதியில், 'உரிமை பெற்றவர்'[2] என்னும் தொடர்மொழியைக் காணும்போது, அக்காலத்தில் இங்லிஷ் மக்களுள் பெரும்பான்மையோர் 'செர்வ்ஸ்'[3] என்னும் பண்ணையாட்களாகவே இருந்தனர் என்பதை மறக்கக்கூடாது. பல விதிகளின் போக்கையும் மொழி நுட்பங்களையும் கவனிக்கும்போது, 'கீழ்க் குறிப்பிடப்படும் உரிமைகள்' என்பவை பிரதம மானியதார்களுக்கே பொருந்தும் என்பது வெளிப்படையாகும். libertas என்னும் லாடின் மொழியை liberty ('சுதந்திரம்') என்று பெயர்த்தெழுதாமல், privilege ('உரிமை') என்று மொழிபெயர்க்கவேண்டும். பேருரிமைப் பத்திரத்தில் மதஸ்தாபனத்தின் உரிமைகளும், வணிகர் பண்ணைக்குடிகள் முதலியவர்களின் உரிமைகளும் மேலுக்கு அங்கு மிங்கும் கூறப்பட்டிருந்தபோதிலும், பிரதம மானியதார்களாகிய பிரபுக்களின் உரிமைகளைப் பாதுகாத்தலே அதன் தனி நோக்கமாகும்.

அதன் முக்கிய விதிகளின் சுருக்கம் (லாடின் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது):—

(1) முதலாவதாக......எமது இராச்சியத்திலுள்ள உரிமை பெற்ற மக்களனைவருக்கும் தாங்களும் தங்கள் புத்திர பௌத்திர பாரம்பரியத்தினரும் அநுபவிக்குமாறு கீழ்க்காணும் உரிமைகளை வழங்கியிருக்கிறோம்.

---

1. Magna Carta ('The great Charter'). 2. 'liber homo': freeman. 3. serfs.

(2) எம்முடைய ஏர்ல்களுள்ளாவது பாரன்களுள்ளாவது, படைப்பணிக்காக எம்மிடம் பிரதம மானியங்கள் பெற்றுள்ள வேறு எவர்களுள்ளாவது, யாரேனும் ஒருவர் இறக்கநேர்ந்தால், அவர் வாரிசானவர்[1] தம் சொத்துரிமைகளைப் பண்டைநாள் தொட்டு இறுக்கப்பட்டுவரும் வாரிசு இறையைச்[2] செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

(4) வயதடையாத வாரிசுகளின் சொத்துக்களுக்குப் பாது காவலராக[3] இருப்பவர்கள் அந்தச் சொத்துக்களில் கிடைக்கும் நியாயமான வருமானத்தையும் பணிகளையும்[4] தவிர வேறு எதை யும் அபகரிக்கக்கூடாது. அதோடு அவர்கள் அச்சொத்துக்களைச் சேர்ந்த ஆட்களின் தொகைக்கும் பொருள்களுக்கும் யாதொரு சிதைவும் அழிவும் நேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

(8) மற்றொரு கணவனை நாடாது தனியாக வாழ விரும்பும் எந்த விதவையையும் கலியாணம் செய்துகொள்ள வற்புறுத்தக் கூடாது.

முதல் எட்டு விதிகள், படைமானிய திட்டத்தின் பழக்க வழக்கங் களைச் சீர்மாருக ஜான் கையாண்டதைத் தடுக்க ஏற்பட்டவை (§ 36). நான்காம் விதியைப் படிக்கும்போது பெரும்பான்மையாக அரசரே வயது வராத வாரிசுகளது சொத்துக்களின் பாதுகாவலராக இருந் தார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். 'ஆட்களின் தொகையில் சிதைவு நேராதபடி', என்னும் தொடரைக் கவனிப் போம் : பாதுகாவலர் பண்ணையாட்களுக்குச் சுதந்திரத்தை விற்றுப் பணம் சம்பாதித்துக்கொள்ளக்கூடாது என்பதே அதன் பொருள். அவ்விதம் செய்வதால் தாம் ஒருபுறம் பணம் சம்பாதித்துக்கொண் டாலும், சொத்தைச் சேர்ந்த நிலங்களுக்குப் போதிய ஆட்கள் இல் லாமல் போய்விடுவார்கள். 'பெரும்பான்மையான மக்களுக்கான உரிமைப்பத்திரம்' என்பதற்கு இது நேர்மாறானது.

(12) கேடயப் பணங்களும்[5] உதவிப் பணங்களும்[6] எமது இராச்சியத்தினரின் பொது ஆலோசனை[7]யின்மேலல்லாமல் எமது இராச்சியத்தில் வசூலிக்கப்படமாட்டா.

(14) எமது இராச்சியத்தினரின் பொது ஆலோசனையைப் பெற எமது முத்திரையிட்ட அழைப்புத்தாள்களை[8] அனுப்பி ஆர்ச் பிஷப்புகளையும் பிஷப்புகளையும் ஏர்ல்களையும் பெரிய மானியதார் களையும் கூட்டுவிப்போம். மேலும், அவர்களோடு, எம்மிடமிருந்து

1. heir. 2. the ancient relief. 3. guardian. 4. services. 5. scutage. 6. aids. 7. common counsel of our kingdom. 8. our letters under seal.

நேராகப் பிரதம மானியங்களைப் பெற்றுள்ள எல்லோரையும் பொதுவாக எமது ஷெரிப்புகள் மூலம் அழைப்பிப்போம்.

இவ்விதிகளே பிற்காலத்தில் 'பிரதிநிதிகள் அநுமதிக்காத வரிகள் நியாய விரோதமாகும்' என்னும் கொள்கையை நிலைநாட்டியதாகக் கருதப்பட்டன. 14-ம் விதியின் சொற்களிலிருந்து அவை பிரதம மானியதார்களைத் தவிர வேறு எவருக்கும் பொருந்தா என்பது விளங்கும்.

(34) 'ப்ரீசைப்' என்னும் அரசாணை[1] சொந்த நீதிமன்றம் படைத்த எந்த உரிமைபெற்றவர் சொத்துக்கும் அனுப்பப்பட மாட்டாது.

இது முதல்விதியில் கூறப்பட்டுள்ள உரிமைகளுக்கு ஒரு நல்ல உதாரணமாகும். 'ப்ரீசைப்' என்னும் அரசாணை ஒரு வழக்கினைத் தனி நபரொருவரின் சொந்த நீதிமன்றத்திலிருந்து மன்னர் நீதிமன்றத்துக்கு மாற்றவேண்டுமென்று கூறுவதாகும். ஆகவே, இவ்விதி 'க்ளாரெண்டன் அசைஸ்' என்னும் சட்டத்தினால் ஏற்பட்ட நன்மையைப் பெரிதும் குலைத்தது (§ 29. கு. 21); அதுமுதல் பிரதம மானியதார்கள் எல்லா வழக்குகளையும் தங்கள் தங்கள் சொந்த நீதிமன்றங்களில் விசாரிக்க விடப்பட்டனர்.

(39) உரிமை பெற்றவர் எவரையும் தம் சகாக்களின்[2] நியாயமான தீர்ப்பினாலேனும் நாட்டின் சட்டத்தினாலேனு[3]மன்றிக் கைதியாக்கவோ சிறையிலடைக்கவோ சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ வேறுவகையில் துன்புறுத்தவோ கூடாது.

இது சாதாரண மக்களுக்குப் பொருந்தாது என்பது வெளிப்படை. அவர்கள் பண்ணை நீதிமன்றங்களுக்கு அடங்கியவர்கள். பிரதம மானியதார்களை மன்னரது நீதிபதிகள் விசாரிக்காமல் அவர்களோடு ஒத்த அந்தஸ்து பெற்ற மற்ற பிரதம மானியதார்களே விசாரிக்க வேண்டுமென்பது இவ்விதியின் பொருள். 'நாட்டின் சட்டம்' என்பது 'கடுஞ்சோதனை, சோதனைப்போர் முதலிய சம்பந்தமாக அவ்வவ்விடத்திய பழக்கவழக்கங்களே'[4] யாகும்.

(60) தெய்வ பிரீதிக்காகவும் எமது இராச்சியத்தின் நன்மைக்காகவும் மேற்சொன்ன அநுகூலங்களை யாம் செய்துகொடுத்திருப்பதோடு, கீழ்க்குறிப்பிடும் பாதுகாப்பினையும் அளிக்கிறோம். அதாவது, இதில் யாம் அளித்துள்ள உரிமைகளை நடைமுறையில் பெறுவதற்கு வேண்டிய வழிகளைத் தேடித்தரப் பிரபுக்கள் தங்க

---

1. the writ 'praecipe'. 2. peers (ஒத்தபடியிலுள்ளவர்கள்). 3. 'the law of the land.' 4. 'the local customs as to Ordeal and Combat.'

ளுள் இருபத்தைந்து பேர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள் யாம் யாருக்கேனும் தீங்கிழைத்தாலும், இவ்வுரிமைப் பத்திரத்தின் எந்த விதியையேனும் மீறி நடந்தாலும், எமது அரண்களையும் நிலங்களையும் மற்ற சொத்துக்களையும் கைப்பற்றிக்கொண்டு, யாம் நியாய ஈடு செய்துகொடுக்கும் வரையில் எம்மை எவ்வகையிலும் துன்புறுத்தி வலிக்கட்டாயப்படுத்தலாம்.

இந்த வெட்கக்கேடான விதியின்படி, மன்னர் நடத்தை தங்களுக்குப் பிடிக்காவிட்டால் பிரபுக்கள் அவர்மீது போர் தொடங்கி அவரை அடக்கிவைக்க உரிமை பெற்றனர்.

கு. 25: ப்ரான்ஸ் மன்னர் பிலிப் ஆகஸ்டஸுக்கும் இங்லண்டுக்கும் நேர்ந்த தொடர்பு

இரண்டாம் பிலிப் ('பிலிப் ஆகஸ்டஸ்' என வழங்கப்பட்டவர், 1180-1223), வன்மை மிக்க மானியதார்கள் ஆட்சியிலிருந்த நாடுகளை முதல் முதல் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்து மன்னராஞ்ஞையை வலுக்கச்செய்த இடைக்காலத்து ப்ரான்ஸ் மன்னர்களுள் முதன்மை பெற்றவர். அதனால், ஆஞ்சவின் பேரரசை ஆண்டவர்களோடு அவர் சச்சரவிட்டுக்கொண்டுநின்றது இயற்கையே. ஆஞ்சவின் பேரரசில் ப்ரான்ஸின் பெரும்பாகம் சேர்ந்திருந்தது.

பிலிப், இரண்டாம் ஹென்றிக்கு (1174-ல்) எதிராகக் கிளம்பிக் கலகம் விளைத்த அவர் பிள்ளைகள் மனைவி மானியதார்கள் முதலியவர்களோடு ஒப்பந்தஞ்செய்துகொண்டார் (கு. 22).

பிலிப், முதல் ரிச்சர்டோடு மூன்றும் சிலுவைப் படையெழுச்சியில் கலந்துகொண்டனரேனும் (§ 33), வழியில் அவரோடு முரண்டிக்கொண்டு அவரில்லாத சமயத்தில் லாபமடையலாமென நம்பி நாடு திரும்பினர். ரிச்சர்ட் ஆட்சியின் பிற்காலம் முழுமையும் ஆஞ்சு முதலிய நாடுகளுக்காகச் செலுத்தவேண்டிய படைப் பணியையொட்டிய சச்சரவுகள் மலிகியிருந்தன.

பிலிப், ஜானுடைய நார்மன் மானியதார்களோடு சேர்ந்துகொண்டு ஜானுக்கு எதிராக ஆர்தர் இளவரசின் உரிமைகளை ஆதரித்து (§ 34), முடிவில் அவரை ப்ரான்ஸைவிட்டே துரத்திவிட்டார். மூன்றும் இன்னொசென்ட் என்னும் போப்பின் தூண்டுதல்மேல் ஜானை விரட்ட ஒரு சிலுவைப் போரைத் தொடங்கினர் (§ 35). அப்போரைப் பிறகு போப்பே நிறுத்தும்படி கட்டளையிட்டபோதும், இங்லண்டைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பினர் (§ 36).

கு. 26: ஜான் காலத்திலும் மூன்றும் ஹென்றி காலத்திலும் நிகழ்ந்த பிரபுக்கள் எதிர்ப்புக்களை ஒப்பிடல்

இரு மன்னர்களும் பணமுட்டால் பிரபுக்கள் நிபந்தனைக ளுக்கு இணங்கி வந்தார்கள் (ஜான் 'பேருரிமைப் பத்திர'த்தின் மூலம்; ஹென்றி 'ஆக்ஸ்பர்ட் திட்ட'த்தின் மூலம்).

இரு மன்னர்களும் ப்ரான்ஸில் அடைந்த தோல்விகளால் கண்ணியமிழந்தார்கள் (ஜான் ஆஞ்சவின் பேரரசை இழந்தார்; ஹென்றி அதை மீட்க முயன்று தோற்று அவமானமுற்றார்).

ஜானை எதிர்த்தவர்கள் அவர் அயோக்கியதையையும், ஹென் றியை எதிர்த்தவர்கள் அவர் ஆற்றலின்மையையும் வெறுத்தார்கள்.

ஜான் படைமானியதிட்டத்தின்கீழ்த் தனக்குள்ள உரிமைகளை நெறிதவறிக் கையாண்டதாலும் (§ 36), ஹென்றி அந்நிய நாட்டா ருக்கும் போப்புக்கும் அடக்கமாய்விட்டதாலுமே (§ 37) மக்கள் எதிர்ப்பையும் வெறுப்பையும் தேடிக்கொண்டார்கள்.

கு. 27: ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள்[1] (1258)

இவற்றை ஆக்ஸ்பர்டில் கூடிய 'பயித்தியம் பிடித்த' பார்ல மென்ட்[2] வரைந்து அரசரை வலிக்கட்டாயப்படுத்தி அங்கீகரிக் கச் செய்தது (§ 38).

அது ஒரு பார்லமென்ட் ஆகாது, உண்மையில் அது பிரதமமானிய தார்களது பெரிய ஆலோசனை சபையின் ஒரு சாதாரண கூட்டமேயாம்.

அரசரும் பிரபுக்களும் அவரவர்கள் கட்சிகளிலிருந்து பன்னிரு பொறுப்பாளிகளை[3] நியமிக்கவேண்டும். ஒரு கட்சியைச் சேர்ந்த பன்னிருவர் மற்றொரு கட்சியைச் சேர்ந்த பன்னிருவரிலிருந்து இருவரை நியமிக்க, அந்நால்வரும் அரசருக்கு ஆளும் வழியைக் காட்ட ஒரு அந்தரங்க சபையை[4] நியமிக்கவேண்டும். அந்த இரு பத்து நான்குபேரும் கூடிக் குறை குற்றங்களை நீக்கவேண்டும். பண விஷயங்களைக் கண்காணிக்க மற்றொரு இருபத்து நால்வர் சபை ஏற்படுத்த வேண்டும்.

இது மிகுந்த சிக்கலான ஏற்பாடு: நடைமுறையில் கொண்டு வர முடியாதது. இப்பலதரப்பட்ட சபைகளிடையே மனஸ்தாபங் கள் கிளைத்தன. அவை அனைத்திலும் இடம் பெற்றிருந்த சைமன் டி மான்ட்பர்ட்[5] மீது மிக்க பொறாமை தோன்றியது.

---

1. The Provisions of Oxford. 2. 'The Mad Parliament'.
3. 'commissioners'. 4. A Privy Council. 5. Simon De Montfort.

முதற் பகுதியில் பரிக்ஷை வினுக்கள்

1. நார்மானியர் வெற்றியால் இங்லண்டில் சமூக விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் ஏற்பட்ட மாறுதல்களைக் குறிப்பிடுங்கள்.

2. நார்மானியர் வெற்றி இங்லண்டின் சரித்திரத்தில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கிய நிகழ்ச்சியாக ஏன் கருதப்படுகிறது ?

3. இங்லண்டில் படைமானிய முறையின் வளர்ச்சியை நார்மானியர் வெற்றி எவ்வகையில் பாதித்தது ?

4. இங்லண்டில் நார்மானியர் வெற்றிபெற்றதற்குக் காரணமென்ன ?

5. நார்மானியர் வெற்றி இங்லண்டுக்கு எவ்வகையில் நன்மையைத் தந்தது ?

6. நார்மானியர் வெற்றியால், i. அரசாங்க அமைப்பிலும், ii. மதத்திலும் கல்வியிலும் என்ன மாறுதல்கள் தோன்றின?

7. நார்மானியர் வெற்றி, i. மதஸ்தாபனத்தையும், ii. இங்லண்டுக்கும் யூரோப்புக்குமுள்ள தொடர்பையும் எவ்வகையில் பாதித்தது ?

8. முதல் வில்லியம் தம் நிலையைப் பலப்படுத்திக்கொள்ள என்ன செய்தார் ?

9. வெற்றி மன்னர் வில்லியம், i. தம்மைத் தொடர்ந்துவந்த நார்மானியர் விஷயமாகவும், ii. மதஸ்தாபன விஷயமாகவும், கையாண்ட அரசியல் முறையை விவரியுங்கள்.

10. கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் பதவியை லான்ப்ரான்க்கும் ஆன்செல்மும் வகித்த விதங்களை ஒப்பிடுங்கள்.

11. இரண்டாம் வில்லியம், முதல் ஹென்றி, ஸ்டீபென் ஆகியவர்கள் காலங்களில் இங்லண்டுக்கும் ஸ்காட்லண்டுக்கும் இருந்த தொடர்பை விவரியுங்கள்.

12. முதல் வில்லியம், இரண்டாம் வில்லியம், முதல் ஹென்றி ஆகியவர்களின் இயல்புகளையும் நோக்கங்களையும் வேறுபடுத்திக் காட்டுங்கள்.

13. இரண்டாம் வில்லியம், ஸ்டீபென் ஆகியவர்களது ஆட்சியின் சீர்கேடுகளை விவரித்து, அவை தோன்றிய காரணங்களைக் கூறுங்கள்.

14. இங்லண்ட் சரித்திரத்தில் ஸ்டீபெனது ஆட்சிக் காலம் எவ்வகைகளில் முக்கியமானது ?

7

15. எந்த நார்மன் அரசர் இங்லண்டுக்கு அதிக நன்மை செய்தார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? அவ்விதம் கருதுவதற்குக் காரணமென்ன?

16. குடிகளனைவர்மீதும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை நிலை நாட்ட நார்மன் அரசர்கள் முக்கியமாகக் கையாண்ட முறைகள் எவை?

17. முதல் ஹென்றியின் நியாய பரிபாலன ஏற்பாடுகளை விவரியுங்கள். எவ்வகையில் அவை இரண்டாம் ஹென்றியின் ஏற்பாடுகளுக்கு முன்அறிகுறிகளாக இருந்தன?

18. இங்லிஷ் அரசாங்கத்தில் ஒழுங்கையும் திட்டத்தையும் புகுத்த முதல் ஹென்றியும் இரண்டாம் ஹென்றியும் செய்த வேலையை விவரியுங்கள்.

19. எவ்வழிகளில் இரண்டாம் ஹென்றி இங்லண்டில் ஒழுங்கை நிலைநாட்டி, ஸ்டீபென் காலத்துச் சீர்கேடுகள் திரும்பித் தலைகாட்டாவண்ணம் செய்தார்?

20. இரண்டாம் ஹென்றி ஆண்ட நாடுகளின் பரப்பென்ன? அவைகளை அவர் எவ்விதம் பெற்றார்? அவைகளை அவர் பிறகு எவ்விதம் பரப்பினர்?

21. இரண்டாம் ஹென்றியின் அரசியல் முறையில் எந்த அமிசங்களைக் கொண்டு அவரை ஒரு பெரிய இராச்சிய நிருவாக நிபுணர் (புரவலர்)[1] எனலாம்?

22. மதஸ்தாபனத்துக்கும் பிரபுக்களுக்கும் மேலான நிலையில் முடி சூடிய மன்னரை வைக்க இரண்டாம் ஹென்றி செய்த முயற்சிகள் எவ்வளவில் பலித்தன?

23. இரண்டாம் ஹென்றிக்கு ப்ரான்ஸிலிருந்த நாடுகளால் இங்லண்டின் இராச்சிய பரிபாலனத்தில் என்ன இடைஞ்சலேற்பட்டது?

24. நார்மானியர் வெற்றியிலிருந்து இரண்டாம் ஹென்றி இறக்கும் வரையில் இங்லண்டில் அரசருக்கும் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்த சம்பந்தத்தை விவரியுங்கள்.

25. இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்துச் சரித்திரத்திலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டில் இங்லண்டில் மதஸ்தாபனத்துக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட தகராறுகளை விளக்குங்கள்.

26. இரண்டாம் ஹென்றி அயர்லண்டைக் கைப்பற்றியபோது அதன் நிலை என்ன? அந்நிகழ்ச்சியின் விவரங்களைக் குறிப்பிடுங்கள்.

1. administrator.

27. மூன்ரும் சிலுவைப் படையெழுச்சியில் முதல் ரிச்சர்டின் செயல்களை விவரியுங்கள்.

28. முதல் ரிச்சர்ட் சிலுவைப் போரில் மனஞ்செலுத்தியதால் இங்லண்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை ?

29. இங்லிஷ் மக்களின் நாகரிகம் சிலுவைப் போர்களால் எவ்விதம் பாதிக்கப்பட்டது ?

30. ஆஞ்சவின் பேரரசு உடைந்துவிட்டதன் காரணமென்ன ?

31. இரண்டாம் ஹென்றியும் ஜானும் பிரபுக்கள் விஷயத்திலேனும் மதஸ்தாபனத்தின் விஷயத்திலேனும் நடந்துகொண்ட விதத்தைத் தர்க்கித்து விளக்குங்கள்.

32. (i) இரண்டாம் ஹென்றிக்கும் பெக்கெட்டுக்கும் நேர்ந்த சச்சரவினையேனும், (ii) ஜானுக்கும் போப்புக்கும் நேர்ந்த சச்சரவினையேனும் சுருக்கிக் கூறுங்கள். அரசாங்கத்துக்கும் மதஸ்தாபனத்துக்கும் நேர்ந்த இச்சச்சரவுகளின் உண்மைப்பொருள் என்ன? அவை ஒரே காரணத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதை விளக்குங்கள்.

33. ஜான் நார்மண்டியை இழந்ததன் பலன்களைத் தர்க்கித்து விளக்குங்கள்.

34. ஜானுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கு அவரே காரணர் என்பது எவ்வளவில் பொருந்தும்?

35. முதல் ஹென்றி, இரண்டாம் ஹென்றி, ஜான் ஆகியவர்களது ஆட்சிக் காலங்களின் நிகழ்ச்சிகளை யொட்டி, நார்மன் மக்களின் வருகையால் இங்லண்ட் தொடர்ச்சியாகப் பல பயனற்ற போர்களில் பணவிரயமடைய நேர்ந்தது என்பதை விளக்குங்கள்.

36. முக்கியமாக எவ்விஷயங்களையொட்டி ஜானுக்கும் அவர் குடிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டது ?

37. ஜான் பேருரிமைப் பத்திரத்தில்[1] கையொப்பமிடும்படி நேர்ந்த நிகழ்ச்சிகளின் விவரங்களைக் கூறி, அதன் முக்கியத்தை எடுத்துக் காட்டுங்கள்: அச்சமயத்தில் அது உபயோகப்பட்டதா ?

38. பேருரிமைப் பத்திரத்தில் அடங்கியுள்ளவற்றைச் சுருக்கிக்கூறி, இங்லிஷ் மக்கள் சரித்திரத்தில் அப்பத்திரம் எவ்விதத்தில் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும் என்பதைத் தர்க்கித்து விளக்குங்கள்.

1. Magna Carta.

39. முதல் எட்வர்ட் மன்னருக்குமுன் ஆண்ட ப்ளான்டாஜெனெட் மன்னர்களின்கீழ்ப் பட்டணங்கள் வளர்ந்தவிதத்தை விவரியுங்கள்.

40. மூன்றும் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டில் போர் நிகழ்ந்தன் காரணமென்ன ?

41. ஜான், மூன்றும் ஹென்றி ஆகியவர்கள் ஆட்சிக் காலத்தில் அரசருக்கும் பிரபுக்களுக்கும் நேர்ந்த சச்சரவுகளின் காரணங்களைப் பிரித்து ஒப்பிட்டுக் காட்டுங்கள்.

42. 'ப்ரையர்ஸ்'[1] என்னும் திரியும் துறவிகள் எங்ஙிலையில் இங்லண்டுக்கு வந்தார்கள் ? அவர்கள் அங்கு என்ன செய்தார்கள் ? அவர்கள் செயல்களின் பலனென்ன ?

43. சைமன் டி மான்ட்பர்ட்டின் குணத்தையும் வாழ்க்கையையும் சுருக்கமாக விவரியுங்கள்.

44. "மூன்றும் ஹென்றி நல்ல மனதுடையவரேனும் வன்மையற்றவர்; அவர் தம் சேவகர்களை யோசனையின்றித் தேர்ந்தெடுத்து அவர்களைப் பிடிவாதத்தோடு விலக்காமல் வைத்திருந்தார்." இதை விளக்கி, இந்தக் குணக்குறை அவர் ஆட்சிக்காலத்தில் தோன்றிய சீர்கேடுகளுக்கு எவ்வளவில் காரணமாகுமென்பதையும் கூறுங்கள்.

45. 'மானர் ஏற்பாடு'[2] அல்லது 'பண்ணைமுறை' என்பது என்ன ? இடைக்காலத்தின் முற்பகுதியில் இங்லிஷ் பண்ணைக்குடி[3] ஒருவனின் வாழ்க்கையை விவரித்துக் கூறுங்கள்.

46. திறந்த வயல் முறையில்[4] பயிர்த்தொழில் நடந்த விதத்தைப் பொதுவாக விளக்குங்கள். அதன் முக்கிய குறைகள் எவை ?

47. ஒரு மடாலயத்தை வருணித்து மடத்துறவிகளின் வாழ்க்கையை விவரியுங்கள்.

---

1. friars. 2. manorial system. 3 villein. 4. open field system.

இரண்டாம் பகுதி

ஒரு தனி நாட்டாராக ஒன்றுபட்ட மக்கள் முன்னுக்கு வரல்

1272—1485

இரண்டாம் பகுதி

ஒரு தனி நாட்டாராக ஒன்றுபட்ட மக்கள் முன்னுக்கு வரல்

(1272—1485)

முன்னுரையில், நாட்டில் நிலைக்க வந்த பல மக்கட்கூட்டத்தினரைப்பற்றிக் கூறினோம். முதற் பகுதியில், அம்மக்கள் அந்நிய அரசர்களின் ஆளுகையின்கீழ் எவ்விதம் இங்லிஷ் நாட்டாரென்னும் தனிமக்கட்கூட்டத்தினராக ஒன்றுபட்டனர் என்பதைக் கண்டோம். இரண்டாம் பகுதியில், அவ்விதம் ஒன்றுபட்ட மக்கள் தாம் ஒரு தனி நாட்டினர் என்னும் புதிய உணர்ச்சியை எவ்வாறு அடைந்தனர் என்பதையும்; நூறுண்டுப் போரானது அவர்களிடையே தேசாபிமான ஆர்வத்தை எவ் வகையில் தூண்டியது என்பதையும்; நாட்டின் பார்லமென்ட், சட்டங்கள், பழக்கங்கள் முதலியன எவ்விதம் வளரலாயின என்பதையும்; முடிவாக, இடைக்காலத்து நாகரிகம் எவ்விதம் சிதைந்து மறைந்தது என்பதையும் காணப்போகிறோம்.

பதினெண்ரும் அத்தியாயம்

இங்லண்டின் முதல் இங்லிஷ் மன்னர்

(1272—1307)

§47. சட்டம் வகுத்த எட்வர்ட்:—இங்லண்டை ஆண்ட மன்னர்களுள் முதல் எட்வர்ட் திறமையும் வசீகரமும் நிறைந்தவர்களுள் மேன்மை மிக்க ஒருவர். நார்மானியர் வெற்றிக்குப் பிறகு இங்லண்டை ஆண்டவர்களுள் உண்மையில் 'இங்லிஷ் மன்னர்' என்னும் பட்டத்துக்கு உரியவர்களின் தொகையில் அவரே முதல்வர். அக்காலத்தில் இங்லண்டிலிருந்த எல்லா மேன்மக்களைப் போலும் அவரும் ப்ரெஞ்சைத்தான்[1] தம் தாய்மொழியாகப் பேசினர். ஆயினும், அவர் பிறந்து வளர்ந்தது இங்லண்டில்; ஆஞ்சவின் பேரரசில் காஸ்கொனி[2] என்னும் ஒரு நாடு இன்னும் அவர் ஆளுகையின்கீழ் இருந்தபோதிலும், அவரது நண்பர்கள் இங்லிஷ் மக்களே; அவரது ஆர்வங்களும் நோக்கங்களும் இங்லண்டின் நன்மைக்கானவையே. அவர் தோற்றத்தில் ஒரு வகையான இராஜ களை துலங்கியது. 'புனித நாட்'டில்[3] அவர் போரிட்டபோது மட்டற்ற அஞ்சாமைக்கும் வெற்றி கொடுக்கும் படை நிருவாகத் திறனுக்கும் அவர் எல்லோர் பாராட்டினையும் மிகுதியாகப் பெற்ருர். அவர் ஆண்மையும் திண்மையும் திகழ்ந்த கம்பீர உருவத்தினர்; முன் கோபியாயினும், ஆர்வம் நிறைந்த மனத்தினர்; நிறைமிக்க கணவராகவும் அன்புமிக்க தகப்பனுகவும் வாழ்ந்தவர்.

1. French. 2. Gascony. 3. Holy Land.

இங்லண்ட் சரித்திரத்தில் முதல் எட்வர்ட் இரண்டு காரியங்களைச் சாதித்துப் புகழ் பெற்றார். அவையாவன : சட்டங்களைச் சீர்திருத்தியது ; வேல்ஸை வென்றது.

முதலில் அவரது சட்ட சீர்திருத்தங்களைக் கவனிப்போம் :—

(1) க்ளாஸ்டர் சட்டத்தினால்[1] (1278) அவர் இரண்டாம் ஹென்றியின் க்ளாரெண்டன் சட்டத்தைப்[2] புதுப்பித்தார் (§ 29, கு. 21). பிரபுக்கள் தங்கள் சொத்துக்களின் வட்டாரங்களுள் தனி நீதிமன்றங்கள் வைத்துக்கொண்டு நியாய பரிபாலனம் செய்யும் உரிமையினைப் பெருக்கிக்கொள்ளவே எப்போதும் முயன்றனர். அவ்வுரிமையினால் அவர்கள் செல்வாக்கு பெருகியதோடு, நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்களாலும் அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைத்து வந்தது. இரண்டாம் ஹென்றியின் காலத்துக்குப் பிறகு பிரபுக்களில் பலர் அத்தகைய நீதிமன்றங்களை நிறுவிக்கொண்டனர். பேருரிமைப் பத்திரத்தின் விதியொன்றின்படி (கு. 24) தங்கள் சொத்துக்களின் எல்லைக்குள் அரசரது ஷெரிப்புகளும் நீதிபதிகளும் நுழையக்கூடாதென்னும் உரிமையை அவர்கள் வலுவில் பெற்றனர். எட்வர்ட் இதைக் கூடியவரையில் வேரறுக்க முயன்றார். க்ளாஸ்டர் சட்டத்தின் விதியொன்றின்படி, ஒவ்வொரு பிரபுவும் தம் தனி நீதிமன்றத்தை எந்த உரிமைப்படி[3] வைத்து நடத்துகிறார் என்று விசாரித்தறிந்து, சட்ட ஆதரவில்லாத மன்றங்களைக் கலைத்துவிட்டு வரும்படி தம் உத்தியோகஸ்தர்களை அனுப்ப அரசர் அதிகாரம் பெற்றார். ஆயினும், அதனால் பிரபுக்கள் பெருஞ் சீற்றங் கொண்டார்களாதலின், முதல் ரிச்சர்ட் காலத்துக்கு முன்

---

1. The Statute of Gloucester. 2. Assize of Clarendon. 3. Quo Warranto.

னிருந்த தனி நீதிமன்றங்கள் அப்படியே இருக்கலாமென்று அரசர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று; அக்காலத்துக் குப்பின்னர் ஏற்பட்டவைகளே கலைக்கப்பட்டன.

(2) மதஸ்தாபனத்துக்கு ஏராளமான நிலங்கள் அடிக்கடி தானமாக வழங்கப்பட்டதால், அரசருக்குப் படைமானிய ஏற்பாட்டின்கீழ் வரக்கூடிய வருமானம் பெரிதும் குறைந்து விட்டது. மதஸ்தாபனத்தின் அநுபோகத்திலிருந்த பண்ணைகளுக்கும், மற்றவர் அநுபோகத்திலுள்ள பண்ணைகளுக்குப் போல், படைமானிய சேவைகளும் கட்டணங்களும் செலுத்தப்படவேண்டியது முறையாயினும், நடை முறையில் அவைகளுக்காகப் பல கட்டணங்கள் செலுத்தப்படுவதேயில்லை. உதாரணமாக, மதஸ்தாபனம் இறப்பதில்லையாதலால், அது வாரிசு இறையே[1] கட்டுவதில்லை. அதனால் அதன் சொத்துக்கள் வாரிசின்மையால் அரசர் அநுபோகத்துக்குத் திரும்பி வருவது மில்லை. எட்வர்ட் அரசரின் மார்ட்மேன் சட்டம்[2] (1279) இதை மேலும் முற்றவிடாது தடுத்தது. அதன்படி அரசரது தெளிவான உத்தரவின்றி இத்தகைய தானங்கள் செய்யக்கூடாதென்று திட்டமானது (கு. 28).

(3) க்யுயா எம்ட்டோரிஸ்[3] சட்டத்தின்படி (1290) பண்ணைக்காரரொருவர் தம் நிலத்தின் ஒரு பகுதியை யாருக்கேனும் விற்றுவிட்டால், அதை வாங்கியவர் அதற்காக, விற்றவருக்குப் படைமானிய சேவைகளையும் கட்டணங்களையும் செலுத்தாமல், அதை விற்றவரின் அதிபதிக்குச் செலுத்தவேண்டுமென்று திட்டமாயிற்று. படைமானிய திட்டத்தின்படித் தமக்குள்ள உரிமைகளைக் கைநெகிழவிடாமல் பலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதே அரசரின் நோக்கம். ஆயினும், இச்சட்டத்தால் எதிர்பாராத வகையில் இரண்டு பெரிய விளை

1. reliefs. 2, Statute of Mortmain. 3. Quia Emptores.

வுகள் நேர்ந்தன. முதலாவதாக, சிறிய பண்ணைகளையுடைய பிரதம மானியதார்களின் தொகை இதனால் மிகுதியும் பெருகியது. அவர்களின் சந்ததியாரே ஆங்காங்கே 'ஸ்கொயர்'[1] என்னும் பட்டத்தோடு சொத்தும் செல்வாக்கும் பெற்று நாட்டின் அரசியல் விஷயங்களில் பிற்காலத்தில் அதிக ஊக்கத்துடன் ஈடுபட்டு உழைக்கலாயினர். இரண்டாவதாக, இது படைமானிய திட்டத்தைக் குலைக்கும் வழியைப் பெரிதும் தேடிவைத்தது. இத்தனை ஒற்றைப்பண்ணைப் பிரதம மானியதார்களிடமிருந்தும் படைமானிய சேவைகளை வாங்குதல் அரசருக்கு முடியாமல்போய்விடவே, அவர்களிடமிருந்து நாளடைவில் அவற்றிற்குப் பதிலாகப் பணம் வாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று (கு. 29).

§ 48. வேல்ஸும் ஸ்காட்லண்டும்:—பெரிய பிரிட்டன்[2] என்னும் தீவு முழுவதையும் ஒரே அரசாங்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டுமென்பது எட்வர்டின் மனத்துக்குகந்த நோக்கங்களுள் ஒன்று. அதுவரையில் வேல்ஸைக் கைப்பற்ற வேண்டுமென்னும் முயற்சியில் எந்த மன்னரும் ஈடுபடவில்லை. வேல்ஸின் குடிகள் முன்னர் பிரிட்டன்மீது படையெடுத்துவந்த ஆங்லோசாக்சன் கூட்டங்களால் மேற்கு நோக்கித் துரத்தப்பட்ட கெல்ட் மக்களின்[3] சந்ததியார். அவர்கள் தங்கள் மலைகளுக்கிடையே குலக்கூட்டங்களாகப்[4] பண்டைநாளில் வாழ்ந்தது போலவே அப்போதும் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் நாடு மலைகளின் பாதுகாப்பினைப் பெற்றிருந்ததால், அவற்றிடையே படையெடுத்து வந்து அவர்களை வெல்வது மிகவும் கடினம். ஆகவே, நார்மன் அரசர்கள், வேல்ஸைக் கைப்பற்ற முயலாமல், அதன் எல்லையிலுள்ள இங்லிஷ் ஷைர்களை 'எல்லைப் பிரபுக்கள்'[5]

1. Squire. 2. Great Britain. 3. Celts. 4. tribes. 5. marcher-lords.

எனப்பட்டவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த எல்லைப் பிரபுக்களின் முக்கிய பொறுப்பு வேல்ஸ் மக்கள் இங்லண்டின்மீது படையெடுத்துவந்து கொள்ளையிடாதபடி பார்த்துக் கொள்வதேயாம். நார்மன் பிரபுக்கள் சிலர் நாளடைவில் தென் வேல்ஸினை அடக்கித் தங்கள் தங்களுக்கெனச் சில சிறு நாடுகளை வகுத்து அவற்றில் அரண்களைக் கட்டிக்கொண்டனர். வடவேல்ஸ் மட்டும் யாராலும் வெல்லப்படாது வேல்ஸ் அரசரின்கீழ்ச் சுயேச்சை குலையாதிருந்தது. மூன்ரும் ஹென்றியின் காலத்து வேல்ஸ் அரசரான லெவெலின் அப் க்ரிபித்[1] தம் நாட்டு எல்லைப்புறத்திலுள்ள இங்லிஷ் ஷைர்களின்மீது அடிக்கடி படையெடுத்துவந்து மிக்க தொந்தரவு கொடுத்தார். ஆகவே, முதல் எட்வர்ட் மன்னரானதும் சௌகரியம் நேர்ந்தவுடன் லெவெலின் நாட்டிற்குள் படையெடுத்துச்செல்லத் துணிந்தார். மலைகளிடையே போரிடுவதன் கஷ்டநஷ்டங்களை மிக்க திறமையோடும் பெருமுயற்சியோடும் எட்வர்ட் சம்மாளித்து, விரைவில் லெவெலினைத் தமக்கு இறைவணக்கஞ்செய்யும்படி ஒப்புக்கொள்ளவும் செய்துவிட்டார். ஆயினும், ஓராண்டானதும் லெவெலின் கட்டுக்கடங்காது கிளம்பி மற்ருெரு போரைத் தூண்டினுர். எட்வர்ட், மிக்க கவனத்தோடு போருக்கான ஏற்பாடுகளைச் செய்து, மீண்டும் வெற்றி பெற்ருர். ஒரு சிறிய சண்டையில் லெவெலின் மாண்டார். அவர் இறந்ததும் வேல்ஸ் மக்களின் எதிர்ப்பு குலைந்தது. எட்வர்ட் வேல்ஸ் நாட்டை இங்லண்ட் இராச்சியத்தில் சேர்த்துவிட்டு, அதை ஷைர்களாகப் பிரித்து இங்லிஷ் ஷெரிப்புகளை அங்கு நியமித்து, கான்வே, ஹார்லெக், கார்நார்வன்[2] என்னும் வன்மைமிக்க அரண்களைக் கட்டுவித்து, அவற்றில் காவற்படைகளை வைத்தார். ஆயினும், அவர்

1. Llewelyn ap Griffith. 2. Convay, Harlech, Carnarvon.

வேல்ஸ் மக்களின் பழைய சட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்ற முயலவில்லை. அதனால்தான் இன்றைக்கும் வேல்ஸ் மக்கள் தங்கள் தனிமொழியைப் பேசிக்கொண்டு, தங்கள் பழமுறைகளை மாற்றிக்கொள்ளாமல், ஒரு சிறு தனிநாட்டாராக வாழ்கின்றனர். அரசியலில் சுயராச்சியத் தனிநிலையை[1] அவர்கள் கோரவில்லை.

அதன் பிறகு சிறிதுகாலமேனும் ஸ்காட்லண்டின் அதிபதியாக இருக்க எட்வர்ட் மன்னருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அதெல்ஸ்டன் காலத்திலிருந்து(§ 13) இங்லண்ட் மன்னர்கள் வடக்கிலிருக்கும் ஸ்காட்லண்ட் இராச்சியத்தின்மீது தங்களுக்கு ஒருவகையான ஆதிபத்தியம் இருப்பதாகக் கூறிக்கொண்டிருந்தனர். 'சிங்க' வில்லியம்[2] என்பவர் இரண்டாம் ஹென்றிக்கு நேரில் இறைவணக்கஞ் செய்தார் (§ 32). ஆயினும், ரிச்சர்ட் வில்லியத்துக்குச் சுதந்திர உரிமைகளைத் திருப்பி விற்றுவிட்டார். எனினும், இவ்விரு இராச்சியங்களுக்குள்ளும் ஆதிபத்தியவிஷயமான நிலை தெளிவாயில்லை. 1286-ல் ஸ்காட்லண்ட் மன்னர் வாரிசில்லாது இறந்துவிட்டதால், பலர் தங்களுக்கே இராச்சியம் உரியதெனக் கிளம்பினர். அவ்விதம் ஸ்காட்லண்ட் நாட்டு அரசபட்டத்துக்கு உரிமை கொண்டுவந்தவர்களுள் ஜான் பாலியலும்[3] ராபர்ட் ப்ரூஸும்[4] முக்கியமானவர்கள். அவர்கள் இருவரும் 'சிங்க' வில்லியம் கால்வழியில் வந்த நார்மன் பிரபுக்களானதால், அவர்களுக்கு இங்லண்டிலும் மானியங்கள் இருந்தன. அவைகளுக்காக அவர்கள் முதல் எட்வர்டுக்கு இறைவணக்கஞ்செய்யக் கடமைப்பட்டிருந்தனர். ஸ்காட்லண்ட் அரசபட்டத்துக்குத் தங்களுக்குள்ள உரிமைகளை எட்வர்டே விசாரித்துத் தீர்

---

1. political independence. 2. William the Lion. 3. John Balio. 4. Robert Bruce.

மானிக்கட்டும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இவ் விஷயமாகத் தீர்ப்பு அளிப்பதற்கு நார்ஹாம் அரணில்[1] இரு கட்சிக்காரரையும் சந்தித்த எட்வர்ட், அவர்களும் அவர்களோடு வந்த மற்ற ஸ்காட்லண்ட் பிரபுக்களும் தமக்கு இறைவணக் கஞ்செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார். இதை அவர் கள் எதிர்பார்க்கவில்லையாயினும், அவர் கட்டளைக்கு இணங் காது மறுத்து அவருக்குக் கோபமூட்ட எவரும் விரும்ப வில்லை. பிறகு இருகட்சிக்காரரும் தங்கள் வழக்குகளை அவர் முன் சொல்ல, அவர் முடிவில் பாலியல் பக்கம் தீர்ப்பளித்தார். பாலியல், ஸ்காட்லண்ட் இராச்சியம் முழுமைக்கும் மீண்டும் எட்வர்டுக்கு இறைவணக்கஞ்செய்துவிட்டு, முடிசூட்டிக் கொண்டார்.

§ 49. யூதர்களைத் துரத்தல்:—எட்வர்டுக்கு அறிவும் நேர்மையும் மிக்க மன்னரென்னும் புகழுண்டானதற்கு அவர் யூதர்கள் விஷயத்தில் மிகக் கடின சிந்தையோடு நடந்து கொண்டது ஒரு முக்கிய காரணம். யூதர்கள் முன்னர் ஏசு நாதரைச் சிலுவையிலறைந்த மக்களினத்தைச் சேர்ந்தவர் களாதலின், இடைக்காலத்துக் கிரிஸ்துவர்கள் அவர்களை முழுமனத்தோடு வெறுத்துப் புறக்கணித்தார்கள். மக்கள் பிழைப்புக்கான சாதாரண வழிகளில் அவர்கள் நுழைய முடியாது. நிலத்தைப் பெறுவோர் கிரிஸ்துவர் ஆணை மொழி களைக் கூறியே இறைவணக்கஞ் செய்ய வேண்டும். 'கில்ட்'[2] எனப்படும் வணிகர் சங்கங்களிலும் தொழிற்சங்கங்களிலும் அங்கத்தினராவதற்கும் கிரிஸ்துவ சடங்குகள் இன்றியமை யாதன. யூதர்கள் கிரிஸ்துவ ஆணைமொழிகளைக் கூறவோ, கிரிஸ்துவ சடங்குகளைச் செய்யவோ உடன்படார். கடனுக்கு வட்டி வாங்கல் கிரிஸ்துவர் கொள்கைப்படி பாப காரியமாகக்

1. Norham Castle. 2. Gild.

கருதப்பட்டதால், கிரிஸ்துவர்கள் வட்டிக்குக் கடன்கொடுக்க லாகாதென மதஸ்தாபனம் திட்டஞ்செய்திருந்தது. யூதர் களுக்கு இத்தகைய கட்டுப்பாடு யாதொன்றும் இல்லாததால், வட்டிக்குக் கடன்கொடுத்தலே அவர்களது முக்கிய தொழி லாக அமைந்தது. அதில் அவர்களுக்கு நல்ல லாபங் கிடைத் தது. அத்தொழிலினையும் அவர்கள் செய்வதற்கில்லையென் ருல், அவர்கள் மேற்கு யூரோப்பில் வாழ்ந்திருக்கவே முடியாது.

முதல் எட்வர்ட் காலம் வரையிலிருந்த அரசர்கள் யூதர் களைத் தங்கள் தனி ஆதரவில் வைத்திருந்தார்கள். போர்களுக் கும் இதர அரசாங்கச் செலவுகளுக்கும் வேண்டிய பணத்தை அரசர்கள் யூதர்களிடமிருந்தே கடன்வாங்கிவந்தனர். மேலும், யூதர்கள்வசம் செல்வம் பெருகியிருந்ததால், அவர் களிடமிருந்து பெருந்தொகையான வரிப்பணத்தை வசூலிக்க வும் முடிந்தது. முதல் எட்வர்டோ மதப்பற்ருேடு நேர்மை யும் நெறியும் நிறைந்தவர். பாபவழியில் வருமானம் பெறு தல் அவருக்கு ஒழுங்காகத் தோன்றவில்லை. ஆகவே, அவர் தமக்கு எவ்வளவு நஷ்டமேற்பட்டபோதிலும் அப்பாபச் செயலை நிறுத்திவிடத் தீர்மானித்தார். முதலில், எட்வர்ட் யூதர்கள் நிலங்களை வாடகைக்கு விடக்கூடாதென்ருர்; அவர் கள் ஒருவகையான ஆடையே அணியவேண்டுமென்ருர். சிறிது காலம் கழித்து, வட்டிக்குக் கடன்கொடுத்தல் கூடா தென்ருர். முடிவில், 1290-ல் அவர் யூதர்களை நாட்டை விட்டே துரத்திவிட்டார். இக்காலத்தில் இச்செயல் நமக்கு அநியாயமாகவும் கொடூரமாகவும் காணப்படலாம். ஆயினும், அக்காலத்தவர்கள் இதை ஒரு பெருந்தன்மையான செயலாக வும், மிகுந்த மதப்பற்ருேடு செய்யப்பட்ட செயலாகவும் கருதிப் பாராட்டினுர்கள்.

§ 50. மாதிரி பார்லமேண்ட்[1] :—1290-ம் ஆண்டு வரையில் எட்வர்டின் ஆட்சி 'வெற்றிகரமாகவும் இன்பகரமாகவும் கீர்த்தி மிகுந்தும்'[2] நடைபெற்றது; ஆயினும், அவ்வாண்டு முதல் அவருக்குத் தொல்லைகள் பெருகின. முதலில் காஸ்கொனியைப்பற்றி ப்ரான்ஸ் மன்னரோடு சச்சரவேற்பட்டது. அந்நாட்டுக்கு ப்ரான்ஸ் மன்னர் எட்வர்டின் அதிபதியாயிருந்தார். இந்தச் சச்சரவால் இருமன்னருக்கும் போர் மூண்டது. எட்வர்ட் ப்ரான்ஸுக்குச் சென்று போரை நேரில் நடத்த முடியாதபடி அதே சமயத்தில் வேல்ஸில் ஒரு கலகம் தோன்றியது. வேல்ஸ் கலகத்தை அடக்கியதும் ஸ்காட்லண்டில் கலகம் தோன்றியது. எட்வர்டுக்கு இறைவணக்கம் செய்யும்படி தந்திரமாக ஏமாற்றப்பட்டதாக ஸ்காட்லண்ட் பிரபுக்களுக்கு ஒரு குறையிருந்தது. ஆகவே, அவர்கள் அவருக்கு ப்ரான்ஸில் போர்ப்பணி செய்யவேண்டுமென்று கட்டளை வந்தபோது, அவர்கள் அப்படிச் செய்ய மறுத்ததோடு, அவருக்கு விரோதமாக ப்ரான்ஸ் மன்னரோடேயே சேர்ந்துகொண்டனர். இதுவே இங்லண்டுக்கு விரோதமாக ப்ரான்ஸுக்கும் ஸ்காட்லண்டுக்கும் ஏற்பட்ட தொடர்பின் ஆரம்பம். இத்தொடர்பு விட்டுவிட்டு முந்நூறு ஆண்டுகள் நீடித்திருந்தது.

ஸ்காட்லண்டில் கிளைத்த கலகம் மிகுந்த கவலையை உண்டாக்கவல்ல பெரிய விஷயமானதால், எட்வர்ட் பெரிய ஆலோசனை சபையின்[3] நல்ல பிரதிநிதித்துவம் நிறைந்த தனிக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி ஆதரவு நாடினார். 1295-ல் கூடிய இக்கூட்டம் பிற்காலத்தில் மாதிரி பார்லமேண்ட் எனக் கூறப்பட்டது. அதன் அமைப்பினையே பின்வந்த அரசர்

1. The Model Parliament. 2. "victorious, happy and glorious."
3. The Great Council,

களும் எடுத்துக்காட்டாக மேற்கொண்டார்கள். எட்வர்ட் இளைஞராயிருந்தபோது, சைமன் டி மான்ட்பர்ட்[1] ஷைர் களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட நைட்டுகளையும் நகரவாசிகளையும் கூட்டின முறை (§ 40) மிகவும் ஒழுங்கானதாக அவருக்குத் தோன்றியதால், அதையே இச்சமயம் தாமும் கையாண்டார். அதோடு, தமக்கே தெரியாமல் பார்லமெண்டின் வளர்ச்சியில் ஒரு பெரிய முன்னேற்றத்திற்கு அவர் வழிகாட்டிவிட்டார். ஏர்ல்கள், பாரன்கள், மடாதிபதிகள், பிஷப்புகள் ஆகிய பெரிய மனி தர்களை வழக்கப்படிப் பெயரிட்டு அழைத்துவிட்டு, ஷைர் களுக்கும் பட்டணங்களுக்கும் வேண்டிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஷெரிப்புகளுக்கு விபரமான கட்டளைகளை மட்டும் அனுப்பிவைத்தார். பிற்காலத்தில் பிரபுக்கள் (லார்ட்ஸ்) சபைக் கும்[2] சாதாரண மக்கள் (காமன்ஸ்) சபைக்கும்[3] வித்தியாசம் தோன்றியதற்கு இதுவே ஆதாரமாயிற்று* (கு. 31).

§ 51. வாலஸும் ப்ரூஸும்[4] :—'மாதிரி பார்லமெண்ட்' அரசருக்குப் பணம் உதவத் தீர்மானித்ததும், எட்வர்ட் படை திரட்டிக்கொண்டு ஸ்காட்லண்டுக்குச் சென்று, கலகம் விளைத்த பிரபுக்களை அடக்கி, பாலியலை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டார். அப்போதும் அவர் தொல்லைகள் தொலைந்தபாடில்லை. எட் வர்டின் கண்டிதமான ஆளுகையின்கீழ்க் கட்டுப்பட்டு நெடுங்

---

*எட்வர்ட் காலத்தில் இரண்டு சபைகளில்லை. எல்லோரும் ஒரே சபையில்தான் சேர்ந்து கூடினார்கள். சாதாரண மக்களின் பிரதிநிதிகள் அச் சபையில் 'உட்கார்ந்தார்கள்' என்று சொல்வது தவறு. அரசரும் பெரிய மனிதர்களும் பேசிக்கொண்டிருக்க, சாதாரண மக்களின் பிரதிநிதிகள் அவர் கள் பேசியதைக் கேட்டுக்கொண்டு பின்னே நின்றுகொண்டிருந்தார்கள்.

1. Simon de Montfort. 2. House of Lords. 3. House of Commons. 4. Wallace and Bruce.

காலம் மனத்தில் குறைவைத்துக்கொண்டிருந்த இங்லிஷ் பிர புக்கள், ப்ரான்ஸில் அவருக்காகப் போரிட அழைக்கப்பட்ட போது, வர மறுத்துவிட்டார்கள். மதஸ்தாபனத்தைச் சேர்ந்த மதத்தலைவர்களும், குருமார்களல்லாத அதிபதிகளுக்குத் தாங் கள் வரிப்பணம் செலுத்தக்கூடாதென்று போப்பானவர் க்ளேரிகிஸ் லேய்காஸ்[1] என்னும் ஒரு ஆஞ்ஞை[2] பிறப்பித் திருப்பதாகக் கூறிவிட்டார்கள். அவர்களோடு அரசர் வாதித் துக்கொண்டிருந்த போது, ஸ்காட்லண்ட் மக்கள் சர் வில்லியம் வாலஸ்[3] என்னும் ஒரு நைட்டின் தலைமையில் மீண்டும் கிளம்பியுள்ளதாக அவருக்குச் செய்தி கிடைத்தது. எட்வர் டுக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது ; பிரபுக்களை யும் மதஸ்தாபனத்தாரையும் ஸ்காட்லண்ட் மக்களையும் தண் டனைகள் விதித்து வதைப்பதாக மிரட்டினார். எனினும், ப்ரான்ஸ் பயணத்தை இனி அவர் தள்ளிவைப்பதற்கில்லை. ஆயினும், அதிக தாமதப்பட்டு அவர் போனதால் எவ்வித மான வெற்றியையும் அவர் அங்கு பெறுவதற்கில்லை. ஆகவே, அவர் ப்ரான்ஸ் மன்னரோடு சமாதானஞ் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அதன்படி எவருக்கும் யாதொரு லாபமு மில்லை. எட்வர்ட் ப்ரான்ஸிலிருந்து திரும்பியதும் ஸ்காட் லண்ட்மீது படையெடுத்துச் சென்றார். அப்போது ஸ்காட் லண்ட் மக்களுக்குத் தேசாபிமான உணர்ச்சி ஒரு புது சக்தி யைத் தந்திருந்தது. இதை எட்வர்ட் உணரவில்லை. பால் கர்க்[4] என்னுமிடத்தில் அவர் வாலஸைச் சில வேல்ஸ் வில் லாட்களின் உதவியைக் கொண்டு தோற்கடித்தார். ஆயினும், போர்க்களத் தோல்விகளால் ஸ்காட்லண்ட் மக்கள் அடங்கு பவர்களாகத் தோன்றவில்லை. எட்வர்டும் அவர் சேனையும் சென்ற இடங்களிலெல்லாம் எதிர்ப்பு தணிந்தமாதிரி தோன்

1. Clericis Laicos. 2. 'Bull'. 3. Sir William Wallace. 4. Falkirk

றினாலும், அவர் திரும்பியவுடன் அவ்விடங்களில் மீண்டும் கலகம் கொழுந்துவிட் டெரிந்தது. வாலஸ் சிலரது வஞ்சனை யால் அவர் கையில் சிக்கினதும் சிரச்சேதம் செய்யப்பட்டார். அப்போதும் கலகம் சிறிது காலமே அடங்கியிருந்தது. ஸ்காட்லண்ட் மக்களிடையே ஒரு புதுத் தலைவர் தோன்றி னார். அவர் முன்னர் பாலியலோடு பட்டத்துக்குப் போட்டி யிட்ட ப்ரூஸின் பெயராரான ராபர்ட் ப்ரூஸ்[1]. அவர் அரச பட் டம் பெறும் ஆவலுடன் ஸ்காட்லண்ட் மக்கள் கிளர்ச்சிக்குத் தலைமை பூண்டார். ஸ்காட்லண்ட் அரசர்கள் தொன்று தொட்டு முடிசூடிக் கொண்டு வந்த ஸ்கூன்[2] என்னும் இடத் தில் ப்ரூஸும் முடி சூட்டப் பெற்றார். துணிச்சலும் தளர்வின் மையும் ஆர்வமூட்டும் ஆற்றலும் நிறைந்த ப்ரூஸ் விரைவில் தம் மக்களுக்குத் தலைவரானார். வாலஸின் முடிவோடு ஸ்காட் லண்ட் மக்களின் எதிர்ப்பும் முடிவடைந்துவிடுமென எதிர் பார்த்து ஏமாறிய எட்வர்ட் மீண்டும் அவர்களை அடக்கப் படையெடுத்து வந்தார். ஆயினும், அப்போது அவருக்கு வயது சுமார் எழுபது; அவரது உடல் நலனும் வன்மையும் மிகவும் குன்றியிருந்தன. வடக்கு நோக்கிப் போய்க்கொண் டிருந்த வழியில் ஸ்காட்லண்ட் எல்லைக்கு அருகில் அவர் இறந்துவிட்டார்.

---

1. Robert Bruce. 2. Scone.

பன்னிரண்டாம் அத்தியாயம்

மீண்டும் மன்னருக்கும் மானியதாருக்கும் போர்

(1307—1327)

§ 52. **பியர்ஸ் காவெஸ்டன்**[1] :—இரண்டாம் எட்வர்ட் தந்தைக்குத் தக்க மைந்தரல்லர். இளைஞராயிருக்கும்போதே அவர் குதிரையேற்றம், வாட்போர், ஈட்டிப்போர், வேட்டை முதலிய விளையாட்டுக்களில் பொழுதுபோக்காமல், கெட்ட நடவடிக்கையுள்ள தோழர்களோடு சேர்ந்துகொண்டு சூதாடல் சோம்பிக்கிடத்தல் அற்பகேளிக்கைகள் முதலியவற்றில் காலங்கழித்ததனுல், அவர் தந்தை முதல் எட்வர்டுக்கு அதிக கவலையை உண்டாக்கினுர். அரசரான பிறகும் தம் நிலையின் பொறுப்பையும் பெருமையையும் அவர் உணரவில்லை. ஸ்காட்லண்ட் படையெழுச்சியை அவர் உடனே நிறுத்திவிட்டதோடு, அநுபவமும் நம்பிக்கையு மிகுந்த தம் தந்தையின் ஆப்தர்களாயிருந்த மந்திரிகளையும் நீக்கி, அவர்களுக்குப் பதிலாக தம் உல்லாச நேயர்களை நியமித்துக்கொண்டார். அவர்களுள் ஒருவன் **பியர்ஸ் காவெஸ்டன்** என்னும் பெயர் கொண்டவன். அவன் காஸ்கொனியைச் சேர்ந்த ஒரு இளம் பிரபு; துர்நடத்தையும் தான் என்ற திமிரும் மிக்கவன். வெகு விரைவில் அவன் எல்லோரது வெறுப்பையும் பகையையும் தேடிக்கொண்டான். அரசர் தயவை நாடிவரும் எவரும் முதலில் காவெஸ்டன் தயவை நாடவேண்டியவராயினர். காவெஸ்டனே மிகப் பெரிய பிரபுக்களையும் அலட்சியத் திமிரோடு நடத்தினுன். இது தொல்லையை வலிய

1. Piers Gaveston.

அழைத்தவிதமாயது. பிரபுக்கள் இயற்கையிலேயே மிக்க திமிர் படைத்தவர்கள். முதல் எட்வர்டுக்கே அவர்களை அடக்கிவைத்தல் கஷ்டமாயிருந்தது. திடசித்தமற்ற அவர் மகனால் என்னசெய்ய முடியும்? 1310-ம் ஆண்டில் கூடிய பார்லமென்டில் பிரபுக்கள் தாங்கள் நியமிக்கும் ஒரு சபையின் பொறுப்பில் அரசாங்கம் நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நூறு வருஷங்களுக்குள் மூன்றும் முறையாக இங்லண்டின் துரைத்தனம் பிரபுக்கள் அதிகாரத்தின்கீழ் நடைபெறலாயது. எட்வர்ட் இவ்வேற்பாட்டைச் சிறிதும் எதிர்க்கவில்லை. தமது இராச்சியாதிகாரத்தை இழந்தாவது தம் நண்பன் காவெஸ்டனை அருகில் வைத்துக் கொள்ள அவர் முயன்றார். ஆயினும், பிரபுக்கள் அதற்கு இணங்கவில்லை. கட்டளையிடும் பிரபுக்கள்[1] என்னும் பெயர் பூண்ட ஆட்சிச் சபையினர் ('இராச்சியத்தை முன்னிலும் சீராக ஆள்வதற்கான கட்டளை'களைப்[2] பிறப்பித்ததனால் அவர்களுக்கு அப்பெயர் வழங்கலாயது) காவெஸ்டன் நாட்டைவிட்டுப் போய்விடவேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். அரசருக்குத் தம் நண்பன் காவெஸ்டன் இல்லாமல் வாழ்நாள் பெரும்பாரமாகத் தோன்றியதால், சில மாதங்கள் கழித்து அவர் அவனை மீண்டும் இங்லண்டுக்கு அழைத்துக் கொண்டார். 'கட்டளையிடும் பிரபுக்கள்' இதைப் போருக்கு அறிகுறியாகக் கருதி ஒரு படையைத் திரட்டி காவெஸ்டனைப் பிடித்துக் கொலையாளிகளைக்கொண்டு கொலைசெய்வித்தனர்.

§ 53. பானக்பர்ன்[3]:—அதற்குள் ராபர்ட் ப்ரூஸ் எட்வர்டின் ஊனத்தைக் கண்டு ஸ்காட்லண்டைத் தம்வசப்படுத்திக் கொண்டார். முதல் எட்வர்ட் பல அரணகளைக் கட்டி அவற்

---

1. Lords Ordainers. 2. 'Ordinances for the better government of the realm'. 3. Bannockburn.

றில் இங்லிஷ் காவற்படைகளை வைத்து நாட்டை அடக்கி யாள முயன்றார். ப்ரூஸ் ஒன்றன்பின் ஒன்ருக அவ்வரண் களைக் கைப்பற்றிக்கொண்டார். 1314-ம் ஆண்டில் அவர் ஸ்டர்லிங் அரணை[1] முற்றுகையிட்டார். ஸ்காட்லண்டிலிருந்த இங்லிஷ் காவற்படைக்கு அவ்வரண் மிக முக்கியமானது. அது ப்ரூஸ் வசமானல் ஸ்காட்லண்டை விட்டு இங்லிஷ்காரர் ஓடிவிடவேண்டியவர்களே. இரண்டாம் எட்வர்டுக்குக் கூட அவ் வரணைக் காக்க ஏதாவது செய்யவேண்டுமென்று தோன்றியது. 'கட்டளையிடும் பிரபுக்கள்' அவருக்கு உதவிசெய்ய மறுத்துவிட்ட போதிலும், பெரிக்[2] என்னுமிடத்தில் அவர் சுமாரான பெருஞ் சேனையொன்றைத் திரட்டிவிட்டார். ஆயினும், அவரது மூடத்தனமும் திடமின்மையும் அப்போர் முயற்சிகளுக்குப் பங்கம் விளைவித்தன. படை திரண்ட இடத்திலேயே அவர் நெடுங்காலம் அநாவசியமாகத் தாமதித்ததால், ஸ்டர்லிங் அரணைக் காக்க அவர் சரியான சமயத்தில் செல்ல முடியவில்லை. பிறகு அவர் ஆட்களையும் குதிரைகளையும் விரட்டித் துரத்திக்கொண்டு அதிவேகமாகப் படையெடுத்துச் சென்ருர். அதனுல் அவர் படை ஸ்காட்லண்ட் சேனையைச் சந்திப்பதற்கு முன்னமே அலுத்துக் களைத்துவிட்டது. ப்ரூஸ் தம் சேனையை ஸ்டர்லிங்குக்கு அருகிலுள்ள பானக்[3] என்னும் ஆற்றின் கரையில் அணி வகுத்து நிறுத்தினர். அவர் சேனையில் பெரும் பான்மையோர் குந்தங்களும் கோடரிகளும் கொண்டு போரிட்ட காலாட்கள். எட்வர்டின் சேனையில் குதிரைவீரர்களும் வில்லாட்களும் இருந்தனர். ஆயினும், அவ் வில்லாட்கள் திடுமெனத் தங்களைப் பக்கத்தில் தாக்கிய ஸ்காட்லண்ட் குதிரைவீரர்களால் விரட்டியோட்டப்பட்டனர். இங்லிஷ் குதிரைவீரர்களோ சௌரியத்தோடு

---

1. Stirling Castle. 2. Berwick. 3. Bannock.

முன்னே பாய்ந்தவர்கள் தங்களுக்கு எதிரில் தோண்டி மறைத்துவைக்கப்பட்டிருந்த குழிகளில் விழுந்து தத்தளித்துத் தவித்தனர். அந் நிலையில் ப்ரூஸ் தம் சேனைகளுக்கு முன்னேறிச் செல்லக் கட்டளையிட்டார். தமக்கு வெற்றியில்லையென விரைவில் தீர்மானித்துக்கொண்ட எட்வர்ட் டன்பார்[1] என்னுமிடத்துக்குத் தாண்டுகால் பாய்ச்சலாகக் குதிரையை முடுக்கிச் சென்று, அங்குக் கப்பலேறி இங்லண்டுக்குத் திரும்பினர். தலைவரின்றித் தவித்த இங்லிஷ் படை மிக்க கலவரப்பட்டுக் கலைந்தது. ப்ரூஸ் எதிர்ப்பின்றி ஸ்காட்லண்ட் மன்னரானர்.

§ 54. அரசரின் வெற்றி:—இந்தக் 'கட்டளையிடும் பிரபுக்க'ளை, அரசரின் தீய நடத்தையைக் கண்டு திகைத்து நாட்டுக்கு நல்ல துரைத்தனத்தின் நன்மைகளைத் தேடித் தர வேண்டுமென்று கருதிய தூயமனத் தேசாபிமானிகளென மதித்தல் தவருகும். அவர்களுக்கு உண்மையில் தங்கள் சுய நலத்தைப் பெருக்கிக்கொள்வதே முக்கிய நோக்கமாயிருந்தது. மொத்தத்தில், அவர்களது ஆட்சிக் காலத்தில் நாடு அரசர்கீழ் இருந்ததைவிட அதிகமாகவே சீரழிந்திருந்தது. ஆகவே, அந்நிலையில் அரசரை ஆதரிக்கவும் ஒரு கட்சி தோன்றியது. அக் கட்சியினருள் முக்கியஸ்தர்கள் தகப்பனும் மகனுமான டிஸ்பென்சேர்[2] என்னும் பெயர்கொண்டவர்கள். அவர்களுள் இளையவரான மகன் முன்னர் காவெஸ்டன் இருந்த மாதிரி அரசரின் அந்தரங்க நண்பராக அமைந்தார். அரசரின் ஆப்தர் பிரபுக்களின் விரோதிகளானதில் ஆச்சரியமில்லை. அரசர் தம் தோழரை நாட்டைவிட்டுத் துரத்திவிடவேண்டுமென்று பிரபுக்கள் முன்போல் கிளர்ச்சிசெய்தார்கள். ஆயினும், அவர்கள் இப்போது ஒற்றுமை குன்றியிருந்ததால், அர

1. Dunbar. 2. Despensers.

சர் அவர்களைத் தாக்கத் தம் சேனைகளைத் திரட்டிவந்தபோது, அவர்களால் ஒன்று சேர்ந்து அவரை எதிர்த்துநிற்க முடியவில்லை. 1322-ம் ஆண்டில் யார்க்ஷைரில் பரோபிரிட்ஜ்[1] என்னுமிடத்தில் கலகக்காரர்கள் தோல்வியுற்றனர். கலகத் தலைவர்களைப் பிடித்துச் சிரச்சேதம் செய்துவிட்டு, அரசர் ஒரு பார்லமென்டைக் கூட்டினர். அந்தப் பார்லமென்ட் 'கட்டளையிடும் பிரபுக்கள்' சபையையும் அவர்கள் கட்டளைகளையும்[2] ஒருங்கே விலக்கிவிட்டது. எட்வர்ட் முழு அதிகாரம் வகித்துச் சில வருஷங்கள் துரைத்தனத்தை ஒழுங்காக நடத்தினர்.

§ 55. அரசரின் வீழ்ச்சி:—மீண்டும் அரசருக்குத் தொல்லை தோன்றியது. இச்சமயம் அவருடைய இராணியே அவருக்கு வைரியாகக் கிளம்பினள். இராணி இசபெல்லா அதிகார ஆவலும் ரோஷமும் படைத்த மாது. துரைத்தனத்தில் தனக்கு மிக்க செல்வாக்கு இருக்கவேண்டுமென்பது அவள் விருப்பம். தன் இடத்தை டிஸ்பென்சொர்கள் வகித்துத் தன்னைப் புறக்கணித்தார்கள் என்று அவர்கள்மேல் அவள் கோபமும் பொருமையும் கொண்டாள்: தன்னை அலட்சியப்படுத்திய அரசர்மீது பழிவாங்கவும் அவள் விரும்பினள். அதற்காக அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அவள் ப்ரான்ஸ் மன்னரின் சகோதரியாயிருந்ததால், காஸ்கொனிக்குச் செய்ய வேண்டிய இறைவணக்க விஷயமாக இருமன்னர்களுக்குள்ளும் தோன்றிய தகராறுகளைத் தீர்த்துச் சமரசம் ஏற்படுத்த அவளை எட்வர்ட் ப்ரான்ஸுக்கு அனுப்பிவைத்தார். அங்கே அவள் டிஸ்பென்சொர்களால் நாடுகடத்தப்பட்ட மார்ட்டிமர்[3] என்னும் ஒரு இளம் இங்லிஷ் பிரபுவைச் சந்தித்து அவர்மீது மோகங்கொண்டாள். மார்ட்டிமரும் அவளும் எட்

1. Boroughbridge. 2. Ordinances. 3. Mortimer.

வர்டுக்கு விரோதமாகச் சதிசெய்து 1326-ல் சில படைகளு டன் ஸபக்கில்[1] வந்திறங்கினுர்கள். நாட்டுமக்களுக்கு எட்வர் டிடம் பக்தியும் மதிப்பும் தோன்றியிருந்தால், சதிகாரர் களின் சிறு படையைச் சிதற அடித்தல் அவருக்குப் பெரிய காரியமா யிருந்திராது. ஆயினும், உண்மையில் அவருக்காக ஒருவரும் போரிடத்தயாராயில்லே. முன்னமே அதிருப்தி கொண்டிருந்த பிரபுக்கள் இராணிக்கு ஆதரவாகத் திரண்டு சென்றனர். எட்வர்ட் தென்வேல்ஸில் பதுங்கவேண்டிய தாயிற்று. அங்கும் வஞ்சகர் சூழ்ச்சியால் அவர் விரோதிகள் கையில் சிக்கி பார்க்லி அரணில்[2] சிறைவைக்கப்பட்டார்.

இசபெல்லா இராணி அப்போது ஒரு பார்லமென்டைக் கூட்டினுள். அது, இரண்டாம் எட்வர்ட் தம் சீர்கேடான ஆட்சியால் அரசுரிமையை இழந்துவிட்டாரென்றும், அவர் பதவியை அவர் மகன் வகிக்கவேண்டுமென்றும் முடிவு கட் டியது. சில நாட்களுள் மார்ட்டிமர் சிறையிலிருந்த மன்ன ரைக் கொலேசெய்வித்தார்.

மூன்ரும் எட்வர்டுக்கு அப்போது பதினுன்குவயதே யானதால், அடுத்த மூன்று வருஷங்கள் இசபெல்லாவும் மார்ட் டிமருமே துரைத்தனத்தை நடத்திவந்தார்கள். விரைவில் மார்ட்டிமர் விஷயத்தில் பிரபுக்கள் சீற்றமும் பொருமையும் கொண்டனர். இளம் வயதினரான அரசரைத் தாமே நேரில் அரசவிவகாரங்களேக் கவனிக்கும்படி சிலர் அந்தரங்கமாகத் தூண்டினர். 1330-ல் அவர் திடுமென மார்ட்டிமரைப் பிடித் துச் சிரச்சேதம் செய்வித்து, தம் தாய் இசபெல்லா இராணியை அவள் மானிய நிலங்களில்போய் வசிக்கும்படி அனுப்பிவிட்டார்.

---

1. Suffolk. 2. Berkeley Castle.

பதின்மூன்றும் அத்தியாயம்

மூன்றும் எட்வர்ட்: போர்

(1327—1360)

§ 56. நூருண்டுப் போரின்[1] துவக்கம்:—மூன்றும் எட்வர்ட் தம் பாட்டனுரைப்போல் பெரிய அரசியல் நிபுணரல்லராயினும், இடைக்காலத்து மன்னர்களுள் அவரைப் போலவே மிக்க கண்ணியத்துடன் விளங்கினுர். அவர் உயரமும் அழகும் வாய்ந்த தோற்றத்தினர்; தெம்பும் குதூகலமும் நிறைந்தவர். எவரும் புகழத்தக்க வீரரெனவும் சேனைத் தலைவரெனவும் போர்க்களத்தில் கீர்த்திபெறவேண்டுமென்பது அவரது பேராவல். அவரது நீண்ட ஆட்சிக் காலத்தில் ப்ரான்ஸோடு ஒரு பெரிய போர் தொடங்கியது. அதைச் சரித்திரத்தில் நூருண்டுப்போர் என்பர். ஆயினும், அப்போர் ஒரே தொடர்ச்சியாக நடைபெறவில்லை; இடையில் பல வருஷங்கள் சேர விட்டு விட்டு நடைபெற்றது.

இரு மன்னர்களுக்குள்ளும் நெடுங்காலமாகவே சச்சரவு மூண்டுகொண்டிருந்தது. காஸ்கோனி மானியத்துக்காக ப்ரான்ஸ் மன்னருக்கு இங்லண்ட் மன்னர் செய்யவேண்டிய இறைவணக்கம் அதற்கொரு முக்கிய காரணம். ப்ரான்ஸ் மன்னர்கள் அத்தகைய மாகாணங்களைத் தாமே நேரில் ஆளும் வண்ணம் கைப்பற்றிக்கொண்டு தமது இராச்சியத்தைப் பலப்படுத்திக்கொள்ள விரும்பியதை அதற்கு மூலமாகச் சொல்லலாம் (கு. 25).

இரண்டாவதாக, — அநேகமாக மேற்கூறிய சச்சரவின் பயனுக—இங்லண்டின் ஆதிபத்தியத்தை ஏற்க மறுத்துக்

---

1. The Hundred Years' War.

ப்ரான்ஸ் சிம்மாசனத்துக்கு எட்வர்ட் பாராட்டிய உரிமை

மூன்றும் பிலிப்
1270—1285

- நான்காம் பிலிப் (1285-1314)
  - பத்தாம் லூயி (1314-1316)
  - ஐந்தாம் பிலிப் (1316-1322)
  - நான்காம் சார்ல்ஸ் (1322-1328)
  - இசபெல்லா (இரண்டாம் எட்வர்டை மணந்தார்)
    - மூன்றம் எட்வர்ட்
- வாலே சார்ல்ஸ்
  - ஆரும் பிலிப் (1328-1350)
    - ஜான் (1350-1364)
      - ஐந்தாம் சார்ல்ஸ் (1364-1380)

கொண்டிருந்த ஸ்காட்லண்ட் மக்களுக்கு ப்ரான்ஸ் மன்னர்கள் அடிக்கடி உதவிசெய்துகொண்டிருந்தார்கள் (§ 50). மூன்றும் எட்வர்ட் சிம்மாசன மேறிய பிறகும் இதற்கொரு சந்தர்ப்பம் தோன்றியது. முதல் இரண்டு எட்வர்ட் மன்னர்களை ஆத ரித்து வாலஸுக்கும் ப்ரூஸுக்கும் விரோதமாகப் போரிட்ட ஸ்காட்லண்ட் பிரபுக்கள் சிலர் ப்ரூஸுக்குப் பதிலாக எட்வர்ட் பாலியலை அரசராக்க விரும்பினர்கள். பாலியல் தாம்பெறும் இராச்சியத்துக்காக இங்லண்ட் மன்னருக்கு இறைவணக்கம் செய்யத் தயாராயிருந்ததால், மூன்றும் எட்வர்ட் அவருக்கு ஆதரவளித்தார். அவர் வடக்குநோக்கிப் படையெடுத்துச் சென்று, 1333-ல் ஹாலிடன் குன்று[1] என்னு மிடத்தில், ஸ்காட்லண்ட் தேசாபிமானக் கட்சியினரை முறியடித்தார். இறந்துவிட்ட ப்ரூஸ் மன்னரின் மகனை சிறுபிள்ளை டேவிட் ப்ரூஸ் ப்ரான்ஸுக்கு ஓடவேண்டியதாயிற்று. அவனைப் ப்ரான்ஸ் மன்னர் மிக்க விநயத்துடன் வரவேற்று உபசரித்த தோடு, சில ஆண்டுகளுள் தந்தை சிம்மாசனத்தில் மீண்டும் அமரவும் அவனுக்கு ஆதரவளித்தார்.

பிறகு எட்வர்ட், ப்ளாண்டர்ஸில்[2] நெசவுத்தொழில் செய்துகொண்டிருந்த கென்ட்[3], ப்ரூஷ்[4] நகரங்களின் மக்க ளுக்கு, அவர்கள் தங்கள் அதிபதியான ப்ளாண்டர்ஸ் கௌன் டுக்கு விரோதமாகக் கிளம்பிய ஒரு கலகத்தில் உதவி செய் தார். கௌன்ட் தம் அதிபதியான ப்ரான்ஸ் மன்னரிடம் முறையிட, அவர், எட்வர்ட் தம்மோடு ஒத்த நிலையிலுள்ள மற்றொரு மானியதாரின் அடங்காத குடிகளை ஆதரித்ததால், காஸ்கொனி மானியத்துக்குத் தமக்கிருந்த உரிமையை அறவே இழந்துவிட்டதாகக் கூறினர். அதனல் போர் உடனே மூண்டது.

---

1. Halidon Hill. 2. Flanders. 3. Ghent. 4. Bruges.

போர் தொடங்கிய பிறகு எட்வர்ட் ப்ரான்ஸ் சிம்மாசனத்தில் அமரத் தமக்கே உரிமையுண்டென்று வாதித்தார். அவரது தாய் இறந்துவிட்ட ப்ரான்ஸ் மன்னரது தங்கையானதால், தமக்கு ப்ரான்ஸ் இராச்சியத்துக்கு வாரிசுரிமை உண்டென்று அவர் கூறினர். படைமானிய முறையின் வழக்கப்படி ஒருபெண் தானாக ஒரு மானியத்தைப் பெற்று நிர்வகிக்க முடியாதாயினும், அதற்குத் தனக்குள்ள உரிமையைத் தன் மகனுக்கு மாற்ற முடியும். ஆயினும், ப்ரான்ஸ் மக்கள் இங்லிஷ் மன்னர் ஆளுகையின்கீழ் வாழ விரும்பாததால், அவர்கள் இறந்த மன்னரின் பங்காளியை அரசராக்கிக் கொண்டார்கள். இது நியாயமாக நமக்குத் தோன்றினாலும், மூன்றாம் எட்வர்டுக்கு அவ்வாறு தோன்ற வில்லை. சண்டைக்குக் காரணமாக, ப்ளாண்டர்ஸ் நெசவாளிகள் சச்சரவைவிட, இத்தகைய உரிமையொன்று தமக்குண்டெனச் சொல்லிக் கொண்டு போரிடல் தமக்கு மிக்க பெருமையை அளிக்குமென அவர் நினைத்தார்.

§ 57. ஒரு புதுவகையான பட்டாளம்:—இப்போரின் முற்பகுதியில், அதாவது 1338 முதல் 1341 வரையில், ப்ளாண்டர்ஸ் கப்பல்துறையாகிய ஸ்லூயிஸுக்கு[1] அருகில் ஒரு கடற்போர் நிகழ்ந்தது (1340). எட்வர்ட் அரசரும் அவர் படைகளும் கரையையடைய முடியாதபடி தடுக்க ப்ரான்ஸ் மக்கள் முயன்றும் படுதோல்வியுற்றனர். இதுவே இங்லண்ட் கப்பற்படையின் சரித்திரத்தில் முதல் முதல் ஏற்பட்ட பெரும் வெற்றியாகும். ஆயினும், அவ்வளவு வெற்றிகரமாக வந்திறங்கிய இங்லிஷ் படைகள் அதிகமாக ஒன்றுஞ் சாதித்துவிடவில்லை. வடகிழக்கு ப்ரான்ஸ் நெடுக இருதரத்தார் படைகளும் அங்குமிங்கும் யுத்த முஸ்தீப்போடு நடந்துசென்ற

---

1. Sluys.

பெருமை அதிகமாயிருந்ததே ஒழிய, யாருக்கேனும் எங்காகிலும் ஒரு தீர்மையான வெற்றி கிடைத்ததென்று சொல்வதற்கில்லை. மொத்தத்தில், நாட்டுப்புறங்களில் தழைத்திருந்த பயிர் பச்சைகள் அழிந்தன. முடிவில் இரு மன்னர்களும் கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டுச் சிறிது காலம் போரை நிறுத்திவைக்க உடன்பட்டனர்.

ஆறு வருஷகாலம் போர் நின்றிருந்தது. மீண்டும் போரைத் தொடங்கியபோது, எட்வர்ட் ஒரு புதுமுறையைக் கையாண்டார். படைமானிய முறை இங்லண்டில் நெடுங்காலமாகவே வன்மைகுன்றியிருந்தது; ப்ரான்ஸிலோ அது முழுவன்மையோடு நிலைத்திருந்தது. ப்ரான்ஸ் நாட்டில் பல சிறு நாடுகள் இருந்தன. ஒவ்வொன்றும் அரசருக்கு இறைவணக்கஞ்செய்யக் கடமைப்பட்ட ஒரு பெரிய பிரபுவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அத்தகைய பிரபு ஒவ்வொருவருக்கும் பல கீழ்மானியதார்கள் இறைவணக்கஞ் செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள். இங்லண்டிலோ, அது சிறிய நாடா யிருந்ததாலும், அதை வன்மைமிக்க அரசர்கள் ஒரு தொடர்ச்சியாக ஆண்டுவந்ததாலும், அதன் பிரபுக்கள் சுயாதிகாரம் பெருதிருந்தனர். அரசரது ஆணையை நிறைவேற்றிவைக்க அவரது பிரதிநிதியாக ஒவ்வொரு ஷைரிலும் அரசரது ஷெரிப் இருந்தார்; எங்கும் நீதிமன்றங்களில் அரசரது நீதிபதிகளே தலைமை வகித்திருந்தனர். மேலும், பார்லமென்டின் ஆதரவின்றி எந்த இங்லிஷ் மன்னரும் நீண்ட காலம் போர் நடத்த முடியாது. எட்வர்ட் காலத்தில், பார்லமென்ட், பிரபுக்கள் பிஷப்புகளோடு, நாட்டில் எல்லாப் பாகங்களிலுமுள்ள நைட்டுகளையும் நகரவாசிகளையும் கொண்டிருந்தது (கு. 31,42). ஆகவே, தாம் தொடர்ந்த போரை

வெற்றிகரமாக நடத்துவதற்கு எட்வர்ட் மன்னர் நாட்டு மக்களின் தேசாபிமானத்தைத் தூண்டவேண்டியவரானார்.

மேலும், அதிபதிகளிடமிருந்து பெற்ற நிலங்களுக்காகக் கடமைப்படி அவர்களுக்குப் போரில் துணைசெய்ய வேண்டுமென்னும் படைமானியமுறையின் கொள்கை (§ 16) மாறி, தேசாபிமானத்தோடு நாட்டு மன்னருக்காகச் சம்பளம் வாங்கிக்கொண்டு போரிடும் பழக்கம் ஏற்படலாயது. அம்மாறுதல் பழைய ஆங்லோசாக்சன் காலத்திலிருந்த நாட்டுக் காலாட் படைஞரை நார்மானியர் வெற்றிக்குப் பிறகும் அரசர்கள் போற்றிவந்ததனால் சாத்தியமானது (§ 9). இங்லண்டிலுள்ள கிராமவாசிகள் அனைவரும் அரசருக்கு ஆபத்து வேளைகளில் போரிடத் தயாராயிருக்கப் பழகியிருந்தனர். அத்தகைய சமயங்களில் உதவுவதற்கு அவரவர்கள் தக்க ஆயுதங்களையும் வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்று சட்டம் வற்புறுத்தியது (§ 32). அவ்விதம் பழக்கப்பட்டிருந்த மக்கள் மனத்தில் அவர்கள் தாய் நாட்டினது புகழில் ஒரு பெருமையுணர்ச்சியையும் பற்றையும் தோற்றுவித்து, அவர்களை வெளிநாடுகளோடு போரிடத் தூண்டுதல் எளிது. வெளி நாடுகளில் போரிடச் செல்வதால் அவர்களது சாரமற்ற உழவர் வாழ்க்கையினிடையே உற்சாகங் கொடுக்கும் பல புதிய அனுபவங்கள் ஏற்படலாம்; திரும்பும்போது கொள்ளைப் பொருள்களோடு திரும்பவும் சந்தர்ப்பம் வாய்க்கலாம்; அப்பொருள்களைக்கொண்டு பண்ணையில் தங்கள் நிலைமையையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

§ 58. **க்ரேஸி[1]:—1346**-ல் எட்வர்ட் மன்னர் வில்லாட்களைத் திரட்டுமாறு நாடுமுழுமையும் சுற்றிவர உத்தியோகஸ்தர்களை அனுப்பிவைத்தார். அவ்வில்லாட்களுக்கு வேண்டிய

1. Crecy.

உடை உணவு படை முதலியவற்றின் செலவுகளுக்குப் பார்ல மென்ட் பணம் கொடுத்து உதவியது. வேல்ஸ் மக்கள் நீண்ட விற்களைக்கொண்டே[1] நெடுங்காலம் போரிட்டுப் பழகி யிருந்தார்கள். இங்லிஷ் கிராமவாசிகளும் அவைகளைக் கொண்டு அம்பெய்வதை நெடுநாட்களாக ஒரு விளையாட்டுப் போதுபோக்காக நடத்திவந்தார்கள். இடைவிடாப் பழக் கத்தினுல் அவர்கள் அங்கங்கள் திரண்டு உருண்டு வன்மை யுற்றதோடு, குறிதவருது அம்பெய்வதிலும் அவர்கள் சமர்த்த ராஞர்கள். நூறு காலடிகளுக்கப்பாலிருந்து அவர்கள் எய்யும் அம்புகள் சங்கிலிச் சட்டைகளையும்[2] ஊடுருவிப் பாயும் வேக மும் வன்மையும் கொண்டிருந்தன. நார்மானியர் காலத்துக்குப் பிறகு முதல் எட்வர்டே வில்லாட்களைப் போர்க்களத்துக்கு அழைத்துச் சென்ற முதல் மன்னர். மூன்ரும் எட்வர்ட் ஹாலி டன் குன்றில் இருப்புக்கவசங்கள் அணிந்த நைட்டுகளுக்கு எதிராகவே வில்லாட்களை நிறுத்திப் போரிட்டார். அவ் வில்லாட்களால் அவருக்குஅங்கு ஏற்பட்ட வெற்றியே, நல்ல இயற்கைப் பாதுகாப்புள்ள நிலையில் அமர நேர்ந்தால், ப்ரான் ஸின் பெரும்படைகளையும் அவர்களைக்கொண்டே முறியடிக்க லாம் என்னும் நம்பிக்கையை அவருக்குத் தந்தது.

பன்னீராயிரம் படைஞருடன் (அவர்களுள் மூன்றில் இருவர் வில்லாட்கள்) எட்வர்ட் நார்மண்டி கடற்கரையில் இறங் கிப் பாரிஸ்[3] நகரத்தை நோக்கி மெதுவாகப் படைகளை நடத் திச் சென்ருர். பிலிப் மன்னர் அவரை எதிர்க்க ஒரு பெரிய படைமானிய சைந்யத்துடன்[4] வந்தபோது, எட்வர்ட் திரும்பி சாம்[5] நதிக்கரையோரமாகச் சென்று அதை ஓரிடத் தில் கடந்தார். பிறகு தம் படைகளை நிறுத்திவைக்கத்தக்க இயற்கைப் பாதுகாப்புள்ள ஒரு இடத்தைத் தேடிக்

1. long-bow. 2. chain-mail. 3. Paris. 4. Feudal Army. 5. The Somme.

மூன்றும் எட்வர்ட் காலத்தில் ப்ரான்ஸ்



கொண்டே அவைகளை நடத்திச்சென்றார். அத்தகைய இடம் க்ரேஸி[1] என்னும் ஊருக்கருகில் அவருக்குக் கிடைத்தது (1346). அங்குள்ள ஒரு சிறிய குன்றின்மேல் அவர் தம் வில்லாட்களையும், குதிரைகளைவிட்டு இறங்கிநின்ற போர்வீரர் களையும் நிறுத்தினர். அவர்களுக்குப் பக்க பாதுகாப்பாக ஒருபுறம் சதுப்பு நிலங்களும், மற்றொருபுறம் காடுகளும் இருந்தன. குட்டையான விசைவிற்களை[2] ஏந்தி ஜெனோவாவி லிருந்து கூலிக்குப் போரிட வந்திருந்த சில வில்லாட்களை ப்ரான்ஸ் மன்னர் இங்லிஷ் படையில் குழப்ப முண்டாக்கும் நோக்கத்துடன் முன்னே அனுப்பினர். அதற்குள் தம் குதிரை வீரர்களை வரிசைப்படுத்தி அணிவகுத்து வைத்துக்கொள்ள லாமென்பது அவர் எண்ணம். ஆயினும், ஜெனோவா விசை வில்லாட்கள் இங்லிஷ் படைகளை நெருங்கித் தங்கள் வில்லா யுதங்களை முறுக்குமுன் நெடுந்தூரம் பாயக்கூடிய இங்லிஷ் அம்புகள் அவர்களைத் தைத்து வீழ்த்தின. அதைக் கண்ட ப்ரான்ஸின் குதிரைவீரர்கள் பொறுமையற்றவர்களாய் இங் லிஷ் படையை நோக்கித் தங்கள் குதிரைகளைச் செலுத்தினர் கள். அவர்கள் சென்ற அவசரத்தில் வழியில் தங்கள் படை களைச் சேர்ந்த வில்லாட்களையே மிதித்துத் தள்ளிக்கொண்டு விரைந்தார்கள். அவ்விதம் விரைந்துசென்ற ஆத்திர சூரர் கள் பலரை, அவர்கள் இங்லிஷ் படையை நெருங்குவதன் முன்னரே, இங்லிஷ் வில்லாட்கள் எய்த நீண்ட அம்புகள் தாக்கி வீழ்த்தின. இங்லிஷ் வில்லாட்களிடமிருந்து வரும் ஒவ்வொரு அம்புமாரிக்குப் பிறகும் ப்ரான்ஸ் குதிரைவீரர்க ளுள் வீழாதவர்கள் ஒன்று திரண்டு அணிவகுத்து முற் செல்ல முயன்றும், அவர்களால் முடியவில்லை. ஒரு பக்கத்தில் மட்டும் அவர்களுள் சிலர் இங்லிஷ் படையை நெருங்கிக்

1. Crecy. 2. the crossbow.

கைகலந்தார்கள். ஆயினும், அங்கும் அவர்கள் சில நிமிஷம் போரிட்டதும் முறியுற்றுத் திரும்பினர். அப்பக்கத்து இங்லிஷ் படைக்குத் தலைமை வகித்திருந்தவர் எட்வர்டின் பதினாறுவயது மகனே. அவர் எப்போதும் கறுப்புப் போர்க் கவசம் அணிந்திருந்ததால் அவருக்குக் கரிய இளவரசு[1] என்னும் பெயர் பிற்காலத்தில் வழங்கலாயது. அன்று மாலைக்குள் ப்ரான்ஸ் மன்னர் பெருமைமிக்க தம் சேனையில் எஞ்சியிருந்தவர்களைச் சேகரித்துக்கொண்டு போர்க்களத்தைவிட்டுப் போய்விட்டார்.

எட்வர்ட் மன்னர் தம் வெற்றியைத் தொடர்ந்து எதிரிகளை விரட்டிச்செல்ல முயலவில்லை. காலி[2] வரைக்கும் படைகளை நடத்திச் சென்று அந்நகரை முற்றுகையிட்டார் (1347). ஒரு வருஷத்து இடைவிடாத முற்றுகைக்கப்பால் அந்நகரம் அவர்வசமானது. யூரோப்பில் இங்லண்டின் ஆட்டுமயிர் வியாபாரத்துக்கு அதை முக்கியஸ்தலமாக்க அவர் விரும்பியதால், அங்கிருந்த மக்களனைவரையும் துரத்திவிட்டார். அது முதற்கொண்டு இரு நூற்றாண்டுகள் காலி அவர் நினைத்தபடியே பயன்பட்டது.

§ 59. ப்வாடீயே[3] :—அடுத்த எட்டு வருஷங்களில் போர் என்பது நின்றிருந்தபோதிலும், 1346-ம் வருஷம் இங்லிஷ் சேனையோடு சென்ற இங்லிஷ் போர்வீரர்கள் பலர் ப்ரான்ஸிலேயே தங்கிக் கட்டுக்கடங்காத கூட்டங்களாகப்[4] பிரிந்து கிராமாந்தரங்களைக் கொள்ளையிட்டுப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள். 1355-ல் 'கரிய இளவரசர்' தம் தலைநகரமாகிய போர்டோ[5]விலிருந்து புறப்பட்டுத் தென் ப்ரான்ஸ் நெடுகச் சூறையாடினர். அதனால் மீண்டும் போர்

1. The Black Prince. 2. Calais. 3. Poitiers. 4. Free Companies. 5. Bordeaux.

மூண்டது. அடுத்த வருஷம் அதேவிதமாக வடக்கு நோக்கிச் சூறையாடிச் சென்ருர். ப்வாடீயே என்னுமிடத்தில் ப்ரான்ஸ் மன்னர் ஜான் அவரை மடக்கினுர்(1356). தம் படையை விட ப்ரான்ஸ் மன்னரின் படை மூன்றத்தனைப் பெரிதாக இருந்ததைக் கண்ட எட்வர்ட் இளவரசர், போர்டோவை நோக்கித் திரும்பத் தமக்கு ப்ரான்ஸ் படைகள் தடைசெய்யா திருந்தால், தாம் கைப்பற்றிய கொள்ளைப்பொருள்களையெல் லாம் கொடுத்துவிட்டுப் போய்விடுவதாகக் கூறினுர். ஆயினும், நல்ல சந்தர்ப்பத்தைக் கைநெகிழவிடக்கூடாதென்று தீர்மா னித்த ஜான் மன்னர், எட்வர்ட் இளவரசர் அவரது நைட்டு கள் நூற்றுவருடன் தம் போர்க்கைதி ஆகவேண்டுமென்ருர். அதற்கு இணங்க மறுத்த இளவரசர் ரோஷத்துடன் போரிடத் தயாராஞர்.

அப்போரின் முடிவாகத் தாங்களே ஆச்சரியமுறும்படி அவ்வளவு பெரிய வெற்றியினை இங்லிஷ் படையினர் பெற்ற னர். சண்டை நடந்த இடத்தில் நிலமானது பல வேலிகளால் துண்டிக்கப்பட்டிருந்ததால், ப்ரெஞ்சு படைகள் குறுகிய போர்முனையிலேயே அமராடவேண்டியவர்களா யிருந்தனர். அதனுல் பெருந்தொகையினரா யிருந்தும், அவர்களுக்கு யாதொரு அநுகூலமு மில்லாமல் போய்விட்டது. க்ரெஸியில் இங்லிஷ்காரரது நீண்ட விற்களால் ப்ரெஞ்சுக்காரரின் குதிரை களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டு அமர்க்களத்தில் குழப் பம் தோன்றியதைக் கருதி, இச்சமயம் அவர்கள் காலாட் படைகளைக்கொண்டே போரை நடத்தினர். ஆயினும், அக்காலாட்களின் இருப்புக்கவசங்களையும் இங்லிஷ் வில்லாட் களின் அம்புகள் துளைத்து அவர்களைக் காயப்படுத்தின. முன் னணியிலிருந்தவர்கள் முறியுண்டு பின்னடைந்ததும், பின் னணியில் குழப்பமுண்டானது. அதே சமயத்தில் பக்கத்தி

லிருந்தும் அவர்கள் தாக்கப்பட்டதால் ப்ரெஞ்சு பட்டாளத்தினர் செய்வதின்னதென்று தெரியாமல் தளர்வுற்றனர். உயர்ந்த அந்தஸ்துடையவர்களே நூற்றுக் கணக்கில் ஜான் மன்னரோடு கைதியானார்கள். அப்போரின் விவரங்களைக் குறித்துவைத்திருக்கும் ப்ராய்சார்ட்[1] என்னும் சரித்திராசிரியர், அங்கிலேயில் 'கரிய இளவரசர்' யாவரும் மெச்சும்படியான கண்ணியத்துடனும் மரியாதையுடனும் தம் கையில் சிக்கிய பெரிய மனிதர்களை நடத்தியதாகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். எனினும், அவர்களது சிறைமீட்சிக்கான தொகைகள்[2] செலுத்தப்படும் வரையில் அவர்கள் இங்லண்டிலிருக்க அங்கு அனுப்பப்பட்டனர்.

அதன் பிறகும் நான்கு வருஷங்கள் போர் நடந்தது. பழைய ஆஞ்சவின் பேரரசை எட்வர்டுக்குத் திருப்பியளித்துவிட ஜான் மன்னர் இணங்கினரேனும், ப்ரெஞ்சு பிரபுக்கள் எட்வர்டை அரசராக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். 1360-ல் எட்வர்ட் ப்ரான்ஸ் நாட்டின்மீது மற்றொரு முறை படையெடுத்துச் சென்றார். முடிவில் ப்ரிடிங்னி உடன்படிக்கையின்படி[3] (1360), எட்வர்ட் ப்ரான்ஸ் சிம்மாசனத்துக்குத் தாம் பாராட்டிய உரிமையை விட்டுவிட்டார். அதற்குப் பதிலாக அவர் சுயேச்சாதிகாரத்துடன் ஆக்விடேன், பான்தியூ, காலி[4] நாடுகளின் தனி அரசராக[5] அங்கீகரிக்கப்பட்டார்.

---

1. Froissart. 2. ransom. 3. Treaty of Bretigny. 4. Aquitaine, Ponthieu, Calais. 5. independent sovereign.

பதினான்காம் அத்தியாயம்

மூன்றாம் எட்வர்ட்: அமைதி

(1348—1377)

§ 60. 'கருஞ்சாவு'[1] :—க்ரெஸி வெற்றியும் ப்வாடீயே வெற்றியும் மூன்றாம் எட்வர்டின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த புகழ்பெற்ற சம்பவங்கள்; ஆயினும், நாளடைவில் அதிக முக்கியமானவைகளாகக் கருதப்படக்கூடியவை அவையல்ல. சமூக நிலையில் ஒரு புதிய புரட்சியையே உண்டாக்கி விட்ட 'கருஞ்சாவு' என்னும் ஒரு கொள்ளைநோய் யூரோப்பில் அதிக தீவிரமாகப் பரவி இங்லண்டில் 1348-ல் தோன்றியது. இடைக் காலத்தில் அத்தகைய கொள்ளைநோய்கள் திடுமெனத் தோன்றுவது சகஜமே: அவற்றால் இப்போது ஏற்படும் சேதத்தை விட அக்காலங்களில் அளவிடமுடியாத அதிக சேதம் விளைந்தது. அக்காலத்தவர்களுக்கு மருத்துவ அறிவு மிகக் குறைவே. மேலும், அவர்கள் அசுத்த நீருக்கான வடிகால் வசதிகள் பெற்றிராத ஆரோக்கியம் குறைந்த வீடுகளில் வசித்தார்கள். அதோடு, இத்தகைய கொள்ளைநோய்கள் கடவுள் விதிக்கும் தண்டனைகளாகுமென்றும், அவைகளை முணுமுணுக்காது ஏற்றுக்கொண்டு அவதிப்படல் மக்கள் கடமை என்றும் அவர்கள் கருதினார்கள். ஆயினும், 1348-49-ல் இங்லண்டைப் பீடித்த கொள்ளைநோய் அதற்கு முன் தலைகாட்டியவைகளைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு கொடியதாயிருந்தது. அதன் பலனாகச் சில ஊர்களே இருந்த இடம் தெரியாமல் அழிந்து மறைந்தன. அக்காலத்திய சரித்திரக் குறிப்புக்களை எழுதிவைத்துள்ள ஒருவர்[2], நாட்டின் சில பாகங்களில் ஆடுகள் மேய்ப்பாரின்றித் திரிந்து

1. The Black Death. 2. a chronicler.

கொண்டிருந்தன வென்றும், அறுவடை செய்ய ஆளின்றி வயல்களில் பயிர்கள் மடிந்து மட்கிக் கிடந்தன வென்றும், குருமார்களுள் ஒரு சிலரே நோய்க்குத் தப்பியிருந்ததால் குருமார்கள் அல்லாதவர்களும் இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யலாமெனப் போப் ஆண்டவரே ஒரு உத்தரவு பிறப்பித்தாரென்றும் எழுதி வைத்துள்ளார். சில ஆராய்ச்சியாளரின் அபிப்பிராயப்படி, இங்லண்ட் மக்களுள் சுமார் பாதி தொகையினர் அந் நோயால் மாண்டுவிட்டனர். 1348ஆம்-க்கு முன் இருந்த தொகைக்கு மீண்டும் மக்கள் பெருக இரண்டு நூற்றாண்டுகளாயின.

அதன் விளைவுகள் பலதிறப்பட்டவைகளாகவும் நெடுங் காலத்துக்குப் பாதிப்பவைகளாகவும் இருந்தன (கு. 34). அவற்றுள் உடனே தோன்றிய சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். நிலங்களை உழுவதற்குப் போதிய ஆட்களில்லாமையால் படைமானியப் பண்ணைமுறை கலையலாயது. சென்ற ஐம்பது ஆண்டுகளாகப் பண்ணைக்குடிகள் பலர் தங்கள் பண்ணையாண்டைகளுக்குக் குடிக்கூலிக்காக ஏதோ குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டுத் தாங்கள் பழக்கமாகச் செய்துவந்த பணிகளைச் செய்யாது நிறுத்திக் கொண்டனர். அவ்வாறு செலுத்த வேண்டிய பணத்தை அவர்கள் தங்கள் மிகுதியான விளைபொருள்களைச் சந்தைப் பட்டணங்களிலோ அக்கம்பக்கத்தவர்களுக்கோ விற்றுச் சம்பாதித்தனர். பண்ணைக்காரர்கள் இவ்விதம் கிடைக்கும் குடிக் கூலிப்பணத்தைக் கொண்டு நாட்கூலிக்கு ஆட்களை வைத்துத் தமக்காக வேண்டிய வேலைகளை முடித்துக்கொள்வார்கள். இலவசமாக உழைக்கவேண்டிய பண்ணைக்குடிகள் அரை மனத்துடன் செய்யும் வேலையைவிடக் கூலிக்கு வேலைசெய்ய வரும் ஆட்களிடமிருந்து அதிக வேலை வாங்கலாம். பண்

ணைக்குடிகள் தங்கள் தங்கள் நிலங்களைக் கவனிப்பதிலேயே தான் எப்போதும் கண்ணுங்கருத்துமா யிருப்பார்கள். தங்கள் சொந்த வேலையைவிட்டு ஆண்டைக்கு வெட்டிக்கு உழைக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு அதில் எவ்வாறு உற்சாகம் பிறக்கும்? உழைப்புக்குப் பதிலாகப் பணங் கொடுத்துவிடுவதென்னும் புது ஏற்பாடு பண்ணைக் கணக்குச் சுருளில்[1] பதிவு செய்யப்பட்டது. அப்பதிவின் நகல் ஒன்று அவ்விதம் பணங்கொடுக்கும் பண்ணைக்குடி ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்பட்டது. அவன் 'நகல் பெற்றோன்'[2] என வழங்கப்பட்டான். ஆகவே, 'கருஞ்சாவு'[3] என்னும் கொள்ளை நோய் கண்டதால் நாட்டில் மக்கள்கூட்டம் திடுமெனப் பாதிக்குக் குறைந்துவிட்டதும், கூலிக்கு உழைக்க வந்த ஆட்கள் முன் வாங்கிய கூலியைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமான கூலி கேட்கலாயினர். இதற்குமுன் இத்தகைய விஷயங்கள் பண்டைப் பழக்கத்தால் வரையறுக்கப்பட்டிருந்ததை நாம் முன்னரே கண்டோம் (§ 44). இடுக்கண் நேரும்போது பொருள்களின் விலையையோ உழைப்பின் கூலியையோ அதிகப்படுத்த முயல்வது அக்காலத்தில் பெருங் குற்றமாகக் கருதப்பட்டது. கொள்ளைநோய் தணிந்ததும், மீண்டும் பார்லமென்ட் கூடியபோது, அது கூலியாட்கள் சட்ட[4]மொன்றை நிறைவேற்றியது (1351). அதன்படி எவரும் பழைய கூலிக்கு மேல் அதிகமாகக் கேட்கவும் கொடுக்கவும் கூடாது. ஆயினும், இந்தச் சட்டத்தை நடை முறையில் கொண்டுவர முடியவில்லை. அதிக கூலி கொடுக்காவிட்டால் பயிரே செய்ய முடியாதென்பதை உணர்ந்த பண்ணைக்காரர்கள் வேறு விதியின்றி ஆட்களுக்குக் கூலியை ஏற்றினர்.

1. manorial rolls. 2. 'copy-holder.' 3. The Black Death. 4. A Statute of Labourers.

§ 61. **ஆட்டுமயிர் வியாபாரம்:**—இங்லண்டின் வெளிநாட்டு வியாபாரத்தை வளர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்று என்பதை முதல் முதல் உணர்ந்த மன்னர் மூன்றும் எட்வர்டே. அக்காலத்தில் இங்லண்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களுள் முக்கியமானது ஆட்டுமயிர். இப்போது ஆஸ்திரேலியா ஆடுகளின் மயிரைக்கொண்டு யார்க்ஷைரில் கம்பள நெசவுத் தொழில் நடைபெறுவது போல், இடைக்காலத்தில் இங்லண்ட் ஆடுகளின் மயிரைக் கொண்டு ப்ளாண்டர்ஸில்[1] கம்பளநெசவுத்தொழில் நடைபெற்றது. நூறுண்டுகளுக்கு மேலாகவே இங்லண்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஆட்டுமயிரின்மீது ஒவ்வொரு ஆட்டின் மயிருக்கு இவ்வளவென்று வரி வசூலிக்கப்பட்டு வந்தது. முதல் எட்வர்ட் பழம் பெரும் பழக்கம்[2] என்னும் சட்டத்தினுல் இவ்வரியின் தொகையை நிருணயித்திருந்தார் (1275). மேலும், அவர் யார்க், லின்கன், பிரிஸ்டல், வின்செஸ்டர் என்னும் சந்தைப்பட்டணங்களை[3] ஆட்டுமயிர் வியாபாரத்துக்கான 'ஸ்டேபில்ஸ்'[4] என்னும் முக்கிய இடங்களாகக் குறிப்பிட்டு, அவைகளைச் சூழ்ந்துள்ள பாகங்களில் கிடைக்கும் ஆட்டுமயிர் அனைத்தையும் அவ்விடங்களுக்குக் கொண்டுபோய்த்தான் வெளிநாட்டு வியாபாரத்துக்கு விற்க வேண்டுமென்றும் திட்டப்படுத்தினுர். இந்தத் திட்டத்தினுல் இரண்டு அநுகூலங்கள் ஏற்பட்டன. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வரியைக் கஷ்டமின்றி வசூலித்துக்கொள்ள வசதி யுண்டாயிற்று. வெளிநாட்டு வியாபாரிகளுக்கு அவ்விடங்களில் நேர்மையான வியாபாரம் நடக்குமென்னும் நம்பிக்கையை யுண்டாக்கி, அவர்களுக்குத் தேவையான ஆட்டுமயிர்

---

1. Flanders. 2. 'The Great and Ancient Custom'. 3. market towns.
4. staples.

அனைத்தையும் இங்லண்டிலேயே அவர்களை வாங்கும்படி தூண்டவும் அது உதவியது. 1347-ல், காலி[1] இங்லிஷ் அரசர் வசமானதும், மூன்றும் எட்வர்ட் அப்பட்டினத்தையே இங்லண்ட் ஆட்டுமயிரின் வெளிநாட்டு விற்பனை முழுமைக் கும் தனி வியாபாரத்தலமாக ('ஸ்டேபி'லாக) அமையுமாறு ஏற்பாடுசெய்து, தம் நாட்டில் கிடைக்கும் ஆட்டுமயிரெல்லாம் இங்லிஷ் கப்பல்களில் அங்கு அனுப்பப்படவேண்டுமென்று திட்டம் பண்ணினர். அதனால் நாட்டில் கப்பல்கள் கட்டுதல் கடல்சஞ்சாரம் ஆகிய இரண்டு பெரிய தொழில்கள் வளர லாயின. முடிவாக, அவர் வியாபாரத்தலச் சட்டம்[2] என்னும் சட்டத்தை இயற்றி ஆட்டுமயிர் வியாபார முழுவதையும் ஒரு ஒழுங்கின்கீழ்க் கொண்டுவந்தார் (1353).

ஆட்டுமயிர் நெசவும் இங்லண்டில் அப்போதுதான் வளர லாயது. தங்கள் கௌன்ட்டோடு பகைமை பாராட்டியிருந்த ப்ளாண்டர்ஸ் நெசவாளிகளை (§ 56) மூன்றும் எட்வர்ட் இங் லண்டில் குடியேற்றிவைத்தார். அவர்களிடமிருந்து இங்லிஷ் மக்கள் ஆட்டுமயிரை நெசவுக்குப்பதனிடல் நூற்றல் நெய்தல் முதலியவற்றின் நுட்பங்களைத் தெரிந்துகொண்டார் கள். அரசரும், கம்பள நெசவை விருத்திபண்ண, ஏற்றுமதி யாகும் ஆட்டுமயிரின்மீது விதித்த வரியைவிட, நெய்த ஆடை யின்மீது குறைந்த வரி விதிக்குமாறு சட்டமியற்றிவைத்தார்.

§ 62. போப்பின் அதிகாரத்தைக் குறைத்தல் :—மூன் றும் எட்வர்ட் தம் பாட்டனரைப்போல் சட்டமியற்றுவதில் அவ்வளவு புகழ் பெறுவிட்டாலும், அவரது ஆட்சிக்காலத்துச் சட்டங்களுள் மூன்று நான்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை. கூலியாட்கள் சட்டத்தைப்பற்றி[3] முன்னமே

1. Calais. 2. The Ordinance of the Staple. 3. The Statute of Labourers.

சொன்னோம். இங்லண்டின் மதஸ்தாபனத்தின்மீது போப்பின் அதிகாரத்தைக் குறைக்க இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. மூன்றும் ஹென்றி காலத்தின்போதே இங்லண்டில் போப்பின் அதிகாரத்துக்கு — முக்கியமாக, அடிக்கடி பணம் கேட்டதற்கு — அதிக எதிர்ப்பு தோன்றியதைக் கண்டோம் (§ 37). மூன்றும் எட்வர்டின் காலத்தில் இங்லிஷ் மக்களிடையே நாட்டுப் பற்று வளர வளர இந்த எதிர்ப்பும் வன்மைபெற்று வளர்ந்தது. மேலும், இப்போது அதற்கு ஒரு தனிக் காரணமும் தோன்றி யிருந்தது. 1305-ல் ப்ரான்ஸ் மன்னர் ப்ரெஞ்சு குரு ஒருவரைப் போப்பாக்கி, அவரை ரோமில் வசிப்பதற்குப் பதிலாகத் தென் ப்ரான்ஸிலுள்ள அவீன்யாங்[1] என்னு மிடத்தில் வசிக்கும்படி செய்தார். அடுத்த எழுபது ஆண்டுகளில் போப்புகள் அதிகமாக ப்ரான்ஸ் மன்னர்கள் செல்வாக்குக்கு அடங்கியே இருந்தார்கள். இதை மக்கள் 'பாபிலன் சிறைவாசம்'[2] என வழங்கலாயினர். அந் நிலையில், தாங்கள் நில மன்னர்கள் அதிகாரத்துக்கு அடங்காத சுதந்திரமுள்ளவர்களென்றும், அவர்களுக்கும் மேலான அந்தஸ்தும் அதிகாரமும் படைத்தவர்களென்றும் போப்புகள் சொல்லிக்கொள்ள முடியாது. மேலும், நூறுண்டுச் சண்டை[3] ஆரம்பித்தபோது, தங்கள் எதிரிகளின் குருவுக்கு வணக்கஞ்செய்து காணிக்கை செலுத்தி அவரது குருத்துவத்தின்கீழ்த் தாங்கள் இருக்கவேண்டுமென்னும் நிலை இங்லிஷ் மக்களுக்கு அருவருப்பை உண்டாக்கியது. ஆகவே, பார்லமென்ட் 1351-ல், ப்ரோவைசர்ஸ் சட்டம்[4] என்பதையும், 1353-ல் ப்ரிமியுநைர் சட்டம்[5] என்பதையும் இயற்றியது. முதல் சட்டம் இங்லிஷ் மதஸ்தாப

1. Avignon. 2. The 'Babylonish Captivity'. 3. The Hundred Years War. 4. The Statute of Provisors. 5. The Statute of Praemunire.

னத்து ஆதீனங்களின்[1] வருமானங்களைப் போப்புக்கு அனுப்புவதைத் தடுத்தது (§ 37); இரண்டாவது, போப்பின் நீதிமன்றத்துக்கு வழக்குகளை விசாரணைக்குக் கொண்டுபோவதும், போப்பின் 'புல்'[2] என்னும் ஆஞ்ஞைகளை அரசர் அநுமதியின்றி இங்லண்டுக்குள் கொண்டுவருவதும் சட்டவிரோதமான செயல்கள் என்று நிருணயித்தது.*

§ 63. மதஸ்தாபனச் சீர்திருத்தக் கிளர்ச்சியின் உதயம்:—இந்தச் சட்டங்கள் இங்லிஷ் மதஸ்தாபனத்தைச் சேர்ந்த குருமார்களைப் போப்பின் அளவு மீறிய அதிகாரத்தினின்றும் மீட்கும் நோக்கத்தோடு இயற்றப்பட்டவை. ஆயினும், நெடுங்காலமாக இக்குருமார்களைப் பற்றியே மக்களிடையே அதிருப்தி பரவிவந்தது. பொதுவில் மதஸ்தாபனத்தில் ஏதோ குறை இருந்த மாதிரி தோன்றியது (கு. 36). கிராமக் கோவில்களைச் சேர்ந்த குருமார்கள் உண்மையோடு உழைத்துத் தங்கள் தங்கள் கோவில்களைச் சேர்ந்த மக்களுக்குத் தங்களாலான நன்மையைச் செய்தார்கள். ஆயினும், கல்வியிலும் கலையுணர்ச்சியிலும் அம்மக்களினும் அவர்கள் அதிகமாக மேம்பாடுற்றவர்களாயில்லை. மதஸ்தாபனத்துக்குச் செல்வம்மட்டும் பெருகிக்கொண்டே வந்தது; மார்ட்மேன் சட்டத்தாலும்[3] இதைத் தடுக்க முடியவில்லை. இந்தச் செல்வத்தால் நன்மையைவிடத் தீமையே பெருகியது. மதஸ்தாபனத்தின் செல்வச் சுகங்களை அநுபவிப்பதற்காகவே மக்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் பாத்திரரல்லாத பலர் குருமார்களாயினர். மடாலயங்களும் சீர்கெட்

*'புல்' என்பது போப்பின் ஆஞ்ஞைப் பத்திரத்துக்கு இடப்படும் ஈயமுத்திரையைக் குறிக்கும் 'புல்லா' என்னும் லாடின் சொல்லிலிருந்து வந்தது.

1. English benefices. 2. Bull. 3. The Statute of Mortmain.

டிருந்தன. அப்போதிருந்த திரியுந் துறவிகள் நூறு ஆண்டு களுக்கு முன்னிருந்தவர்களைக் காட்டிலும் பக்தியும் தியாக உணர்ச்சியும் மேம்பட்டவர்களாயில்லை. முக்கியமாக, ஆர்ச் டீகன், டீன், பிஷப் முதலிய உயர்ந்த பதவிகளிலிருந்த குரு மார்கள், பெரும்பான்மையும் செல்வச்சுகங்களை அநுபவித்துக் கொண்டு, தங்கள் பதவிகளுக்குரிய கடமைகளைச் செய்யாமல், உலக விவகாரங்களிலும் இராஜீயவிஷயங்களிலும் தலையிட்டுப் போதுபோக்கிக்கொண்டிருந்தார்கள். மதஸ்தாபனமானது நாளுக்குநாள் அதற்கு அபரிமிதமாக அளிக்கப்பட்டிருந்த செல்வத்துக்கும் சுதந்திரங்களுக்கும் அருகதையாகாத நிலையை அடைந்துகொண்டுவந்தது என்னும் உணர்ச்சி மக்கள் மனத்தில் தோன்றியது. அவ்வுணர்ச்சியே அக்காலம் ஜான் விக்ளிப்[1] (1320—1384) என்பவரது உபந்நியாசங் களில் வெளியானது. விக்ளிப் முதலில் ஆக்ஸ்பர்டில்[2] ஒரு கல்லூரித்தலைவராக இருந்து, பிறகு லெஸ்டர்ஷைரில்[3] லட் டர்வொர்த்[4] என்னுமிடத்தில் ரெக்டர்[5] பதவியிலிருந்தவர்.

மதஸ்தாபனத்துக்குச் சொத்துக்கள் சேர்க்கக்கூடாதென் றும், குருமார்கள் ஆதிகுருக்களைப்[6] போல் பக்திமிக்க எளிய வாழ்க்கையிலேயே பழகவேண்டுமென்றுமே அவர் முதலில் போதித்து வந்தார். நாளடைவில், கல்வியும் சிந்தனையும் பெருகப் பெருக, அப்போதைய மதஸ்தாபனத்தினர் கற்பித்த மதக்கொள்கைகளும் தவறானவை என்று அவருக்குப் புலப் பட்டன. ஆகவே, மதவுணர்ச்சி என்பது ஆன்மாவின் உள் அநுபவமே என்றும், அதற்கும் பகட்டான திட்டங்களுக் கும் சடங்குகளுக்கும் சம்பந்தமேயில்லை யென்றும் அவர் போதிக்கலானார். குருமார்களின் முக்கிய கடமை பாபி

---

1. John Wyclif. 2. Oxford. 3. Leicestershire. 4. Lutterworth. 5. Rector. 6. The Apostles.

களை அவர்கள் செய்த பாபங்களின் தீமையை உணரவைக்க வேண்டியதே. அதைச் சடங்குகளின்மூலம் செய்வதைவிடப் போதனைமூலம் செய்வதே மேல் என்றார் விக்ளிப். 'பொருள் மாற்றம்'[1] என்னும் கொள்கையானது* குருமார்கள் தங்கள் பெருமையைப் பெருக்கிக்கொள்ளக் கற்பித்துக்கொண்ட தாகும் என்பது அவர் கருத்து. 'புனிதக் கூட்டுறவு'[2] என்னும் சடங்கின்போது ரொட்டியும் திராக்ஷரசமும் வைக்கப் படுவதன் ஐதிகம், அக்கூட்டுறவை நாடுவோருக்கு சூக்ஷ்ம மான ஒரு ஆசியை அளிப்பதேயாம் என்று விக்ளிப் போதித் தார். மக்களுக்குக் கடவுளின் போதனை பைபிலில்[3] அடங்கி யிருக்கிறது. ஆகவே, அதை எவரும் தெரிந்துகொள்ளும்படி அவர்கள் தாய்மொழியில் பெயர்த்தெழுதுதல் அவசியம் என்றும் அவர் கூறினார்.

ஆக்ஸ்பார்ட் சர்வகலாசாலையினர் இக்கொள்கைகளை மிக்க ஆர்வத்தோடு அங்கீகரித்துப் பரப்பலாயினர். அதனால் தங்கள் செல்வாக்கு குறைந்துவிடுமோ என்று பிஷப்புகள் பெரிதும் பீதியுற்றனர். ஆகவே, அவர்கள் ஒன்றுசேர்ந்து, விக்ளிப்பின் போதனைகள் மதவிரோதமானவை[4] என்று சொல்லி, அவர் அவற்றிற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றனர். சில ஆண்டுகள் விக்ளிப் அவர்கள் கட்டளையையும் மீறித் தமது கருத்துக்களைப் பகிரங்கமாகப் போதித்து வந்தார். முடிவில் அவர் லட்டர்வொர்த்துக்குச் சென்று தமது பழைய 'ரெக்டர்' பதவியிலமர்ந்து காலங்

---

* 'மாஸ்'[5] என்னும் கோவில் சடங்கின்போது பலிபீடத்தின் மீது படைக்கப்படும் ரொட்டியும் திராக்ஷரசமும் கோவில் குருவின் தெய்விக சக்தியால் கிறிஸ்துநாதரின் உடலும் உதிரமும் ஆகின்றன என்பது 'பொருள் மாற்றம்' என்னும் ஐதிக சம்பந்தமான நம்பிக்கை.

1. Transubstantiation. 2. Holy Communion. 3. The Bible. 4. heretical. 5. Mass.

கழித்து இறந்துவிட்டார். ஆயினும், அவர் தொடங்கிய சீர்திருத்தக் கிளர்ச்சிமட்டும் இறந்துவிடவில்லை. 'ஏழைப் போதகர்கள்'[1] என்னும் ஒரு கூட்டத்தாரை விக்ளிப் கூட்டிப் பழக்கி வைத்திருந்தார். அவர்கள், விக்ளிப் காலமான பிறகும்,இரகசியமாக நாடுமுழுமையும் சுற்றிக்கொண்டுவந்து, மறைமுகமாக அவரது கருத்துக்களைப் போதித்தனர். அவர்களுடைய போதனைகளை ஏற்றுப் பின்பற்றியவர்கள் லாலர்ட்ஸ்[2] எனப்பட்டனர். (துதி பாடல்களை மூக்கால் இழுத்துப் பாடியதால்[3] அவர்களுக்கு அப்பெயர் வந்தது).

§ 64. பெருமையற்ற முடிவு:—ஆரம்பத்தில் வெற்றிகளுடன் துலங்கிய மூன்ரும் எட்வர்டின் ஆட்சிக் காலம் கடைசி பதினைந்து ஆண்டுகளில் பெருமை குன்றி கழிந்தது. ப்ரிடிங்னி[4] உடன்படிக்கையோடு போர் முடிவாக நின்றுவிடவில்லை (§ 59). அதன்படி யூரோப்பில் எட்வர்டுக்கு அளிக்கப்பட்ட நாடுகளின் மக்கள் அவரை அதிபதியாக ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்களிடையே பேர்ட்-ராண்ட் ட்யூ கீஸ்க்லின்[5] என்னும் தலைவரொருவர் தோன்றிஞர். இடைக்காலத்துப் பெருமை மிக்க வீரர்களுள் தலைசிறந்து விளங்கியவர்களில் அவர் ஒருவர். இங்லிஷ் வெற்றிகளுக்கு முக்கிய காரணம் அவர்களது விற்படையே என்பதையும், அவ்விற்படைஞரும் தங்களுக்கெனச் சௌகரியமாக அமைந்த இடத்திலிருந்து அம்பெய்தால்தான் எதிரிகளுக்குச் சேதம் விளைவிக்கமுடியும் என்பதையும் அவர் கண்டுகொண்டாராதலால், நிலையாக எந்த இடத்திலும் நின்று அவர் போரிடுவதில்லை. ஆகவே, அவரை மடக்கி எதிர்க்கும் முயற்சியில் இங்லிஷ் படைகள் நாடு முழுமையும் நடந்தலைந்து

1. 'Poor Preachers.' 2. 'Lollards.' 3. lolled. 4. Bretigny. 5. Bertrand du Guesclin.

களைத்தன. கீஸ்க்லினே யூரோப்பில் இங்லிஷ் அரசருக்குச் சொந்தமாயிருந்த நாடுகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகப் படையெடுத்துச் சென்று அழித்தார். 'கரிய இளவரச'ரும்[1] அப்போது கீஸ்க்லினைத் தடுக்க அசக்தராயிருந்தார். ஒரு கொடிய நோய்வாய்ப்பட்டு அவர் உடல்வலிவும் ஆற்றலும் குன்றியிருந்தார். அங்கிலேயில் (1372-ல்) இரண்டு நாள் நீடித்த லா ரோஷேல்[2] கடற்போரில் இங்லிஷ் கப்பற்படை அழிந்தது. முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஸ்லூயிஸ்[3] கடற்போருக்குப் பிறகு இங்லிஷ் கப்பல்கள் யாதொரு தங்கு தடையுமின்றி நிர்ப்பயமாக இங்லிஷ் கப்பல்துறைகளுக்கும் யூரோப்புக்குமாக வந்துபோய்க்கொண்டிருந்தன. லா ரோஷேல் தோல்விக்குப் பிறகு இந்தக் கடலாட்சியை[4] இங்கிலண்ட் இழந்தது. 1375-ல் மற்ருெரு சமாதானம் ஏற்பட்டது. அதன் பிறகு ப்ரான்ஸில் இங்லிஷார் வசமிருந்த பாகங்கள் காலியையும்[5] போர்டோவையும்[6] சூழ்ந்திருந்த நிலங்களேயாம் (கு. 37).

இத்தோல்விகளின் மூலகாரணம் இங்லிஷ் துரைத்தனத்தில் ஒற்றுமையின்மையேயாம். நிறைந்த ஆண்மையும் ஆற்றலும் பெற்றிருக்கவேண்டிய சமயத்தில் எட்வர்ட்மன்னர் அறிவீனமாக நடந்துகொண்டார். ஆலிஸ் பெரொர்ஸ்[7] என்னும் சுயநலமிக்க துஷ்டையொருத்தியின் மோகவலையில் சிக்கி அவர் தமது அரசபொறுப்புக்களைக் கவனியாதிருந்தார். ப்ரான்ஸில் தம் வசத்திலிருந்து நழுவிக்கொண்டே போன நாடுகளை மீட்க அவர் யாதொரு முயற்சியும் செய்யாதிருந்ததோடு, துரைத்தனத்திலும் தம் பிடியை நெகிழவிட்டார். பெரிய ஆலோசனை சபையில்[8] இரு கட்சிகள் செல்வாக்குக்

---

1. The Black Prince. 2. La Rochelle. 3. Sluys. 4. command of the sea. 5. Calais. 6. Bordeaux. 7. Alice Perrers. 8. The Great Council.

காகப் போட்டியிட்டன. அவற்றுள் 'கரிய இளவரச'ரின் நண்பர்களைக் கொண்டது ஒரு கட்சி. அவரோ படுக்கையாய்க் கிடந்தார். மற்றொன்றின் தலைவர் அரசரின் இளைய பிள்ளைக ளுள் ஒருவரும் லான்காஸ்டர் ட்யூக்குமான ஜான் அப் காண்ட்[1] என்பவர் (கு. 38). 1376-ல் 'கரிய இளவரசர்' வாழ்க்கையில் சலிப்புற்று இறந்தார். அவரது முடிவு காலத்தில் தமக்குப்பின் அரசபட்டத்துக்குத் தம் குழந்தையின் உரிமை புறக்கணிக் கப்படுமோ என்று அவர் பயந்திருந்தார். ஆபினும், அப்பயம் ஆதாரமற்றதே. 1377-ல் கிழ எட்வர்டும் தம் பழைய பெருமையெல்லாம் மங்கி இறந்தார். உடனே 'கரிய இள வரச'ரின் நண்பர்கள் ஒன்று சேர்ந்து அவரது மகனை இரண் டாம் ரிச்சர்டாகப் பட்டங் கட்டி வைத்தனர்.

பதினைந்தாம் அத்தியாயம்

உழவர் கலகம்[2]

(1377—1399)

§ 65. **பண்ணை முறையின் சிதைவு[3]:**—இளமன்னர் ரிச் சர்ட் ஆட்சியின் நான்காமாண்டில் நாட்டு உழவர்களிடையே ஒரு பெருங் கலகம் தோன்றியது. அதன் மூல காரணங்க ளைத் தெளிவாக உணர்ந்துகொள்வதற்கு நாட்டு மக்க ளிடையே 'கருஞ்சா'வின்[4] விளைவுகளை ஊன்றி ஆராய வேண்டும்.

அக் கொள்ளைநோய் தோன்றியதற்கு நெடுநாட்க ளுக்கு முன்னிருந்தே, பண்ணைகளின் சொந்தக்காரர்கள்,

---

1, John of Gaunt, Duke of Lancaster. 2. The Peasants' Revolt. 3. the break-up of manorial life. 4. The Black Death.

பண்ணைக்குடிகளிடமிருந்து இலவச வேலையைக் காணிக்கை யாகப் பெற்றிருந்ததை விட்டு, குடிக்கூலிக்காகப் பணத்தை வாங்கிக்கொண்டு, அதைச் செலவழித்துக் கூலியாட்களை வைத்து வேலை வாங்கி வரலாயினர் (§ 60). ஆயினும், கூலி யாட்களும் தங்கள் வகையினரின் தொகை குறுகிவிட்டதை யுணர்ந்து அதிக கூலி கேட்க ஆரம்பித்தபோது, பண்ணைக் காரர்கள் தாங்கள் குடிக்கூலிக்கு இலவச வேலையைத் தள்ளி விட்டுப் பணக்காணிக்கை வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண் டது தப்பு என்று நினைத்தார்கள். 'நகல் பெற்றவர்கள்'[1] வாரத்தில் இரண்டு நாள் செய்யவேண்டிய இலவச வேலைக் குப் பதிலாகக் கொடுத்துவந்த இரண்டு பென்ஸ், அங்கிலையில், இரண்டு நாட்களுக்கு ஒரு கூலியாளுக்குக் கொடுக்கப் போத வில்லை. ஆகவே, பண்ணைச் சொந்தக்காரர்கள் பலர் 'நகல் பெற்றோர்' அதிக குடிக்கூலிப் பணம் கொடுக்கவேண்டு மென்று வற்புறுத்தலாயினர். அது காரணமாகப் பல இடங் களில் சச்சரவுகள் தோன்றின. சில பண்ணைக்காரர்கள் வேலை யாட்கள் பழைய கூலிக்கே உழைக்கவேண்டுமென்று கட்டா யப்படுத்தினர். கூலியாட்கள் சட்டத்தில்[2] (§ 60) விதிக்கப் பட்டிருந்த தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன. பழுக்கக் காய்ந்த இரும்பினால் சூடுபோடுவதும் அத் தண்டனைகளுள் ஒன்று. இக் கொடுமைகளால் அதிருப்தியும் மனச்சலிப்பும் முரட்டு எதிர்ப்பும் பெருகின. மேலும், இன்னும் பண்ணை யாண்டைக்கு இலவச ஊழியம் செய்துவரும் பண்ணைக்குடி கள்[3]—பல இடங்களில் நாட்டு மக்களுள் பெரும்பான்மை யோர் இவர்களே—சுதந்திரம் பெற்ற கூலியாட்களுக்கு நல்ல கூலி கிடைக்கத் தாங்கள் மட்டும், கூலிகளை உயர்த்திய 'கருஞ் சாவு'க்குப் பிறகும், பழையபடியே தங்கள் ஆண்டையின்

1. copy-holders. 2. The Statute of Labourers. 3. villeins.

10

நிலத்தில் இலவசமாக உழைக்கவேண்டுமென்னும் நிபந்தனை யால் மிக்க அதிருப்தி யடைந்தனர். இலவச உழைப்புக்குப் பதிலாகத் தங்களிடமிருந்தும் குடிக்கூலிப்பணம் வாங்கிக் கொள்ளும்படி அவர்கள் முறையிட்டார்கள். பண்ணையாண் டைகள் அதற்கு இணங்காவிட்டால், அக் குடிகளுள் பலர், தாங்கள் பிறந்து வளர்ந்த ஊர்களை விட்டு ஓடி, நெடுந்தொலை விலுள்ள வேறு பண்ணைகளில் கூலிக்கு உழைக்க முற்பட் டார்கள். பழைய பண்ணைமுறையில் ஒரு பண்ணையைவிட்டு மற்றொரு பண்ணைக்கு ஆட்கள் இவ்விதம் போகமுடியாது. ஒவ்வொருவனுக்கும் அவனவன் பிறந்த ஊரிலேயே உரிமை கள் அமைந்திருந்ததால், அந்நியன் எவனும் அங்கு வந்து சேருவதற்கில்லை. ஆயினும், புதிய நிலையில், மானியதார்களின் ஏஜெண்டுகளான பெய்லிப்புகள்[1] தங்கள் கண்காணிப்பி லுள்ள நிலங்களைப் புதிய ஆட்களை வைத்து உழுது பயிரி டத் தயாராயிருந்தனர். ஆகவே, ஓடிவிட்ட பண்ணையாட்க ளைப் பிடித்துக்கொண்டுவர முடியாமல் பல பண்ணைக் காரர்கள் தவித்தார்கள். மேலும், ஓடிவிட்ட பண்ணையாட்க ளுள் சிலர் உடல் நோவ உழைப்பதற்குப் பதிலாகக் காடுகளி லும் கரடுகளிலும் கள்வர்களாகத் திரியலாயினர். அவர்க ளால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பிரயாணம் செய்யவேண்டிய மக்களுக்கு ஆபத்தேற்பட்டது. நாட்டு வியாபாரமும் பாதுகாப்பின்மையால் ஒடுங்கியது.

ஓடியவர்களுள் பலர் பட்டணங்களுக்கும் சென்றார்கள். அக்காலத்தில், பண்ணைக்குடி எவனேனும் ஒரு பட்டணத் தில் ஓராண்டும் ஒரு நாளும் வசித்துவருவானானால், அவன் அதன் பிறகு விடுதலைபெற்றவனாவான் என்னும் ஒரு விதி யிருந்தது. 'தொழிற்சங்க முறை'யின்கீழ்ப்[2] பட்டணங்

1. Bailiffs. 2. The Gild System.

களில் அந்நியர்க்கு வேலை கிடைப்பது கடினம். ஆகவே, ஓடிவிட்ட பண்ணையாட்களால் பட்டணங்களிலும் தொல்லைகள் ஏற்பட்டன. நாட்டில் மிகப் பெரிய நகரமாயிருந்த லண்டனில் இத்தொல்லை மிகுதியும் காணப்பட்டது.

§ 66. ஆள்வரி[1]:—ஆகவே, 1380-ல், நாட்டின் ஏழை மக்கள் கலகஞ் செய்யும் மனநிலையி லிருந்தார்கள். கலகத் தீயை மூட்ட ஒரு புதிய குறைதான் தேவை. அக்குறையும் ஒரு புதிய வரியின் வடிவில் அப்போது தோன்றியது.

நெடுங்காலமாகவே இங்லிஷ் மன்னர்களுக்கு அமைதிக் காலங்களிலும் செலவுக்கேற்ற வருமானம் கிடைப்பதில்லை. படைமானிய முறை வலுத்திருந்த ப்ரான்ஸில்விட இங்லண்டில் துரைத்தனச் செலவு அதிகம். ப்ரான்ஸில் துரைத்தனப் பொறுப்பில் பெரும்பாகம் பெரிய மானியதார்கள்வசமே இருந்தது. அவர்கள் தங்கள் தங்கள் நாடுகளில், மன்னர் அதிகாரத்துக்குப் புறம்பாக, அநேகமாகத் தனியாட்சி செலுத்திவருபவர்களைப்போல் ஆண்டார்கள். 'அரசர் தம் வருமானத்தைக்கொண்டே காலந்தள்ளவேண்டும்'* என்னும் ஒரு கொள்கை இங்லண்டிலும் அக்காலத்தில் வேரூன்றியிருந்தது. மேலே விவரித்துள்ள நிலையில் இவ்வருமானங்களைக் கொண்டே துரைத்தனத்தை நடத்தல் நாளுக்கு நாள் கஷ்டமாகிக்கொண்டு வந்தது. போதாக் குறைக்கு ப்ரான்ஸோடு போர் மீண்டும் மூண்டது. அதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியொன்றும் இங்லிஷாருக்குக் கிடைத்திலது. ஆயி

1. The Poll Tax.

*அதாவது, கீழ்க் குறிப்பிட்டுள்ள வருமானங்களைக்கொண்டு அரசர் துரைத்தனத்தை நடத்தவேண்டும்:—

(1) தம் சொந்த பண்ணைகளிலிருந்து வருவது; (2) காடுகளிலிருந்து வருவது; (3) உதவிப் பணங்கள், வாரிசு இறை, பாதுகாப்புரிமை முதலிய வருமானங்கள்; (4) ஆட்டுமயிர் முதலிய சில ஏற்றுமதிச் சரக்குகளின் மீது தண்டப்படும் சுங்கவரிகள் (§ 61).

னும், பழைய படைமானிய ஏற்பாட்டின்கீழ்த் திரட்டப்பட்ட சேனைகளுக்குக்காட்டிலும் இங்லிஷார் அப்போது திரட்டிய சேனைக்குச் செலவு அதிகமானது (§ 57).

ஆகவே, ஆள்வரியொன்று விதிக்க அரசாங்கத்தார் தீர்மானித்தனர். அதாவது, இங்லண்ட் மக்களுள் ஒவ்வொரு ஆளும் தலைக்கு ஒரு ஷிலிங் கொடுக்கவேண்டும். இது ஒரு புதுமையான வரி. அதுவரையில் நாட்டு உழவர்கள் நேராக அரசாங்கத்துக்கு யாதொரு வரியும் கொடுத்ததில்லை. ஏழைகளிடமிருந்து குறைவாகவும் பணக்காரர்களிடமிருந்து அதிகமாகவும் வாங்க ஒரு திட்டம் வகுக்க முயன்றார்கள். அப்படியும் ஒரு சாதாரணமான கூலியாள் தான் கொடுக்கவேண்டிய வரிக்காக இரண்டுவாரத்துக்கூலியைச் சேர்த்துக் கொடுத்துவிடவேண்டியிருந்தது. இந்தக் காலத்தில்கூட அவ்வளவு தொகையைத் தண்டுதல் கடினமாயிருக்கும். பணச்செலாவணி குறைவாயிருந்த அக்காலத்திலோ அது மிகமிகக் கடினமாயிருந்தது. ஆகவே, 1381-ம் ஆண்டில், அவ்வரி இருமுறை விதிக்கப்பட்டதால் அதற்குப் பலத்த எதிர்ப்புத் தோன்றியது.

§ 67. **கலகம்** :—எசெக்ஸில்[1] ப்ரென்ட்உட்[2] என்னுமிடத்தில் கலகம் ஆரம்பித்தது. அங்குள்ள மக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து வரி தண்ட வந்தவனை எதிர்த்து லண்டனுக்கு ஓட்டிவிட்டனர். தங்கள் நடத்தையின் விளைவுக்கு அஞ்சியவர்களாய் அவர்கள் உடனே நாலா பக்கங்களிலும் பிரிந்து சென்று அக்கம்பக்கத்திலுள்ள ஊர்களின் மக்களையும் கலகஞ்செய்யத் தூண்டினார்கள். அன்றைக்கே கென்ட்[3] பிரிவிலுள்ள க்ரேவ்ஸ்எண்டிலும்[4] கலகம் ஏற்பட்டது. ஓடிவிட்ட தன் பண்ணையாளைப் பிடிக்க முயன்றுகொண்

1. Essex. 2. Brentwood. 3. Kent. 4. Gravesend.

டிருந்த பண்ணைக்காரன் ஒருவனது திமிர்மிகுந்த நடத்தை யால் அது மூண்டது. சில நாட்களுள் லண்டனைச் சூழ்ந்த நாடு முழுமையும் குழப்பம் மேலிட்டது. கென்ட் பிரிவின் மக்கள் ப்ளாக்ஹீத்[1] என்னுமிடத்தில் கூடினார்கள். அவர் களுக்கு, ஜான் பால்[2] என்னும் குரு ஒருவர், சிருஷ்டியில் மக்கள் அனைவரும் ஒரே மாதிரியாகத்தான் தோற்றுவிக்கப் படுகின்றனர் என்று போதித்தார். ப்ரான்ஸில் போராடித் திரும்பிய வாட் டைலர்[3] என்பவன் அம்மக்களுக்குத் தலைமை பூண்டான். அவனுடைய பழைய கதை எவ்வாறாயி னும், கும்பலாகச் சேரும் மக்களை ஊக்கவும் அடக்கவும் அவ னுக்கு ஆற்றல் மிகுதியாக இருந்தது. அக்காலங்களில் அர சாங்கத்துக்கென்று நிலையான சேனையில்லை. அரசரின் ஆலோ சனை சபை சேனைகளைத் திரட்டுவதற்குள் லண்டனுக்கு வரும் சாலைகளெல்லாம் கலகக்காரர் வசமாயின. அரசரின் ஆலோசனை சபையினர்க்கும் எசெக்ஸ் பிரிவின் கலகக்காரர் களுக்கும் மைல்எண்டில்[4] நடந்த ஒரு சமரசப் பேச்சின்[5] முடிவாக, உழவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்ப தாக வாக்குறுதி கொடுத்தனர். அவை யாவன :—பண்ணைக் குடிகள் அனைவரும் தாங்கள் பெற்றுள்ள நிலங்களுக்காகத் தங்கள் ஆண்டையின் நிலங்களில் இலவசமாக உழைக்க வேண்டிய நிபந்தனையினின்றும் விடுவிக்கப்படவேண்டும்; ஏகராவுக்கு நான்கு பென்ஸ் வீதம் அவர்களுக்கு நிலங்கள் விடப்படவேண்டும்.

இதற்குள் கென்ட் பிரிவினர் சிலர் லண்டனுக்குள் நுழைந்து அங்கு அதிருப்தியுடனிருந்தவர்களையெல்லாம் கலகஞ்செய்யத் தூண்டிவிட்டார்கள். கலகக்காரர்கள் லண்

---

1. Blackheath. 2. John Ball. 3. Wat Tyler. 4. Mile End. 5. parley.

டன் டவர்[1] என்னும் அரணைத் தாக்கினார்கள்; ஆலோசனை சபையின் முக்கிய அங்கத்தினர் சிலரைக் கொலை செய்துவிட்டார்கள். மீண்டும் உழவர்களின் குறைகளை நீக்கச் சமரசம் பேச ஏற்பாடாயிற்று. அதற்குமேல் அந்நிலையில் அரசாங்கத்தாரால் வேறொன்றுஞ் செய்ய முடியவில்லை. சமரசப் பேச்சு லண்டனின் ஆல்டர்ஸ்கேட்[2] என்னுமிடத்துக்குப் புறம்பாகச் சுற்றிலும் வீடுகள் அமைந்திருந்த ஸ்மித்பீல்ட்[3] என்னும் ஒரு வெளியில் நிகழ்ந்தது. டைலர்[4] கலகக்காரர் தலைமையில் குதிரைமீது அமர்ந்திருந்தார். நேர் எதிர்ப்புறத்தில் அரசரும் அவரது அணுக்கர்களும்[5] குதிரைகளின்மேல் அமர்ந்திருந்தனர். உழவர்கள் குறைகளைச் சொல்ல டைலர் முன்வந்தார். வாய்ப்பேச்சு வாள்வீச்சில் முடிந்தது. லண்டன் நகரத்து லார்ட் மேயர்[6] டைலரைக் குத்திக்கொன்றார்: உடனே கலகக்காரக் கும்பல்கள் ஆத்திரத்துடன் பாய்ந்துவந்தன. அரசரும் அவரைச் சூழ்ந்திருந்தவர்களும் அப்படியே அழிந்துவிட வேண்டிய ஆபத்தான நிலையிலிருந்தார்கள். அப்போது அரசர் சமயோசிதமான அறிவுடன் வெகு சமர்த்தியமாகவும் சாதுரியமாகவும் நடந்துகொண்டார். அப்போது அவருக்கு வயது பதினான்கே. தம் குதிரையை முன் நடத்திச்சென்று அவர் கலகக்காரர்களை நோக்கி, 'ஐயா, உங்கள் அரசரையா நீங்கள் கொல்லப்போகிறீர்கள்? இந்த டைலர் ராஜத்துரோகி. நானே உங்கள் தலைவனாவேன். நீங்கள் கோருவதையெல்லாம் நான் உங்களுக்குத் தருவேன்' என்றார். தங்கள் இளமன்னர் அவ்வளவு தைரியத்தோடும் துணிச்சலோடும் முன் வந்து கூறியதை அவர்கள் மெச்சி, உடனே கோபந்தணிந்த

1. Tower of London. 2. Aldersgate. 3. Smithfield. 4. Tyler.
5. courtiers. 6. The Lord Mayor of London.

வர்களாய், ஜெயகோஷம் செய்தனர். அதோடு உழவர் கலகம் முடிந்தது. மறுநாளே உழவர்கள் மிக்க மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் அரசரை வாழ்த்திக்கொண்டும் புகழ்ந்து கொண்டும் லண்டனைவிட்டுத் தங்கள் ஊர்களுக்குத் திரும்பினார்கள்.

ஏழைமக்கள் நம்பி மோசம்போயினர். அரசர் செய்த வாக்குறுதி வெறுங்காற்றில் கலந்த பேச்சாய்விட்டது. கும்பலாகச் சேர்ந்திருந்தபோதுதான் உழவர்களுக்கு எல்லோரும் பயப்பட்டனர். கும்பல் கலைந்து அவர்கள் நாலா பக்கங்களிலும் சிதறியதும், அவர்களைத் துரத்திச்சென்று தாக்கக் குதிரைவீரர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் வாட்களுக்கும் ஈட்டிகளுக்கும் தப்பியவர்கள் நூற்றுக்கணக்காகத் தூக்கிலிடப்பட்டனர். ஜான் பாலும் தூக்கிலிடப்பட்டார். பண்ணையாட்களுக்கு விடுதலையளிப்பதாகக் கூறப்பட்ட உறுதிமொழி முறிவானது. அவர்களுள் சிலர் ரிச்சர்டைக் காணவந்து, அவர் கூறிய உறுதிமொழியை அவருக்கு நினைவூட்டியபோது, அவர் அவர்களைப் பார்த்துப் பரிகசித்தார்: "நீங்கள் பண்ணையடிமைகளாக[1] இருந்தவர்கள்; அப்படியே இருக்கிறீர்கள்; எப்போதும் அப்படியே இருப்பீர்கள்" என்றுகூறி அவர்களைத் துரத்திவிட்டார்.

இக்கலகம் வெற்றிபெருததால் பண்ணையாட்கள்[2] நகல் பெற்ருேர்களாக[3] மாறல் சிறிதுகாலம் தடைப்பட்டிருந்தது. உழைக்க வந்தவர்களின் தொகைக் குறைவினல் ஏற்பட்ட நிலைமட்டும் நாளுக்குநாள் சிக்கலாய்க்கொண்டு வந்தது. வேலையாகவேண்டுமென்ருல் பண்ணையடிமைகளுக்கு விடுதலையளித்தாகவேண்டு மென்பதை மானியதார்கள் நன்ருக உணர்ந்துகொண்டார்கள். 1500-க்குள் இங்லண்டில்

---

1. serfs. 2. villeins. 3. copy-holders.

'செர்ப்ஸ்'[1] என்னும் பண்ணையடிமைகளைக் காண்பது அரிதாய்விட்டது.

§ 68. மீண்டும் மன்னர்க்கும் பிரபுக்களுக்கும் போர்:—ஸ்மித்பீல்ட்[2] வெளியில் இளமன்னர் ரிச்சர்ட் காட்டிய தைரியத்தையும் சமயோசித அறிவையும் கண்டவர்கள் எல்லோரும் அவர் வயது ஏற ஏற ஆற்றல் மிக்க அரசராவாரென்று எண்ணினார்கள். இந்த நம்பிக்கையில் அவர்கள் ஏமாற்றமடைந்தனர். புத்திகூர்மை தைரியம் வசீகரம் முதலிய குணங்களோடு அவர் விளங்கினாரேனும், ஆத்திரம் பிடிவாதம் முதலிய கெட்ட குணங்களும் அவரிடமிருந்ததால், நேர்மையும் நிதானமுமிக்க முறைகளை அவரால் கையாள முடியவில்லை. நிறையும் நிதானமு மற்றிருந்ததாலேயே, அவர் சீரழிந்து, நாற்பது வயதடைவதற்கு முன்னமே, பரிதாபகரமான முடிவைத் தேடிக்கொண்டார்.

அரசாங்கத்தைத் தாமே நிருவகிக்கக்கூடிய வயதடைந்ததும், ரிச்சர்ட் பார்லமென்ட் நியமித்த மந்திரிகளையெல்லாம் விலக்கிவிட்டுத் தம் மனத்துக்கு உகந்தவர்களை வைத்துக் கொண்டார். அவர்களுள் சிலர் (சப்பக் ஏர்லான[3] மைகேல் டி லா போல்[4] என்பவரைப் போன்றவர்கள்) அநுபவமுதிர்ந்த அரசியல் நிபுணர்கள். ஆக்ஸ்பர்ட் ஏர்லான[5] ராபர்ட் டி வீர்[6] என்பவரைப் போன்ற மற்றவர்களோ அவரது வாலிப நண்பர்கள்; அவரைப்போன்ற அநுபவமற்ற இளைஞர்கள். ஆகவே, பிரபுக்களிடையே அரசரின் சிற்றப்பனான க்ளாஸ்டர் ட்யூக்கின்[7] தலைமையில் ஒரு எதிர்க்கட்சி தோன்றியது. அக் கட்சியினர் அரசாங்கத்தை நடத்தப் பிரபுக்கள் சபையொன்று

---

1. serfs. 2. Smithfield. 3. Earl of Suffolk. 4. Michael de la Pole. 5. Earl of Oxford. 6. Robert de Vere. 7. The Duke of Gloucester.

(இரண்டாம் எட்வர்ட் காலத்தி லிருந்ததைப் போல்) நியமன மாகவேண்டுமென்று கூறி, அதற்கு ரிச்சர்ட் இணங்காவிட்டால் அவருக்கும் அம்மன்னரின் கதியே வாய்க்குமென்று மிரட்டினர். சிறிதுகாலம் ரிச்சர்ட் அவர்கள் மிரட்டலுக்கு இணங்காதிருந்தார்; டி வீர் என்பவரை ஒரு சேனை திரட்ட அனுப்பினார். டி வீர் திரட்டிய சொற்ப படைவீரர்களை ராட்காட் பிரிட்ஜில்[1] க்ளாஸ்டர் ட்யூக் முறியடித்தார் (1387). ரிச்சர்ட் பிறகு இணங்கிவரவேண்டியதாயிற்று. க்ளாஸ்டரும் வேறு நான்கு பிரபுக்களும் ரிச்சர்டின் நண்பர்களையெல்லாம் இராஜத் துரோகிகளென்று குற்றஞ் சாட்டினர். டி வீர் உட்பட அவர்களுள் சிலர் யூரோப்புக்கு ஓடித் தப்பினர்; மற்றவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். பிறகு, நாட்டின் துரைத்தனம், எழுபதாண்டுகளுக்கு முன் 'கட்டளையிடும் பிரபுக்கள்'[2] வசத்திலிருந்தது போல் (§ 52), மேலே குறிப்பிட்ட நீதியைக் கோரும் பிரபுக்கள்[3] வசமானது.

ரிச்சர்ட் தற்காலிகமாக அடங்கியிருந்தார். 'நீதியைக் கோரும் பிரபுக்கள்' தங்கள் கொடுமைகளாலும் சுயநலப் பேராசையாலும் விரைவில் தங்களை எல்லோரும் வெறுக்கும்படி வைத்துக்கொண்டனர். ரிச்சர்ட் சமயம் பார்த்திருந்து திடுமெனத்தாமே அரசாங்க காரியங்களை நிருவகிக்கப்போவதாகச் சொன்னபோது, அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ரிச்சர்ட் வெற்றிபெற்றும் மிகவும் பெருந்தன்மையாக நடந்துகொண்டார். தம்மை இழிவுபடுத்தியதோடு தம் தோழர்களையும் சிரச்சேதம் செய்துவைத்தவர்கள்மீது அவர் அப்போது நன்றாய்ப் பழிவாங்கிக்கொண்டிருக்கலாம். ஆயினும், அவர் அவர்களுள் சிலரைத் தமது ஆலோசனை சபையில் சேர்த்துக்கொண்டார். அதுமுதல் எட்டு வருஷ காலம்

1. Radcot Bridge. 2. The Lords Ordainers. 3. Lords Appellant.

அவர், இடைக்காலம் முழுமையிலும் அவ்வளவு ஒழுங்கான ஆட்சியினை இங்லண்ட் மக்கள் கண்டதில்லை என்று சொல்லக் கூடியபடி, நாட்டை அவ்வளவு நன்றாக ஆண்டார். ப்ரான் ஸோடு நீடித்து நடந்துகொண்டிருந்த போரை நிறுத்தினார். பிஷப்புகள் லாலர்டுகளை வாட்டி வதைக்கவேண்டுமென்று கூறிக்கொண்டிருந்த போதிலும், ரிச்சர்ட் அவர்கள் விஷயத் தில் பொறுமையும் கருணையும் காட்டினார். உள் நாட்டுப் போர் ஒன்றினால் அல்லற்பட்டிருந்த அயர்லண்டில் ரிச்சர்ட் அமைதியை உண்டாக்கி அங்கிருந்தவர்கள் அனைவரும் அவ ரது மனவுறுதி, நல்லறிவு, நியாயவுணர்ச்சி முதலிய இயல்பு களை மெச்சும் வண்ணம் நடந்துகொண்டார்.

திடுமென அவரது குணம் மாறியது. அதுவரை மறைத்துவைத்திருந்த அவரது உண்மை உணர்ச்சிகள் அப் போது வெளியாயின. யாதொரு முன் எச்சரிக்கையுமின்றி அவர் தம் சிற்றப்பன் க்ளாஸ்டரைக் கைதியாக்கிச் சிறையில் கொல்லுவித்தார். பழைய 'நீதியைக்கோரும் பிரபுக்க'ளுள்[1] மற்றொருவரைச் சிரச்சேதம் செய்தார்; வேறொருவரது பட் டங்களையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்தார். விரைவி லேயே மற்ற இரண்டு பேரையும்—நார்பக்[2], ஹெரிபர்ட்[3] ட்யூக்குகளை—ஒழிக்க அவருக்கு ஒரு சாக்கு ஏற்பட்டது. அவர்களிடையே ஒரு பெரிய மனஸ்தாபம் தோன்றியதால், அதை இருவரும் வாட்போரிட்டுத் தீர்மானித்துக்கொள்வ தென முடிவுகட்டினர். அப்போது ரிச்சர்ட், தாம் நார்பக் ட்யூக்கை அவர் ஆயுள்காலம் முழுமைக்கும், ஹெரிபர்ட் ட்யூக்கை (இவர் ஜான் அப் கான்ட்டின்[4] மகனான ஹென்றி) ஆறுவருஷ காலத்துக்கும் நாடுகடத்திவிட்டதாக ஒரு அறிக்கை வெளியிட்டார்.

---

1. Lords Appellant. 2. Norfolk. 3. Hereford. 4. John of Gaunt.

தமது பழைய விரோதிகள் இவ்வளவு சுலபமாக ஒழிந்துவிட்டதும், அரசர்க்குக் கர்வம் தலைக்கேறியது. புத்திகெட்ட செயல்களையும் கொடிய செயல்களையும் அவர் செய்யத் துணிந்தார். அக்கிரமமான அபராதங்கள், கட்டாய கடன்கள், சொத்துக்கள் பறிமுதல் முதலிய நியாயமற்ற வழிகளில் பணம் சேகரித்து, அதை வீண் ஆடம்பரங்களி லும் உல்லாச கேளிக்கைகளிலும் அழித்தார். 1399-ல் ரிச்சர்டின் கொடுங்கோன்மை உச்ச நிலையை அடைந்தது. ஜான் அப் கான்ட்[1] இறந்ததும், லான்காஸ்டரில்[2] அவருக் கிருந்த சொத்துக்களையெல்லாம் ரிச்சர்ட் கைப்பற்றிக்கொண் டார். முன் வருஷம் ஹெரிபர்டை நாடு கடத்தியபோது அவர் தம் தந்தையின் சொத்துக்களை இழந்தவராவார் என்று ரிச்சர்ட் கூறவில்லை. தம்முடைய பங்காளி விஷயத்திலேயே அரசர் எவ்வளவு அக்கிரமமாக நடந்துகொண்டார் என்பதைக் கண்டவர்கள், இனி யார் சொத்துக்கும் பாதுகாப்பில்லை என் பதை உணர்ந்தார்கள். ஹெரிபர்ட் ட்யூக்கான ஹென்றி, சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு, தம் சொத்துக்களைக் கேட்க யார்க்ஷைரில்[3] வந்திறங்கியதும், நாட்டிலுள்ள பெரிய மனிதர் களெல்லாம் அவரை ஆதரிக்கத் திரண்டு வந்தார்கள். அப் போது அவருக்கு அரச பட்டத்தையும் கைப்பற்றலாம் எனத் தோன்றியது. எல்லோர் ஆதரவையும் இழந்த ரிச்சர்ட் முடியில் தாம் முடிசூடி ஆளப் பண்பற்றவர் என்றும், அதனால் முடி துறந்துவிட்டதாகவும் ஒரு பத்திரத்தில் கையொப்பமிட்டுத் தரவேண்டியதாயிற்று. இதைப் பார்ல மெண்டுக்குப் படித்துக்காட்டியதும், அச்சபை ஹென்றியை அரசராக முரசறைவித்தது.

---

1. John of Gaunt. 2. Lancaster. 3. Yorkshire.

சில மாதங்களுக்கு அப்பால் ரிச்சர்ட் சிறையிலேயே இறந்தார். பட்டினியால் அவர் மாண்டிருக்கவேண்டுமென்று சரித்திராசிரியர்கள் நம்புகின்றனர். நல்ல புகழோடு ஆண்டு கொண்டு வாழ்ந்திருக்கக்கூடியவருக்கு இந்தப் பரிதாபகர மான முடிவு வந்தது அவர் தம் நடத்தையினால் தேடிக் கொண்ட விளைவேயாம்.

§ 69. இங்லிஷ் மக்களின் தாய்மொழி:—இங்லிஷ் மொழி பிறந்தது பதினான்காம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலேதான். நார்மானியர் வெற்றிமுதல் மேல்வகுப் பினர் பேசிக்கொண்டுவந்தது ப்ரெஞ்சு மொழியே. கீழ் வகுப்பினர் இடத்துக்கு இடம் உச்சரிப்பிலும் வழக்கிலும் மாறுபட்ட ஆங்லோசாக்சன் மொழியைப் பேசிக்கொண் டிருந்தனர். இங்லிஷ் உணர்ச்சி நிறையப்பெற்றிருந்த முதல் எட்வர்ட் மூன்றாம் எட்வர்ட் முதலிய அரசர்களுக்கும் தாய் மொழியாயிருந்தது ப்ரெஞ்சே. ப்ரெஞ்சு பேசுதல் அக் காலத்தில் நற்குடிப்பிறப்புக்கும் நாகரிகத்துக்கும் அறிகுறி யாகக் கருதப்பட்டதால், செல்வம் படைத்த வியாபாரி ஒவ் வொருவனும் ப்ரெஞ்சு பேசத் தொடங்கினான். பார்லமென் டின் நடிவடிக்கைகள் அனைத்தும் ப்ரெஞ்சு மொழியிலேயே நடந்தன. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பட்டணங்களி லிருந்து வரும் அங்கத்தினர்கள், இடத்துக்கு இடம் மாறு பட்டிருந்த சாக்சன் மொழியையே எல்லோரும் பேசுவது என்று தீர்மானித்துப் பார்லமென்டில் பேசினார்களானால், ஒருவர் பேச்சை மற்றொருவர் அறிந்துகொள்ளுதல் கடின மாயிருந்திருக்கும்.

மேல் வகுப்பினர்க்கும் கீழ்வகுப்பினர்க்கும் இடையே செல்வமிக்க நடுவகுப்பொன்று[1] தோன்றி, மேலும் மேலும்

1. a middle class.

விருத்தியாக ஆக, இருமொழிகளையும் பேசவல்லவர்களின் தொகை பெருகிக்கொண்டுவந்தது. அதனால் இருமொழிகளும் கலந்து ஒருமொழியாவதற்கு அநுகூல மேற்பட்டது. இக்கலப்பு ப்ரான்ஸோடு நீண்டு நடந்த போரினால் துரிதமாக்கப்பட்டது. இங்லண்டிலிருந்து சென்று க்ரெஸியில் போரிட்ட படையில் இருமொழிகள் பேசப்பட்டன. நைட்டுகள் பேசியது ஒருமொழி; வில்லாட்கள் பேசியது வேறு மொழி. நீண்ட அந்த யுத்தத்தின்போது பல வகுப்பினரும் ஒன்றாகப் பழகவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தது. அப்போது மேல்வகுப்பினர் பகைவர்களின் மொழியைத் தாங்கள் பேச நேர்ந்துள்ளதை உணர்ந்து வெட்கப்பட்டார்கள். ஆகவே, ஒரு புதுமொழி வழக்காற்றில் வரலாயது. அதில் நித்திய வாழ்க்கையின் சாதாரண கருத்துக்களுக்கு ஆங்லோசாக்சன் மொழியிலிருந்து வந்த சொற்களே வழங்கலாயின. மேன்மக்களுக்கு வேண்டிய சில அரிய கருத்துக்களுக்கான நீண்ட சொற்கள் ப்ரெஞ்சிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. 'கருஞ்சா'வினாலும்[1] இங்லிஷ்மொழியின் வளர்ச்சி துரிதப்பட்டது. மேல்வகுப்பினர் பிள்ளைகளுக்குக் கல்விகற்பிக்கப் போதிய கல்விமான்கள் குருமார்கள் கூட்டத்தில் குறைந்துவிட்டதால், அப்பிள்ளைகள் கீழ்வகுப்பினர் மொழியையே பேசிக்கொண்டு வளர்ந்தனர். 1362-ல் நீதிமன்றங்களில் இங்லிஷ்மொழியே வழங்கப்படவேண்டுமென்று ஒரு சட்டம் இயற்றினார்கள். நான்காம் ஹென்றி முடிசூட்டிக்கொண்டபோது உறுதிகூறியது இங்லிஷ்மொழியிலேயேயாம். முடிசூட்டு விழாவில் தாய்மொழியில் உறுதிகூறிய முதல் இங்லிஷ் மன்னர் அவரே.

---

1. The Black Death.

அங்கிலேயில் இங்லிஷ்மக்களின் அதிர்ஷ்டவசமாக ஜ்யோப்ரே சாசர்[1] (1335—1400) என்னும் கவியொருவர் தோன்றி இங்லிஷ்மொழியைப் பெரிதும் அந்தப்படுத்தினுர். அவர் **கான்டேர்பேரி கதைகள்**[2] என்னும் செய்யுள் நூலொன்றை இயற்றினுர். கான்டெர்பெரியிலுள்ள புனிதாத்துமா பெக்கெட்டின் சமாதிக்கு யாத்திரை சென்ற ஒரு யாத்திரிகர் கூட்டத்தினர், வழியில் போதுபோவதற்காக, முறைபோட்டுக்கொண்டு சொல்லிவந்ததாகக் கருதப்படும் கதைகளாகும் அவை. அத்தகைய யாத்திரையின்போது வழியில் எவ்விதமான மக்களைக் காணலாகுமோ அவர்களை அப்படியே படமெழுதிக் காட்டுவதுபோன்ற வருணனைகள் அந்நூலில் காணப்படுகின்றன. ஏறக்குறைய அதே சமயத்தில் வில்லியம் லாங்லண்ட்[3] என்பவர் பியர்ஸ் ப்ளோமன்[4] என்னும் செய்யுள் நூலை இயற்றினுர் ('பதிப்பித்தார்' என்றும் சிலர் கூறுகின்றனர்). அந்நூல் உழைக்கும் மக்களின் இன்னல்களை விவரிக்கிறது.

———

1. Geoffrey Chaucer, 2. 'Canterbury Tales.' 3. William Langland. 4. 'Piers Plowman'.

பதினாறும் அத்தியாயம்

லான்காஸ்டர் குடும்பத்தினர் அரச பதவியைக் கைப்பற்றல்

(1399-1422)

§ 70. 'முடியணிந்தோர் மூளைக்கு அமைதியில்லை': சிறப்பாக, தன்னுடைய தல்லாத முடியைக் கைப்பற்றியவருக்குச் சிறிதும் அமைதியில்லை. புத்தி கூர்மையும் சுறுசுறுப்பும் பொறுமையும் மிகுதியாகப் பெற்றிருந்தாலும், மக்கள் விரும்பக் கூடிய அரசராகவல்ல சில பண்புகள் நான்காம் ஹென்றிக்கு இல்லை. இரண்டாம் ரிச்சர்டின் விசித்திர மனப்போக்கையும் கொடுங்கோன்மையையும் கண்டு வெறுத்துக் கலகம் விளைத்த மக்களும், அரச குடும்பத்தின் நேர்க்கால் வழியை விலக்கிவிட்டதைக் குறித்து விரைவிலேயே வருந்தலாயினர். புதிய அரசரின் கவன முழுவதும் தம் நிலையைப் பலப்படுத்திக்கொள்வதிலேயே சென்றது. அதற்காக அவர் பிஷப்புகளுக்கும் பிரபுக்களுக்கும் பார்லமெண்டுக்கும் பல விஷயங்களில் விட்டுக்கொடுக்கவேண்டியவரானார் (கு. 41).

பிஷப்புகளின் ஆதரவைப் பெறுதல் மிகச் சுலபமாய் முடிந்தது. லாலர்டுகளை[1] வாட்டி வதைக்க[2] அவர்கள் அநுமதி பெற்றனர் (§ 63). இரண்டாம் ரிச்சர்ட் லாலர்டுகளுக்குப் பரிவு காட்டியதால் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் சீற்றத்துக்கு ஆளானார். ஆகவே, லாலர்டுகளைத் தண்டிக்க ஹென்றி இடந்தருவார் என்னும் நம்பிக்கையோடே கான்டெர்பெரி ஆர்ச்பிஷப் அவருக்கு அரச பதவியைக் கைப்பற்றும் முயற்சியில் ஆதரவு காட்டினார். ஹென்றி மதப்பற்றுடையவராக இருந்ததால், அதிக தாமதஞ் செய்யாமல் 'டி ஹேரிடிகோ காம்புரேண்டோ[3] என்னும் சட்டத்தை 1401-ல்

1. Lollards. 2. persecute. 3. De Heretico Comburendo.

யார்க் லான்காஸ்டர் குலங்கள்

மூன்றும் எட்வர்ட் (1327-1377)

- எட்வர்ட் ‘கரிய இளவரசர்’
  - இரண்டாம் ரிச்சர்ட்[1] (1377-1399)
- லயொனெல் க்ளாரென்ஸ் ட்யூக்
  - பிலிப்பா மார்ச் ஏர்லை மணந்தார்
    - ஆன் மார்ட்டிமர்
- ஜான் அப் காண்ட் லான்காஸ்டர் ட்யூக் — மனைவியர்: (i) ப்ளான்ஷ் (ii) காதெரின் ஸ்வைன்பர்ட்
  - (i) நான்காம் ஹென்றி (1399-1413)
    - ஐந்தாம் ஹென்றி (1413-1422)
      - ஆறும் ஹென்றி[1] (1422-1461)
        - எட்வர்ட்[2] வேல்ஸ் இளவரசு
    - ஜான் பெட்பர்ட் ட்யூக்
    - ஹம்ப்ரே[1] க்ளாஸ்டர் ட்யூக்
  - (ii) போபர்ட் குலம்
- எட்மண்ட் யார்க் ட்யூக்
  - ரிச்சர்ட் கேம்பிரிட்ஜ் ஏர்ல் ஆன் மார்ட்டிமரை மணந்தார்
    - ரிச்சர்ட்[2] யார்க் ட்யூக்
      - நான்காம் எட்வர்ட் (1461-1483)
        - எலிசபெத் ஏழாம் ஹென்றியை மணந்தார்
        - ஐந்தாம் எட்வர்ட்[1] (1483)
        - ரிச்சர்ட்[1] யார்க் ட்யூக்
        - (ஐந்தாம் எட்வர்ட், ரிச்சர்ட்:) “லண்டன் அரணில் வாழ்ந்த இளவரசுகள்”
      - மூன்றும் ரிச்சர்ட்[2] 1483-1485
- டாமஸ்[1] க்ளாஸ்டர் ட்யூக்

1 கொலையுண்டவர்கள்.

2 போரில் மாண்டவர்கள்.

குறிப்பு:—யார்க் ட்யூக் ரிச்சர்டுக்கும் ஆன் மார்ட்டிமருக்கும் நடந்த விவாகத்தால் யார்க் குலத்தினர் லான்காஸ்டர் குலத்தினரைவிட மூத்த கால்வழியின ராயினர்.

இயற்றி மதஸ்தாபனத்தைத் திருப்திசெய்தார். அச்சட்டத்தின்படி, மதவிரோதமான போதனைகள் செய்ததாக மதஸ்தாபன நீதிமன்றமொன்றில் தீர்மானிக்கப்பட்டவர்களை ஊரார் காண உயிருடன் கொளுத்திவிட வேண்டும். மதஸ்தாபனத்துக்கு விரோதமான பிரசாரங்களை விட்டுவிடும்படி (லாலர்டுகளுக்குப்) பயமுறுத்தவே அச்சட்ட மியற்றப்பட்டது. உண்மையில் உயிருடன் கொளுத்தப்பட்ட லாலர்டுகள் வெகு சிலரே. அவர்கள் பிரசாரம் நின்றுவிட்டது.

பிரபுக்களின் ஆதரவைத் தேடிக்கொள்ள ஹென்றி அவர்களுக்கு அரசமானியங்களை வழங்கியதோடு, அநேகமாக, அவர்கள் இச்சைப்படியே நடக்கவும் விட்டுவிட வேண்டியவரானார். அதனால் அவர்கள் தற்காலிகமாகத் தொந்தரவு கொடுக்காமலிருந்தார்கள். ஆயினும், அதனால் அரசாது நிலை இருவகையில் ஊனமடைந்தது. பிரபுக்கள் தங்கள் தங்கள் மானியப் பிரிவுகளில் ஏறக்குறைய தனியாட்சிபெற்ற சிற்றரசர்களைப் போல் வாழலாயினர்; அரசர் நல்ல வருமான மளித்திருந்த சொத்துக்களை இழந்தார்.

ஆகவே, அரசருக்குப் பணமுட்டு இரண்டாம் ரிச்சர்ட் காலத்தில் தோன்றியதைவிட அதிகமாயிற்று. ஆயினும், ஹென்றி, ரிச்சர்ட் பணந்திரட்டிய முறைகளைக் கண்டித்து, அது காரணமாகவே அவரை அரசபதவியிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கூறி வென்றுவந்தவரானபடியால், தாமும் அம்முறைகளைக் கையாளுவதற்கின்றித் தவித்தார். ஆகவே, தம் செலவுகளுக்கு வேண்டிய பணத்துக்காகத் தனிவரிகளை விதித்துத் தருவதற்கு அவர் பார்லமெண்டின் ஆதரவை நாட வேண்டியவரானார். இந்நிலையில் பார்லமென்ட் அரசாங்கத்தின்மீது தனக்கு ஒரு பிடிப்பு ஏற்படுத்திக்கொள்ள வசதி தேடிக்கொண்டது. இதற்குமுன், பார்லமென்ட் அரசாங்

கத்துக்குப் பணவருவாய் தேடிக்கொடுக்கும் போதெல்லாம், அதற்கு ஈடாகச் சில சீர்த்திருத்தங்களைச் செய்யவேண்டு மென்று வற்புறுத்துவது வழக்கம். அச்சீர்திருத்தங்களை நிறைவேற்றிவைக்க எம்முறைகளைக் கையாளுவது என்பது அரசர் விருப்பத்தைப் பொறுத்ததாக இருந்தது. ஆயினும், நான்காம் ஹென்றி காலத்தில், பார்லமென்டே பல சீர்திருத் தங்களைச் 'சட்ட முன்னறிக்கைகள்'[1] வாயிலாக அரசர் அங்கீ காரத்துக்குக்கொண்டுவந்தது. இவ்விதமாகவே, பார்லமென்ட் சட்டமியற்றும் அதிகாரத்தினைத்[2] தற்காலிகமாகவேனும் பெற் றது. முதல் எட்வர்டுக்கு இங்கிலை ஆத்திரத்தையும் கோபத் தையும் உண்டாக்கியிருக்கும். அவர் காலத்தில் அரசரே சட்டம் வழங்குபவர். பார்லமென்ட், அரசர் வகுத்த சட் டத்தை, வழக்கம் காரணமாகவும், ஒரு ஒழுங்கை அநுசரித் தும், ஏற்றுக்கொண்டு அங்கீகரித்து வந்தது.

§ 71. **கலகங்கள்:**—அக்கிரம வழியில் அரசபதவியைக் கைப்பற்றுபவர்கள் தங்கள் நிலையைப் பலப்படுத்திக்கொள்ள அயல் நாடுகளோடு வெற்றிகரமாகப் போர்செய்ய முயலுவது வழக்கம். ப்ரான்ஸில் மீண்டும் போரைத்தொடர ஹென்றி யிடம் பணமில்லை. ஆகவே, அவர் ஸ்காட்லண்ட்மீது படையெடுத்துச்சென்றார். ஆயினும், ஸ்காட்லண்ட் படை யெழுச்சி பயனற்றதாயிற்று. ஸ்காட்லண்ட் மக்கள் நேர்முக மாகப் போரிட முன்வரவில்லை. ஹென்றி யாராவது தம் மோடு சண்டையிட வருவார்களா என்று நாடுநெடுகப் படையுடன் திரிந்து முடிவில் இங்லண்ட் திரும்பினர்.

அடுத்த ஆண்டில் ஸ்காட்லண்ட் மக்கள் இங்லண்ட்மீது படையெடுத்துவந்தார்கள். திரும்பும் வழியில் ஹோமில்டன் குன்று[3] என்னுமிடத்தில் அவர்கள் சேனை முறியுண்டது.

---

1. 'Bills.' 2. the power to legislate. 3. Homildon Hill.

அவ்வெற்றியால் ஹென்றிக்குப் புகழின்றி இகழ்ச்சியே உண்டாயிற்று. அதைப் பெற்ற சேனை நார்தம்பர்லண்ட்[1] பிரதமமானியதாராகிய பெர்ஸி குடும்பத்தார்[2] திரட்டியனுப்பியதாகும். ஆகவே, அவ்வெற்றியால், அரசர் சாதிக்க முடியாததைப் பெரிய பிரபுக்களின் குடும்பங்கள் சாதிக்கமுடியும் என்னும் உண்மை வற்புறுத்தப்பட்டது.

அடுத்த ஆண்டில் ஹென்றிக்கு ஒரு சின்னஞ்சிறு வெற்றி கிடைத்தது: வேல்ஸில் ஒரு கலகத்தை அவர் அடக்கினார். புகழ்பெற்ற லெவெலினது[3] கால்வழியில் வந்த ஓவென் க்ளெண்டொவர்[4] என்பவர் அக்கலகத்தைத் தொடங்கினார். ஹோமில்டனில் கைப்பற்றிய கைதிகளையும் பொருள்களையும் குறித்துப் பெர்ஸி குடும்பத்தினர்க்கும் ஹென்றிக்கும் ஏற்பட்ட ஒரு மனஸ்தாபங் காரணமாகப் பெர்ஸி குடும்பத்தினர் ஸ்காட்லண்ட் எல்லைப்புறத்திலுள்ள தங்கள் பரம்பரைப் பகைவர்களாகிய டக்லஸ் குடும்பத்தினரோடு[5] சேர்ந்துகொண்டதோடு நில்லாமல், வேல்ஸ் மக்களோடும் சேர முயன்றனர். ஆயினும், ஹென்றி ஷ்ரூஸ்பேரி[6] என்னுமிடத்தில் அவர்களைச் சிதறவடித்தார் (1403). இவ்வெற்றியே அவர் பெற்ற வெற்றிகளுள் தலைசிறந்ததாகும். அதன்பிறகு வேல்ஸ் மக்களது கலகத்தின் வன்மை ஒடுங்கிவிட்டது. க்ளெண்டொவர்மட்டும் தம்நாட்டின் மலைகளிடையே சேனைகளைத் திரட்டி வைத்துக்கொண்டு சில வருஷங்கள் பிடிபடாமலிருந்தார்.

சிம்மாசனமேறும்போது தமக்கு ஏற்பட்டிருந்த இடர்களையெல்லாம் நீக்கிவிட்டு முழுவன்மையுடன் இருக்கவேண்டிய நிலையையடைந்ததும், ஹென்றி நோயில் வீழ்ந்தார்.

---

1. Northumberland. 2. The Percies. 3. Llewelyn. 4. Owen Glendower. 5. The Douglases. 6. Shrewsbury.

வீழ்ந்தவர் நெடுநாள் குணமடையாமலிருந்தார். ஆகவே, வேல்ஸ் இளவரசராயிருந்த அவர் மகனே அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இளவரசர் தந்தை சீக்கிரமாக இறக்கவில்லையே என்று பொறுமையற்றிருந்தார். ஆகவே, சாகுந்தருணத்தில் ஹென்றி மிக்க ஏமாற்றத்தோடு இறந்தார்.

§ 72. மறுபடியும் ப்ரான்ஸோடு போர் :—ஐந்தாம் ஹென்றி வாலிபத்தில் கட்டுக்கடங்காது வாழ்ந்தாரேனும், மன்னரானதும் அவர் குணம் முற்றிலும் மாறியது; அரசாங்க காரியங்களை அவர் பேரூக்கத்துடன் கவனிக்கலானார். அவர் தோற்றத்தில் ஒல்லியாகவும் கண்டிப்புள்ளவராகவும் காணப்பட்டார். குணமும் அத்தோற்றத்துக்கேற்றவாறே பொருந்தியிருந்தது: கடின சிந்தை, கூரிய புத்தி, ஓயா உழைப்பு, தளரா ஊக்கம். நாட்டின் அரசராகத் தங்கள் நிலையை மேலும் மேலும் பலப்படுத்திக்கொள்வதே தந்தைக்கும் மகனுக்கும் பெரு நோக்கமா யிருந்தது. ப்ரான்ஸோடு மீண்டும் போர் தொடுப்பதே அதற்குச் சிறந்த வழி என்பதை அவர் உணர்ந்தார். பல காரணங்களை யொட்டிப் போரில் வெற்றியடையலாமென்று அவருக்கு நம்பிக்கை யிருந்தது. முதலாவதாக, ஒரு பெரிய சேனைத்தலைவரின் ஆற்றல் தமக்குண்டென்பது அவர் அபிப்பிராயம். இரண்டாவதாக, அப்போதைய ப்ரான்ஸ் மன்னர் அறிவு மங்கிய பயித்தியக்காரர். மூன்றுவதாக, ப்ரான்ஸில் ஒரு கட்சிப்பிளவு தோன்றியிருந்தது: ப்ரான்ஸ் நாட்டுப் பிரபுக்களுள் முதன்மைபெற்றிருந்த பர்கண்டி ட்யூக்[1] அரசரை ஆதரிப்பவர்களுக்கு விரோதமாகக் கிளம்பினர். நான்காவதாக, இங்லிஷ் வில்லாட்கள், அவர்கள் மூதாதையர் முன்னர் க்ரெஸியில்[2] ப்ரான்ஸின் நைட்டுகளைத்

1. The Duke of Burgundy. 2. Crecy.

தோற்கடிக்க உதவியதுபோல், இப்போதும் உதவுவார்கள் என்பதை அவர் உணர்ந்தார்.

ஆகவே, ப்ரான்ஸ் மன்னர் ஆரும் சார்ல்ஸ்[1] உடனே தம் அரச பதவியை விட்டு விலகவேண்டுமென்று ஹென்றி கூறினர். உண்மையில் அவ்விதம் கூற அவருக்கு யாதொரு உரிமையுமில்லை. மூன்றும் எட்வர்ட் கொண்டாடிய உரிமைக்கே பலமில்லை (§ 56). அவருக்கு உரிமையிருந்ததாக வைத்துக்கொண்டாலும், அவ்வுரிமை நியாயமாக ஜான் அப் கான்ட்[2] மக்களுக்கு வருவதற்கில்லை; அவர் அண்ணன் க்ளாரென்ஸ் ட்யூக்கின்[3] மக்களுக்கே செல்லவேண்டியதாகும். இங்லிஷ் மக்கள் அரசகுலத்தின் இளைய கால்வழியொன்று அரசபதவியைக் கைப்பற்றிக்கொள்ள இடந்தந்தார்களானல், அது ப்ரான்ஸ் மக்களை எவ்விதம் கட்டுப்படுத்தும்? ஆயினும், மக்கள் ஒன்றைச் சாதிக்க வேண்டுமென்று விரும்புவார்களாயின், அதில் அவர்களுக்கு நம்பிக்கை பிறப்பது சகஜமே. ஐந்தாம் ஹென்றி, தாம் ப்ரான்ஸின் முடியை நாடியது சுயநல வேட்கையாலோ பேராசையாலோ அல்லவென்றும், நியாயத்தை விரும்பியதாலேயேயாம் என்றும் கடவுள் பெயரால் ஆணையிட்டுக் கூறினர். அவர் உண்மையில் தெய்வ பக்தி நிறைந்தவரே.

ஹென்றி செய்தது அவர் கோரிய பலனை உடனே தந்தது. ப்ரான்ஸின்மீது புதிய படையெழுச்சி என்றவுடன் இங்லண்ட் மக்களிடையே ஒரு புது உற்சாகமும் நாட்டுப்பற்றும் தோன்றலாயின. ஒரு பவுனுக்கு மூன்று ஷில்லிங் வீதம் விதிக்கப்படும் வருமான வரிக்குச் சமானமான ஒரு பெருந்தொகையினைப் பார்லமெண்ட் அவருக்கு அளித்தது.

---

1. Charles VI. 2. John of Gaunt. 3. Duke of Clarence.

§ 73. அழிங்கூர்[1] :—ஹென்றி மிக்க முன்யோசனை யுடன் போருக்கு முன் தீப்புகள் செய்துகொண்டார். கப்ப லேறும் துறைமுகப்பட்டினமாகிய செளதாம்டனிலும்[2], இறங்கும் துறைமுகப்பட்டினமாகிய காலியிலும்[3] அவர் ஏராளமான உணவுப்பொருள்கள் சேகரித்து வைத்தார். 24000 வில்லாட்களையும், 8000 குதிரைவீரர்களையும், 1000 கம்மியர்களையும் கொண்ட ஒரு படையினைத் திரட்டி, அவர் களுக்கு வேண்டிய படைகள், பயிற்சி முதலியவை சம்பந்த மான எல்லா விஷயங்களையும் மிக நுணுக்கமாகக் கவனித்து வந்தார். எல்லா ஏற்பாடுகளும் முடிந்தவுடன் ஹென்றி தம் பெரும்படையினை ப்ரான்ஸில் சேன்[4] ஆற்றின் கடல் வாய்க்கு[5] அனுப்பி, அங்கு அர்ப்ளூர்[6] பட்டணத்தை முற்றுகை யிட்டார். அதைத் தம் சேனையின் நிலையிடமாகக்கொண்டு நார்மண்டியைக் கைப்பற்றவேண்டுமென்பது அவர் அவா. ஆயினும், அர்ப்ளூர் பிடிபடுவதற்கு அவர் எதிர்ப்பார்த்ததை விட அதிக காலமாயிற்று. அது பிடிபடுவதற்குள் ஹென்றி யின் படைப்பலம் பாதிக்குக் குறைந்துவிட்டது. உள்நாட்டுப் படையெழுச்சியைத் தொடங்குவதற்கு வெயிற்காலத்தில் சில நாட்களே யிருந்தன. மேலும், அர்ப்ளூரைக் காக்கச் சில படைவீரர்களை அங்கு வைத்துவிட்டுப் போகவேண்டியிருந்த தால், அவர் சேனுபலம் இன்னும் குறைந்தது. முடிவில், அவர், எஞ்சிய தம் சேனையைக் குளிர்காலம் தொடங்குவதற்குள் காலிக்கு[7] நடத்திக்கொண்டுபோய்விடவேண்டுமென்று தீர் மானித்து, எட்டு நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். வழியில் சாம்[8] ஆற்றைக் கடக்கக்கூடிய இடங்களிலெல்லாம் ப்ரெஞ்சு

---

1. Agincourt. 2. Southampton. 3. Calais. 4. The Seine. 5. estuary. 6. Harfleur 7. Calais. 8. The Somme.

படைகள் காவலிருந்தன. ஆகவே, அவர் தம் படைகளை நடத்திச்செல்ல நேர்வழியைவிட்டுச் சுற்றிவளைத்துக்கொண்டு போகவேண்டியவரானார். இந்த எதிர்பாராத இடைஞ்சலால் அவர் கொண்டுவந்த உணவுப் பொருள்களெல்லாம் செலவாய் விட, அவர் நிலை ஆபத்துமிக்கதாயிற்று. அந்நிலையில் அவர் படையைவிட இரண்டத்தனைப் பெரிதான ப்ரெஞ்சு படையொன்று அவரை எதிர்க்க வந்தது. ஆயினும், சிறிதும் தளர்ச்சியுறாமல் ஹென்றி தம் போர்வீரர்களை ஆழங்கூருக்கு (1415) அருகில் போருக்குச் சித்தமாக அணிவகுத்து நிறுத்தினார். தாம் வெற்றியடைவதில் அவருக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

முன்னர்ச் சங்கிலிச்சட்டைகளைமட்டும் அணிந்துகொண்டு போர்க்கு வந்த நைட்டுகள் இப்போது அவற்றின் மீது இரும்புத்தகடுகளையும் அணியலாயினர். ஒவ்வொன்றாக இத்தகடுகளின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. முடிவில் நைட்டுகள் முத்துக் குளிப்பவர்களைப் போல் ஒரு இரும்புக் கூண்டுக்குள் தங்கள் உடல் முழுமையும் அடைபட்டுத் தோன்றினார்கள். ஆகவே, அவர்களால் சுறுசுறுப்பாக நடக்கவோ போரிடவோ முடியவில்லை. எத்தனை தகடுகள் வைத்து உடம்பை மூடிக்கொண்டாலும், இங்லிஷ் வில்லாட்களின் அம்புகள் அவைகளையும் துளைத்துக்கொண்டு உடம்பில் தைத்தன. போர் தொடங்குவதற்கு முன்னமே ஹென்றி இதைப் பரிக்ஷித்துப் பார்த்துவிட்டார். ட்யூ கீஸ்க்லின்[1] (§ 64) கற்பித்த பாடங்களை ப்ரெஞ்சு மக்கள் மறந்துவிட்டார்களென்பதையும் ஹென்றி அறிவார். ஆவேசத்தோடு எதிரிகள்மீது பாய்ந்து போரிடுவதில் அவர்களுக்கு ஒரு குருட்டு உற்சாக மிருந்தது. இருபடைகளுக்கு மிடை

1. Du Guesclin.

யிலிருந்தது நன்ருக உழுதுவைத்திருந்த பயிர் நிலம். ஒரு வாரமாகக் கனத்த மழை பொழிந்துகொண்டிருந்ததால், அந் நிலம் சேருய்க் கிடந்தது. ஆகவே, ப்வாடீயே[1] போரின் போதுபோல் தங்கள் குதிரைகளைவிட்டு இறங்கிய ப்ரெஞ்சு நைட்டுகள், இங்லிஷ் படைகளைத் தாக்குவதற்கு அந்நிலத்தின் மூலம் நடந்து சென்ற போது, சேற்றில் அழுந்தித் தவித்தார் கள். பகைவர்களை நேருக்குநேர் தாக்கி அவர்களோடு கை கலப்பதற்குள் நைட்டுகள் பெரிதும் அலுத்துவிட்டார்கள். அவர்களுள் பலர் அதுவரைக்கும் எட்டவுமில்லை. அவர்கள் சேற்றில் அழுந்தித் திண்டாடிக்கொண்டிருந்தபோதே, இங் லிஷ் வில்லாட்கள் நிதானமாகக் குறிபார்த்து அம்பெய்து அவர்களுள் பலரை வீழ்த்திவிட்டனர். நெருங்கித் தாக்கி யவர்களும் முறியுண்டார்கள். ப்ரெஞ்சு வீரர்களின் நீண்ட வாட்களைவிட இங்லிஷ் வீரர்களின் குட்டைக்கோடரிகளும்[2] முட்கதைகளும்[3] அதிக தீமை விளைத்தன. அன்று சூரியன் மறைவதற்குமுன் 10000 ப்ரெஞ்சு போர்வீரர்கள் அப்போர்க்களத்தில் மாண்டனர். இங்லிஷ் சேனையில் நூற்றுவரே மாண்டனர். இச்செய்தியைக் கேட்டு இங் லிஷ் மக்கள் அனைவரும் மட்டிலடங்காத மகிழ்ச்சி யுற்ற னர். லான்காஸ்டர் வமிசம் சிம்மாசனத்தில் நிலையாக அமர்ந் தது. அடுத்த ஆண்டுகளில் ஹென்றி நார்மண்டியைத் துண்டு துண்டாகக் கைப்பற்றினர். 1420-ல் அவரோடு பர்கண்டி ட்யூக்கும் சேர்ந்துகொண்டார். ப்ரெஞ்சு துரைத் தனத்தார் அதன்மேல் சமாளிக்கமுடியாது, இனிப் போரிடு வது வீண் என உணர்ந்து, ட்ருவா[4] என்னு மிடத்தில் ஹென்றியோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர் (1420). அதன்படி, ஆரும் சார்ல்ஸின் மகளை ஹென்றி

---

1. Poitiers. 2. axes. 3. maces. 4. Troyes.

விவாகஞ்செய்துகொண்டு அவருக்குப்பின் டாபினுக்குப்[1] பதிலாக* ப்ரான்ஸ் அரச பட்டத்தைப் பெறவேண்டும்.

இவ் விவாகத்தின் பயனுக, 1422-ல் ஹென்றிக்கு ஒரு பிள்ளை பிறந்தான். ஆயினும், இடைவிடாப் போர்முயற்சிகளின் உழைப்புத் தாங்காமல் ஹென்றி சில வாரங்களில் இறந்தார்.

பதினேழாம் அத்தியாயம்

சரித்திரத்தில் ஒரு பழைய பாடம்

(1422—1453)

§ 74. 'குழந்தை அரசரைப் பெறும் நாடு சீரழிந்து போகும்':—ஏறக்குறைய நாற்பதாண்டுகள் இங்லண்ட் இக்காரணத்தால் சீரழிந்து கிடந்தது. ஆறும் ஹென்றிக்கு அரசபட்டம் வந்தபோது அவருக்கு வயது சில வாரங்களே. அவர் உண்மையில் ஆயுள் முழுதும் வளராத குழந்தையாகவே இருந்தார். மென்மை, சாந்தம், பக்தி, நல்லெண்ணம், இன்சொல் முதலிய குணங்களோடு அவர் விளங்கினுலும், அவருக்கு அடிக்கடி மூளைகெட்டுப்போவதுண்டு. வாழ்க்கையில் அவர் ஊக்கங்காட்டியது முக்கியமாக மதவிஷயங்களிலும் கல்வி விஷயங்களிலுமேயாம். ஏட்டன்[2] கலாசாலையையும் கேம்பிரிட்ஜில் அரசர் கலாசாலையையும் அவர் நிறுவினுர். அவர் ஆயுள்காலம் முழுமையும் அரசகாரியங்களைக் கவனித்து வந்தவர்கள் மற்றவர்களே. அதன் பெரும் பாகத்தில் அப்பொறுப்பினை அடைவதற்கு இருகட்சியினர் சச்சர

---

* 'டாபின்' என்பது ப்ரான்ஸ் அரசர்களது மூத்தபிள்ளையின் பட்டம்.

1. The Dauphin. 2. Eton.


ப்ரான்ஸ்
(மார்ச், 1429)
லண்டன்
காலி
ஆன்ட்வேர்ப்
ரீம்ஸ்
பார்மிங்னி
பாரிஸ்
ஷாம்பான்யே
டாங்ரேமீ
ஆர்லியன்ஸ்
லிமோசின்
போர்டோ
காஸ்டில்லான்
அவேர்ன்
டாபீனே
காஸ்கொனி
ப்ரோவாங்ஸ்
அளவு விகிதம்
0 50 100 150 200 மைல்கள்
இங்லிஷார் வசமிருந்த மாகாணங்கள்
பர்கண்டியர் வசமிருந்த மாகாணங்கள்

விட்டுக்கொண்டிருந்தனர். அதன் விளைவாக நாட்டில் குழப்பமும், வெளியில் அபகீர்த்தியும் தோன்றின.

குழந்தை ஆறும் ஹென்றி இங்லண்ட் அரசரான சில மாதங்களுள், ஆறும் சார்லஸ் இறந்துவிட்டதால், அவர் ப்ரான்ஸுக்கும் அரசரானர். அங்கிலேயில், ட்ருவா[1] உடன்படிக்கையின்படி (§ 73) அரசுரிமை வழங்கப்பெருத டாபின்[2], தம் பிறப்புரிமையை முன்னிட்டுப் போர்தொடங்கியதில் வியப்பொன்றுமில்லை. இங்லிஷ் சேனைகளுக்குக் குழந்தை ஹென்றியின் சிற்றப்பனுன பெட்பர்ட் ட்யூக்[3] தலைமை வகித்தார் (கு. 44). பெட்பர்ட் தம் தமயனுர் ஐந்தாம் ஹென்றியைப் போலவே சிறந்த வீரராயிருந்தார். மேலும், அவர் யாவரும் விரும்பத்தகுந்த தாராள மனத்தினர். அவர் நிருவாகத்தில் பர்கண்டி கட்சியினர் துணைகொண்டு இங்லிஷ் படைகள் ப்ரான்ஸின் மாகாணங்களை ஒன்றன்பின் ஒன்ருகப் பிடித்துக்கொண்டு வந்தன. 1429-ல் டாபின் வசத்திலிருந்தவை ஆர்லியன்ஸும்[4] அதைச் சூழ்ந்த நாடுமே. அதையும் இங்லிஷ் சேனைகள் பிடித்துக்கொண்டால் டாபின் நாட்டைவிட்டு ஓடவேண்டியதுதான். தோல்வியுற்றுத் தோல்வியுற்று அவர் நம்பிக்கையற்றுக் கிடந்தார். அப்போது எதிர்பாராத விதமாக ஒரு ஆச்சரியமிக்க சம்பவம் நடந்தது.

§ 75. கன்னிப்பெண் ஜோவான்[5]:—கிழக்கு ப்ரான்ஸிலிருந்து ஜோவான் என்னும் பெயர் கொண்ட உழப்பெண் ஒருத்தி டாபினிடம் வந்து, புனிதாத்துமாக்களாகிய காதெரினும் மைகேலும்[6] அவள் கனவில் தோன்றி ப்ரெஞ்சு படைகளை வெற்றிக்கு நடத்திச்சென்று டாபினுக்கு ரீம்ஸில்[7] முடிசூட்டிவைக்க அவளுக்குக் கட்டளை

---

1. Troyes. 2. The Dauphin. 3. The Duke of Bedford. 4. Orleans. 5. Joan the Maid. 6. St. Catherine and St. Michael. 7. Rheims.

யிட்டுள்ளதாகக் கூறினுள். இது ஒரு விசித்திரமான கதையாயிருந்தபோதிலும், அவள் கூறியதை நம்புவதால் தமக்கு யாதொரு புது நஷ்டமு மேற்படப்போவதில்லை என்பதை உணர்ந்த டாபின், தம் படைகளை அவள் இஷ்டப்படி நடத்திச்செல்ல விட்டார். ஜோவான் தலைமையில் சென்ற படைவீரர்கள் அவளால் புது நம்பிக்கையும் புது ஊக்கமும் ஊட்டப் பெற்று, அதுவரையில் அவர்களால் முடியாதென்று கைவிடப்பட்ட காரியங்களையெல்லாம் சாதிக்கலாயினர். சில மாதங்களுள் ப்ரான்ஸின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இங்லிஷ் படைகள் ஆர்லியன்ஸ் முற்றுகையைக் கலைத்துவிட்டுச் சென்றன. படே[1] என்னுமிடத்தில் அவை முறியடிக்கவும்பட்டன (1429). டாபின் உடனே ஏழாம் சார்ல்ஸ்[2] என்னும் பட்டத்துடன் ப்ரான்ஸ் மன்னராக முடிசூடிக்கொண்டார். தனக்கு அளிக்கப்பட்ட வேலை முடிந்துவிட்டதும், ஜோவான் தன்னூருக்குத் திரும்பவேண்டுமென்ருள். ஆயினும், அவளால் தம் படைளுருக்கு உண்டான புது நம்பிக்கையையும் புதுதைரியத்தையும் கண்ட அரசருக்கு அவளைப் போகவிட விருப்பமில்லை. தெய்வ ஆஞ்ஞைக்குப் புறம்பான காரியங்களைச் செய்வதில் அவளுக்கு உற்சாகம் உண்டாகவில்லையாதலால், அவளால் ஒன்றும் புதிதாகச் சாதிக்க முடியவில்லை. பாரிஸ் நகரத்தைப் பிடிக்கச் செய்த முயற்சியில் அவள் பர்கண்டியர் கையில் சிக்கினுள். அவர்கள் அவளை இங்லிஷாருக்கு 10,000 பொன் க்ரௌன்களை வாங்கிக் கொண்டு விற்றுவிட்டார்கள். இங்லிஷார் அவளை ஒரு மந்திரக்காரி என்றும், தம் படைகளின் தோல்விகளுக்கெல்லாம் அவள் மந்திர வித்தைகளே காரணமாயிருந்தனவென்றும் அவள்மீது குற்றஞ் சாட்டி, அவளை ர்வாங்[3] என்னுமிடத்தில் ஒரு மத

1. Patay. 2. Charles VII. 3. Roue .

நீதிமன்றத்தில் விசாரணைக்குக்கொண்டுவந்து நிறுத்தினார்கள். விசாரணைமுடிவில் அவள் குற்றவாளியே என்றும், அவளை அப்பட்டணத்தில் சந்தைகூடுமிடத்தில் உயிரோடு கொளுத்திவிட வேண்டுமென்றும் தீர்ப்பேற்பட்டது. ஜொவான் ஆர்லியன்ஸுக்கு வந்து இரண்டு வருஷங்களாவதற்குள் ர்வாங் சந்தைவெளியில் எரிந்து சாம்பலானாள் (1431).

இங்லிஷார் அவள் உடலை எரித்துவிட்டபோதிலும், அவள் ப்ரான்ஸ் மக்களிடையே ஊட்டிய புத்துணர்ச்சி அழியவில்லை. அவளது நம்பிக்கையும் பெருக்கமும் சுயநலப் பித்தர்களாய்த் தங்களுக்குள்ளேயே சச்சரவிட்டுக்கொண்டிருந்த ப்ரெஞ்சு பிரபுக்களை வெட்கமடையச் செய்தன; நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்று என்னும் புனிதத்தீயை ஏற்றி வைத்தன. ப்ரான்ஸை எவ்விதமேனும் கைப்பற்றிவிடலாம் என்ற இங்லிஷ் மக்களின் இறுமாப்பு இப்போது தளர்ச்சியுற்றதோடு, அது முடியாத செயலென்றும் அவர்களுக்குப் புலப்பட்டுவிட்டது. பெட்பர்டும் அவர் சேனாவீரரும் சௌரியத்தோடும் தளர்வின்மையோடும் போரிட்டபோதிலும், வெற்றி ப்ரான்ஸ் மக்கள் பக்கமே திரும்பியது. அதற்குப் பல காரணங்களிருந்தன. முதலாவதாக, வில்லாட்களை அநுகூலமான ஓரிடத்தில் அமரவிட்டுவிட்டு, பின்பு அவ்விடத்துக்குச் சென்று அவர்களைத் தாக்க முயலுதல், தோல்விக்குத் தாங்களே வழிதேடிக்கொள்வதாகும் என்பதை ப்ரான்ஸ மக்கள் மீண்டும் உணர்ந்துகொண்டனர். ஆகவே, அவர்கள் சேனைகளைப் பெருவாரியாகத் திரட்டிக்கொண்டு சென்று நிலையாக நின்று செய்யும் போர்களை எவ்விடத்திலும் நாடாமல், எதிரிகளுக்குப் பல இடங்களில் அடிக்கடி சிறுசிறு தொந்தரவுகளைக் கொடுத்துக்கொண்டு வந்து, மெதுவாக அவர்கள் வன்மையைத் தளர்த்திவிட முயன்றார்கள். அம்முயற்

சியால் முடிவில் எதிரிகளின் பலம் நிச்சயமாகக் குறைந்து விட்டது. இரண்டாவதாக, அச்சமயத்தில் போர் முறைகளைப் புதுப்பித்துத் தோன்றிய புதுப்படையாகிய பீரங்கியைப் ப்ரெஞ்சுமக்கள் நன்ருக உபயோகிக்கக் கற்றுக்கொண்டார்கள். இங்லிஷ் வில்லாட்கள், ஓரிடத்தில் ஆபத்தின்றி அமைதியாக அமர்ந்து, கனமிகுந்த இரும்புக் கவசங்களைச் சுமந்துகொண்டு நடக்கமுடியாமல் நடந்து மெதுவாக வரும் நைட்டுகளின் எதிர்ப்புக்குமுன் நிர்ப்பயமாக நின்றுகொண்டிருந்த நிலை மாறிவிட்டது. அவர்கள் தூரத்திலுள்ள பீரங்கிகளால் சுக்கு நூருகச் சிதறவடிக்கப்பட்டனர். மேலும், கல் மதில்களையும் உடைத்துத்தள்ளவல்ல பீரங்கிகளின்முன் இங்லிஷ் படைவீரர்கள் தாங்கள் பிடித்த அரணகளைப் பாதுகாக்க முடியவில்லை. மூன்ருவதாக, பர்கண்டியோடு இங்லண்டுக்கு உண்டான தொடர்பு, பர்கண்டிக்கும் பெட்பர்ட் ட்யூக்குக்கு மிடையே தோன்றிய ஒரு மனஸ்தாபத்தால் கலைந்துவிட்டது. 1435-ல் ப்ரான்ஸுக்கும் இங்லண்டுக்கும் சமாதானமேற்படுத்தக் கூடிய ஒரு ஆலோசனைசபை ஒன்றையும் சாதிக்காமல் கலைந்துவிட்டது. இங்லிஷ் கட்சியினர் ஆறும் ஹென்றி ‘ப்ரான்ஸ் மன்னர்’ என்னும் பட்டம் வைத்துக்கொள்வதை விட்டுக்கொடுக்க முடியாதென்றனர். உடனே பர்கண்டி ட்யூக் ஏழாம் சார்லேஸோடு அந்தரங்கமாக ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அடுத்த ஆண்டில் பாரிஸ் நகரம் ப்ரான்ஸ் அரசர் வசமானது. முடிவில் ப்ரான்ஸில் இங்லிஷ் மன்னரின் வசத்திலிருந்தவை நார்மண்டியும் கீயெனுமேயாம்[1] (கு. 45).

§ 76. தனியுடையும் பக்கஆதரவும்[2] :—ப்ரான்ஸில் இங்லிஷ் சேனைகள் வெற்றிபெருததற்கு மூலகாரணம் நூருண்டுப்போரின் முதற்பகுதியில் ஏற்பட்ட தோல்வி

1. Guienne. 2. ‘Livery and Maintenance’.

களின் மூலகாரணமேயாம்: அதாவது, இங்லண்ட் துரைத்தனம் சீர்கெட்டுக்கிடந்ததேயாம் (§ 64). அரசர் வன்மையும் ஆற்றலும் அற்றுக்கிடந்ததால், ஆலோசனை சபையினரின் மேற்பார்வையில் அரசாங்க அலுவல்கள் நடைபெற்றன. அச்சபையினர் தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டிருந்ததால், அவர்களால் இராச்சியகாரியங்களை ஒழுங்காகக் கவனிக்க முடியவில்லை. ஆகவே, பெரிய பிரபுக்களின் செயல்களைக் கவனித்து அவர்களைக் கட்டுப்படுத்த நாட்டில் எவருமிலர். மூன்றும் எட்வர்டின் நான்கு பிள்ளைகளும் நிறுவிய நான்கு பெரிய குடும்பங்களும் ஒன்றைப் பார்த்து ஒன்று பொருமை கொண்டிருந்தன. அரசகுலத்துக்குப் புறம்பாக, ஏராளமான சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டு வன்மைமிகுந்திருந்த வேறு பெரிய பிரபுக்கள் குடும்பங்களும் பல இருந்தன; உதாரணமாக, நெவில், பெர்ஸி, மாப்ரெ[1] குடும்பத்தினரைச் சொல்லலாம். அத்தகைய பெருங் குலப்பிரிவுகள்[2] ஆற்றலும் வன்மையுமிக்க அரசாங்கங்களுக்கன்றி அடங்கியிரா. ஆரும் ஹென்றியின் பெயரால் நாட்டையாண்ட ஆலோசனைசபை எவ்வகையிலும் ஆற்றலும் பலமுமிக்கதென்று சொல்லுவதற்கில்லை.

இதன் விளைவு என்னவென்றுல், ஸ்டீபென் மன்னர் காலத்தில் நாட்டின் சீரை அழித்து அதன் பலத்தைக் குறைத்த ஒழுங்கீனங்கள் மீண்டும் தோன்றலாயின (§27). இருண்ட காலங்களில்போல்[3] அப்போதும், சாதித்ததே சத்தியமானது; பலாத்காரமே நியாயமானது. ஒரேவிதமான காரணங்களால் ஒரேவிதமான விளைவுகள் தோன்றுகின்றன. படைமானிய திட்டம் அலங்கோலமான ஒரு புது வடிவில் மீண்டும் தலை

1. The Nevilles, the Percies, the Mowbrays. 2. clans. 3. The Dark Ages.

யெடுக்கலானது. ஒற்றைப் பண்ணைக்காரர்களின் நிலை மிகவும் பாதுகாப்பற்றதாய்விட்டது. ஆகவே, அவர்கள், அக்கம் பக்கத்துக்கு மிகுந்த பெரியவராகக் கருதப்பட்ட பிரபு ஒருவரின் ஆதரவை நாடி, எல்லா விஷயங்களிலும் அவர் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயினர். அங்கிலேயில் அவர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, ஒற்றைப் பண்ணைக்காரரான நைட்டோ ஸ்கொயரோ[1] பிரபுவுக்குப் பக்கபலமாகச் சில ஆயுதந்தாங்கிய சேவகர்களை[2] அனுப்புவதாக ஒப்புக்கொள்ள, அவர் தமது ஆதரவை அவருக்கு அளிப்பதாக[3] ஒப்புக்கொண்டார். அச்சேவகர்கள், தாம் அப்பிரபுவின் ஆட்கள் என்று காட்டிக்கொள்ள, அவர் ஆட்களுக்கென அமைந்துள்ள தனி உடையை[4] அணிந்துகொண்டனர்; அதோடு ஒரு அடையாளக்குறியையும்[5] அணிந்துகொண்டனர். ஆகவே, அவ்வேற்பாட்டுக்குத் 'தனி உடையும் பக்க ஆதரவும்'[6] என்னும் பெயர் வழங்கலாயது. அதன் பலனாக, நாடுமுழுமையும் பிரபுக்களிடையே அவரவர்கள் சொந்தப் பிணக்குகளை யொட்டிய சில்லரைச் சச்சரவுகள் பெருகலாயின. பார்லமென்டின் தேர்தல்களும் அவ்வவ்விடத்துப் பிரபுக்களின் ஆஞ்ஞைக்கு உட்பட்டன. அதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் ஷைர்களுக்கோ பட்டணங்களுக்கோ பிரதிநிதிகளாகாமல், பிரபுக்களிடையே தோன்றியிருந்த கட்சிப் பிரதி கட்சிகளின் பிரதிநிதிகளாகவே இருந்தனர். அங்கிலேயில் வெஸ்ட்மின்ஸ்டரில் கூடிய பார்லமென்ட் கூட்டங்கள் என்ன சாதித்திருக்க முடியுமென்பதை எவரும் ஊகித்துக்கொள்ளலாம்.

§ 77. நாட்டின் சீரை யழித்த இரு குடும்பக் கட்சிகள்:— 1430 முதல் 1439 வரையில் ஆலோசனை சபையிலும் அரண்

1. squire. 2. armed retainers. 3. to maintain. 4. livery. 5. badge. 6. Livery and Maintenance.

மனையிலும் பெரிய மனிதர்களாக உள்ளவர்கள் இரு கட்சியினராகப் பிரிந்திருந்தார்கள். ஒரு கட்சியினர்—நான்காம் ஹென்றியின் மாற்றாந்தாய் மகனான கார்டினல் போபர்ட்[1] தலைமையி லிருந்தவர்கள்—ப்ரான்ஸோடு போரை நீட்டித்துக் கொண்டிருப்பதால் இங்லண்டின் நிலைக்கு ஊனமே ஏற்படுமென்று உணர்ந்து, அநுகூலமான வகையில் உடனே சமாதானம் செய்துகொள்ளவேண்டு மென்றார்கள். அவர்களுக்கு எதிர்க்கட்சியினர்—நான்காம் ஹென்றியின் இளைய மகனான க்ளாஸ்டர் ட்யூக் ஹம்ப்ரெ[2] தலைமையிலிருந்தவர்கள்—போரைத் தளரவிடாது முன்னினும் மும்முரமாக நடத்தி ப்ரான்ஸை மீண்டும் கைப்பற்றவேண்டு மென்றார்கள். 1447-ல் இருகட்சிகளின் தலைவர்களும் இறந்தனர். ஆயினும், கட்சிப்போர்மட்டும் அதிக மும்முரத்தோடு நடந்தது. ப்ரான்ஸில் தோற்றுவிட்டோம் என்று நினைத்துச் சமாதானத்தை நாடியவர்களின் புதுத்தலைவர் சப்பக் ட்யூக்[3]; வெல்லுவோம் என்று நினைத்துப் போரைத் தொடர்ந்துநடத்தக் கோரியவர்களின் புதுத்தலைவர் மூன்றும் எட்வர்டின் கால்வழியிலேயே வந்த யார்க் ட்யூக்[4].

1444-ல் தற்காலிகமாகப் போர் நிறுத்தப்பட்டது. அப்போது சமாதானத்தை நாடிய கட்சியினர் முயற்சியால் ஆறும் ஹென்றி ஆஞ்சூ நாட்டு மார்கரெட்[5] என்னும் ஒரு ப்ரான்ஸ் சீமாட்டியைக் கலியாணம் செய்துகொண்டார். விரைவிலேயே மீண்டும் போர் மூண்டது. புது இராணி ஆற்றலும் சுறுசுறுப்பும் நிறைந்தவள். ஆயினும், அவளுக்குத் தன் தாய்நாட்டோடு போரிட விருப்பமில்லை. சில ஆண்டுகள் அவளும் அவள் கட்சியினரும் துரைத்தனத்தை நடத்தி வந்

1. Cardinal Beaufort. 2. Humphrey, Duke of Gloucester. 3. Duke of Suffolk. 4. Duke of York. 5. Margaret of Anjou.

தனர். ஆயினும், இங்லிஷ் மக்களின் விருப்பத்துக்கு மாருக ப்ரான்ஸ் முடிக்கு இங்லிஷ் மன்னர்கள் கொண்டாடக்கூடிய உரிமையை விட்டுக்கொடுத்து இங்லண்டுக்கு அபகீர்த்தியை உண்டாக்க அவர்கள் துணியவில்லே. ப்ரெஞ்சு மக்களோ இங்லிஷ் மன்னர்கள் அவ்வுரிமையை விட்டுவிடுவதாக ஒப்புக் கொண்டாலொழியச் சமாதானத்துக்கு இணங்க மறுத்துவிட்டனர். ஆகவே, நாளடைவில், 'லான்காஸ்டர் கட்சி' என்று வழங்கப்பட்டு வந்த சமாதானக் கட்சியினர் பழிக்கு ஆளாயினர். இங்லிஷ் படைகள் அடைந்த தோல்விகளுக் கெல்லாம் (அவை இப்போது எண்ணிக்கையில் அதிகமாயின) அக்கட்சியினரே காரணர் என்று மக்கள் அவர்களேப் பழிக்கலாயினர். பார்மிங்னியில்[1] நடந்த போரில் (1450) இங்லிஷ் படைகள் முறிவடைந்து நார்மண்டியை இழந்தன. அதனுல் இங்லண்டில் சீற்றங்கொண்ட கென்ட்,[2] சஸெக்ஸ்[3] மக்கள் ஜாக் கேட்[4] என்பவர் தலைமையில் கிளம்பிக் கலகம் விளேத்தனர் (கு. 46). கலகக்காரர்கள் அரசரது உபயோகமற்ற மந்திரிகளே அவர்கள் பதவிகளிலிருந்து நீக்கித் தண்டிக்கவேண்டுமென்ருர்கள். துரைத்தனத்தார் கலகத்தை அடக்கிக் கலகக்காரர்களுள் நூற்றுக் கணக்கானவர்களேத் தூக்கிலிட்டார்கள். ஆயினும், இவ்வித கலகங்களால் நாட்டின் அரசாங்கம் கலகலத்திருந்த நிலேயில், அதனுல் ப்ரான்ஸில் என்ன செய்ய முடியும்? முடிவில், 1453-ல் போர்டோவுக்கருகில் காஸ்டில்லான்[5] என்னுமிடத்தில், இங்லிஷ் சேனைகள் அடைந்த தோல்வியின் விளேவாக, இரண்டாம் ஹென்றி காலத்திலிருந்து இங்லண்ட் மன்னர்களுக்குச் சொந்தமாயிருந்த கீயெனும்[6] ப்ரான்ஸ் மன்னர் வசமானது.

---

1. Formigny. 2. Kent. 3. Sussex. 4. Jack Cade. 5. Castillon. 6. Guienne.

நூறுண்டுப் போர் முடிவடைந்தது. ஸ்லூயிஸ், க்ரெஸி, ப்வாடீயே, ஆழங்கூர்[1] வெற்றிகளின் பெருமை யெல்லாம் சிறுமையானது. முடிவில் காலி[2] ஒன்றே ப்ரான்ஸில் இங்லிஷ் மன்னர்க்குச் சொந்தமாயிருந்தது.

பதினெட்டாம் அத்தியாயம்

ரோஜாக் கட்சியினர் சண்டைகள்[3]

(1453—1485)

§ 78. சண்டையின் தோடக்கம்:—இராணியின் கட்சியாகிய சமாதானக்கட்சி ஒரு புறமும், யார்க் ட்யூக்கின் கட்சியாகிய போர்க்கட்சி மற்றொரு புறமும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டிருந்த நிலையில், அவர்களிடையே மனஸ்தாபங்கள் பெருகலாயின. அபிப்பிராய பேதங்களில் ஆரம்பிக்கும் பிளவுகள் தீராப்பகையாக முடிவது சகஜமே. 'யார்க் கொள்கை'[4] என்பது அரசரின் மந்திரிகள் ப்ரான்ஸில் போரை நிறுத்தக் கையாண்ட அரைகுறையான முறைகளின் கண்டனமாக ஆரம்பித்தது; பிறகு அது அரசாங்கத்தைக் கைப்பற்றும் தீர்மானமாக மாறியது; அப்படியேயிருந்து முடிவில் அது லான்காஸ்டர் குடும்பத்தினரைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி, ப்ளான்டாஜெனெட் குலத்தின் மூத்த கால்வழியினரை அதன்மீது அமர்த்தும் முயற்சியாக முதிர்ந்தது (கு. 48).

அக்கட்சி முதல்நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு மாறியது 1453-ல். அவ்வாண்டில், (i) லான்காஸ்டர் கட்சியாரின் துப்பற்ற செயல்களின் விளைவாக காஸ்டில்லானில்[5]

---

1. Sluys, Crecy, Poitiers, Agincourt. 2. Calais. 3. The Wars of the Roses. 4. Yorkism. 5. Castillon.

இங்லிஷ் படைகள் முடிவாகத் தோல்வியுற்றன; (ii) ஹென்றி மன்னர்க்கு மூளை கலங்கிவிட்டது. அதனால் அவரால் நடக்கவோ பேசவோ உண்ணவோ முடியாமல் போய்விட்டது. அப்போது யார்க் ட்யூக், உரிமை பெற்ற அடுத்த உறவினராக இருந்ததால், 'இராச்சியத்தின் பாதுகாப்பாள' ராக[1] நியமிக்கப்பட்டார். யார்க் ட்யூக் பழைய மந்திரிகளில் பெரும்பான்மையோரை ஓட்டிவிட்டார். அவர்களுள் முதன்மையானவராயிருந்த சாமர்செட் ட்யூக்கை[2] லண்டன் அரணுக்குள்[3] கைதியாக அடைத்து வைத்தார். மற்றபடி அவர் எதிர்க்கட்சியினரை வேறு எவ்வகையிலும் இம்சிக்கவில்லை. உண்மையில் அவர் இராச்சிய நிருவாகத்துக் கேற்ற ஆற்றல் படைத்தவரே. இராச்சியத்தில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படுத்த அவர் முயன்றார்.

ஓராண்டானதும் நிலை முற்றிலும் மாறியது. அரசர்க்குப் பயித்தியம் தெளிந்தது. இனி அவரே இராச்சிய காரியங்களை நிருவகிக்கக்கூடுமென்று சொல்லி மார்கரெட் இராணி துரைத்தனத்தைக் கைப்பற்றிக்கொண்டாள். யார்க்கின் பாதுகாப்பாட்சி[4] முடிவடைந்தது. சாமர்செட் மீண்டும் தலைமை அமைச்சர் பதவியில் அமர்ந்தார். ஹென்றியோ இராணி ஆட்டிவைக்கும் பொம்மையைப்போ லிருந்தார்.

இந் நிகழ்ச்சியால் இருகட்சியினர்க்கும் விரோதம் மேலிட்டது. யார்க் கட்சியினரை அடியோடு அழித்துவிட வேண்டுமென்று இராணி தீர்மானித்தாள். அவர் பகைவர்களால் அரசருக்கு நேரக்கூடிய தீமைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவென்று இராணி தன் கட்சியினரை ஒரு கூட்டத்துக்கு அழைத்தாள்.

---

1. 'Protector of the Realm'. 2. Duke of Somerset. 3. The Tower of London. 4. Regency.

இனி தம்முயிருக்கும் தம் நண்பர்களின் உயிருக்கும் காப்பில்லை என்று உணர்ந்த யார்க் ட்யூக் தற்காப்புக்காகத் தம் கட்சியினரைப் படைதிரட்ட ஆஞ்ஞாபித்தார். இவ்விதமாகவே 'ரோஜாக் கட்சியினர் சண்டைகள்'[1] மூண்டன.

உள்நாட்டுப் போர்களுள் இவை விசித்திரமானவை. முதலாவதாக, நாட்டுமக்களில் பெரும்பான்மையோர் இவற்றில் கலக்கவில்லை; கட்சிகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் பகைமை பாராட்டிய பிரபுக்கள் கூலிக்குப் போர் வீரர்களை அமர்த்திவைத்துக்கொண்டு தங்கள் எதிரிகளைத் தாக்கினார்கள். ப்ரான்ஸில் போர் நின்றதும் தாய்நாடு திரும்பிய படைவீரர்கள், அச்சமயத்தில் பிழைப்பதற்கு வேறுவழியின்றி, யாருக்கேனும் கூலிக்குப் போரிடத் தயாராயிருந்தார்கள். இரண்டாவதாக, பிரபுக்களில் சிலர் தங்கள் தங்கள் குடும்ப நலன்களுக்கும் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் ஏற்ப அடிக்கடி கட்சிமாறிக்கொண்டிருந்தனர். மூன்றாவதாக, இச்சண்டைகள் ஒரே தொடர்ச்சியாக நடைபெறவில்லை; இரண்டு மூன்றுமாதம் போர்நடக்குமானால், அதைத் தொடர்ந்து வருஷங்கள் கணக்கில் நாடு அமைதியாயிருக்கும்.

§ 79. ஆரம்ப நிலை:—1455-ல் லண்டனை நோக்கிப் படையெடுத்துவந்த யார்க் கட்சியினர் அரசரின் படைகளால் சேன்ட் ஆல்பன்ஸ்[2] பட்டணத்தின் தெருக்களில் வழிமறிக்கப்பட்டனர். இதுவே போரின் ஆரம்பம். யார்க் கட்சியினர் வெற்றிபெற்றனர். நெவில்[3] குடும்பத்தைச் சேர்ந்த இளவீரரான வாரிக் ஏர்ல்[4] தைரியமாகப் பக்கச் சந்துகளின் மூலம் லான்காஸ்டர் படைகளைத் தாக்கி அவர்களைச் சிதற

---

1. The Wars of the Roses. 2. St. Albans. 3. Neville. 4. Earl of Warwick.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் இங்லண்டும் வேல்ஸும் இருந்த நிலை

அடித்தார். இத்தெருச் சண்டையில் இறந்தவர்களுள் முக்கிய மானவர் சாமர்செட் ஏர்ல். மீண்டும் அரசாங்கம் யார்க் ட்யூக்கின் வசமாயிற்று. அங்கிலேயிலும் அவர் பழையபடி நிதான புத்தியோடுதான் நடந்துகொண்டார்: அரசரை மிக மரியாதையுடன் நடத்தினர்; ஆலோசனை சபையில் சாமர்செட்டைப்போல் தமக்கு முதலிடமிருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தவில்லை. இனிப் போரில் மக்களின் இரத்தம் சிந்தக்கூடாதென்று அவாவிய ஹென்றி எல்லோரையும் சண்டையிடக்கூடாதென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். 1458-ல் செண்ட் பால் ஆலயத்தில்[1] ஹென்றி எல்லோரையும் ஒன்றுபடுத்திவைக்கும் நோக்கத்துடன் ஒரு சமாசக் கூட்டத்தைக் கூட்டுவித்தார். அரசர் விருப்பத்துக்கு இணங்க இராணியும் யார்க்கும் அக்கூட்டத்தில் கைக்கோத்துக் கொண்டு நடந்தனர்.

அம்முயற்சி வீணுயிற்று. அரசாங்கத்தில் தன்னதிகாரமே செல்லவேண்டுமென்று இராணி கோரினுள். 1459-ல் அவள் திடுமென லான்காஸ்டர் கட்சியைச் சேர்ந்த பிரபுக்களையெல்லாம் லெஸ்டரில்[2] ஒன்றுகூடும்படி அழைத்தாள். முன்னர்த் தாமடைந்த வெற்றியைத்தொடர்ந்து தமது நிலையை நன்ருகப் பலப்படுத்திக்கொள்ளாததன் பலனை அப்போது யார்க் அநுபவித்தார். அவரும் வாரிக்கும் தங்கள் கட்சியினரைத் திரட்டுவதற்குள், லட்பார்டில்[3] முறியடிக்கப்பட்டு நாட்டைவிட்டு ஓடிவிடவேண்டியவர்களாயினர். அப்போது இராணி ஒரு பார்லமெண்டைக் கூட்டினுள். அவளை ஆதரிப்பவர்களின் கூட்டமே அதில் அதிகமாக இருக்குமாறு அவள் சூழ்ச்சிசெய்தாள். பார்லமெண்ட் கூடியதும் யார்க் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு மாணதண்டனை விதித்து, அவர்கள் சொத்துக்களைப்

1. St. Paul's Cathedral. 2. Leicester. 3. Ludford.

பறிமுதல் செய்ய ஒரு தண்டனைச் சட்டத்தினை*[1] அவசரம் அவசரமாக இயற்றிவைத்தார்கள்.

நாட்டைவிட்டுப்போன யார்க் டப்ளினிலும்[2], காலியிலும்[3] இருந்துகொண்டு தங்கள் போரைத் தொடங்குவதற்குவேண்டிய ஆயத்தங்களைத் தளர்வின்றிச் செய்துகொண்டிருந்தனர். அடுத்த ஆண்டின் நடுவில் அவர்கள் நாடு திரும்பிப் பெருஞ்சேனையொன்றைத் திரட்டிக்கொண்டு லான்காஸ்டர் கட்சியினரை நார்தாம்டனில்[4] முறியடித்தார்கள் (1460). அரசர் யார்க் கட்சியினர் கையில் மீண்டும் சிக்கினர். இராணி வேல்ஸுக்கு ஓடிவிட்டாள். அங்கே அவள் ஐந்தாம் ஹென்றியின் விதவையைக் கலியாணம் செய்துகொண்ட ஓவென் ட்யூடர்[5] என்னும் வேல்ஸ் சீமானின் ஆதரவிலிருந்தாள்.

அதன் பிறகு சிறிது காலம் லான்காஸ்டர் கட்சியினர் வெற்றிபெற்றனர். இங்லண்டின் வடக்குப்பாகம் முழுமையிலும் செல்வாக்குப்பெற்றிருந்த பேர்ஸி குடும்பத்தினர்[6], பெருஞ் சேனையொன்றைத் திரட்டி, வேக்பீல்ட்[7] என்னுமிடத்தில் யார்க் கட்சியினரைச் சூழ்ந்துகொண்டு தோற்கடித்தனர் (1460). யார்க் ட்யூக் அப்போர்க்களத்தில் மாண்டார். போர்க்களத்தில் பிடிபட்ட கைதிகளுள் முக்கியமானவர்களை உடனே சிரச்சேதம் செய்தனர். இவ்விதம் எதிர்க்கட்சியினர் மீது பழிவாங்கிக்கொள்ளும் கோர வழக்கம் அது முதல் அப்போர் முடியும்வரை இரு கட்சியாராலும் கையாளப்பட்டு வந்தது (கு. 48).

---

* தண்டனைச் சட்டத்தின்படி ஒருவன் இராஜத்துரோகத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு யாதொரு விதமான விசாரணையுமின்றி அதற்குரிய தண்டனை விதிக்கப்பெறுவான்.

1. Act of Attainder. 2. Dublin. 3. Calais. 4. Northampton. 5. Owen Tudor. 6. The Percies. 7. Wakefield.

வெகு சீக்கிரத்தில் கட்சிகளின் அதிர்ஷ்டம் மறுபடியும் மாறியது. இறந்துவிட்ட யார்க் டியூக்கின் பிள்ளை எடவர்ட் அப்போது இருபது வயதும் நிரம்பாத வாலிபராக இருந்தார். (அவருக்கு 'மார்ச் ஏர்ல்' என்னும் பட்டம் வழங்கியது). அதற்குள்ளாகவே பல தருணங்களில் அவர் தமது சிறந்த போர்த் திறமையைக் காட்டியிருந்தார். மார்ட்டிமர் கிராஸ்[1] என்னுமிடத்தில் அவர் ஒரு லான்காஸ்டர் சேனையை முறியடித்தார். இரண்டொரு வாரங்களுள் அவர் லண்டனை யடைந்தபோது அவர் கட்சியினர் அவரை 'நான்காம் எட்வர்ட்' என்று முரசறைவித்தனர். இவ்விதமே ரோஜாக் கட்சியினர் சண்டைகளின் மூன்றும் நிலை தொடங்கியது: அதாவது, அரச பட்டத்துக்குப் போர். 1461-ல் டௌட னில்[2] லான்காஸ்டர் குலத்தினரின் மூலப்படையை வாரிக்[3] முறியடித்ததும் எட்வர்டின் நிலை பலப்பட்டது. பழைய அரசர் ஹென்றி ஸ்காட்லண்டுக்கு ஓடிவிட்டார்.

அப்போது கூட்டப்பட்ட பார்லமெண்டில் யார்க் கட்சி யினரை ஆதரிப்பவர்களே தேர்ந்தெடுக்கப்படுமாறு ஏற்பாடு கள் செய்யப்பட்டன. அந்தப் பார்லமெண்டில் யார்க் கட்சியி னர் லான்காஸ்டர் கட்சியினர்மீது தண்டனைச் சட்டமொன்று[4] இயற்றிப் பழிவாங்கிக்கொண்டனர். பெருத்த ஆடம்பரத் துடன் எட்வர்ட் மன்னருக்கு முடிசூட்டு விழா நடந்தேறி யது. அதன்பிறகு சில நாட்களுள் லான்காஷைரில் உருக் கரந்து திரிந்துகொண்டிருந்த ஆறும் ஹென்றியைக் கைதி யாக்கி லண்டன் அரணில் அடைத்தனர். தற்காலிகமாகவே னும் வெள்ளை ரோஜாக் கட்சியினர் வெற்றி பெற்றனர்.

§ 80. யார்க் கட்சியினர் புரட்சி:—வாரிக்கின் விடா முயற்சியாலும் பேராற்றலாலுமே புதிய மன்னர் பதவி

---

1. Mortimer's Cross. 2. Towton. 3. Warwick. 4. Act of Attainder

பெற்றார். ஆகவே, வாரிக்கின் செல்வாக்கு மேலோங்கியது. நான்காம் எட்வர்ட் திறமையுள்ளவரேனும், சோம்பல்மிகுந்து உல்லாசமாக இருக்க விரும்பியவர். இராச்சிய அலுவல்களை நாள்தோறும் ஊன்றிக் கவனிக்க அவருக்குப் போதிய ஊக்கமும் பொறுமையும் இல்லை. அவர் காத்திரமான உடலுடன் நல்ல தோற்றமுடைய தமாஷ் பேர்வழி. ஆயினும், அவருக்குப் பொறுப்பென்பது ஒரு சிறிதுமில்லை. வாழ்க்கை இன்பங்களை நுகர்வதிலேயே அவர் போதுபோக்கினார். ஆகவே, ஆறாண்டுகள்வரைத் துரைத்தனம் வாரிக் ஏர்ல் வசத்திலேயே இருந்தது.

அது எப்படியாயினும், யார்க் குலத்தினர் மன்னரானதிலிருந்து நாட்டின் அரசியலில் ஒரு பெரிய மாறுதல் தோன்றியது. மொத்தத்தில் அம்மாறுதல் நன்மைக்கே எனலாம். லான்காஸ்டர் குலத்து மன்னர்களுக்கு வருவாய் குறைந்திருந்ததால் அவர்கள் வலிவற்றிருந்தனர். நான்காம் எட்வர்டோ, லான்காஸ்டர் கட்சியைச் சேர்ந்த பிரபுக்களின் சொத்துக்களை (முக்கியமாக, ஆறும் ஹென்றியின் குடும்பச் சொத்துக்களைப்) பறிமுதல் செய்து பெற்ற ஆஸ்தியால், அவருக்கு முன் ஒரு நூறாண்டுகளில் ஆண்ட எந்த அரசரையும்விட வருமானமிக்கவராகவே விளங்கினார். ஆகவே, அவர் பார்லமெண்டின் ஆதரவை நாடவேண்டிய நிலையிலில்லை; அதனால் அவர் அதை அடிக்கடி கூட்டுவதுமில்லை. இதை ஒரு குற்றமாக அக்காலத்தில் எவரும் கருதியவரல்லர். அந்நாட்களில் பார்லமென்ட் அங்கத்தினராக இருத்தல் ஒரு தொந்தரவான வேலை. தங்களைத் தேர்ந்தெடுத்துவிடப் போகிறார்கள் என்று பயந்து நைட்டுகள் சில சமயங்களில் ஷைர் மன்றங்களைவிட்டு ஓடிவிடுவதும் உண்டு. பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமைபெற்றிருந்த சில பட்டணங்களின் மக்கள் அப்

பெருமையால் தங்களுக்கு ஏற்படும் செலவை முன்னிட்டு அது தங்களுக்கு வேண்டியதில்லை என்று மனுசெய்துகொண்டனர். பார்லமென்டின் ஆட்சியே சுதந்தர ஆட்சி என்னும் எண்ணம் அக்காலத்தில் எவருக்கும் உதிக்கவில்லை. எது எவ்வாறுயினும், பதினைன்காம் நூற்றாண்டில் கூடிய பார்லமென்டுக்கு வந்தவர்கள் இராச்சியாதிகாரத்துக்கு லாயக்கல்லாத வகுப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அதனால்தான் லான்காஸ்டர் குலத்தினர் காலத்துப் பார்லமென்ட் ஆட்சி வருஷக்கணக்கில் நீடித்த ஒழுங்கில்லாத அலங்கோலத்தில் முடிந்தது. அக்காலத்துக்கு ஏற்றது வன்மைமிக்க அரசர்களின் ஆட்சியே. இது காரணமாகவே, 'யார்க் கட்சியினர் கொள்கை'[1] என்பது, நான்காம் எட்வர்டின் ஆட்சியால் விளக்கமுற்ற வகையில், செழுமைமிக்க லண்டன் உட்பட்ட தென்கிழக்குப் பாகங்களில் மிகுந்த ஆதரவு பெற்றது. அப்பாகத்தினர்க்கு அமைதியும் சீரும் குறைவதால் பெருநஷ்ட மேற்படும். மக்கள் நெருக்கம் குறைந்து ஏழ்மையும் அநாகரிகமும் நிறைந்திருந்த வடக்குப் பாகங்கள் 'லான்காஸ்டர் கட்சியினர் கொள்கை'[2]யின் புகலிடங்களாயின.

§ 81. அரசரை ஆக்கியவரின்[3] முடிவு:—1465-ல் அரசருக்கும் வாரிக் ஏர்லுக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. முக்கியமாக, வெளிநாடுகளோடு வைத்துக்கொள்ளவேண்டிய அரசியல் சம்பந்தங்களைப்பற்றி அபிப்பிராய வேறுபாடுகள் தோன்றின. பிரதம மானியதார்களாகிய பெரிய பிரபுக்கள் சிற்றரசர்களைப்போல் ஆண்டுகொண்டிருந்த மாகாணங்களையெல்லாம் ப்ரான்ஸ் இராச்சியத்தில் சேர்த்துக்கொண்டு, அதிபதிகளாகிய தங்கள் அதிகாரத்தைப் பெருக்கவேண்டுமென்

1. Yorkism. Lancastrianism. 3. The King-maker.

னும் நோக்கத்துடன் மற்ற ப்ரான்ஸ் மன்னர்கள் முயன்ற படியே(கு. 25), பதினோராம் லூயியும்[1] முயன்றுவந்தார். அப்போது அவர் தமக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டிய பிரதம மானியதார்களுள் மிக்க செல்வாக்கும் பலமும் பெற்றிருந்த பர்கண்டி ட்யூக்கான 'தைரியமிக்க சார்ல்ஸ்'[2] என்பவரோடு போராடிக்கொண்டிருந்தார். வாரிக் லூயிக்கு ஆதரவளிக்க விரும்பினர். எட்வர்ட் அரசரோ அப்போது பர்கண்டி ட்யூக்கின் அதிகாரத்துக்குள் அடங்கிய ப்ளாண்டர்ஸோடு[3] நடந்துகொண்டிருந்த ஆட்டுமயிர் சம்பந்தமான வியாபாரத்தைப் பாதுகாப்பது உசிதம் என்றார். மேலும், எட்வர்ட், முதலில் ஒரு ப்ரெஞ்சு சீமாட்டியைக் கலியாணம்செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டு, முடிவில் எலிசபெத் உட்வில்[4] என்னும் இங்லிஷ் மாதைக் கலியாணஞ்செய்துகொண்டு, அவள் உறவினர்களுக்கு ஏராளமான பட்டங்களும் உத்தியோகங்களும் வழங்கலானர். வாரிக்குக்கு இது பிடிக்கவில்லை. உண்மையில், அரசர் எப்போதும் வாரிக் ஏர்லின் சிட்சையின்கீழிருக்க விரும்பாமல் தம்மைத் தனியாக ஆதரிக்கக்கூடியவர்களின் தொகையைப் பெருக்கிக்கொள்ள விரும்பினர். முடிவில், வாரிக் பொறுமையை இழந்தவராய், எட்வர்ட் தம்மை அசட்டைசெய்தாரென்று நினைத்து, முன்னர் எவ்விதம் அவரைச் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தாரோ, அவ்விதமே அதினின்றும் அவரை இறக்கிவைக்கத் தீர்மானித்தார்.

ஆரம்பத்தில் ஏர்லுக்கே வெற்றி கிடைக்கும்போலிருந்தது. எட்வர்ட் அரசர் ப்ளாண்டர்ஸுக்கு ஓடவேண்டியவரானர். வாரிக் லண்டன் அரணில்[5] அமைதியோடிருந்த ஆரும் ஹென்றியை இழுத்துக்கொண்டுவந்து, அவரைச் சிம்மா

---

1. Louis XI. 2. Charles the Bold. 3. Flanders. 4. Elizabeth Woodville. 5. The Tower of London.

சனத்தில் உட்காரவைத்து, அவர் பேரால் தாமே அரசாளத் தொடங்கினர். ஆயினும், மறு வருஷமே (1471) எட்வர்ட் பர்கண்டி ட்யூக் உதவிய சேனைகளோடு திரும்பிவந்தார். ஆபத்து நேரும்போது பதுங்கியிருக்கும் ஆற்றல்களெல்லாம் வெளிவரும் என்பதற்கேற்ப, எட்வர்ட் மிக்க திறமையோடு போரிட்டு, அதிவிரைவில் தம் எதிரிகளை இரண்டு பெரிய போர்க்களங்களில் முறியடித்தார். ஏப்ரில் மாதம் பார்னெட்[1] என்னுமிடத்தில் 'அரசரை ஆக்கியவ' ரெனப்பட்டவாரிக் தம் படையொடிந்து மாண்டார். மே மாதம் மேற்குப் பாகங்களிலிருந்த லான்காஸ்டர் கட்சியினர் ட்யூக்ஸ்பேரியில்[2] அழிந்தனர். ஹென்றியின் ஒரே மகன் போர்க்களத்தில் மாண்டான். ஹென்றியும் லண்டன் அரணில் கொலையுண்டார். அந் நிலையில் லான்காஸ்டர் குலத்தின் வாரிசாக இங்லண்டின் அரச பதவிக்கு உரிமை பாராட்டக் கூடியவர் ரிச்மண்ட் ஏர்லான ஹென்றி ட்யூடர்[3] என்னும் இளைஞர் ஒருவரே. அவர் போபர்ட்[4] குலத்தைச் சேர்ந்த தம் தாயின் மூலம் ஜான் அப் காண்ட்[5] கால்வழியில் வந்தவர். அப்போதைய ஆபத்தான நிலையில், ரிச்மண்ட் யார்க் குலத்து அரசர் கையில் சிக்காதிருக்கும் வண்ணம், அவர் நண்பர்கள் அவரை ப்ரீட்டனி[6]யில் வசிக்க அனுப்பிவைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நான்காம் எட்வர்ட் பன்னிரண்டாண்டுகள் தொல்லையின்றி ஆண்டார். 1475-ல் எட்வர்ட் தம் பழைய நண்பராகிய 'தைரிய மிக்க சார்ல்'ஸுக்கு அவர் ப்ரான்ஸோடு தொடுத்த ஒரு போரில் துணை நிற்பதாக வாக்களித்தார். ஆயினும், பதினோராம் லூயி அவருக்குப் பணம் கொடுத்துச் சும்மாவிருக்கச் செய்துவிட்டார். அப்

---

1. Barnet. 2. Tewkesbury. 3. Henry Tudor, Earl of Richmond. 4. Beaufort. 5. John of Gaunt 6. Brittany.

போது அவருக்குப் பார்லிமென்டின் ஆதரவே தேவையில்லை. தாராளமான மனத்துடன் தம்மிச்சையாக அவர் ஆட்சி[1] செலுத்தலானார். ஆயினும், அளவுக்கு மீறி இன்பங்களை நுகர்ந்த காரணமாக, 1483-ல் நாற்பத்தோராம் வயதிலேயே அவர் அகால மரணமடைந்தார்.

அவரது ஆட்சிக்காலத்து அதி முக்கியமான நிகழ்ச்சி, வில்லியம் காக்ஸ்டன்[2] என்பவர் நிறுவிய அச்சுக்கூடமே. ஆயினும், அதன் முக்கியத்தை அக்காலத்தவர் எவரும் உணர வில்லை. சைனாவில் நெடுநாட்களாகவே ஒரு வகையான எளிய அச்சடிக்கும் முறை கையாளப்பட்டு வந்தது. ஆயி னும், பதினைந்தாம் நூற்றாண்டின் இடையிலேதான், அதன் அவசியத்தை யூரோப்பியர்கள் உணர்ந்தார்கள். அப்போது கல்வி பரவிக்கொண்டு வந்தது. கல்வியை இனிக் குருமார் களின் தனியுரிமையாகக் கருதுவதற்கில்லை. அதனால் புத்தகங் கள் தேவையாயின. பழையபடி கையால் நகலெழுதியெழு திப் புத்தகங்களின் பிரதிகளைப் பெருக்குவதென்றால், விரை வில் வேண்டிய பிரதிகளைத் தயாரிப்பது கடினம். தனித் தனியாகப் பிரித்தெடுத்து அடுக்கும் எழுத்தச்சுக்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான பிரதிகளைச் சிறிது நேரத் துள் எடுத்துக்கொள்ளக்கூடிய முறை 1450 சுமாருக்கு ஜெர்மெனியில் கண்டுபிடிக்கப்பட்டது. பிரதிகளை எடுக்கத் தோலைவிட வேறொன்றும் கிடைக்காவிட்டால், இப்புதுமுறை யால் எந்த அநுகூலமும் ஏற்படுவதற்கில்லை. ஆயினும், காகிதம் செய்யுந்தொழிலும் அதே சமயத்தில் விருத்தியடைந்து கொண்டுவந்தது. இதுவும் கீழ்நாடுகளிலிருந்து பரவிய வித் தையே. காக்ஸ்டன் ப்ளாண்டர்ஸில்[3] ஆட்டுமயிர் வியாபாரம் செய்துகொண்டிருந்த சமயம் அச்சடிக்கும் வித்தையைக் கற்

1. A genial kind of despotism. 2. William Caxton. 3. Flanders.

றுக்கொண்டார். 1476-ல் வியாபாரத்தை ஏறக்கட்டிக்கொண்டு அவர் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபே[1]க்கு அருகில் சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் நிறுவினார். நான்காம் எட்வர்ட், மூன்றும் ரிச்சர்ட், ஏழாம் ஹென்றி முதலிய அரசர்களும், முக்கியமான பிரபுக்களுள் பெரும்பான்மையோரும்,பிரபல வியாபாரிகளும், காக்ஸ்டன் அச்சுக்கூடத்துக்கு வந்து அவர் அச்சிட்ட புத்தகங்களை வாங்கிக்கொண்டு போயினர்.

§ 82. கொடிய சிற்றப்பன்:—நான்காம் எட்வர்டின் அகால மரணத்தால், பன்னிரண்டு வயதும் நிரம்பாத அவர் பிள்ளை ஐந்தாம் எட்வர்ட் அரச பட்டத்தைப் பெற்றார். தம் தாய் வமிசத்தினரின் பாதுகாப்பிலிருந்த அரசகுமாரரை, அவர்கள் சிற்றப்பனான க்ளாஸ்டர் ட்யூக் ரிச்சர்ட்[2], பலாத்காரமாக அழைத்துக்கொண்டு வந்து, தம்வசத்தில் வைத்துக்கொண்டார். திடுமெனப் பதவிக்கு உயர்ந்த உட்வில் குலத்தினரைப் பலரும் வெறுத்திருந்த சமயத்தில் ரிச்சர்ட் அவ்விதம் செய்தது எல்லோருக்கும் திருப்தியை அளித்தது. ஆயினும், அது ஒரு துக்ககரமான முடிவின் ஆரம்பமே.

க்ளாஸ்டர் ட்யூக்கான ரிச்சர்ட் அரசியல் அறிவோடு போராற்றலும் படைத்தவர். அவர் மதஸ்தாபனத்தையும் நிலையான பற்றோடு ஆதரித்தார். தமது அண்ணன் மகனுக்கு வயது நிரம்பும் வரையில் இராச்சியத்தின் பாதுகாப்பாளராயிருந்து அவர் நல்ல பெயரெடுத்திருக்கலாம். ஆயினும், அவர் பேராசையால் தூண்டப்பட்டு, இராஜ முடியைத் தாமே அணிந்துகொள்ளச் சூழ்ச்சிசெய்தார். இளமன்னன் எட்வர்டையும் அவர் தம்பியையும் முடிவில் லண்டன் அரணில் வாழும்படி ஏற்பாடு செய்தார். பிறகு நான்காம் எட்வர்டுக்கும்

1. Westminster Abbey. 2. Richard, Duke of Gloucester.

எலிசபெத் உட்வில்லுக்கும் நடந்த கலியாணத்தில் ஏதோ முறை தவறு இருந்ததாகவும், அதனால் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் அரச பட்டத்துக்கு அருகராகார் என்றும் அவர் அறிவித்தார். அடுத்தபடியாகத் தாமே பாத்தியதை உடையவராக இருந்ததால், 'மூன்றும் ரிச்சர்ட்' என்னும் பட்டத்துடன் அவர் இராச்சியாதிகாரம் செலுத்தலானார். முடிவில், அவர் தம் அண்ணன் மக்களை அரணில் கொலை செய்வித்தார்.

அவ்விதம் செய்துவிட்டால் தம் நிலை மிக்க பலமாய் விடுமென்று அவர் எதிர்பார்த்திருக்கலாம். ஆயினும், அதன் விளைவு அவர் எதிர்பார்த்ததற்கு நேர் மாறானது. முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இதே நோக்கத்துடன் இதே விதமான கொலையொன்றைச் செய்வித்தபோது, ஜான் அரசருக்கும் இதே விளைவு நேர்ந்ததைக் கவனிக்கவும் (§ 34) சாதாரணமாகவே ரிச்சர்ட் இராச்சியாதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பாரானால், அதை நாட்டு மக்களும் ஒப்புக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால், திறமைமிக்க ஒரு அரசருக்கு இருக்கவேண்டிய ஆற்றல்களையெல்லாம் அவர் பெற்றிருந்தார். மேலும், ஒரு சிறு பிள்ளையைச் சிம்மாசனத்தில் வைத்திருக்க எவருக்கும் விருப்பமிராது. ஆயினும், சூதுவாதில்லாத அந்தச் சிறு பிள்ளைகளை வேண்டுமென்றே கல்மனத்துடன் கொல்வித்தார் என்பதைக் கேட்டதும், ரோஜாக் கட்சியினர் சண்டைகள் காலத்தில் நிகழ்ந்த கொடூரமிக்க செயல்களைக் கேட்டு மனம் கெட்டியாயிருந்த மக்களும் திடுக்கிட்டுப்போய்விட்டார்கள். பெரும்பான்மையோர் அத்தகைய நல்லுணர்வற்ற ஒருவரை நாடு அரசராக ஏற்றுக்கொள்ளல் முடியாத காரியமென்று உணர்ந்தனர். சுயநலத்தைக் கருதிய ஒருசிலர்மட்டுமே ரிச்சர்டை ஆதரித்தனர்.

இந்நிகழ்ச்சிகள், 1471-ல், நான்காம் எட்வர்ட் மீண்டும் இராச்சியாதிகாரம் பெற்றபோது ப்ரீட்டனிக்கு ஓடிப்போன லான்காஸ்டர் குலவாரிசு ரிச்மண்ட் ஏர்ல் ஹென்றி ட்யூடருக்கு[1] ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்தன (§ 81). அதற்கு முன் யார்க் கட்சியில் சேர்ந்திருந்தவர்களும், அப்போது ஒன்று கலந்து, ஹென்றி திரும்பிவந்து தம் உரிமையை நிலைநாட்டுவதற்கான அநுகூலங்களைச் செய்துவைத்தனர். என்ன நடக்கிறதென்பது ரிச்சர்டுக்குத் தெரிந்தபோதிலும் அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை; நாடுமுழுமையும் அவரை வெறுத்தது.

1485 ஆகஸ்டுமீ ரிச்மண்டின் ஏற்பாடுகள் பூர்த்தியாயின. அர்ப்ளூரிலிருந்து[2] ப்ரான்ஸ்மன்னர் உதவிய படைகளோடும் பணத்தோடும் அவர் கப்பலேறி இங்லண்டுக்கு வந்தார். வந்தவர் மில்பர்ட் ஹேவெனில்[3] இறங்கி வேல்ஸ் மக்களின் துணையை நாடினார். தங்கள் நாட்டைச் சேர்ந்தவர் ஒருவரை அரசராக்கிவைக்கச் சந்தர்ப்பம் வாய்த்ததைக்குறித்து அவர்கள் அளவிலா மகிழ்ச்சிகொண்டு ஆயிரக்கணக்கில் அவர் சேனையில் சேர்ந்தார்கள். அப்படியும் அவர் சேனை பெரியதென்று சொல்லுவதற்கில்லை. லெஸ்டருக்கு[4] அருகிலுள்ள பாஸ்வொர்த்தில்[5] அவர்களைத் தாக்கவந்த ரிச்சர்டின் சேனை இருமடங்கு பெரியதாயிருந்தது. ஆயினும், ரிச்சர்டால் அவ்வளவு பெரிய சேனையைக் கலையவிடாமல் வைத்திருக்க முடியவில்லை. அவருக்காகப் போரிட மனமில்லாது அநேகம்பேர் எதிரிபக்கம் போய்ச் சேர்ந்துகொண்டனர். சண்டை நடந்துகொண்டிருந்தபோது ரிச்சர்டின் மாமனாராகிய ஸ்டான்லி பிரபு தம் பரிவாரங்களுடன் வந்தார். வந்தவர் தம் மருமக

1. Henry Tudor, Earl of Richmond. 2. Harfleur. 3. Milford Haven.
4. Leicester. 5. Bosworth.

னுக்கு உதவிசெய்யாமல் ஹென்றிபக்கம் சேர்ந்துகொண்டு ரிச்சர்டுக்கு விரோதமாகப் போரிட்டார். இது ரிச்சர்ட் எதிர் பாராத ஒரு ஏமாற்றம். இனி அவர் வெல்ல நினைப்பது வீண் எண்ணம் என்பது வெளிப்படையாயிற்று.

போர்க்களத்தை விட்டு ஓடித் தக்க பாதுகாப்பை நாடு மாறு அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் வற்புறுத்தினார்கள். ஆயினும், ரிச்சர்ட் கொலைபாதகரேனும், கோழையல்லர்; தாம் இறக்கவேண்டியதானால், இங்லண்ட் அரசராகவே இறக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். சண்டை முடிந்ததும் அவர் தலைக்கவசத்தின்மீது அணிந்திருந்த பொன்முடி நசுங்கி ஒரு முட்புதரில் காணப்பட்டது. ரிச்மண்டின் நண்பர்கள் அதை எடுத்துவந்து அவர் சிரசில்வைத்து அவரை 'ஏழாம் ஹென்றி மன்னர்' என்று முரசறைவித்தனர். அது முதல் இங்லண்டின் சரித்திரத்தில் ஒரு புதுயுகம் தொடங்கியது.

இரண்டாம் பகுதிக்கான சில குறிப்புக்கள்

(1272—1485)

இங்லண்ட் மன்னர்கள்

முதல் எட்வர்ட் (1272-1307) இரண்டாம் எட்வர்ட் (1307-1327) மூன்றம் எட்வர்ட் (1327-1377) இரண்டாம் ரிச்சர்ட் (1377-1399)	ப்ளான்டாஜெனெட் வமிசத்தின் நேர்க் கால்வழி
நான்காம் ஹென்றி (1399-1413) ஐந்தாம் ஹென்றி (1413-1422) ஆறம் ஹென்றி (1422-1460)	ப்ளான்டாஜெனெட் வமிசத்தின் லான்காஸ்டர் பிரிவு
நான்காம் எட்வர்ட் (1461-1483) ஐந்தாம் எட்வர்ட் (1483) மூன்றம் ரிச்சர்ட் (1483-85)	ப்ளான்டாஜெனெட் வமிசத்தின் யார்க் பிரிவு

யூரோப்பிய அதிபதிகளுள் முக்கியமானவர்கள்

ப்ரான்ஸ்

ஆறம் பிலிப் (1328-1350): க்ரெஸி போரில் தோற்றவர்.

ஜான் (1350-1364): ப்வாடீயே போரில் தோற்றவர்.

ஆறம் சார்ல்ஸ் (1380-1422): மூளை கலங்கியவர்; ஆழங்கூர்; ஐந்தாம் ஹென்றியின் மாமனர்.

ஏழாம் சார்ல்ஸ் (1422-1461): ஜொவான் கன்னியின் உதவி பெற்ற 'டாபின்.'

பதினேராம் லூயி (1461-1483): ப்ரான்ஸ் இராச்சியத்தைப் பெரிதும் பலப்படுத்தியவர்களுள் ஒருவர்.

ஸ்பெயின்

ஆரகன்[1] நாட்டு பர்டினண்டும்[2] காஸ்டீல்[3] நாட்டு இசபெல்லாவும்[4] ஒருவரையொருவர் கலியாணம் செய்துகொண்டு

1. Aragon. 2. Ferdinand. 3. Castile. 4. Isabella.

ஸ்பெயின் இராச்சியத்தைத் தோற்றுவித்தனர். இடைக்காலத்தில் ஸ்பெயின் தீபகற்பத்தில் நிலைத்த முகம்மதியரான மூர் மக்களை[1] ஒட்டி விட்டனர்.

கு. 28 : மார்ட்மேன் சட்டம்[2] (1279)

அரசர் தம் நீதிபதிகளுக்கு வந்தனமளித்துத் தெரிவிக்கிறார் :—

சில காலத்துக்குமுன், மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்கள் மானியங்களை[3] அவர்களது அதிபதிகளின் அநுமதியின்றிப் பெறக்கூடாதென்று திட்டமாயிருந்தபோதிலும், அத்திட்டத்துக்கு நேர்மாறாக மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மானியங்கள் பெற்றிருக்கிறார்கள். அதனால், இராச்சியத்தின் பாதுகாப்புக்கென[4] ஆதியில் நியமிக்கப்பட்டிருந்த பணிகள்[5] அம்மானியங்கள் வரையில் இயற்றப்படாது போய்விடுகின்றன. அதிபதிகளும் அவை சம்பந்தமான பறிமுதல் உரிமைகளை[6] இழந்துவிடுகிறார்கள். ஆகவே, இதற்குத் தக்க பரிகாரம் தேடவிரும்பி, எமது இராச்சியத்தின் மதத்தலைவர்கள் ஏர்ல்கள் முதலிய முக்கியஸ்தர்களின் ஆலோசனையின்படி, கீழ்க்கண்டவாறு ஆஞ்ஞாபித்திருக்கிறோம். மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களேனும் மற்றவர்களேனும் தான பத்திரங்கள் மூலமாகவோ[7], வார பத்திரங்கள் மூலமாகவோ[8], வேறு எவ்வகை உரிமை பாராட்டியோ, எவரிடமிருந்தும் மதஸ்தாபனத்தின் 'செத்த கை'யில்[9] சிக்கும்வண்ணம் மானியங்களைப் பெறுவார்களானால், அம்மானியங்கள் பறிமுதல் செய்வதற்கு உரித்தாகும்.

('பறிமுதல் உரிமை'யின்படி, மானியதார் குற்றஞ் செய்தபோதும் வாரிசற்றபோதும் அவர் மானியம் மீண்டும் அதிபதிக்குச் சொந்தமாகும். மதஸ்தாபனத்துக்கு மானிய நிலங்களைத் தானமாக வழங்கிவிடுவதால் மிகுதியும் பாதிக்கப்பட்டவர் அரசரே. மானியதார்கள் சில சமயங்களில் தங்கள் மானியங்களுக்காகச் செலுத்தவேண்டிய பணிகளையும் பணங்களையும்[10] செலுத்தாமலிருப்பதற்காகவே இவ்வித தானங்களைச் செய்தார்கள் என்பது இச்சட்டத்தின் சில தொடர்மொழிகளிலிருந்து விளங்கும்.)

கு. 29 : முதல் எட்வர்டின் சட்டங்கள்

முதல் எட்வர்டின் சட்டங்கள் சில இரண்டாம் ஹென்றி இயற்றிய சட்டங்களின் விரிவேயாம்.

---

1. Moors. 2. The Statute of Mortmain. 3. fees. 4. the defence of the realm. 5. services. 6. escheats. 7. gift. 8. lease. 9. the dead-hand ('Mortmain') of the Church. 10. feudal services and dues.

(உ-ம்). தனி நீதிமன்றங்களின் வளர்ச்சியைத் தடுக்க இயற்றப்பட்ட க்வோ வாரன்டோ[1] சட்டம் (1278) க்ளாரெண்டன் சட்டத்தின்[2] தொடர்ச்சியே (§ 29, கு 21). மார்ட்மேன்[3] சட்டம் (1279) மதஸ்தாபனத்தின் தனியதிகாரத்தைக் குறைக்க இயற்றப்பட்ட 'க்ளாரெண்டன் திட்ட'த்தின்[4] (§ 31, கு. 20) நோக்கத்தையே நிறைவேற்றி வைப்பதாகும். வின்செஸ்டர் சட்டம்[5] (1285) ஹென்றியின் 'ஆயுதச் சட்ட'த்தைத்[6] (§ 32) தற்கால நிலைக்கு ஏற்றவாறு திருத்தியமைத்து உள்ளூர்ப் போலீசின் கடமைகளையும் உள்ளூர்க் காலாட்படைக்கு வேண்டிய திட்டங்களையும் புதிதாக வகுத்தது.

எட்வர்ட் இயற்றிய மற்ற சட்டங்கள் நாட்டின் பிற்காலத்திய சமூக வாழ்க்கையை அந்தப்படுத்தின.

(உ-ம்). டி டோனிஸ் கண்டிஷனலிபஸ்[7] சட்டம் (1285) சொத்துக்களைப் பிரிக்கக்கூடாதபடி திட்டஞ் செய்தது. அதன்படி சொத்து மொத்தமும் ஒரே வாரிசுக்கே எப்போதும் செல்லும்[8]. அதனால், பிரபுக்களின் இளைய குமாரர்கள் வீட்டில் சோம்பிக்கிடக்காமல், சேனையிலும், வியாபாரத்திலும், பிற்காலங்களில் வெளிநாடுகளில் குடியேறி இங்லிஷ் பேரரசைப் பெரிதாக்குவதிலும் பிழைப்புத் தேடிக்கொள்ள முற்பட்டனர். மேலும், அதனால் மற்ற நாடுகளில் போல் இங்லண்டில் பிரபுக்கள் ஒரு தனி ஜாதியினராக இருப்பதற்கில்லை. பிரபுக்களின் இளைய குமாரர்கள் இங்லண்டில் சாதாரண மக்களே[9].

க்யுயா எம்ட்டோரிஸ் சட்டம்[10] (1290) சொத்துக்களை வாங்குவோர் அவற்றின் மேல்அதிபதியின் மானியதார்களாக இருக்க வேண்டுமென்று கூறியது. அதாவது, விற்போர் வாங்குவோர்மீது எவ்வித செல்வாக்கும் பெறுவதற்கில்லை. அநேகமாக அரசரே சொத்துக்களின் மேல்அதிபதியாக இருப்பார். அதனால் ஒற்றைப் பண்ணைக்காரர்கள் பலர் பிரதம மானியதார்களாயினர்.[11] இவர்களே 'நாட்டுக் கனவான்கள்'[12] என மதிக்கப்பட்டுப் பிற்கால சரித்திரத்தில் மிக முக்கிய மக்களாக விளங்கினார்கள்.

கு. 30 : ஸ்காட்லண்டை வெல்லமுடியாமை

ஸ்காட்லண்ட் அரசகுலம் பூண்டற்றுப் போனபோது (1286) பலர் அரசபதவிக்கு உரிமை பாராட்டிக்கொண்டு வந்தார்கள்.

---

1. Quo Warranto. 2. Assize of Clarendon. 3. Mortmain. 4. Constitutions of Clarendon. 5. The Statute of Winchester. 6. Assize of Arms. 7. De Donis Conditionalibus. 8. 'entail.' 9. commoners. 10. Quia Emptores. 11. one-manor tenants-in-chief. 12. country gentlemen.

அவர்கள் நார்மானியர் கால்வழிகளில் வந்த பிரபுக்களாகையால், அவர்களுக்கு இங்லண்டிலும் ஸ்காட்லண்டிலும் மானியங்கள் இருந்தன. அவர்கள் எட்வர்டின் தீர்ப்பை நாடினார்கள். நார்ஹாம் அரணில்[1] கூடிய கூட்டத்தில் (1291) எட்வர்ட் எல்லோரும் தமக்கு இறைவணக்கம்[2] செய்யவேண்டுமென்றார். ஜான் பாலியலுக்கே பாத்யதை உண்டென்று எட்வர்ட் தீர்மானித்ததும், பாலியல் எட்வர்டுக்கு மறுபடியும் இறைவணக்கஞ் செய்தார்.

ஸ்காட்லண்ட் பிரபுக்கள் எட்வர்டுக்குத் தங்கள் நாட்டின்மீது உண்மையில் ஆதிபத்தியம் இருப்பதாக நினைக்கவில்லையாயினும், எட்வர்ட்மட்டும் தாம் ஸ்காட்லண்டைத் தம் இராச்சியத்தில் சேர்த்துக்கொண்டதாகவே நம்பினார். ப்ரான்ஸோடு எட்வர்ட் போர் தொடங்கியபோது ஸ்காட்லண்ட் பிரபுக்கள் தமக்குப் படைப்பணி இயற்றவேண்டுமென்று அவர் வற்புறுத்தியதால், அவர்களுக்குக் கோபம் உண்டாயிற்று(1295 ; § 50). எட்வர்டின் ஆதிபத்தியத்தை நிராகரித்துவிட்டு அவருக்கு விரோதமாக ப்ரான்ஸோடு கூட்டுறவு ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி அவர்கள் பாலியலைத் தூண்டினார்கள்.

இங்லண்டின் இரு பகைவர்களுக்கும் இவ்விதம் தொடங்கிய உறவு 1559 வரையில் நீடித்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில்தான் எட்வர்ட் தமது 'மாதிரி பார்லமென்டைக்'[3] கூட்டினார் (1295 ; § 50).

ஸ்காட்லண்ட்மீது முதல் படையெடுப்பு (1296):—எட்வர்ட் ப்ரான்ஸின்மீது படையெடுத்துச் செல்வதை நிறுத்திவிட்டுத் தெற்கு ஸ்காட்லண்டைக் கைப்பற்றினார். இராஜத் துரோகம் செய்ததால் பாலியல் முடியை இழந்துவிட்டார் என்று கூறி ஸ்காட்லண்டை ஆள இங்லிஷ் உத்தியோகஸ்தர்களை நியமித்தார்.

இந்த உத்தியோகஸ்தர்களின் சுயநலமும் பேராசையும் கொடூர குணமும் **சர் வில்லியம் வாலஸ்**[4] என்பவர் தலைமையில் ஸ்காட்லண்ட் மக்கள் அனைவரையும் எழத் தூண்டின. வாலஸ் **ஸ்டர்லிங்கில்**[5] இங்லிஷ் படைகளை முறியடித்தார் (1297).

ஸ்காட்லண்ட் மக்கள் நாட்டுப்பற்றினால் தூண்டப்பட்டுக் கிளம்பியதால்தான் எட்வர்டால் அந்நாட்டை அடக்கியாள முடியவில்லை.

---

1. Norham Castle. 2. homage. 3. Model Parliament. 4. Sir William Wallace. 5. Stirling.

ஸ்காட்லண்ட்மீது இரண்டாம் படையெடுப்பு (1298) :— எட்வர்ட் தாம் புதிதாகத் திரட்டிய வில்லாட்களைக்கொண்டு வாலஸைப் **பால்கிர்க்**[1] என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆயினும், அவர் ஸ்காட்லண்ட் மக்களை அடக்க முடியாது இங்லண்டுக்குத் திரும்பி வந்தார். மேலும், சில ஆண்டுகள் உற்சாகமற்றவகையில் போர் நடந்தது. 1305-ல் வாலஸ் பிடிபட்டார். அவரை லண்டனுக்கு அழைத்துச்சென்று இராஜத்துரோகி எனச் சிறைச்சேதம் செய்தனர்.

ஸ்காட்லண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரபுக்களோடு ஆலோசித்து எட்வர்ட் அந்நாட்டின் துரைத்தனத்தை ஒருவகையில் அமைத்தார்; அது நிலையான ஏற்பாடாயிருக்குமென்றும் நம்பினார். ஆயினும், இரண்டொரு வருஷங்களில் **ராபர்ட் ப்ரூஸ்**[2] என்பவர் தலைமையில் அந்நாட்டு மக்கள் மீண்டும் கிளம்பினர்.

ஸ்காட்லண்ட்மீது மூன்றாம் முறை படையெடுத்துக்கொண்டு எட்வர்ட் புறப்பட்டார் (1307). படைகள் வடக்கில் எல்லைப் புறத்தை நெருங்குவதற்குள் எட்வர்ட் இறந்து விட்டார்.

கு. 31: விட்டன்[3] சபையிலிருந்து பார்லமெண்ட் வளர்ந்தவிதம்

ஆங்லோசாக்சன் அரசர்கள் காலத்து 'விட்டன்' சபை மதஸ்தாபனத்திலும் நாட்டிலுமுள்ள பெரிய மனிதர்களின் கூட்டம்.

அது அரசருக்கு ஆலோசனை கூறியது. அதன் அபிப்பிராயத்துக்கு மாறான எந்தத் திட்டத்தையும் அரசர் நடைமுறையில் கொண்டுவருவது கடினம். அரசர் பட்டத்துக்கு உரியவர் யார் என்னும் சந்தேகம் வரும்போதெல்லாம் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அதற்கு அதிகாரமுண்டு. அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்: கான்யூட், அதிபத்தர் எட்வர்ட், ஹரால்ட்.

அதற்குப்பதிலாக முதல் வில்லியம் காலத்தில் பிரதமமானியதார்களின் கூட்டமாகிய **பெரிய ஆலோசனை சபை**[4] (§ 22) தோன்றியது. அது வருஷத்தில் மூன்று தரம் முறையே வின்செஸ்டர், க்ளாஸ்டர், வெஸ்ட்மின்ஸ்டர் என்னு மிடங்களில் கூடியது.

அதற்கு வந்தவர்கள் முக்கியமாக ஏர்ல்கள், பாரன்கள், பிஷப்புகள், மடத்தலைவர்கள். ஒற்றைப்பண்ணைக்காரர்களாகிய சில்லரைப்

1. Falkirk. 2. Robert Bruce. 3. Witan. 4. The Great Council.

பிரதம மானியதார்களும் அதற்குவர உரிமை பெற்றவர்களே; ஆயி னும், அவர்கள் சபை கூடுமிடத்துக்கு அருகிலிருந்தால் தவிர நெடுந் தொலைவிலிருந்து பயணப்பட்டு வருதல் அக்காலம் மிகக் கடினம். இந்த மானியதார் கூட்டங்களால் அதிபதிக்குத் தமது குடிகளின் மேல் ஒரு கண் வைத்திருக்க அநுகூல மேற்பட்டது. இக்கூட்டங் களுக்கு யாராவது வர மறுத்தால் அவர் தொந்தரவு கொடுக்கக் கூடியவரென்று அரசர் ஊகித்துக்கொள்ளலாம்.

இரண்டாம் ஹென்றி, பெரிய ஆலோசனை சபையை, எப்போ தாவது எங்காவது ஒரு புதிய சட்டத்தை விளம்பரப்படுத்த வேண்டுமென்று நினைத்தால், அப்போதுதான் கூட்டுவது வழக்கம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒற்றைப் பண்ணைக்காரர்களாகிய நைட்டுகளை ஷைர் நீதி மன்றங்களில் தேர்ந்தெடுக்கவைத்து அவர் களையும் சபைக்கு வரும்படி கட்டளையிட்டார். புதிய சட்டங் களைத் தெரிவிப்பதற்கும் அவற்றை நடைமுறையில் கொண்டுவர ஏற்பாடுகள் செய்வதற்கும் அதுவே வழி.

மூன்றும் ஹென்றி காலத்தில், ‘பிரபுக்களின் போர்’[1] நடந்து கொண்டிருந்த சமயம், சைமன் டி மான்ட்பார்ட்[2] தம்மை ஆதரித் தவர்கள் சபையொன்றைக் கூட்டினர். அதற்குச் சில ஷைர் நீதி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நைட்டுகளும் சில பட்டணங் களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரவாசிகளும் வரவழைக்கப்பட்ட னர். அவர்களே பிற்காலத்தில் பார்லமென்டின் ‘காமன்ஸ் சபை யினர்’[3] ஆயினர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கூட்டங்களுக்கு அழைக்கும் பழக்கம் டி மான்ட்பார்ட் புதிதாகக் கற்பித்ததல்ல; அது நெடுநாட்களா கவே இங்லண்டில் நடைமுறையில் வளர்ந்துகொண்டுவந்திருக்கிறது. மேலும், அவர் கூட்டிய சபை உண்மையில் நாடுமொத்தத்துக்கும் பிரதிநிதித்துவம் படைத்ததென்று சொல்லுவதற்கில்லை. (பிரதிநிதித் துவம்பெறல்[4] என்னும் கருத்து இடைக்காலத்தில் தோன்றியதே என் பதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்; பண்டைக் காலங்களில் அதைப் போன்றது எதுவுமில்லை. தற்காலத்துப் பார்ல மென்ட் அமைப்பின் அடிப்படையான கருத்து அதுவே.)

முதல் எட்வர்ட் தமது சட்டங்கள் பலவற்றைப் பெரிய ஆலோசனை சபையின் கூட்டங்களில் வெளியிட்டார். அப்போது

1. The Barons' War. 2. Simon de Montfort. 3. House of Commons.
4. Representation.

சமயத்துக்குத் தக்கவாறு வேறு சிலரையும் அவர் கூட்டத்துக்கு அழைத்ததுண்டு.

இச்சட்டங்கள் தற்கால முறைப்படி இயற்றப்பட்டனவல்ல. அரசரே அவற்றை இயற்றியவர் (சட்ட கர்த்தா). 'க்யூரியா' சபை[1] (§ 25) அங்கத்தினர்களின் ஆலோசனையையும் துணையையுங் கொண்டு அரசரே அவற்றை முதலில் வரைவிப்பார். பிறகு 'பார்லமென்'டுக்கு அவற்றை விளக்கி, அங்கத்தினர்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கச் சொல்லி, முடிவில் அவர் தம் தீர்மானத்தை வெளியிடுவார்.

1295-ம் வருஷத்து நெருக்கடியில்[2] (§ 50) 'எல்லோரையும் பாதிப்பது எல்லோர் உடன்பாட்டையும் பெறவேண்டும்' என்று சொல்லி, பிற்காலத்தில் மாதிரி பார்லமேன்ட்[3] என வழங்கப் பெற்று உண்மையான பிரதிநிதித்துவம் நிறைந்திருந்த கூட்ட மொன்றை அவர் கூட்டினர். அதற்கு அவர் எல்லா பாரன்களையும் ஏர்ல்களையும் பிஷப்புகளையும் மடத்தலைவர்களையும் பெயரிட் டழைத்தார். ஒவ்வொரு ஷைரிலும் பட்டணத்திலும் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஷெரிப்புகளுக்கு உத்தரவு அனுப்பினர். இன்றைக்கும் கூட்டும் முறையிலுள்ள இந்த வித்தியாசமே 'பிரபுக்கள் சபை'யைச்[4] 'சாதாரண மக்கள் சபை'[5]யிலிருந்து பிரித்துக் காட்டுகிறது.

ஆயினும், முதல் எட்வர்ட் காலத்திலும் அதற்குப்பின் நெடுங்காலம் வரையிலும் பார்லமென்ட் இவ்விரு சபைகளாகப் பிரிந்ததில்லை (§ 50).

எட்வர்ட் ப்ரான்ஸோடு போரிட்டுக்கொண்டிருந்த சமயம், அவர் பேருரிமைப் பத்திரத்தையும் மற்ற உரிமைப் பத்திரங்களை யும் ஒப்புக்கொண்டு ஊர்ஜிதப்படுத்தினலொழிய[6] (1297) போர்ச் செலவுக்கு வேண்டிய வருமானத்தை அவருக்கு வழங்குவதில்லை என்று பிரபுக்கள் கூறினர்கள். பார்லமென்ட் அரசர்க்குப் புதிய வரிகளை விதித்துக் கொடுப்பதற்குப் பிரதிபலனுக, அரசர் குடிகளின் குறைகளை நீக்கித்தர எதிர்பார்க்கப்படுவார் என்னும் கொள்கை அப்போதுதான் முதல் முதல் அங்கீகாரம் பெற்றது.

[பிற்பட்ட வளர்ச்சிக்கு கு. 42-ஐப் பார்க்க.]

---

1. Curia Regis. 2. emergency. 3. The Model Parliament. 4. House of Lords. 5. House of Commons. 6. Confirmatio Cartarum.

கு. 32: முதல் எட்வர்டை ஒரு சிறந்த அரசர் என்று ஏன் கருத வேண்டும்?

சட்ட கர்த்தா[1] என்னும் வகையில், இங்லிஷ் மன்னர்களுள் அவரே பல சட்டங்களை இயற்றியவர். அவைகளுள் சிலவற்றின் பலன்களை இங்லிஷ் மக்களின் தற்கால வாழ்க்கையிலும் காண்கிறோம் (§ 47).

போர்வீரர்[2] என்னும் வகையில், கீழ்க்குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவர் மிக்க புகழ்பெற்றார்: (1) சிலுவைப் போர்; (2) ஈவ்ஸ்ஹாமில்[3] டி மான்ட்பர்ட் எக்கச்சக்கமாக அகப்பட்டுக்கொண்டு தோல்வியுற்று மாண்டது; (3) வேல்ஸ் மக்களோடு அந்த நாட்டு மலைகளிடையே நடத்திய போர்; (4) பால்கிர்க்கில்[4] புதுமுறையாக வில்லாட்களைக்கொண்டு போரிட்டது.

அரசியல் வல்லார்[5] என்னும் வகையில், அவர் க்யூரியா ரீஜிஸ்-ஐ[6] விரிவாக்கினர் (§ 25); அதாவது, நீதிபதிகளைக் கீழ்காட்டியுள்ளபடி பிரித்தார்: (1) அரசாது விவகாரங்களைக் கவனிக்க 'கிங்ஸ் பென்ச்' நீதிமன்றம்[7], (2) வருமான விவகாரங்களைக் கவனிக்க 'எக்ஸ்செகர்' நீதிமன்றம்[8], (3) குடிகளிடையே தோன்றும் சாதாரண வழக்குகளைக் கவனிக்க 'காமன் பிளீஸ்' நீதிமன்றம்[9]. வேல்விலும் ஸ்காட்லண்டிலும் அவர் இரண்டாமுறையாக வகுத்த துரைத்தன திட்டங்களைப் பேரறிவும் அரசியல் ஞானமுங்கொண்டு வகுக்கப்பெற்றவைகளென எல்லோரும் மெச்சினர்கள். அவற்றில் ஸ்காட்லண்ட் திட்டம் நிலைக்கவில்லை. (அநுபவத்தால் பல பாடங்கள் கற்கும் ஆற்றல் அவருக்கு உண்டென்பதைக் கவனியுங்கள்). மாதிரி பார்லமென்டைக்[10] கூட்டி, நாட்டைப் பாதிக்கும் முக்கிய விவகாரங்களில் அதன் மக்களின் அபிப்பிராயங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டியது அவசியம் என்னும் சிறந்த கொள்கையை அவர் நிலைநாட்டினர்.

கு. 33: நூருண்டுப்போர் மூண்டதன் காரணங்கள் (1337)

(1). மூன்றும் எட்வர்டை அதிபதியாக அங்கீகரிக்க மறுத்த ஸ்காட் மக்களுக்கு[11] ப்ரான்ஸ் மன்னர் ஆதரவளித்தார் (§ 56).

---

1. Legislator. 2. Soldier. 3. Evesham. 4. Falkirk. 5. Statesman. 6. Curia Regis. 7. Court of King's Bench. 8. Court of Exchequer. 9. Court of Common Pleas. 10. The Model Parliament. 11. Scots.

(2). ப்ரான்ஸ் மன்னரது பிரதம மானியதார்களுள் ஒருவரான ப்ளாண்டர்ஸ் கௌன்டுக்கு விரோதமாகக் கிளம்பிய கென்ட்[1], ப்ருஷ்[2], ஈப்ர்[3] பட்டணங்களின் மக்களுக்கு (அவர்கள் கம்பள நெசவுத்தொழிலில் ஈடுபெட்டிருந்தார்கள்) மூன்றும் எட்வர்ட் ஆதரவளித்தார்.

இப்பட்டணங்களுக்கே இங்லண்டில் கிடைக்கும் ஆட்டுமயிர் அனைத்தும் ஏற்றுமதியாய்க் கொண்டிருந்தது.

(3). கீயெனுக்காக[4] ப்ரெஞ்சு மன்னருக்குச் செய்யவேண்டிய இறைவணக்கம்[5] சம்பந்தமாக அடிக்கடி சச்சரவுகள் தோன்றின.

கீயென் ஆஞ்சவின் பேரரசின் எஞ்சிய பாகமாகும். போர்டோவின் மூலம்[6] இங்லண்டோடு நடந்த ஒயின் வியாபாரத்தைக் கொண்டே அதன் மக்கள் பிழைத்ததால், அவர்கள் இங்லிஷ் உறவுக்குச் சாதகமாக இருந்தார்கள். அத்தகைய மாகாணங்களை ப்ரான்ஸ் மன்னர்கள் தங்கள் இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ள அடிக்கடி முயன்று கொண்டிருந்தார்கள். மேலும், வேறொரு நாட்டு அரசருக்குப் படைப்பணி செய்யவேண்டுமென்பது இங்லிஷ் அரசர்களுக்குப் பிடிக்கவில்லை.

(4). மூன்றும் எட்வர்ட் போரில் புகழ்பெற அவாவினர்.

(5). போர் தொடங்கிய பிறகு அவர் ப்ரான்ஸின் முடிக்குத் தமக்கு உரிமையிருப்பதாகச் சொன்னர். (122-ம் பக்கத்திலுள்ள வமிசாவளிக் குறிப்பைப் பார்க்க).

இதனால் ப்ளாண்டர்ஸ் நகரங்களின் மக்கள் மூன்றும் எட்வர்டுக்கு ஆதரவளித்தபோது, தங்களது உண்மை அதிபதிக்கே ஆதரவளிப்பதாகச் சொல்லிக்கொள்ள வழியேற்பட்டது. போரைத் தொடர்ந்து நடத்துவதற்கும் இது ஒரு காரணத்தைக் காட்டியது.

கு. 34 : நாட்டின் சமூக வாழ்க்கையிலும் பொருளாதார நிலைமையிலும் 'கருஞ்சாவு'[7] நோயால் உண்டான விளைவுகள்

(1). இலவச பண்ணையாட்கள் பணி[8] ஒழியவும், கூலிக்கு உழைக்கும் தொழிலாளர் வகுப்பானது தொகையில் பெருகவும் அது தூண்டியது (§ 60).

---

1. Ghent. 2. Bruges, 3. Ypres. 4. Guienne. 5. homage. 6. Bordeaux. 7. The Black Death. 8. villein-service.

வேலைசெய்பவர்களின் தொகை குறைந்துவிட்டதை முன்னிட்டுப் பண்ணையாட்கள், தங்களை 'நகல் பெற்றோ'ராக[1] ஏற்றுக் கொண்டாலொழிய, தங்கள் ஆண்டையின் நிலங்களில் வேலைசெய்ய மறுத்தனர் (§ 65).

(2). பயிர்த் தொழிலுக்குப் பதிலாக ஆட்டு மந்தைகள் வளர்க்குந் தொழில் பரவலாயிற்று.

சில பண்ணைக்காரர்கள் தங்கள் நிலங்களை உழுது விதைத்து அறுவடை செய்வதற்குப் போதிய ஆட்கள் கிடைக்காததால், அவற்றை ஆட்டுப் பண்ணைகளாக (மேய்ச்சலுக்குரிய மந்தை வெளிகளாக) மாற்றிவிட்டனர்.

(3). தற்காலத்தில் காணப்படும் குடிவாரமுறை[2] அப்போது ஆரம்பமானது.

வேலையாட்களைத் தேடும் தொல்லையை முன்னிட்டுப் பண்ணையாண்டைகள் தங்கள் ஏஜெண்டுகளாகிய பெய்லிப்புகளிடம்[3] வருஷத்தில் இவ்வளவு கொடுத்துவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு, அவர்களையே அவற்றைப் பயிரிட்டுக்கொள்ள விட்டுவிட்டனர். ஆண்டைக்காகக் கண்காணிப்பு செய்துகொண்டிருந்த சமயத்தில் விட, சொந்த பொறுப்பில் அவற்றைக் குடிக்கூலிக்கு எடுத்துக் கொண்டு பயிரிடத் தொடங்கியபோது, அவற்றிலிருந்து அதிக லாபம் பெறும் முகாந்தரங்களை அவர்கள் தேடிக்கொண்டார்கள்.

(4). மதஸ்தாபனத்தின்மீது வளர்ந்துவந்த அதிருப்தியை அது பெருக்கியது.

நூற்றுக்கணக்கான குருமார்கள் திடுமென இறந்துவிட்டதால், குறைந்த படிப்பும் தாழ்ந்த அந்தஸ்து முள்ளவர்கள் குருமார்கள் பதவிக்கு உயர்த்தப்பட்டனர். அத்தகையோர் மக்கள் மதிப்பைப் பெறுவது அரிதாய்விட்டது,

கு. 35: பதினான்காம் நூற்றாண்டில் இங்லண்டில் நாட்டுப்பற்று[4] தோன்றிய விதம்

(1). இங்லண்ட் சிறிய நாடாயிருப்பதால், அதை ஒரு தனித் துரைத்தனத்தின்கீழ்க் கட்டுப்படுத்தியாளச் சுலபமாய் முடிந்தது. ப்ரான்ஸுக்கும் இடலிக்கும் ஸ்பெயினுக்கும் இந்த அனுகூலமில்லை.

1. copy-holders. 2, tenant-farming. 3. bailiffs. 4. national spirit.

(2). இங்லண்ட் தீவாயிருப்பதால் அயல்நாட்டார் அங்கு வந்து போய்க்கொண்டிருக்க வசதியில்லை.

ஜான் ஆஞ்சவின் பேரரசை இழந்த பிறகு இதன் அநுகூலம் வெளிப்படையாயிற்று.

(3). முதல் வில்லியம், முதல் ஹென்றி, இரண்டாம் ஹென்றி, முதல் எட்வர்ட் ஆகிய திறமை மிக்க மன்னர்கள் வன்மையும் ஒழுங்கும் நிறைந்த ஒரு துரைத்தன அமைப்பை நிறுவுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்தார்கள்.

இதற்கொரு சிறந்த உதாரணம் நீதிபதிகளை ஒரு ஒழுங்காக நாட்டின் பல இடங்களுக்கும் அனுப்பிவைத்தல். அந்த நீதிபதிகள் ஒவ்வொரு ஷைரிலும் மன்னரின் அதிகாரத்தைப் பரப்பி வந்ததோடு, பயணம் முடிந்து லண்டனுக்குத் திரும்பிவந்ததும், ஆங்காங்கே தங்கள்முன் வந்த வழக்குகளின் நுட்பங்களையெல்லாம் அவர்கள் ஒன்று சேர்ந்து ஆராய்ந்து தர்க்கிக்கலாயினர். இவ்விதமாகவே நாட்டின் பொதுச் சட்டம்[1] வளர்ந்து அந்தப்பட்டது. மேலும், மன்னர் அதிகாரத்தின் பிரதிநிதிகளாக இங்லண்டில் ஷெரிப்புகள் இருந்ததுபோல் வேறு எந்த நாட்டிலு மில்லை.

(4). பார்லமெண்ட் சபை வளர வளர நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பல வகுப்பு மக்கள் ஒன்றுகூடி ஒருவரோடொருவர் பழகலாயினர். அவர்கள் மூலம் மன்னரின் செயல்களையும் நோக்கங்களையும் பற்றிய செய்திகள் நாடுமுழுமையும் பரவலாயின.

(5). முதல் எட்வர்டும் மூன்றும் எட்வர்டும் இராச்சிய முழுமைக்கும் நன்மையளிக்கக்கூடிய வியாபார திட்டங்களை வகுத்தார்கள்.

(6). மூன்றும் எட்வர்ட் ப்ரான்ஸோடு நிகழ்த்திய போருக்குப் பட்டாளங்கள் திரட்டிய விதம் படைமானிய அமைப்பின்கீழ் பழக்கத்தில் வந்திருந்த போர்க்கொள்கைகளையும் முறைகளையும் மாற்றிவிட்டது. ப்ரான்ஸ் மக்களைத் தோற்கடிக்கவேண்டும், அவர்கள் நாட்டைக் கொள்ளையிடவேண்டும் என்னும் எண்ணம் இங்லிஷ் பட்டாளங்களுக்கு உதித்து வேரூன்றியது. படைமானிய அமைப்பின்படி திரட்டப்பட்ட சேனைகளைத் தூண்டியது ஆண்டைப்பற்றேயொழிய நாட்டுப்பற்றல்ல.

---

1. Common Law.

கு. 36 : மதஸ்தாபனம் மக்கள் மதிப்பை இழந்ததன் காரணங்கள்

மதஸ்தாபனத்தில் வளர்ந்துகொண்டேவந்த செல்வமும் அதிகாரமும் ஆடம்பரமும். அடிக்கடி பணம் தண்டியதும் 'பாபிலன் சிறைவாச'மும்[1] போப்புகளின் செல்வாக்கைக் குறைத்தன (§ 62). நாட்டுப்பற்றின் வளர்ச்சியும் (§ 37) போப்பின் அதிகாரத்துக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று மக்களைத் தூண்டியது. குருமார்கள் காணிக்கைகளை வசூலிப்பதிலும், மடத்தலைவர்கள் சொத்துக்களைக் கண்காணிப்பதிலும், பிஷப்புகள் அரசியல் விவகாரங்களிலும் அளவுக்கு மீறிய கவனம் செலுத்தலாயினர். மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுள் பலவகைப்பட்ட பிரிவுகள் இருந்ததால் (துறவிகள், திரியும் துறவிகள், ஊர்க்குருக்கள்)[2] ஒரு பிரிவினை மற்றொரு பிரிவினர் வெறுத்துப் பழித்தனர். குருமார்கள் வெளிச்சடங்குகளையும் ஐதிகங்களையும் யாத்திரைகளையும்[3] முக்கியமாகக் கருதினர்களே தவிர, அகத்தூய்மையையும் ஆன்ம சித்தியையும் பெருக்க முயலவில்லை. முன்னர் எல்லோரது அன்புக்கும் மதிப்புக்கும் அருகராயிருந்த திரியும் துறவிகளும், இப்போது பணப்பேய் பிடித்த பேராசைக்காரர்களாக மாறி விட்டனர்.

ஆயினும், மொத்தத்தில் நாட்டுமக்கள் போப்பின் அதிகாரத்தை நிராகரிக்கவோ, மதஸ்தாபனத்தின் முக்கிய போதனைகளை மறுக்கவோ இன்னும் தயாராகவில்லை. லாலர்டுகள்[4] எப்போதும் செல்வாக்கு பெரிதுமில்லாத சிறு கூட்டத்தினராகவே இருந்தனர் (§ 63).

கு. 37 : மூன்றும் எட்வர்ட் ஆட்சிக் காலத்தின் இறுதியில் ப்ரான்ஸில் ஏற்பட்ட தோல்வியின் காரணங்கள்

(1). மூன்றும் எட்வர்ட் ஆற்றலும் ஒழுக்கமும் குன்றியிருந்தார் (§ 64).

(2). ஸ்பெயினில் நடந்த போரின்போது (1367-68) கண்ட தீராப்பிணியால் 'கரிய இளவரசர்'[5] படுக்கையாகக் கிடந்தார்.

---

1. The 'Babylonish Captivity'. 2. monks, friars, parish priests. 3. ceremonies, sacraments and pilgrimages. 4. Lollards. 5. The Black Prince.

(3). அப்போது ப்ரான்ஸை ஆண்ட ஐந்தாம் சார்ல்ஸ் மன்னர்[1] க்ரெஸியிலும் ப்வாடீயேவிலும்[2] தோல்வியுற்ற மன்னர்களைப் போலல்லாமல்[3], மிக்க திறமைசாலியாயிருந்தார். அவர்கள் 'திரியும் வீரர்க'ளைப்போல்[4] போரைப் போதுபோக்காகவும் விளையாட்டாகவும் கருதியவர்கள்; சார்லோ அரசியல் அறிவுடன் காரியத்தில் கண்ணுயிருந்தவர்.

(4). ஐந்தாம் சார்ல்ஸ் மன்னர் ப்ரான்ஸின் தளபதியாக்கிய[5] பெர்ட்ராண்ட் ட்யு கீஸ்க்லின்[6] இடைக்காலத்துப்போர்வீரர்களுள் திறமைசான்ற ஒருவர். இரண்டு பெரிய சண்டைகளில் இங்லிஷ் படைகள் வென்றதன் காரணம் ப்ரெஞ்சு நைட்டுகள் இங்லிஷ் வில்லாட்களை எதிர்த்ததேயாம். ட்யு கீஸ்க்லின் இப்பிழையை மீண்டும் செய்யாமல் பல இடங்களில் சிறுசிறு படைகளைக்கொண்டு சில்லரைச் சண்டைகள் விளைத்து இங்லிஷ் பட்டாளங்களை மெதுவாக வன்மையிலும் தொகையிலும் குன்றவைத்துக்கொண்டு வந்தார். (இதற்கு 'கெரில்லா' போர்முறை[7] என்பது பெயர்.)

(5). ப்ரான்ஸிலும் நாட்டுப்பற்றும் பெருகியது. இங்லிஷார் அதிகாரத்தின் கீழிருந்த பாகங்களில் கட்டுக்கடங்காத போர்வீரர் கூட்டங்கள் நாடெங்குஞ் சென்று இட்ட கொள்ளைகளால் ப்ரான்ஸ் மக்கள் இங்லிஷ் ஆட்சியை வெறுக்கலாயினர் (§ 59). மூன்றும் எட்வர்டுக்குக் கொடுக்கப்பட்ட மாகாணங்களின் மக்கள் அவரைத் தங்கள் அரசராக ஏற்றுக்கொள்ள மறுத்து ட்யு கீஸ்க்லினை ஆதரித்தார்கள்.

(6). இங்லண்டில் 'கரிய இளவரச'ரின் கட்சியினரும் (வின்செஸ்டர் பிஷப் வில்லியம் அப் வைக்ஹாம்[8] தலைமையிலிருந்தவர்கள்) லான்காஸ்டர் ட்யூக் ஜான் அப் கான்ட்[9] கட்சியினரும் துரைத்தனத்தில் செல்வாக்குப்பெற ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக்கொண்டிருந்ததால், இங்லண்ட் அரசாங்கம் வன்மை குன்றியிருந்தது.

கு. 38 : லான்காஸ்டர் ட்யூக் ஜான் அப் கான்ட் (1340-1399)

'கான்ட்' அவர் பிறந்த இடம் கெண்ட்[10] ஐக் குறிக்கும்.

---

1. Charles V. 2. Crecy, Poitiers. 3. Philip V and John. 4. knights-errant. 5. Constable of France. 6. Bertrand du Guesclin. 7. guerilla tactics. 8. William of Wykeham. 9. John of Gaunt. 10. Ghent.

மூன்றும் எட்வர்டின் நான்காம் பிள்ளை (ஆனபிள்ளையுங்கூட). லான்காஸ்டர் மானியங்களின் பெண்வாரிசாகிய ப்ளாங்ஷ்[1] - ஐ மணந்து லான்காஸ்டர் ட்யூக்காகவும் இங்லண்டின் பெருத்த பணக்காரராகவும் ஆனுர்.

காஸ்டீல்[2] இளவரசியை இரண்டாம் மனைவியாக மணந்ததால் அவருக்குக் காஸ்டீல் இராச்சியத்தின் அரச பதவிக்கு உரிமை ஏற்பட்டது. முதிர்ந்த வயதில் அவர் காதெரின் ஸ்வைன்பர்ட்[3]-ஐ மணந்து போபர்ட்[4] குலத்தினர்க்கு மூதாதையானுர்.

ப்ரான்ஸில் நடந்த போரில் சிறிது புகழடைந்தார் (1369—1375).

திறமையும் பேராவலும் நேர்மைக்குறைவுமிக்க இராஜ தந்திரி. எட்வர்ட் மன்னர் அறிவு சபலப்பட்டிருந்த சமயத்தில் அவரிடம் தமக்கிருந்த செல்வாக்கைக்கொண்டு பெரிய ஆலோசனை சபையைத் தம்வசமாக்கிக்கொண்டார். அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரும் அவரை ஆதரித்தவர்களும் பொதுமக்களை நன்ருகக் கொள்ளையடித்தார்கள். எதிர்க்கட்சியின் தலைவர்கள் 'கரிய இளவர'சரும் வில்லியம் அப் வைக்ஹாமும் (வின்செஸ்டர் பிஷப்). 1376-ல் கூடிய 'நல்ல பார்லமென்ட்'[5] அவர்களை அதிகாரத்தினின்றும் ஓட்டிவிட்டது. ஆயினும், அவர்கள் விரைவில் அதிகாரத்தைத் திரும்பப் பெற்ருர்கள்.

மதஸ்தாபனத்தின் செல்வத்தைக் குறைக்கவேண்டுமென்று விக்ளிப்[6] போதித்தபோது ஜான் அப் கான்ட் அவரை ஆதரித்து வந்தார். ஏனென்ருல், அப்போதனையின் பலனுக, மதஸ்தாபனங்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட சொத்துக்கள் அவற்றை வழங்கிய பிரபுக்களின் குடும்பங்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படலாம். (மேலும், அப்போதனை ஜான் அப் கான்டின் எதிரிகளான பிஷப்புகளைச் சஞ்சலப்படுத்தியது). ஆயினும், விக்ளிப் மதஸ்தாபனத்தின் கொள்கைகளைத் தாக்கியபோது ஜான் அவருக்கு விரோதமாகத் திரும்பினுர்.

ஜானுல் தம்மகன் ரிச்சர்ட் அரசனுவதற்குத் தடை யேற்படுமோ என்னும் சந்தேக மனத்துடனேயே 1376-ல் 'கரிய இளவரசர்' இறந்தார். ஆயினும், இடைக்காலத்து வீரர் பண்புகளுள் தலைசிறந்ததாகிய வீரப்பெருந்தன்மை[7] ஜான் மனத்தி

1. Blanche. 2. Castile. 3. Katherine Swynford. 4. Beaufort. 5. The Good Parliament. 6. Wyclif. 7. chivalry.

லும் வேரூன்றியிருந்தது. காஸ்டீல் முடியை நாடி ஜான் அங்குப் போனார். பலதரம் போரிட்டும் அவர் வெற்றிபெறவில்லை.

1388-ல் இங்லண்ட் திரும்பிய ஜான் அப் காண்ட் 'முறையிடும் பிரபுக்க'ளுக்கு[1] எதிராக இளம் அரசரை ஆதரித்தார். அதனால் ரிச்சர்ட் தம் அதிகாரத்தை மீளப்பெற்று எட்டாண்டுகள் மிக ஒழுங்காக ஆண்டார் (§ 68).

ஜானின் மகன் ஹென்றி அப் ஹெரிபர்ட்[2] ரிச்சர்டால் நாடு கடத்தப்பட்டார். ஜான் இறந்ததும் (1399) ரிச்சர்ட் லான்காஸ்டர் குலத்துச் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார். அதனால் லான்காஸ்டர் குலத்தினர் அரசபதவியைக் கைப்பற்ற நேர்ந்தது.

கு. 39 : இரண்டாம் ரிச்சர்டின் குணமும் வாழ்க்கையும்

தைரியம், சௌரியம், கல்வி, நல்லெண்ணம், புத்திகூர்மை, அழகு முதலிய நற்குணங்களோடு, ரிச்சர்ட் நிதானமின்மை, முன் கோபம், தற்பெருமை முதலிய தீயகுணங்களும் பெற்றவர்.

தம் ஆட்சியின் இடைப்பாகத்தில் அவர் புத்திசாலித்தனமாகவும் நன்றாகவும் ஆண்டார். அயர்லண்டிலும் அவர் நல்லறிவும் திறமையும் காட்டினார்.

அவர் மனைவி பொஹீமியா நாட்டு ஆன்[3] மீது அவருக்கு அன்பு அதிகம். அவளது கூட்டுறவால் அவர் வாழ்க்கையில் பல ஒழுங்குகள் ஏற்பட்டன. ஆயினும், 1396-ல் அவள் இறந்ததும் அவர் மனமே முற்றிலும் மாறிவிட்டது: நடத்தையிலும் அவர் பழையபடியில்லை.

இயற்கையில் அவரிடம் கொடூரகுணம் எதுவுமில்லை. ஆயினும், 1398-ல் திடுமென அவரிழைத்த அக்கிரமங்கள் எவரையும் திகிலடையச் செய்தன. அடுத்தபடி என்ன நேருமோ என்று எவரும் பயந்திருந்தனர். அவர் தமது நெருங்கிய உறவினரான லான்காஸ்டர் ட்யூக்கின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ததும் மற்ற மானியதார்களெல்லாம் அதைரியப்பட்டார்கள்.

கு. 40 : இரண்டாம் எட்வர்டுக்கும் இரண்டாம் ரிச்சர்டுக்கும் ஒப்புமை

குறிப்பு:—இவ்விருவரில் ரிச்சர்டே மேலான குணமும் மேலான திறமையும் படைத்தவர்.

---

1. Lords Appellant. 2. Henry of Hereford. 3. Anne of Bohemia.

(1). இவ்விருவரும் தங்கள் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் பிரபுக்கள் சபையொன்றின் பொறுப்பில் இராச்சியாதிகாரத்தை ஒப்படைக்க வேண்டியவர்களாயினர்.

(எட்வர்ட் 'கட்டளையிடும் பிரபுக்க'ளுக்கும்[1] ரிச்சர்ட் 'முறையிடும் பிரபுக்க'ளுக்கும்[2].)

(2). இருவர் காலத்திலும் பிரபுக்களின் தலைவர்களாக இருந்தவர்கள் மன்னரின் உறவினரே.

('கட்டளையிடும் பிரபுக்க'ளின் தலைவராயிருந்த லான்காஸ்டர் ட்யூக் டாமஸ்[3] இரண்டாம் எட்வர்டின் பங்காளி; 'முறையிடும் பிரபுக்க'ளின் தலைவராயிருந்த க்ளாஸ்டர் ட்யூக் டாமஸ் இரண்டாம் ரிச்சர்டின் சிற்றப்பன்.)

(3). இருவர் விஷயத்திலும் பிரபுக்கள் சீற்றங்கொண்டதற்குக் காரணம் அவர்கள் ஆனவர்களுக்கு அளவுக்கு மீறிய சொத்தும் அதிகாரமும் கொடுத்ததேயாம்.

(முக்கியமாக, எட்வர்டுக்கு பியர்ஸ் காவெஸ்டன்[4]; ரிச்சர்டுக்கு ராபர்ட் டி வீர்[5].)

(4). இருவர் காலத்திலும் இராச்சியாதிகாரம் பெற்ற பிரபுக்கள் சபையினர் சீக்கிரத்தில் மக்கள் வெறுக்கும்படி நடந்துகொண்டதால் மீண்டும் அரசரே அதிகாரம் வகிக்க முடிந்தது.

(5). இருவர் காலத்திலும் முடிவில் அவரவர் பலவீனத்தாலோ மூடத்தனத்தாலோ கலகம் மீண்டும் விளைந்து அவர்கள் அழிந்தனர்.

(6). இருவரும் அரசபதவியிலிருந்து நீக்கப்பட்டனர்.

(எட்வர்ட் தமது இராணி இசபெல்லாவாலும், ரிச்சர்ட் தமது பங்காளி ஹென்றி அப் ஹெரிபர்டாலும்.)

(7). இருவரும் சிறையில் கொலையுண்டனர்.

(எட்வர்ட் பார்க்லி அரணிலும்,[6] ரிச்சர்ட் போன்டிப்ராக்ட்[7] அரணிலும்.)

---

1. Lords Ordainers. 2. Lords Appellant. 3. Thomas. 4. Piers Gaveston. 5. Rebert de Vere. 6. Berkeley Castle. 7. Pontefract Castle.

கு. 41 : நான்காம் ஹென்றியின் தொந்தரவுகளும் அவற்றை அவர் சம்மாளித்த விதமும்

(1). பார்லமென்டால் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராதலாலும், தமக்கு வேண்டிய பணத்துக்கு அடிக்கடி அவர் பார்லமென்டின் ஆதரவை நாடவேண்டியவரா யிருந்ததாலும், தமக்கு முன் ஆண்ட எந்த அரசரையும் விட ஹென்றி பார்லமென்டுக்குத் துரைத்தனத்தில் மிகுந்த அதிகாரம் கொடுத்துவைத்திருக்க வேண்டியவரானர் (கு. 42).

(2). ஹென்றி பெரிய பிரபுக்களின் ஆதரவை நாடவேண்டியவராக இருந்ததால், அவர்களுக்கு நிலங்களும் உரிமைகளும் தாராளமாக வழங்கினர். அதனல் அரசரின் அதிகாரமும் பலமும் குறைந்தன.

அப்படியும், அவர்களுள் பலர் அவரது ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் அவரை எதிர்த்து நின்றனர். அவர்களை அடக்குவது எளிதான காரியமாயில்லை.

(3). பிஷப்புகளின் ஆதரவால் அவர் நிலை பெரிதும் பலப்பட்டதாதலின், லாலர்டுகளைத்[1] தண்டிக்க அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (§ 70).

(உ-ம்). 'டி ஹெரிடிகோ காம்புரெண்டோ'[2] சட்டம் (1401).

(4). தம் நிலையைப் பலப்படுத்திக்கொள்ள அவர் ஸ்காட்லண்ட்மீது படையெடுத்துச் சென்றார். ஸ்காட்லண்ட் படையெடுப்பு இங்லிஷ் மக்களுக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தந்தது. ஆயினும், ஸ்காட்லண்ட் மக்களை அவரால் போர் முனைக்குக் கொண்டுவர முடியவில்லை.

(5). வேல்ஸ் மக்கள் தாங்கள் இழந்த சுதந்திரத்தைப் பெற ஒரு கடைசி முயற்சி செய்தனர்.

அவர்களின் தலைவர் ஓவென் க்ளெண்டொவர்[3]. அவருக்குத் துணை நிற்க ஒப்புக்கொண்டவர்கள் : i. எட்மண்ட் மார்ட்டிமர்[4] (இவர் ஒரு இங்லிஷ் எல்லைக் காவலர்[5]. அவர் கடமை வேல்ஸ் மக்களை அவர்கள் நாட்டு எல்லைக்குள் அடக்கி வைத்திருத்தல்). ii. நார்தம்பர்லண்ட் பிர

---

1. Lollards. 2. Statute De Heretico Comburendo. 3. Owen Glendower. 4. Edmund Mortimer. 5. marcher-lord.

புக்களாகிய பெர்ஸி குலத்தினர்[1] (இவர்கள் ஹோமில்டன் குன்றில்[2] நடந்த சண்டையின் பயனுகக் கிடைத்த பொருள்களில் தங்களுக்கு வந்த பங்கைப்பற்றி அதிருப்திகொண்டு (§ 71) தங்கள் பரம் பரைப் பகைவர்களோடு சேர்ந்து கொண்டார்கள்). iii. ஸ்காட்லண்ட் எல்லைப்புறத் தலைவர் டக்லஸ்.[3]

இந்நால்வர் கூட்டுறவையும் 1403-ல் ஹென்றி தாம் ஷ்ரூஸ் பேரியில்[4] பெற்ற பெரிய வெற்றியால் உடைத்துக் கலைத்தார்.

கு. 42 : இடைக்காலங்களின் பிற்பகுதியில் பார்லமெண்டின் வளர்ச்சி

பதினன்காம் நூற்றுண்டில்

'சாதாரண மக்க'ளின் பிரதிநிதிகள்[5] (அதாவது, ஷைர் மன் றங்களில் தேர்ந்தெடுக்கப்படும் நைட்டுகளும், பட்டணங்களில் தேர்ந்தெடுக்கப்படும் நகரவாசிகளும்) தங்கள் குறைகளையும் முறை யீடுகளையும் அரசர்க்குத் தெரிவிப்பதற்குமுன் தனியாகக் கூடி அவைகளைப்பற்றிப் பேசி முடிவுகட்டும் வழக்கத்தைத் தொடங்கி ஞர்கள். அவ்வழக்கத்தின் பயனுக அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை யையும், அவ்வொற்றுமையால் தங்கள் குறைகளை அரசர்க்கு வற் புறுத்திக்கூறும் வன்மையையும் பெற்றுர்கள். **இதுவே பார்ல மெண்டின் சாதாரணமக்கள் சபை[6] தனியாகக் கூட நேர்ந்ததன் ஆரம்பம்.**

இரண்டாம் எட்வர்ட், கட்டளையிடும் பிரபுக்களின் மீது[7] பரோ பிரிட்ஜில்[8] பெற்ற வெற்றிக்குப்பின், அவர்கள் கட்டளைகளை[9] முறிவு (ரத்து) செய்தபோது, அவை பார்லமெண்டின் அங்கீகாரத்தைப் பெறவில்லை என்ற காரணத்தைக் காட்டியே செய்தார் என்பதைக் கவ னிக்கவும். இது பார்லமெண்டின் அதிகார வளர்ச்சிக்குத் தக்க அங்கீ காரமாகும்.

மூன்றும் எட்வர்ட் பார்லமென்ட் அளித்த தனிவரிகளைக் கொண்டே ப்ரான்ஸோடு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினர். க்ரெஸி போரே நாட்டுமக்களின் பண உதவிபெற்று நடந்த முதற் போர். **இம்முறையால், பார்லமேண்டுக்குப் போர் சமாதானம் முதலிய விஷயங்களிலும் அதிகாரம் ஏற்பட்டது.**

---

1. The Percies. 2. Homildon Hill. 3. Douglas. 4. Shrewsbury. 5. The Commons, 6. House of Commons. 7. Lords Ordainers. 8. Boroughbridge. 9. Ordinances.

பெரிய பிரதம மானியதார்களாகிய பிஷப்புகளும் மடத் தலைவர்களும் போக, மதஸ்தாபனத்தின் மற்ற குருமார்கள் தனியாகக் கூடி அரசர்க்குக் கொடுக்கவேண்டிய பணங்களைத் தீர்மானித்தார்கள். இக்கூட்டங்களே 'கான்வொகேஷன்'[1] கூட்டத்தின் ஆரம்பம்.

பதினைந்தாம் நூற்றுண்டில்

நான்காம் ஹென்றி பார்லமெண்ட் ஆதரவை நாடியவராகயிருந்ததால், அவர் அதற்குப் பல விஷயங்களில் விட்டுக்கொடுத்துக்கொண்டு வந்தார். அதுவே சட்ட நகல்களைத்[2] தயாரித்து அவற்றை அரசரின் அங்கீகாரத்துக்கு அனுப்பத் தொடங்கியது. அதற்குமுன் சட்டங்கள் அரசராலும் அவர் உத்தியோகஸ்தர்களாலுமே வகுத்து வரையப்பட்டன. அரசருக்கு ஆலோசனை கூற ஒரு சபையையும் அரசாங்கக் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஒரு சபையையும் பார்லமெண்ட் நியமித்தது. இவ்விதமாகப் பார்லமெண்டின் அதிகாரம் அதிகரித்தமை 'சட்டவரம்புக்குட்பட்ட துரைத்தன முறையில் லான்காஸ்டர் வமிசத்தினர் செய்துபார்த்த ஆய்வு'[3] என்று சரித்திரத்தில் கூறப்படுகிறது.

இதே சமயத்தில்தான் தேர்தல்களில் ஓட்டுக்கொடுக்கும் உரிமையும் திட்டம் செய்யப்பட்டதென்பது கவனிக்கத்தக்கது. ஷைர் மன்றங்களில், வருஷத்தில் நாற்பது ஷில்லிங் வருமானம் தரக்கூடியதாக மதிக்கப்படும் பூசொத்துக்களுடையவர்கள் அனைவரும் ஓட்டுகொடுக்கலாம்; அநேக பட்டணங்களில் கூட்டமுறை ஆட்சியை மேற்கொண்டுள்ள நகராண்மைச் சபைகளின் அங்கத்தினர்களே[4] (§ 44) ஓட்டு கொடுக்கலாம். இந்தத் திட்டம் 'பெரிய சீர்திருத்த சட்ட'த்தின்[5] காலம் வரையில் (1832) நடைமுறையிலிருந்தது.

கு. 43 : நூருண்டுப் போரின் இரு பகுதிகளை ஒப்பிடல்

ஒவ்வொரு பகுதியும் பெரிய வெற்றிகளோடு தொடங்கியது. இவை வில்லாட்கள் சங்கிலிச் சட்டைகளணிந்த நைட்டுகள்மீது பெற்ற வெற்றிகள்: நாட்டுப்பற்று படைமானிய முறையின் அடிப்படையான ஆண்டைப்பற்றின்மீது பெற்ற வெற்றிகள்.

1. க்ரெஸியும் ப்வாடீயேவும்.[6]

---

1. Convocation. 2. Bills. 3. 'The Lancastrian Experiment in Constitutional Government'. 4. Members of the Corporations. 5. The Great Reform Bill. 6. Crecy and Poitiers.

2. ஆழங்கூரும்[1] நார்மண்டியைக் கைப்பற்றலும்.

ஒவ்வொரு பகுதியின் ஆரம்பத்திலும் இவ்வெற்றிகள் கிடைத்ததன் முக்கிய காரணம் ப்ரான்ஸ் துரைத்தனத்தின் பலவீனமே.

1. மானியதார்கள்மீது ப்ரான்ஸ் அரசர்க்கு (ஆறும் பிலிப்புக்கு)[2] அதிகாரப் பிடிப்பு தளர்ந்திருந்தது.

2. ஆறும் சார்ல்ஸ்[3] மூளை கலங்கியிருந்ததோடு, நாட்டில் பிரபுக்களிடையே மனஸ்தாபங்களும் ஒற்றுமைக் குறைவும் நிறைந்திருந்ததால், ஐந்தாம் ஹென்றி ப்ரான்ஸில் மிகப் பெரிய மானியதாராயிருந்த பர்கண்டி ட்யூக்கோடு[4] கூட்டுறவு ஒப்பந்தம் செய்துகொண்டார்.

ஒவ்வொரு பகுதியிலும் இந்த ஆரம்ப வெற்றிகளின்பின் ஒரு வெற்றிகரமான சமாதானம் ஏற்பட்டது.

1. ப்ரிட்டிங்னி[5] (1360)

2. ட்ருவா[6] (1422)

ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் ப்ரெஞ்சு மக்கள் இங்லிஷ் மக்களைத் தோற்கடிக்கக் கற்றுக்கொண்டார்கள். அவர்கள் கையாண்ட முறைகள், எதிரிகளை நேரில் தாக்காமல் இங்குமங்கும் அலைந்து அலுத்துப்போகும்படி செய்தலும், பல இடங்களில் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து அவர்களுக்குச் சில்லரைச் சச்சரவுகள் விளைத்து நாளடைவில் ஒடுங்கவைத்தலுமாம். இம்முறைகளால் விற்போரின் அநுகூலம் இங்லிஷ் படைகளுக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

1. இம்முறைகளை முதல் பகுதியில் கையாண்ட ப்ரான்ஸ் படைத் தலைவர் ட்யு கேஸ்க்லின்[7];

2. இரண்டாம் பகுதியில் கையாண்டவர் டூனே.[8]

ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் இங்லிஷ் துரைத்தனத்தில் ஒற்றுமை குன்றிப் பிளவுகள் தோன்றியது ப்ரெஞ்சு மக்கள் வெற்றிபெற்றதற்குப் பெரிதும் அநுகூலமாயிருந்தது.

ஒவ்வொரு தரமும், பொருமையினால் போட்டியிட்டுக்கொண்டிருந்த கட்சிகளின் போராட்டத்தில் பலவீனமிக்க அரசரொருவர் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தார்.

---

1. Agincourt. 2. Philip VI. 3. Charles VI. 4. The Duke of Burgundy. 5. Bretigny. 6. Troyes. 7. Du Guesclin. 8. Dunois.

கு. 44: பெட்பர்ட் ட்யூக் ஜானின்[1] வாழ்க்கை (1389-1435)

ஐந்தாம் ஹென்றியின் தம்பி. 1422-ல் ஐந்தாம் ஹென்றி இறந்ததும் ப்ரான்ஸில் அவர் குழந்தை ஆறும் ஹென்றியின் இராச்சியப் பாதுகாப்பாளராக[2] பெட்பர்ட் நியமிக்கப்பட்டார். பெட்பர்ட் ஐந்தாம் ஹென்றியின் திறமையோடு அவரிடம் காணப்படாத சகஜ குணமும் படைத்தவர்.

தளகர்த்தர்[3] என்னுமளவில், அவர் ப்ரான்ஸைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றினர். 1429-ல் டாபினுக்கு[4] ஆர்லியன்ஸ் நகரத்தைச்[5] சுற்றியிருந்த இடங்களே மிஞ்சின.

அரசியலுணர்ந்தவர்[6] என்னுமளவில், அவர் கைப்பற்றிய நாட்டைப் பொறுமையோடும் நல்லறிவோடும் ஆண்டார். ப்ரான்ஸ் நாட்டின் துரைத்தன பரிபாலனத்தை அவர் அநேகமாக ப்ரெஞ்சு அதிகாரிகள் வசத்திலேயே விட்டுவைத்தார்.

1429-க்குப் பிறகு அவருக்குத் தொல்லைகள் தோன்றின. முதலாவதாக, ஜொவான் அப் ஆர்க்[7] ப்ரெஞ்சு மக்களிடையே ஒரு புத்துணர்வை உண்டாக்கினுள். இரண்டாவதாக, அவர் தம்பி க்ளாஸ்டர் ட்யூக் ஹம்ப்ரெவுக்கும்[8] பங்காளி கார்டினல் போபர்ட்டுக்கும்[9] பெரும்பகை ஏற்பட்டது. அதைத் தணிக்க அவர் இங்லண்ட் திரும்பவேண்டியதாயிற்று. அப்போது அவர் ப்ரான்ஸில் இல்லாததை முன்னிட்டு, எதிரிகள் இழந்த பலத்தையும் நாட்டையும் மீட்டுக்கொள்ளலாயினர். மூன்றாவதாக, பர்கண்டி ட்யூக்கின் அநுமதியின்றி அவர் ஒரு பர்கண்டி சீமாட்டியைக் கலியாணம் பண்ணிக்கொண்டதால், ட்யூக்கின் கூட்டுறவை இழந்தார்.

குறிப்பு: கார்டினல் போபர்ட்டும் பெட்பர்டுமே ஜொவானை உயிரோடு கொளுத்திய கொடுமைக்கு முக்கிய பொறுப்பாளிகள். அது பெட்பர்டின் புகழுக்குப் பங்கம் விளைத்த மிகக் கொடுஞ் செயல்.

கு. 45: ஆறும் ஹென்றி காலத்தில் ப்ரான்ஸில் இங்லிஷார் தோற்றதன் காரணம்

1. ஜொவான் அப் ஆர்க் ப்ரெஞ்சுமக்களிடையே ஒரு புத்துணர்ச்சியைப் புகுத்தினுள்.

---

1. John, Duke of Bedford. 2. Regent. 3. General. 4. Dauphin. 5. Orleans. 6. Statesman. 7, Joan of Arc. 8. Humphrey, Duke of Gloucester. 9. Cardinal Beaufort.

2. சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து பல இடங்களில் இங்லிஷ் படைகளைத் தாக்கும் முறையை ப்ரெஞ்சு தளபதிகள் கையாளத் தலைப்பட்டதும், இங்லிஷ் வில்லாட்களுக்குப் பெருங் கூட்டமாகத் திரண்டுவரும் படைகள்மீது சரமாரிபொழிந்து அவைகளை அழிக்கச் சந்தர்ப்பங் கிடைக்காது போய்விட்டது.

3. ப்ரெஞ்சு மக்கள் பீரங்கிகளை உபயோகிக்க விரைவாக முற்பட்டனர். அம்புகளைவிடப் பீரங்கிக் குண்டுகள் நெடுந்தூரம் பாய்ந்தன. இங்லிஷார் 1415 முதல் 1422 வரையில் மிகுந்த கஷ்டத்துடன் பிடித்த அரண்களையெல்லாம் ப்ரெஞ்சு மக்கள் பீரங்கிகளைக்கொண்டு சுலபமாகத் திருப்பிப் பிடித்துக்கொண்டனர்.

4. இங்லண்ட் துரைத்தனத்தாருக்கு அப்போரில் அதிக ஊக்கமில்லை; இராணியோ (ஆஞ்சூநாட்டு மார்கரெட்)[1] ப்ரான்ஸைச் சேர்ந்தவள்.

5. பெட்பர்டின் மரணத்துக்குப் பிறகு (1435) இங்லிஷாருக்குள் உண்மையில் திறமைமிக்க தலைவரேனும் அதிகாரியேனும் தோன்றவில்லை.

6. துரைத்தனத்தாரிடம் பணமில்லாததால், புதுச் சேனைகளைத் திரட்டியனுப்ப அவர்களால் முடியவில்லை.

7. ப்ரான்ஸ் நாட்டு மக்களனைவரும் புத்துணர்ச்சி பெற்று இங்லிஷாரை எதிர்த்துக் கிளம்பியதும், இங்லிஷ் படைகள் அதைப் பாதுகாக்க முடியவில்லை; அது அவ்வளவு பெரிய நாடு.

கு. 46: ஜாக் கேட் கலகம் (1450)

கென்ட்[2] சஸெக்ஸ்[3] பிரிவுகளிலுள்ள உண்டானவர்க[4]ளெல்லாம் கிளம்பினர்கள். அவர்கள் நோக்கம்: குடிகள்மீது வரிச் சுமையை அதிகமாக்கியும், பணத்துக்குத் திண்டாடிக் கொண்டும், ப்ரான்ஸில் அபஜயங்களைப் பெற்றுக்கொண்டுமிருந்த துரைத்தனத்தின் ஊழல்களைக் கண்டிக்கவும், முக்கியமாக சாமர்செட்ட்யூக்கை[5] விலக்கிவிடக் கேட்கவும்.

"ஜாக் கேட்"[6] என்பவர் தலைமையில் ப்ளாக்ஹீத்[7] மைதானத்தில் கூட்டம் ('ஜாக் கேட்' என்பது புனை பெயராக இருக்க

1. Margaret of Anjou. 2. Kent. 3. Sussex. 4. the gentry. 5. The Duke of Somerset. 6. Jack Cade. 7. Blackheath.

லாம்). ஆரம்பத்தில் கலகக்காரர்கள் நல்ல கட்டுப்பாட்டுக்கு அடங்கியிருந்தார்கள். லண்டனைக் கைப்பற்றியதும் சிறிது காலம் அவர்கள் நோக்கம் நிறைவேறும்போலிருந்தது.

பிறகு அவர்கள் கட்டுக்கடங்காது மக்களால் வெறுக்கப்பட்ட நகரவாசிகளின் வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கலாயினர். அதனால் லண்டன் நகரவாசிகள் அவர்களுக்கு விரோதமாகத் திரும்பினார்கள். இதற்குள் துரைத்தனத்தாரும் தங்கள் படைகளைத் திரட்டிக்கொண்டு கலகக்காரர்களைச் சுலபமாக விரட்டியோட்டிவிட்டனர். கேடுக்கு[1] சமாதான மன்னிப்பு [2] அளிப்பதாக உறுதி கூறிவிட்டு, அதற்கு விரோதமாகத் துரைத்தனத்தார் அவரைக் கைதுசெய்யக் கட்டளையிட்டனர். கைதுசெய்ய வந்தவர்களைக் கேட் எதிர்த்து மாண்டார்.

1381-ம் வருஷத்து உழவர்கள் கலகத்தோடு[3] ஒப்பிடல் (§67)

வாட் டைலரும்[4] ஜாக் கேடும் எச்குலத்தினர் என்பது தெரியவில்லை. ஆயினும், இருவரும் மக்கள் கூட்டங்களின் தலைவர்களுக்கிருக்க வேண்டிய ஆற்றல் படைத்தவர்களா யிருந்தனர். இரு கிளர்ச்சிக்காரர்களும் தென்கிழக்குப் பிரிவுகளிலிருந்து கிளம்பி, ப்ளாக்ஹீத் மைதானத்தில் கூடி லண்டனைக் கைப்பற்றினர். இரு கிளர்ச்சிகளும் ஆரம்பத்தில் நல்ல கட்டுப்பாடுகளுடனும் ஒழுங்குடனும் தொடங்கிக் கட்டுக் கடங்காத பலாத்கார செயல்களில் முடிந்தன (லண்டன் அரணைத் தாக்கல், வெறுக்கப்பட்டவர்களைக் கொல்லல்). இரு கிளர்ச்சிக்காரர்களுக்கும் துரைத்தனத்தார்அவர்கள் குறைகளை நீக்கப்போவதாகவும், அவர்களுக்கு மன்னிப்புத் தந்ததாகவும் கூறி, பிறகுவாக்குத் தவறிப் பெருந் தொகையினரைக் கொடுந் தண்டனைகளுக்கு ஆளாக்கினார்கள்.

எனினும், உழவர்கள் கலகத்தின் நோக்கம் உழவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தல்—பண்ணையாட்களின் இலவச உழைப்பை நிறுத்துதல்; ஜாக் கேட் கலகமோ அரசியல் சம்பந்தமானது—நாட்டின் பொது நன்மையைக் கோரும் நாட்டுப் பற்றினால் தோன்றியது—மக்களால் வெறுக்கப்பட்டுத் திராணியற்றுக் கிடந்த துரைத்தனத்தை ஒழிக்கும் நோக்கத்தோடு கிளம்பியது. கேடின்கீழ்க் கூடியவர்கள் உழவர்கள் அல்லர்—ஆங்காங்கே உள்ள உண்டானவர்களும் அவர்கள் குடித்தனக்காரர்களும் வேலையாட்களுமே.

1. Cade. 2. amnesty. 3. Peasants' Rising. 4. Wat Tyler

கு. 47 : ரோஜாக்கட்சியினர் சண்டைகளின் காரணங்கள்

இச்சண்டைகள் லான்காஸ்டர் குலத்து ஆறும் ஹென்றியின் சீர்குலைந்த ஆட்சியை யார்க் குலத்தினர் கண்டித்ததிலிருந்து ஆரம்பமாயின. அவை வேறு பல காரணங்களால் நீடித்துவளர்ந்தன.

(1). பிரபுக்கள் குலங்களுக்குள் பழமையாக ஏற்பட்டிருந்த பகைகள்—முக்கியமாக நெவில்[1] பெர்ஸி[2] குலங்களின் மனஸ்தாபங்கள்.

(2). 'தனியுடையும் பக்கஆதரவும்[3] (§ 76) என்னும் வழக்கத்தினுல் பிரபுக்கள் தங்கள் தங்கள் அக்கம் பக்கங்களிலுள்ள உண்டானவர்களும் அவர்கள் பரிவாரத்தினரும் சேர்ந்த சேனைகளைத் தனித்தனியாகத் திரட்டிவைத்துக்கொண்டிருக்க முடிந்தது.

(3). ப்ரான்ஸில் நடந்த போர் துக்ககரமான தோல்வியில் முடிந்ததும், போரிட்டுத் தவிர வேறு வழியில் பிழைக்க வகை தெரியாத பல போர்வீரர்கள் இங்லண்டுக்குத் திரும்பினுர்கள்.

(4). இராணி மார்கரெட் (ஆஞ்சூ நாட்டுச்சீமாட்டி) திறமைசாலி; ரோஷமுள்ளவள்; பழிக்குப் பழி வாங்கும் பண்பினள். முதலில் யார்க் ட்யூக் ரிச்சர்ட்[4] சாமர்செட் முதலியவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்றுதான் சொன்னுர். ஆயினும், அவர்கள்இராணிக்குவேண்டியவர்களாயிருந்ததால், அவள் அதற்கு இணங்குதல் தனக்குக் கௌரவக் குறைவு என்று நினைத்தாள். இராணி வெறுத்தவர்களை மன்னிக்கும் இயல்பினள் அல்லள் ; அனுப்புச் சலிப்பின்றிச் சூழ்ச்சி செய்பவள் ; சமயம் வாய்க்கும்போதெல்லாம் யார்க் கட்சியினர்மீது நிர்த்தாட்சண்யமாகப் பழிவாங்கிக்கொள்ளும் கல்நெஞ்சினள். அரசரோ எப்போதும் அமைதியையும் தண்மையையும் நாடினுர் ; ஆயினும், இராணியின் மனோவன்மைக்குமுன் அவரது நல்விருப்பங்கள் பஞ்சாய்ப் பறந்தன.

(5). யார்க் கட்சியினரின் நோக்கங்கள் படிப்படியாக ஏறிவளர்ந்தன : (i) துரைத்தனத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற முதல் நோக்கம், (ii) தாமே துரைத்தனத்தைக் கைப்பற்றி நடத்தவேண்டுமென வளர்ந்து, முடிவில், (iii) ஆறும் ஹென்றியைச் சிம்மாசனத்தை விட்டு இறக்கி அதன்மீது யார்க்

1. Neville. 2. Percy. 3. Livery and Maintenance. 4. Richard, Duke of York.

குலத்தினரான அரசரொருவரை அமரவைக்கவேண்டுமென முற்றியது.

ஆயினும், அதை ஒரு அநியாயப் போர் என்று சொல்லிவிடுவதற்கு மில்லை. 'சட்ட வரம்புக்குள் அடங்கிய துரைத்தனம்'[1] என்பதையும், 'பார்லமெண்டின் தேர்தலால் அரச பதவிக்குக் கிடைத்த உரிமை'[2] என்பதையும் எதிர்த்து யார்க் கட்சியினர் வன்மைமிக்க துரைத்தனத்துக்கும்[3] பிறப்புரிமையால் வரும் அரச பதவிக்கும் போராடினர். மூன்றும் எட்வர்டின் சந்ததியாருள் லான்காஸ்டர் பிரிவினரைவிட யார்க் பிரிவினரே மூத்த கால்வழியில் வந்தவர்கள் (160-ம் பக்கத்திலுள்ள வமிசாவளிக் குறிப்பைப் பார்க்க). லான்காஸ்டர் குலத்தினர்க்கு அரச பட்டம் கிடைத்தது பார்லமெண்ட் நான்காம் ஹென்றியை அரசராக்க ஏற்றுக்கொண்டதாலும், அவருக்குப்பின் யார் பட்டத்துக்கு உரியவர்களென்று நிருணயித்து 1407-ல் ஒரு சட்டம் இயற்றியதாலுமே.

கு. 48 : ரோஜாக்கட்சியினர் சண்டைகள் முதலில் பொது நலமிகள் கிளர்ச்சியாக ஆரம்பித்து முடிவில் சுயநலமிகள் ஆக்கிரமிப்பாக முற்றிய விதம்

முதல் நிலை :—யார்க் ட்யூக், மக்களால் வெறுக்கப்பட்டவர்களும் திறமையற்றவர்களுமான மந்திரிகளை (முக்கியமாக, சாமர்செட்டை) அவர்கள் பதவிகளிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று மட்டுந்தான் கோரினர். சேண்ட் ஆல்பன்ஸ்[4] போருக்குப் பிறகு (அதில் சாமர்செட் மாண்டார்) (1455) யார்க் ஆறும் ஹென்றியை மிக்க மரியாதையோடு நடத்தியதுமட்டுமன்றி, ஆலோசனை சபையில் தமக்கு முக்கிய ஸ்தானம் வேண்டுமென்றுகூடக் கேட்கவில்லை.

இரண்டாம் நிலை :—யார்க்கையும் வாரிக்கையும் நாடு கடத்திவிட்டபிறகு (லட்பர்ட்[5] சண்டைக்குப் பிறகு, 1459), இராணி, தன்னை ஆதரித்தவர்களைத் திரட்டி ஒரு பார்லமெண்ட் கூட்டி, அதில் யார்க் கட்சியின் முக்கியஸ்தர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவர்களை அகப்படும்போது கொன்றுவிடவேண்டுமென்று ஒரு தண்டனைச் சட்டம்[6] இயற்றிவைத்தாள்.

மூன்றாம் நிலை :—வாரிக்[7] திரும்பிவந்து அரசரது படைகளை நார்தாம்டனில்[8] தோற்கடித்தபோது (1460), தாட்சண்யமின்

---

1. constitutional government. 2. a parliamentary title to the throne. 3. strong government. 4. St. Albans. 5. Ludford. 6. Act of Attainder. 7. Warwick. 8. Northampton.

றிப் பிரபுக்களையும் நைட்டுகளையும் கொல்லும்படித் தம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

நான்காம் நிலை :—வேக்பீல்டில்[1] யார்க் தோல்வியுற்று மாண்டபோது (1460) இராணி போர்க்களத்தில் கைதுசெய்யப் பட்டவர்களையெல்லாம் சிரச்சேதம் செய்வித்தாள். யார்க் ட்யூக், அவர் தந்தை, தம்பி ஆகிய மூவர் பிணங்களின் தலைகளைத் துண்டித்து வேக்பீல்ட் அரணின்மீது மக்கள் காணும்படிக் குத்திவைத்தனள். லண்டனுக்குப் போகும் வழியில் அவள் சேனைகள் பல பட்டணங்களைக் கொள்ளையடித்தன. வாரிக் அவர்களை வழி மறிக்க முயன்று தோல்வியுற்றார் (**சேன்ட் ஆல்பன்ஸ் இரண்டாம் போர்**[2], **1461**). இந்த வெற்றிக்குப் பிறகு இராணி தன் எழு வயது மகனைக்கொண்டு கைதிகளுக்கு மரணதண்டனை விதித்து வைத்தாள்.

(அப்போது இறந்தவர்களுள் ஒருவன் அக்கொடுமைக்குத் தக்க தண்டனை வருமென்று கடவுள்மேல் ஆணையிட்டுக் கூறினன். பத்து வருஷங்களுக்குப் பிறகு அவ்வரச குமாரன் ட்யூக்ஸ்பெரி[3] சண்டையில் மாண்டான்.)

ஐந்தாம் நிலை :—இங்கிலையில் யார்க் ட்யூக்கின் மகன் மார்ச் ஏர்ல் எட்வர்ட்[4] அரசரானர். **டௌடன்**[5] போருக்குப் பிறகு (1461) எட்வர்ட் ஆறும் ஹென்றியை லண்டன் அரணில் அடைத்துப் பத்தாண்டுகள் விடுதலை செய்யாது வைத்திருந்தார். இப் போர் நடந்தபோதும் பிறகும் எவரையும் திடுக்கிடவைத்த பல கொலைகள் நிகழ்ந்தன.

(நைட்டுகள் பாரமிக்க தகட்டுக் கவசங்களை அணிந்துகொண்டு குதிரைகளை விட்டு இறங்கிக் காலாட்களாகச் சண்டையிட வேண்டியிருந்ததால், தோற்ற பக்கத்து நைட்டுகள் போர்க்களத்தை விட்டுச் செல்லுதல் அபூர்வம்.)

ஆறம் நிலை :—‘அரசரை ஆக்குவோர்’[5] தமது சுயநலத்தை நாடி, சிறையில் பரிதபிக்கத்தக்க நிலையில் அறிவழிந்து கிடந்த ஆறும் ஹென்றியை இழுத்துவந்து சிம்மாசனத்தில் உட்கார வைத்தார். நான்காம் எட்வர்ட் முடிவில் பார்னெட்[7] ட்யூக்ஸ்

1. Wakefield. 2. Second Battle of St. Albans. 3. Tewkesbury. 4. Edward, Earl of March. 5. Towton. 6. The King-maker, 7. Barnet.

பெரி[1] போர்க்களங்களில் (1471) வாரிக்கைத்[2] தோற்கடித்ததும், மீண்டும் கிழ அரசர் சிறைப்பட்டு அங்குக் கொலையுண்டார்.

கு. 49: 'அரசரை ஆக்கிய' வாரிக்கின் வாழ்க்கை (1428-1471)

பெயர்: ரிச்சர்ட் நெவில்[3] [நெவில் குலத்தைச் சேர்ந்த பிரபுக்களே பிரபுக்கள் சபை[4]யில் கால்பங்குக்குமேல் இருந்தனர்]. பிறப்புரிமையாலும் கலியாணத்தாலும் பெரிய சொத்துக்களைப் பெற்றவர். தனியுடையும் பக்கஆதரவும்[5] என்னும் ஏற்பாட்டால் (§ 76) பேரதிகாரம் படைத்தவர்களுள் தலைசிறந்து நின்றவர். யார்க் ட்யூக்கின் சம்பந்தி.

தயாளமும் பெருநோக்கமும் வசீகரமும் படைத்தவர்; திறமையும் சுறுசுறுப்பும் மிக்க போர்வீரர்; ஆற்றல் மிக்க துரைத்தன பரிபாலகர். பிற்காலத்தில் அவர் குணம் மாறியது: சுயநலத்தையும் குலநலத்தையுமே அவர் கவனிக்கலானார்.

நான்காம் எட்வர்டை இங்லண்ட் அரசராக்கினர்

ரோஜாக் கட்சியினர் சண்டைகள் தொடங்கியபோது முதல் **சேன்ட் ஆல்பன்ஸ் போரில்**[6] (1455) வெற்றிக்குக் காரணராயிருந்தவர் வாரிக்கே. அவர் பிறகு காலி[7] கவர்னரானார். அங்கு திறமைமிக்க சேனைத்தலைவரெனப் பெயரெடுத்தார். இராணிக்கு விரோதமாக யார்க் ட்யூக்குக்கு உதவிபுரிய வந்தவர் லட்பர்ட்[8] தோல்வியால் மறுபடியும் காலிக்கே போகவேண்டியவரானார் (1459). போனவர் ஒரு சேனையோடு திரும்பி யார்க் கட்சியினர்க்காக நார்தாம்டனில்[9] வெற்றிபெற்றார். யார்க் ட்யூக் வேக்பீல்ட்[10] போர்க்களத்தில் (1460) தோற்று மாண்டபோதிலும், அவர் மகன் மார்ச் ஏர்லே[11] லண்டனில் 'நான்காம் எட்வர்ட்' என்னும் பட்டத்தோடு அரசராக முரசறைவித்து, 1461-ல் டேளடனில்[12] ஒரு பெரிய வெற்றியைப் பெற்று அவர் நிலையைப் பலப்படுத்தி வைத்தார்.

---

1. Tewkesbury. 2. Warwick. 3. Richard Neville. 4. House of Lords. 5. Livery and Maintenance. 6. First Battle of St. Albans. 7. Calais. 8. Ludford. 9. Northampton, 10. Wakefield. 11. Earl of March. 12. Towton.

ஆறும் ஹென்றியை மீண்டும் அரசராக்கினர்

நான்காம் எட்வர்ட் நன்றியறிதலுடன் வாரிக்குக்குத் திரண்ட செல்வ மளித்தார். உண்மையில் இராஜப் பிரதிநிதியைப் போன்றே அவர் சில ஆண்டுகள் இங்லண்டை ஆண்டார். 'வாரிக் இட்டது சட்டம்' என்னும் நிலை அரசருக்கு மெதுவாக அதிருப்தியை அளித்து வந்தது: இருவருக்குள்ளும் மனஸ்தாபங் கள் தோன்றலாயின.

முக்கியமாக, இரண்டு விஷயங்களில் அவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டது: (i) ப்ரான்ஸில் பதினோராம் லூயிக்கும் 'தைரிய மிக்க சார்ல்ஸ்' எனப்பட்ட பர்கண்டி ட்யூக்குக்கும் அப்போது போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அதில் லூயிஅரசர் பக்கம் சேரவேண்டு மென்பது வாரிக்கின் விருப்பம்; பர்கண்டி ட்யூக் பக்கம் சேரவேண்டு மென்பது எட்வர்ட் எண்ணம்.

(ii) இங்லிஷ் மன்னர் ஒரு ப்ரெஞ்சு சீமாட்டியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வாரிக் செய்த ஏற்பாடுகளுக்கு இணங்காமல், எட்வர்ட் எலிசபெத் உட்வில்[1] என்னும் இங்லிஷ் சீமாட்டியை மணந்துகொண்டு, அவளுடைய உறவினர் பலருக்குப் பட்டங்களும் சொத்துக்களும் ஏராளமாக வழங்கலானார். அதனால் நெவில் குலக்கூட்டத்துக்கு எதிராக மற்றொரு வன்மை மிக்க குலக் கூட்டத்தினை[2] ஆக்கிவைக்க அரசர் முயன்றார் போலும்.

வாரிக் சீற்றங்கொண்டு காலிக்குச் சென்றார். பதினோராம் லூயி வாரிக்குக்கும் மார்கரெட் இராணிக்கும் சமாதானம் செய்துவைத்தார். வாரிக், தாம் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்த நான்காம் எட்வர்டை மீண்டும் அதினின்றும் இறக்கிவைக்கத் தீர் மானித்து, ஒரு சேனையோடு திரும்பி வந்தார். எட்வர்ட் நெதர் லண்ட்ஸுக்கு[3] ஓடினார். வாரிக் லண்டன் அரணில் சிறைபட்டுக் கிடந்த ஆறும் ஹென்றியைச் சிம்மாசனத்தில் மீண்டும் உட்கார வைத்து அவர் பேரால் இராச்சியத்தை ஆளலானார். ஆயினும், எட்வர்ட் பர்கண்டியின் உதவியோடு திரும்பி வாரிக்கை பார்நெட் டில்[4] (1471) தோற்கடித்துக் கொன்றார்.

கடைசி 'பாரன்'[5]—அரசரையும் எதிர்த்து நிற்கவல்ல வன்மைபடைத்த பிரபு அவருக்குப்பின் எவருமிலர்.

---

1. Elizabeth Woodville. 2. family clan. 3. The Netherlands. 4. Barnet. 5. 'The Last of the Barons.'

கு. 50: இடைக்காலத்து நாகரிகம் சிதைவுற்று வந்ததன் சின்னங்கள்

(1). எங்கும் கேள்வியின்றி அங்கீகரிக்கப்பட்ட மதஸ்தாபனத்தின் அதிகாரம் சிதைவுற்றது.

போப் பதவிக்கிருந்த மதிப்பு குறைந்துவிட்டதற்குக் காரணங்கள்: (i) உலக விஷயங்களில் அதிகாரம் நாடியது; (ii) பாபிலன் சிறைவாசம்[1]; (iii) 'பெரிய பிளவு'[2], அதாவது, இரண்டு போப்புகள் கிளம்பி ஒருவரோடொருவர் போட்டியிட்டு மற்றவரைப் பழித்ததால் உண்டான நிலை.

குருமார்கள் மக்கள் மதிப்பை இழந்தனர் (§ 36).

அச்சுவித்தையும் காகிதத் தொழிலும் தோன்றி விருத்தியடைய அடைய, குருமார்களின் தனி உரிமையாக இருந்த கல்வி மற்றவர்களிடையிலும் பரவலாயிற்று.

(2). படைமானிய ஏற்பாட்டால் திரண்டுவரவேண்டிய சேனைகளுக்குப் பதிலாகச் சம்பளத்துக்குப் போரிடும் நாட்டுமக்கள் திரண்ட சேனைகள் பெருகலாயின.

கவனிக்க வேண்டியவை: (i) கேடயப் பணம் (§ 32); (ii) க்யயா எம்ட்டோரிஸ் சட்டம் (§ 48); (iii) மூன்றும் எட்வர்டின் சேனை (§ 57).

(3). பண்ணை வாழ்க்கையில்[3] ஏற்பட்ட மாறுதல்கள்: கூலிக்கு உழைக்கவரும் 'நகல் பெற்றோர்'[4]; குடிக்கூலி கொடுத்துவிட்டுப் பயிரிடுவோர்[5] (கு. 34).

---

1. 'The Babylonish Captivity'. 2. The Great Schism. 3. manorial life
4. wage-earning copy-holders. 5. tenant-farmers.

இரண்டாம் பகுதியில் பரிக்ஷை வினக்கள்

1. இரண்டாம் ஹென்றியின் சீர்திருத்தங்களை முதல் எட்வர்டின் சீர்திருத்தங்களோடு ஒப்பிடுங்கள்.

2. முதல் எட்வர்ட் ஆட்சி காலத்தில் சாதிக்கப்பட்டவைகள் எவை?

3. முதல் எட்வர்ட் வேல்ஸை ஆள வகுத்த முறை என்ன?

4. ஸ்காட்லண்டில் முதல் எட்வர்ட் எந்நிலைகளில் தலையிடவேண்டியவரானார்? வேல்ஸில் வெற்றி பெற்றவர் ஸ்காட்லண்டில் ஏன் வெற்றி பெறவில்லை?

5. ஸ்காட்லண்ட் விஷயமாக முதல் எட்வர்ட் நடந்துகொண்ட விதத்தை எவ்வகையில் நியாயமெனலாம்?

6. ப்ளான்டாஜெனெட் மன்னர்களுள் முதல் எட்வர்டே முதலிடத்துக்கு உரியவர் என்பது எக்காரணங்களால்?

7. இங்லண்ட் சரித்திரம் வரையில், (i) லெவெலினும், (ii) ராபர்ட் ப்ரூஸும் செய்த காரியங்கள் எவை?

8. முதல் எட்வர்ட் 1295-ல் மாதிரி பார்லமென்டைக் கூட்டியது ஏன்? அவர் கஷ்டங்கள் எவை?

9. பதின்மூன்றும் நூற்றுண்டில் துரைத்தனம் எவ்வளவில் சட்ட வரம்புக்கு உட்படுத்தப்பட்டது?

10. பதின்மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியில் இங்லண்ட் பட்டணமொன்றின் சமூக வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் காணக்கூடிய முக்கிய விஷயங்கள் எவை?

11. இடைக்காலத்தில் இங்லண்டின் ஆட்டுமயிர் வியாபாரத்தின் முக்கியத்தைக் குறிப்பிட்டு, அதை வளர்ப்பதற்காகச் செய்திருந்த ஏற்பாடுகளை விவரியுங்கள்.

12. மூன்றும் ஹென்றியின் காலத்திலும், இரண்டாம் எட்வர்டின் காலத்திலும் நிகழ்ந்த 'பிரபுக்கள் போர்'களின் நோக்கங்களையும் முறைகளையும் ஒப்பிடுங்கள்.

13. இரண்டாம் எட்வர்டின் ஆட்சிக்காலம் இங்லண்ட் சரித்திரத்தில் எவ்விதம் முக்கியமானது?

14. மூன்றும் எட்வர்டின் காலத்தில் ப்ரான்ஸில் நடந்த நூறுண்டுப் போரின் போக்கை வகுத்துக் கூறுங்கள்.

15. கருஞ்சாவினால்[1] இங்லண்டின் சமூக அமைப்பிலும் தொழில் முறையிலும் தோன்றிய விளைவுகள் எவை ?

16. இடைக்காலத்துப் பண்ணை யொன்றை[2] வருணியுங்கள். கருஞ்சாவினால் இங்லண்டில் பயிர்த்தொழில் எவ்விதம் பாதிக்கப்பட்டது ?

17. மதஸ்தாபனத்தில் ஜான் விக்ளிப்[3] திருத்தமுயன்ற தீமைகள் எவை ?

18. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்லண்ட் உழவர்களின் நிலையில் என்ன மாறுதல் ஏற்பட்டது ? ஏன் ?

19. இரண்டாம் எட்வர்ட் இரண்டாம் ரிச்சர்ட் இவர்களின் வாழ்க்கையை ஒப்பிட்டு இருவரும் முடியிழந்த காரணத்தை விளக்குங்கள்.

20. இடைக்காலத்தில் இலவச உழைப்புத் திட்டம்[4] மெதுவாகக் கலைந்து விட்டதன் காரணமென்ன ?

21. கீழ்க்குறிப்பிட்டுள்ளவைகளை ஒவ்வொன்றாக விவரித்து, அவைகளுக்குள்ள சம்பந்தத்தை எடுத்துக் காட்டுங்கள்: கருஞ்சாவு, கூலியாட்கள் சட்டம், உழவர் கலகம்.

22. இங்லண்டில் லாலர்டுகள் இயக்கம் ஆரம்பத்தில் ஓங்கிப் பிறகு வீழ்ந்து விட்டதேன் ?

23. நான்காம் ஹென்றி சிம்மாசனமேறியபோது அவருக்கிருந்த கஷ்டங்கள் எவை ? அவற்றை எவ்விதம் அவர் போக்க முயன்றார் ?

24. நான்காம் ஹென்றி காலத்தில் பார்லமெண்ட் பெற்ற உரிமைகளைக் கூறுங்கள்.

25. அரசரது வினைப்போக்கைத்[5] திட்டப்படுத்தும் அதிகாரத்தைப் பார்லமெண்ட் எப்போது எவ்விதம் பெறலானது ?

26. சிம்மாசனமேறியபோது நான்காம் ஹென்றியின் நிலையை ஐந்தாம் ஹென்றியின் நிலையோடு ஒப்பிடுங்கள்.

27. மூன்றாம் எட்வர்ட் காலத்திலும் ஐந்தாம் ஹென்றி காலத்திலும் இங்லண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் நடந்த போரின் காரணங்களை ஒப்பிடுங்கள்.

28. ப்ரான்ஸோடு சண்டைக்குப்போன மூன்றாம் எட்வர்ட் ஐந்தாம் ஹென்றி ஆகியவர்களுள், (i) எவருக்கு நியாயமான காரணமிருந்தது ? (ii) எவர் அதிக வெற்றி பெற்றார் ? தக்க காரணங்களையும் ஆதாரங்களையுங் காட்டி விடை கூறுங்கள்.

---

1 The Black Death. 2. medieval manor. 3. John Wyclif. 4. villeinage. 5. policy.

29. மூன்ரும் எட்வர்டும் ஐந்தாம் ஹென்றியும் ப்ரான்ஸ்மீது படையெடுத்துச் சென்று அங்கு நிகழ்த்திய போரைச் சுருக்கமாக விவரியுங்கள். உங்கள் விடையை ஒரு அவசரபடம்[1] வரைந்து விளக்குங்கள். அவர்கள் அடைந்த வெற்றிகள் ஏன் சிலரால் 'சேதமிக்க வெற்றிகள்' என்று கூறப்படுகின்றன?

30. ஐந்தாம் ஹென்றி அரசியல் நிருவாகத்தில் விடச் சேனைத்தலைமையில் சிறந்து விளங்கினர் என்பது உங்களுக்கு உடன்பாடா?

31. 'கரிய இளவரச'ரும் ஜொவான் அப் ஆர்க்கும் நூருண்டுப் போரில் சாதித்தவைகளை விவரித்துக் கூறுங்கள்.

32. ஆரும் ஹென்றி காலத்தில் ப்ரான்ஸில் இங்லிஷார் தோல்வியுற்றதன் காரணங்க ளெவை?

33. மூன்ரும் ஹென்றி, ஆரும் ஹென்றி இவர்களது தன்மைகளையும் வாழ்க்கைகளையும் ஒப்பிடுங்கள்.

34. ஐந்தாம் ஹென்றி இறந்ததும் ப்ரான்ஸ்மீது இங்லிஷார் பிடிப்பை நிலைக்கவைப்பதற்குச் செய்த ஏற்பாடுகள் எவை? ப்ரான்ஸில் இங்லிஷாருக்கு உற்ற தோல்வி இங்லண்டில் ஆரும் ஹென்றியை எவ்விதம் பாதித்தது?

35. 1350 முதல் 1450 வரையிலுள்ள காலத்தில் இங்லண்டில் மத விஷயங்களிலும் தொழில் விஷயங்களிலும் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டதன் காரணங்களைச் சுருக்கிக் கூறுங்கள்.

36. "'ரோஜாக் கட்சியினர் சண்டைகள்' ஆரும் ஹென்றியின் துப்பற்ற ஆட்சியால் கிளம்பிச் சுயநலமிக்க இருகட்சியினர் போராட்டமாக முதிர்ந்தன" என்பதை ஆதாரங்களுடன் விளக்குங்கள்.

37. 1429-ல் தொடங்கி 1453-க்குள் இங்லிஷார் எவ்விதம் ப்ரான்ஸிலிருந்து மெதுவாக ஓட்டப்பட்டனர் என்பதைச் சுருக்கமாக விவரியுங்கள்.

38. இங்லண்ட் சிம்மாசனத்தில் யார்க் குலத்தினர் அமர நேர்ந்த நிகழ்ச்சிகளை விவரியுங்கள்.

39. நான்காம் எட்வர்டின் குணங்களையும் திறமைகளையும் மதிப்பிடுங்கள்.

40. 'அரசரை ஆக்கியோ'ராகிய வாரிக்கின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரித்து, இங்லண்ட் சரித்திரத்தில் அதன் முக்கியத்தை எடுத்துக் காட்டுங்கள்.

---

1. sketch map.

41. கட்டுக்கடங்காத வன்மைமிக்க பிரபுக்களால் (i) நான்காம் ஹென்றிக்கும் (ii) நான்காம் எட்வர்டுக்கும் நேர்ந்த கஷ்டங்களை விவரியுங்கள்.

42. ரோஜாக் கட்சியினர் சண்டைகளின் சமூகம் தொழில் சம்பந்தமான முக்கிய வினவுகள் எவை ?

43. ரோஜாக் கட்சியினர் சண்டைகளால் பதினைந்தாம் நூற்றாண்டில் இங்லண்ட் மக்களின் முக்கிய வாழ்க்கைத் துறைகள் எவ்விதம் பாதிக்கப்பட்டன ?

44. ரோஜாக் கட்சியினர் சண்டைகளின் நிகழ்ச்சிகளிலிருந்து, போராடிய இருகட்சிகளின் குணங்களையும் நோக்கங்களையும் எடுத்துக் காட்டுங்கள்.

45. நான்காம் எட்வர்ட் குடிகள் அன்பைப் பெற்றதன் காரணமென்ன? அவர் நாட்டையாண்ட விதத்தில் ஏதாயினும் புதுமைகள் இருக்குமானால், அவற்றைக் கூறுங்கள் ?

46. 1460-க்குப் பிறகு லான்காஸ்டர் கட்சியினர் சரித்திரத்தைத் தொடர்ச்சியாக விவரியுங்கள்.

47. பதினைந்தாம் நூற்றாண்டில் அரசரது அதிகாரம் குறைந்துவிட்டதை ஆதாரத்துடன் விளக்கிக் கூறுங்கள்.

48. ஏழாம் ஹென்றி சிம்மாசனமேறியதற்குச் சில வருஷங்களுக்கு முன்னிருந்தே இங்லண்டில் மாறுதலுக்கான சில இயக்கங்கள் தோன்றலாயின. அவை யாவை ?

A CONCISE HISTORY OF BRITAIN

1066—1485

By

Tamil Edition] ROBERT M. RAYNER [Price Re. 1-2-0